# இந்துதருமம்



230.6
இந்து
SL/PR

இந்து மாணவர் சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம் 1990/91

*With Best Compliments*

*From*

# KARUNANITHY & Co.

## No. 122, Colombo Street,

## KANDY

☎ 22537

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

# இந்து தருமம்

இதழாசிரியர்: செல்வன். மு. ரவி
இரண்டாம் ஆண்டு/கலைப்பீடம்

இந்து மாணவர் சங்கம் 1990/91
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை

# காப்பு

கலைமாதும் திருமாதும் களித்தே வாழும்
கவின்பேரா தனைநகரில் கோயில் கொண்டு

நிலையான நற்கல்வி கலையின் ஞானம்
நெஞ்சுருகும் பக்தருக்கே அருளும் சேந்தன்

தலையான தண்டமிழின் ஊஞ்ச லேறித்
தமிழ் குறிஞ்சிக் குமரனவன் கனிந்தே யருள

மலைமீதில் பாரதத்தை எழுதும் ஞான
மதகரியின் செஞ்சரணம் காப்பதாமே.



**அட்டையில் : விநாயகப் பெருமான்**

அட்டைப்படத்திற்காக மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட ஓவியங்களில் தெரிவு செய்யப்பட்டது.

இதனை வரைந்தவர்:
செல்வன். எஸ். சுசந்தன்

2ம்ஆண்டு மிருக வைத்திய பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை.

# இதழினுள்ளடங்கி - இருப்பவை


ஆத்மகனானந்த சுவாமிஜியின் ஆசியுரை ... i

Vice Chancellor's message ... ii

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளரிடமிருந்து ... iii

பெருந்தலைவர் பெருமையுடன் வாழ்த்துவது ... iv

பெரும்பொருளாளர் பேருவகையுடன் அளிப்பது ... v

தலைவர் தருகின்றார் ... vi

செயலாளர்கள் செப்புகின்றார்கள் ... vii

கடந்த வருட இதழாசிரியரின் கனிவான இதயத்திலிருந்து ... viii

இதழாசிரியர் இயம்புகின்றார் ... ix

இந்துமாணவர் சங்க செயற்குழுவும் குறிஞ்சிக்குமரன் ஆலய பொறுப்பாண்மைக் குழுவும் ... x

செயற்குழு படமும் விபரமும் ... xi

பொறுப்பாண்மைக்குழு படமும் விபரமும் ... xii

| | | |
|---|---|---|
| கிருஷ்ண வழிபாடு | பேராசிரியர் சி. தில்லைநாதன் | 1 |
| ஈழமும் மரவணக்கமும் | கலாநிதி சி. க. சிற்றம்பலம் | 9 |
| ஒரு பொம்மலாட்டம் நடக்கிறது | செல்வன். வே. சிவகுமார் | 21 |
| இலக்கியமும் இறைபுகழும் | கலாநிதி துரைமனோகரன் | 25 |
| சைவசித்தாந்தம் பற்றிய சில அறிமுகக் குறிப்புகள் | கலாநிதி அம்பலவாணர் சிவராஜா | 31 |
| மதசுதந்திரம் | செல்வன். சு. சத்தியகீர்த்தி | 37 |

# ஆத்மகனாநந்த சுவாமிஜியின் ஆசியுரை

'சமய உணர்வுகளை மனித சமுதாயத்திலிருந்து நீக்கி விட்டால் என்ன நேரிடும்,? மனித சமுதாயம் ஓநாய்களின் கூட்டமாகி விடும்' என்று கூறுவார் சுவாமி விவேகானந்தர். ஆகவே, மனிதன் மிருக உணர்வுகளுக்கு இரையாகாமல், பண்புள்ள வாழ்க்கையை வாழ வழி வகுப்பதுதான் சமயத்தின் நோக்கமாகும். அத்தகைய உயர்ந்த லட்சியத்தை பல்வேறு வகைகளில் வெளிப்படுத்த, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இந்து மாணவர் மன்றம், ஒவ்வொரு ஆண்டும் "இந்து தருமம்" என்னும் பெயரில் ஒரு ஆண்டு மலரை வெளியிட்டு வருவது பாராட்டத்தக்கது.

இந்த ஆண்டின் மலர் சிறப்புடன் விளங்க எனது வாழ்த்துக்கள்!

இந்த நன்முயற்சியில் ஈடுபட்டுள்ள நல்லுள்ளங்களையும் வாழ்த்துகிறேன்.

அன்புடன்

**சுவாமி ஆத்மகனாநந்தா**

**இராமகிருஷ்ண மிஷன்**
**(கொழும்புக்கிளை)**
40, இராமகிருஷ்ண வீதி,
கொழும்பு - 6

# VICE CHANCELLOR'S MESSAGE

I wish to congratulate the Hindu Students Union of the University of Peradeniya for their efforts to publish the Annual Journal 'The Hindu Dharmam' for the year 1991.

I am happy to note that this Union has been engaged in promoting religious and cultural activities within the University, during the past years.

I wish the society- all success.

**Professor J. M. Gunadasa**

# இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளரிடமிருந்து...

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இந்து மாணவர் மன்றம் வெளியிட்டு வரும் "இந்து தருமம்" என்னும் ஆண்டு மலர் இந்து மதம், இலக்கியம், கலைகள், பண்பாடு ஆகிய துறைகளில் பல ஆய்வுக் கட்டுரைகளை தாங்கி வெளிவருகின்றது. அங்கு பயிலும் மாணவர்களின் எண்ணங்களையும் கருத்துக்களையும் வெளியிடுவதற்கு ஏற்றதொரு களமாக இச் சஞ்சிகை விளங்குகின்றது. அறிஞர்களிடத்தும் மாணவரிடத்தும் "இந்து தருமம்" பெரு மதிப்பை பெற்றுள்ளது.

1991ம் ஆண்டின் இதழ் சிறப்புற வெளிவருவதை அறிந்து மகிழ்வடைகிறேன். "இந்து தருமம்" பல்லாண்டுகள் வாழ்க என வாழ்த்துகிறேன்.

க. சண்முகலிங்கம்,
பணிப்பாளர்

# பெருந்தலைவர் பெருமையுடன் வாழ்த்துவது . . .

எமது அறிவுக்கு எட்டிய காலம் முதல் இற்றைவரை மனித சமுதாயம் அறிவிலும் ஆற்றலிலும் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வருவது கண்கூடு. இவ்வளர்ச்சியின் போது பழையன கழிதலும் புதியன புகுதலும் தவிர்க்க முடியாதவை. இவ்விதிக்கு சமயங்களும் விலக்கானவை அல்ல.

இந்து தருமம் தொன்மையானது, ஆயினும் காலப் போக்கில், ''எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'' என்ற கோட்பாட்டுக்கு அமைய புதிய பல நற்சிந்தனைகளை தன்னகத்தே அணைத்து வளர்ச்சி கண்ட சிறப்பினைக் கொண்டது.

பல்கலைக்கழகச் சமூகத்தினர் புத்திஜீவிகள், மனித சமுதாயத்தை வளர்ச்சிப் பாதையில் எடுத்துச் செல்பவர்கள் - செல்ல வேண்டியவர்கள். பேராதனைப் பல்கலைக் கழகத்தைச்சார்ந்த இந்து சமூகத்தினரின் வெளியீடான 'இந்து தருமம்'' நமது சமூகத்தின் ஆன்மீக வளர்ச்சிக்கு ஒரு சாதனமாக அமைந்திட வேண்டுமென வாழ்த்துகிறேன்.

தொடர்ந்தும் எமது இந்து மாணவர்களின் முயற்சி திருவினை ஆக இனிய குறிஞ்சிக்குமரன் அருள் புரிவாராக.

வாழ்க மாணவர் திருப்பணி! வாழ்க நமது சமுதாயம்!

கலாநிதி து. விநாயகலிங்கம்

பொறிசார் எந்திரவியற்றுறை
பொறியியற் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை.

# பெரும் பொருளாளர் பேருவகையுடன் அளிப்பது...

பேராதனைப் பல்கலைக்கழக இந்துமாணவர் சங்கத்தின் புனித தொண்டுகளில் ''இந்து தருமம்'' வெளியீடு மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். இம்மலர் வெளியிடுவதற்கு உதவி செய்த யாவருக்கும் எனது மனப்பூர்வ மான பாராட்டுகளைத் தெரிவிப்பதோடு அவர்களுக்கு குறிஞ்சிக்குமரனின் அருள் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

வைத்திய கலாநிதி வி. விஜயகுமாரன்
பல்வைத்திய பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

# தலைவர் தருகின்றார்...

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முக்கிய மாணவர் அமைப்புகளுள் ஒன்றான இந்து மாணவ சங்கம் செய்த செய்கின்ற சமயப் பணிகள் எம் சமுதாயத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்து வந்துள்ளன. சில ஆண்டுகள் இடையூறுகள் பல ஏற்பட்டதன் காரணமாக வெளிவராமல் இருந்த இந்து மாணவ சங்கத்தின் வருடாந்த இதழான "இந்து தருமம்" கடந்த வருட செயற்குழுவின் முயற்சியால் மீண்டும் வெளிவரத் தொடங்கியது. அதேபோன்று தற்போதைய செயற்குழுவும் பல சிரமங்களுக்கு மத்தியிலும் இவ்விதழை வெளியிடுகின்றோம் என்பதில் மேற்படி மாணவசங்கத்தின் தலைவர் என்ற முறையில் மிகுந்த பூரிப்படைகிறேன். இம்முயற்சியானது இந்து மாணவர் சங்கம் ஆலய நிர்வாகம் தொண்டுகள் என்பவற்றுடன் மாத்திரம் நின்றுவிடாது ஆக்கபூர்வமான சமுதாய பணிகளிலும் ஈடுபடுகின்றது என்பதற்கு ஓர் தகுந்த சான்றாக அமைகின்றது.

மேலும் இவ்விதழை நாம் வெளியிடுவதன் முக்கிய நோக்கம் இந்து சமயத்தை பரப்புவதோ அல்லது பழைய ஏடுகளில் உள்ள இதிகாச புராணங்களை திரும்ப பிரசுரிப்பதோ அல்ல. இன்றைய எமது பல்கலைக்கழக மாணவ சமுதாயத்தினரிடையே நிலவுகின்ற கருத்துக்களை நவீன சமுதாயத்திற்கேற்ற வகையில் ஒருமுனைப்படுத்துமுகமாக மாணவர்கள், விரிவுரையாளர்கள் பேராசிரியர்களின் எண்ணக்கருக்களை வெளியிடுதலே முக்கிய நோக்கமாகும். இவ்வாலயம் எமது ஆலயம் இந்த சங்கம் எமது சங்கம் என்ற எண்ணம்ஒவ்வொரு மாணவன் மனதிலும் எழவேண்டும் அப்போதுதான் மாணவ சங்கம் ஆக்கபூர்வ பணிகளில் முழுமையாக ஈடுபட முடியும்.

மேலும் எமது ஆலய அலங்கார உற்சவ காலத்திலும், விசேட உற்சவங்களிலும் எமக்கு சகல விதத்திலும் உதவிய பழைய இந்து மாணவர் சங்க செயற்குழு உறுப்பினர்களுக்கும், எமது நிலையை அறிந்து எமக்கு உற்ற துணையாய் நின்ற சக மாணவ சகோதர சகோதரிகளுக்கும், எமக்கு உறுதுணையாய் இருந்து ஊக்குவிக்கும் எமது பெருந்தலைவர் கலாநிதி. து. விநாயகலிங்கம் அவர்கட்கும் எமது பெரும் பொருளாளர் வைத்திய கலாநிதி. வி. விஜயகுமாரன் அவர்கட்கும் பொறுப்பாண்மைக் குழுத்தலைவர் பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கட்கும் மற்றும் அங்கத்தவர்க்கும், அவ்வப்போது எமக்கு தேவையான உதவிகள் புரிந்த இந்து பட்டதாரிகள் சங்கத்தினர்க்கும் ஆலய பூசகர் சிவஸ்ரீ. பா. நித்தியானந்தக் குருக்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதோடு இந்து மாணவ சங்கத்தினை ஓராண்டுகாலம் நிர்வகிப்பதற்கு எல்லா செயற்குழு உறுப்பினர்களும் என்னோடு தகுந்த முறையில் ஒத்துழைத்ததையிட்டு மிகுந்த பெருமிதமும் அடைகிறேன்.

வாழ்க இந்து தருமம்
வளர்க மாணவர் தம்பணி

நன்றி

செல்வன். செ. இரவீந்திரநாதன்
பொறியியற் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

# செயலாளர்கள் செப்புகின்றனர்...

பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுடன் பின்னிப் பிணைந்த வகையில், இன்னல்கள் பல நேர்ந்த வேளையிலும் இனிதுற சேவையாற்றி வந்துள்ளது எமது இந்து மாணவ சங்கம். இவ்வாண்டு செயற்குழுப் பொறுப்பேற்ற எம்மால் சிறப்பாக குறிப்பாக எதுவும் செய்ய முடியாவிடினும் எம் தகுதிக்கு எட்டிய வரையில் பணிபுரிந்து இம்முறையும் இந்து மாணவ சங்கத்தின் வருடாந்த இதழான "இந்து தருமத்தினை" உங்கள் கரங்களில் தவழ விடுகின்றோம் என்பதையிட்டு பெருமகிழ்வு கொள்கிறோம். அகிலமெங்கணும் அமைதிநிலவி அடுத்து வரும் காலங்களிலும் இந்த "இந்து தருமம்" இசைவான கருத்துக்கள் இடம் பெற்று இனிதே வெளிவந்து புகழ்பெற இனி வரும் இளைய சமுதாயமே! இணைந்து தோள் கொடுப்பாயாக!

நன்றி

செல்வன். வ. பவகரன் — 3ம் ஆண்டு/பொறியியற் பீடம்
செல்வி. செ. கிருபாலினி — 3ம் ஆண்டு/பல்வைத்திய பீடம்
(இணைச் செயலாளர்கள்)

இந்துமாணவர் சங்கம்
பேராதனை பல்கலைக்கழகம்

# கடந்த வருட இதழாசிரியரின் கனிவான இதயத்திலிருந்து...

**பேராதனைப்** பல்கலைக்கழக குறிஞ்சிக்குமரன் ஆலயத்தின் பரிபாலனத்தில் பிரதான பங்கு வகிக்கும் இந்து மாணவர் சங்கத்தினரின் முயற்சியால் இம்முறையும் "இந்து தருமம்" வெளியிடப்படுவது கடந்த வருட செயற்குழுவாகவிருந்த எமக்கு மிகவும் மகிழ்ச்சியளிப்பதாகவுள்ளது.

1983 இல் இனக்கலவரத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட குமரனது ஆலயம், 1986 இல் புனரமைக்கப்பட்டு புனருத்தாரண கும்பாபிஷேகம் அவ்வருட செயற்குழுவினால் செய்யப்பட்டது. அத்தருணத்தில் நடைமுறைச் சிக்கல்களினால் கும்பாபிஷேக மலர் வெளியிடப்பட முடியாமற் போய்விட்டது. தொடர்ந்துவந்த வருடங்களிலும் பல்கலைக் கழகங்களில் ஏற்பட்ட அமைதியின்மை போன்ற பல காரணங்களினால் வருடாவருடம் வெளியிடப்பட வேண்டிய மேற்படி நூல் வெளிவராமற் போனது. எனினும் குமரன் திருவருளால் 1989/90 இற் செயற்குழுப் பொறுப்பையேற்ற எமது சங்கத்தினால் மேற் கொள்ளப்பட்ட கடும் முயற்சியினாலும், அயராத உழைப்பினாலும் பல வர்த்தகப் பெருமக்கள் பொருளாதார உதவி செய்தமையினாலும், பல வருடங்களின் பின்னர் மேற்படி நூல் 1990 இல் அச்சேற்றி வெளியிடப்பட்டது.

இந்து மாணவர் சங்கத்தின் அங்கத்தவராக இருப்பதன் மூலம் நாம் பெற்ற அனுபவங்கள் எண்ணிலடங்கா. பல வருடங்களின் பின் இந்து தருமத்தை வெளியிடப்புறப் பட்ட எமக்கு ஏற்பட்ட பிரச்சனைகளும், அனுபவங்களும் தற்போதைய சங்கத்தினருக்கு அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பதற்கு எடுத்துக்காட்டாக அமையும் எனவே நம்புகிறோம்.

தொடர்ந்து வரும் சங்கங்கள் தமது பதவிக்காலங்களில் நூல் வெளியீடு செய்ய வேண்டுமென்ற பேராவலுடன் மீளவும் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி கைங்கரியம் இம் முறையும் தொடரப்படுவதையிட்டுப் பெருமைப்படுவதுடன் குறிஞ்சிக்குமரன் ஆலயப் பணிகளை செவ்வனே நிறைவேற்றக் கூடிய உறுப்பினர்களிடமே எமது பொறுப்புக்களை ஒப்படைத்துள்ளோம் என்ற திருப்தியும் ஏற்படுகிறது.

பேராதனைப் பல்கலைக்கழகத்திற் கல்விபயின்ற பலர், பல துறைகளிலும் பிரசித்தி பெற்றுக் கல்விமான்களாக இருப்பது எல்லோருமறிந்ததே. இச்சந்தர்ப்பத்தில் நாம் அவர்களுக்கு விடுக்கும் வேண்டுகோள் யாதெனில் ஆலயத்திற்கு நிரந்தரமான நிதிய மொன்றை ஆரம்பிக்கவென இந்துப்பட்டதாரிகள் சங்கம் மேற்கொண்டுள்ள முயற்சிக்கு மனப்பூர்வமான ஆதரவு நல்க வேண்டும் என்பதே. பல்கலைக்கழகத்தில் இந்து மாணவர் களின் எண்ணிக்கை குறைந்துவரும் இவ்வேளையில் இந்துப்பட்டதாரிகள் சங்கத்தின் மேற்படி நடவடிக்கைக்கு, முன்னர் கல்விபயின்ற மாணவர்களும், தற்போது கல்விகற்கும் மாணவர்களும் ஆதரவளிக்க வேண்டுகின்றேன்.

தொடர்ந்து வரும் செயற்குழுவினரது செயற்பாடுகள் சுமுகமாக நடந்தேற எல் லாம்வல்ல குறிஞ்சிக்குமரன் திருவருளை வேண்டுகின்றேன்.

சா. வாகீசன்
மூன்றாம் வருடம்/விவசாய பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

# இதழாசிரியர் இயம்புகின்றார்...

குறை தீர்க்கும் குறிஞ்சிக் குமரனின் திருவருளால், பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தினால், ஆண்டுதோறும் வெளியிடப்படும் இந்து சமய சஞ்சிகையான "இந்து தருமம்" இம்முறையும் வெளியிடப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

மேன்மை கொண்ட சைவத்தின் தொன்மையை அகிலமும் உணர்த்தவேண்டும் என்ற ஆசையில் இருக்கும் சைவ சமயப் பற்றுள்ளவர்களுக்கு, எமது இம் முயற்சி, பெருந்துணை புரியும் என்பதில் எமக்கு எவ்வித சந்தேகமுமில்லை. இன்றைய சூழ்நிலையில் இவ்வாறான ஒரு முயற்சியில் தடைகள் ஏற்படுவது இயல்பே. எனினும் இத்தடைகளை எல்லாம் தாண்டி இச் சஞ்சிகை வெளியிடும் முயற்சி கைகூடியுள்ளது.

"இந்துதருமத்தினை" சிறந்த ஒரு சமய சஞ்சிகையாக ஆக்கவேண்டும் என்ற அவா, இப்பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் சைவசமயத்தைச்சார்ந்த விரிவுரையாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இருக்கின்றது என்பதை நிரூபிப்பதாக இவ்வருட சஞ்சிகை சுமந்து வரும் ஆக்கங்கள் அமைந்திருக்கின்றன எனின் அது மிகையாகாது என நினைக்கிறேன். இச்சந்தர்ப்பத்தில் எமக்கு தங்களின் பல்வேறு கருமங்களுக்கு மத்தியில் ஆக்கங்களை நல்கிய விரிவுரையாளர்களுக்கும், மாணவர்களுக்கும் இந்து மாணவர் சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இச் சஞ்சிகையின் வளர்ச்சிக்கு தங்களின் இதயபூர்வமான ஆசிச் செய்திகளை வழங்கியவர்களுக்கும் இந்து மாணவர் சங்கச் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எனது இக்கட்டான நிலை கண்டு பல்வேறு கடமைகளுக்கு மத்தியில், இச் சஞ்சிகையின் வெளியீட்டிற்கு, என்னைவிட அதிக பங்களிப்பு செய்த எமது சங்க செயலாளர் செல்வன். வ. பவகரன் அவர்களுக்கு எனது தோழமை நிறைந்த நன்றிகளை கூறுவதோடு, இச் சஞ்சிகைக்குத் தேவையான விளம்பரங்களை சேகரித்துத் தந்த எமது சங்க உறுப்பினர்களுக்கும், சக மாணவர்களுக்கும் விளம்பரங்களைத் தந்துதவிய கொடை வள்ளல்களுக்கும், இந்து மாணவர் சங்க சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

"யாமிருக்கப் பயம் ஏன்" என வரும் அடியவர்களை எல்லாம் அரவணைத்துக் கொள்ளும், இக் குறிஞ்சிக் குமரனின், அருட் கடாட்சத்தால் நிறைவேறிய இச் சஞ்சிகையினை எமக்கு பதிப்பித்துத் தந்த "செனித்" அச்சகத்தினருக்கும் நன்றியை தெரிவிக்கின்றோம்.

"வாழையடி வாழையாக" வடிவேலனின் திருவருளால், வெளியிடப்படும் இச் சஞ்சிகை எதிர்வரும் காலங்களிலும் மேலும் பொலிவு பெற்று, திகழ வேண்டும் என கூறி விடைபெறுகிறேன்.

நன்றி

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"

மு. இரவி
இதழாசிரியர்

கலைப்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

# பேராதனைப் பல்கலைக்கழக
# இந்து மாணவர் சங்க செயற்குழு 1990 / 91

| | |
|---|---|
| *பெருந்தலைவர்:* | கலாநிதி. து. விநாயகலிங்கம் |
| *பெரும் பொருளாளர்:* | வைத்தியகலாநிதி. வி. விஜயகுமாரன் |
| *தலைவர்:* | செல்வன். செ. இரவீந்திரநாதன் |
| *துணைத்தலைவர்:* | செல்வன். பொ. மகாதேவன் |
| *இணைச்செயலாளர்கள்:* | செல்வன். வ. பவகரன் |
| | செல்வி. செ. கிருபாலினி |
| *இளம்பொருளாளர்:* | செல்வன். க. நல்லைநாதன் |
| *இதழாசிரியர்:* | செல்வன்' மு. ரவி |
| *நூலகர்:* | செல்வன். த. ரிஷிந்திரன் |
| *குழு உறுப்பினர்கள்:* | செல்வன். ச. விஜயமோகன் |
| | செல்வன். ந. கிருபாகரன் |
| | செல்வி. கி. சிவமதி |

# குறிஞ்சிக்குமரன் கோவில்
# பொறுப்பாண்மைக்குழு 1990/91

*தலைவர்:* பேராசிரியர் சி. தில்லைநாதன்


*பொதுச் செயலாளர்:* திரு. வ. நந்தகுமார்

*பொருளாளர்:* திரு. க. பாலதாசன்
(இந்துப் பட்டதாரிகள் ஒன்றியப் பிரதிநிதி)

*உறுப்பினர்கள்:*

1) பேராசிரியர் த. யோகரட்ணம்
2) பேராசிரியர் வே. இரவீந்திரன்
3) கலாநிதி வ. முத்துக்குமாரசுவாமி
4) திரு. V. பாலசுப்ரமணியம்
(அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர்)
5) திரு. அ. துரைசுவாமிப்பிள்ளை
(மத்திய மாகாண இந்து மாமன்ற தலைவர்)
6) கலாநிதி து. விநாயகலிங்கம்
(இந்து மாணவர் சங்க பெருந்தலைவர்)
7) வைத்திய கலாநிதி வி. விஜயகுமாரன்
(இந்து மாணவர் சங்க பெரும் பொருளாளர்)
8) செல்வன். செ. இரவீந்திரநாதன்
(இந்து மாணவர் சங்க தலைவர்)
9) செல்வன். வ. பவகரன்
(இந்து மாணவர் சங்க செயலாளர்)
10) செல்வன். க. வல்லபானந்தன்
(இந்து மாணவர் சங்க பிரதிநிதி)
11) செல்வன். ஞா. கணேசமுருகன்
(இந்து மாணவர் சங்க பிரதிநிதி)

# இந்து மாணவர் சங்கச் செயற்குழு 1990/91



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) :-
செல்வி செ. கிருபாலினி (இணைச் செயலாளர்), செல்வன் செ. இரவீந்திரநாதன் (தலைவர்), கலாநிதி து. விநாயகலிங்கம் (பெருந் தலைவர்), வைத்திய கலாநிதி வி. விஜயகுமாரன் (பெரும் பொருளாளர்), செல்வன் வ. பவகரன் (இணைச் செயலாளர்)

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) :-
செல்வன்கள் ந. கிருபாகரன் (செயற்குழு உறுப்பினர்), பொ. மகாதேவன் (துணைத்தலைவர்), த. ரிஷீந்திரன் (நூலகர்), ச. விஜயமோகன் (செ. குழு உறுப்பினர்), க. நல்லைநாதன் (இளம் பொருளாளர்), மு. ரவி (பத்திராதிபர்),

# குறிஞ்சிக்குமரன் ஆலய பொறுப்பாண்மைக்குழு 1990 / 91



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்):-

திரு. வ. நந்தகுமார் (செயலாளர்), பேராசிரியர் த. யோகரட்ணம், திரு. V. பாலசுப்பிரமணியம், பேராசிரியர் சி. தில்லைநாதன் (தலைவர்) திரு. அ. துரைசுவாமிப்பிள்ளை, கலாநிதி. து. விநாயகலிங்கம்.

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்):-

செல்வன்கள்: வ. பவகரன், க. நல்லைநாதன், ஞா. கணேசமுருகன், செ. இரவீந்திரநாதன், க. வல்லபானந்தன், திரு. க. பாலதாசன் (பொருளாளர்) வைத்திய கலாநிதி வி. விஜயகுமாரன், கலாநிதி வ. முத்துக்குமாரசுவாமி

# கிருஷ்ண வழிபாடு

— பேராசிரியர் சி. தில்லைநாதன்
தலைவர் / தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

இந்துக்கள் மத்தியிலே கிருஷ்ண வழிபாடு பிரசித்தி மிக்க ஒன்றாகத் திகழ்கிறது. அவனுக்கென்று அமைந்த ஆலயங்களில் மட்டுமின்றி ஏனைய தெய்வங்களுக்கான ஆலயங்களிலும் கிருஷ்ணவழிபாடு நிகழ்கிறது. கிருஷ்ண என்றால் கறுத்தவன் என்பது பொருளாகும். பொதுமக்கள் மத்தியிலே செல்வாக்குப் பெற்ற பிராக்கிருத மொழியிலே கிருஷ்ண என்ற சமஸ்கிருதச் சொல் கண்ண என வழங்கப்படுவதாயிற்று. 'கண்ணன் என்னும் கருந்தெய்வம்'[1] ஆழ்வார்களின் பாசுரங்களில் விஸ்தாரமாகப் பாடப்பட்டிருக்கிறான். விஷ்ணு வழிபாடு அல்லது வைணவமதம் நிலைகொண்டு பரவக் கிருஷ்ணன் காலாய் அமைந்தகதை சுவாரஸ்யமானதாகும்.

கிருஷ்ண என்ற பெயர் முதன் முதற் குறிப்பிடப்படுவது இந்திரனைப் போற்றும் இருக்குவேத வாக்கியமொன்றிலாகும்[2]. கிருஷ்ணனின் மனைவியரை இந்திரன் கொன்றொழித்ததாக அதிற் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்பின் 50,000 கிருஷ்ணர்களை இந்திரன் கொன்றதாகவும் கூறப்படுகிறது. அந்தக் கிருஷ்ணர்கள் இருக்குவேதப்படி இராட்சதர்கள் ஆவர். ஆரியர்கள் இந்திரனைப் பிரியத்தோடு தம்தலைவனாகக் கொண்டாடியமையும் தங்கள் பரவலையும் ஆதிக்கத்தையும் எதிர்த்து நின்றவர்களை இராட்சதர் என்றும் அசுரர் என்றும் இழித்தொதுக்கியமையும் பரவலாக அறியப்பட்டனவாகும்.

கிருஷ்ண வழிபாடு நிலைபெற்ற பின்னர் அவனைப்பற்றிப் பல புராணங்கள் எழுதப்பட்டன. அவற்றின்படி, கிருஷ்ணன் யாதவ வம்சத்தைச் சேர்ந்தவன். யாதவர்கள் மதுராபுரியில் ஜமுனா நதியின் மேற்குப் பக்கத்திலுள்ள பிருந்தாவனத்திலும் அதன் மறுகரையிலமைந்த கோகுலத்திலும் வாழ்ந்த ஆயர்குலத்தினராவர்.

கிருஷ்ண என்பது, பசுவினை வழிபட்ட முக்கியத்துவம் வாய்ந்த ஒரு குழுவினருக்கும், ஆரியர் வருவதற்கு முன்னர் இந்தியாவில் வாழ்ந்திருந்து அவர்தம் படையெடுப்பை மும்முரமாக எதிர்த்த ஒருவம்சாவழியினருக்கும் வழங்கிய பெயராதல் வேண்டும் என்ற கருத்து[3] ஒதுக்கவியலாத ஒன்றாகவே தோன்றுகிறது.

கிறித்துவுக்கு முன் நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் பாணினியின் அஷ்டாத்தியாயியிலும், சந்திரகுப்த மோரியனின் அரசவையில் வாழ்ந்திருந்த கி. மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்கத் தூதுவனான மெகஸ்தனீஸ் குறிப்புக்களிலும் கிருஷ்ண வழிபாடு நிகழ்ந்தமைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. மெகஸ்தனீஸ் கிருஷ்ணனை விஷ்ணுவின் அவதாரமென்று வர்ணித்துள்ளார். ஆனால், வழக்கிலிருந்த மதப்பிரிவுகளைக் குறிப்பிடும் கி. மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகன் கல்வெட்டு கிருஷ்ண வழிபாடு பற்றியோ வைணவம்பற்றியோ குறிப்பிடவில்லை. கிருஷ்ண வழிபாடு மதுரையிலும் அதன் அயலிலிருந்த சில பிரதேசங்களிலும் மட்டும் வழக்கிலிருந்ததாகவே மெகஸ்தனீஸ் உரைத்துள்ளான்[4]

இவற்றைத் தொகுத்து நோக்கும்போது, கிருஷ்ணவழிபாடு கி. மு. மூன்றாம் நூற்றாண்டினை ஒட்டியே பரந்து பிரசித்தி பெற்றிருக்க வேண்டும் என்பதும், ஆரம்பத்தில் அது ஆரியரல்லாத இந்தியாவின் பூர்வீகக் குழுவொன்றுக்கு உரியதாக இருந்திருக்க வேண்டும் என்பதும் உய்த்துணரப் படலாம். அவ்வழிபாடு முக்கியத்துவம் மிக்கதாகிப் பரவ ஆரம்பக் காரணமாயமைந்தவை மகாபாரதமும் பகவத்கீதையும் ஆகும்.

மகாபாரதம் கிறித்துவுக்கு 3000 ஆண்டுகளுக்கு முன் நடந்ததென்று சிலர் கூறினாலும், கிறித்துவுக்கு முன் 1000 - 1400 காலப்பகுதியிலேயே அது நடந்திருக்க வேண்டுமென்பதே பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுவதாகும். அக்கதை நீண்ட காலமாக வழங்கி வந்து, கவிஞர் கற்பனைகளால் மெருகூட்டப்பட்டு, இன்று கிடைக்கும் வடிவில் அமைந்த காலப்பகுதி கி. மு. 400 க்கும் கி. பி. 100 க்கும் இடைப்பட்டதாயிருக்கலாம். இதில் சேர்க்கைகளும் சொருகல்களும் அவ்வப்போது இடம் பெற்றிருக்கலாம் என்றும் அறிஞர் கருதுவர்.

கிருஷ்ணனது வாழ்க்கை குறித்து எமக்குக் கிடைக்கும் நூல்களுள் காலத்தால் முந்தியது மகாபாரதம். அதில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடைப்பட்ட போரில் பாண்டவர் பக்க ஆலோசகனாகவும், வழிகாட்டியாகவும் கிருஷ்ணன் தோன்றுகிறான். பாண்டவர்களுடைய நெருங்கிய உறவினனாகவும், அவர்களுக்கு இக்கட்டான வேளைகளில் கைகொடுக்கும் ஆபத்பாந்தவனாகவும் சித்தரிக்கப்படுகின்றான். அதே வேளையில் சத்திரியர்களின் கர்வத்தைக் குறைக்கவும் பூமித்தாயின் பாரத்தைக் குறைக்கவும் தோன்றியவனாகவும் விஷ்ணுவின் அவதாரமாகவும் போற்றப்படுகிறான்.

சிவனை (மஹாதேவனை) வழிபட்டவனாகவும் சிவனிடத்தும் உமாதேவியிடத்தும் பல வரங்களைப் பெற்றவனாகவும் கிருஷ்ணன் சித்தரிக்கப்படுவதையும் மகாபாரதத்தில் காணலாம்[5]. துரோணரின் மகன் தந்தையின் மரணத்திற்குப் பழி வாங்கும் பொருட்டு இரவில் பாண்டவர் கூடாரத்தினுள் புகுந்தபோது, புலியாடைதரித்துப் பாம்பாபரணமணிந்த சிவன் பேருருப்பூண்டு தடுத்ததாகவும் சிவனது உடல் சூரியன்போல் பிரகாசிக்க அவ்வொளியிலிருந்து பல்லாயிரம் கிருஷ்ணர்கள் தோன்றியதாகவும் மகாபாரதம் கூறும். இவற்றை நோக்கும்போது, இறையவதாரமாகவும் அமானுஷ்ய புருடனாகவும் கிருஷ்ணன் காட்டப்பட்டாலும், வீரபுருட நிலையில் இருந்து அவன் மாறாதிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

இருக்கு வேதத்தில் இந்திரனுக்குத் தோழனாகத் தோன்றும் விஷ்ணுவின் அவதாரமாகக் கிருஷ்ணன் போற்றப்பட்டாலும், இந்திரனை அவனது விரோதியாகக் காணும் நிலை மாறியதாகத் தெரியவில்லை. காண்டவதகனத்தைத் தடுக்க முயன்ற இந்திரன் கிருஷ்ணனிடமும், அர்ச்சுனனிடமும் தோல்வி கண்டமையை மகாபாரதம் கூறும். யாதவர்கள் தன்னை வழிபட மறுத்ததால், சினம்கொண்ட இந்திரன் காளமேகங்களை ஏவிக் கல்மாரி பொழிந்தபோது கிருஷ்ணன் குன்றைக் குடையாகப் பிடித்து ஆயரையும் ஆநிரைகளையும் காத்ததாகப் பின்னர் எழுதப்பட்ட பாகவதம் கூறும்[6]

வேதகாலத்துச் செவ்வண்ண விஷ்ணுவுடன் கிருஷ்ணனைத் தொடர்பு படுத்தும் முயற்சிகள் வலிந்து மேற்கொள்ளப்பட்டவையாகவே தோன்றுகின்றன. விஷ்ணுவின் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான மச்ச, கூர்ம, வராக, நரசிங்க, வாமன, பரசுராம, ராம, பலராம, புத்த, கல்கி அவதாரங்களைப் போலன்றி, கிருஷ்ணாவதாரம் எனப்படுவது கடவுளே மனித வடிவில் உதித்த ஒன்றாகக் காணப்படுகிறது. எவ்வாறாயினும், கிருஷ்ணன் இல்லாத விஷ்ணு வழிபாடோ வைணவமோ பரந்து கால்கொள்ளவில்லை.

கிருஷ்ண வழிபாடு வலுப்பெற்று வேரூன்ற உதவிய பகவத்கீதை, மகாபாரதத்தின் ஒரு பிற்சேர்க்கை என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுவதாகும். கி. மு. நான்காம் நூற்றாண்டு என்போர் முதல் கி. பி. இரண்டாம் நூற்றாண்டென்போர் வரை கீதை எழுந்த காலங் குறித்து அறிஞரிடை அபிப்பிராய பேதம் நிலவுகிறது. போர்க்களத்திலே

அர்ச்சுனனுக்குக் கிருஷ்ணன் நிகழ்த்திய உபதேசமாக அமைந்துள்ள கீதை, உபநிடதங்களின் சாரம் என்று கொண்டாடப் படுகிறது. வாழ்க்கை வினைகளில் உறுதிகொண்டவர்களை மட்டுமின்றி துறவிகளையும் கவரும் அம்சங்களை உள்ளடக்கியதாய்க் கீதை காணப்படுகிறது. எழுந்தகாலமுதல் இந்துமதத்தில் சிறப்பான இடத்தினைப் பெற்றுவிட்ட கீதை, கிருஷ்ணனை ஒரு சமயத்தலைவனாகத் துலங்கவைக்கிறது.

வேத வழிபாட்டு முறையிலிருந்து வேறுபட்ட வகையில் புதிய விடயங்கள் இரண்டு கீதையில் அழுத்தம் பெறுகின்றன. ஒன்று, நிஷ்காம்கர்மம், அதாவது, பற்றின்றிக் கடமையிலே துணிந்து நிற்றல். இரண்டாவது, இறை பக்தி, தன்னைப் பாரமாகக் கொண்டு பக்தி செலுத்துபவர்களைக் . கிருஷ்ணன் எந்நிலையிலும் கைவிடமாட்டான் என்ற நம்பிக்கை, வாழ்க்கையில் ஆறுதலும் உறுதியும் அளிப்பதாயமைந்தது. கிருஷ்ணன் அனைத்துக்கும், யாவருக்கும் மேம்பட்டவனாகக் கீதையிலே தோன்றுகின்றான். ''மஹாத்மாவே, நின்னை எங்ஙனம் வணங்காதிருப்பார்? நீ ஆதி கர்த்தா, ப்ரம்மனிலும் சிறந்தாய். அநந்தா, தேவேசா, வையத்தின் உறைவிடமே, நீ அழிவற்றபொருள். நீ ஸத், நீ அஸத்; நீ அவற்றைக் கடந்த ப்ரம்மம்'' 7. என்று அர்ச்சுனன் சொல்வது கவனிக்கத்தக்கது.

மகாபாரதம் எழுத்திலே பொறிக்கப்பட்ட காலமும், பகவத்கீதை தோன்றிய காலமும், கிருஷ்ணன் தெய்வமாகக் கொண்டாடப்பட்ட காலமும், அவன் விஷ்ணுவோடும் நாராயணனோடும தொடர்பு படுத்தப்பட்ட காலமும் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும், அவை யாவும் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டுக்கும் இடையிலேயே நிகழ்ந்தவை என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாகும்.

இக்காலப் பகுதி இந்துமத வரலாற்றிலே முனைப்பும் முக்கியத்துவமும் மிகுந்த ஒன்றாகும். வேத வழிபாடு இக்காலப் பகுதியிலே பல சவால்களை எதிர்நோக்கியது. அவற்றுள் முதலாவதாகக் குறிப்பிடப்பட வேண்டியது, இந்தியப் பூர்வீகக் குடிகளினதும் அவர்தம் வழிபாட்டு முறைகளினதும் எதிர்ப்பாகும். இந்திரனைக் கறுப்புவண்ணனான கிருஷ்ணன் மூர்க்கமாக எதிர்த்துப் போரிட்ட கதையும், இந்திரனை வழிபடவேண்டாம் என்று யாதவர்கள் தடுக்கப்பட்ட பாகவதக் கதையும் இங்கு மனங்கொளத் தக்கவை.

இரண்டாவதாகக் குறிப்பிடத்தக்கது, அக்காலப் பகுதியில் வேதவழிபாட்டு முறை அடைந்திருந்த வீசனத்துக்குரிய நிலைமையாகும். வருணன், உஷா, சூரியன் முதலான இயற்கைத் தெய்வங்களை வணங்கிய மந்தைமேய்த்த நாடோடிகளான புராதன ஆரியர்களின் எளிமையான வழிபாட்டு முறையானது. பிராமணீயத்தின் சிக்கல் வாய்ந்த யாகங்களுக்கும் கிரியைகளுக்கும் சடங்கு சம்பிரதாயங்களுக்கும் ஆட்பட்டுக் கிடந்தது. சிந்திக்கக்கூடிய பலர் மிருகபலிகளுக்கும் சடங்குகளுக்கும் எதிரான திசையிலே சிந்திக்கத் தலைப்பட்டனர்.

அடுத்துக் குறிப்பிடத்தக்கது, வேதங்களையும் வழக்கிலிருந்த கொள்கைகளையும் மறுத்த புதிய சமயங்களின் தோற்றமாகும். தன்னல மறுப்பும் தூய ஒழுக்கமுமே முத்தி தரவல்லன என்று போதித்த பௌத்த சமண மதங்களின் செல்வாக்குப் பரவலாயிற்று. ஆற்றல் மிக்க அசோகச் சக்கரவர்த்தி பௌத்தத்தை நாலாதிக்கும் பரப்பப் பெருமுயற்சிகளை மேற்கொண்டான் உலகவாழ்க்கையினை நிலையற்றதென ஒதுக்கி எல்லாம் கர்மவினைப்படியே நடக்குமென்று செயலற்றிருக்கும் மனப்பான்மை வளரவும் பௌத்தம் வழிகோலுவதாயிற்று.

இந்நிலையில், முன்னிரு சவால்களுக்கும் வல்லமையுடன் முகங்கொடுக்க உதவும் வகையில் முதற் சவாலைச் சமாளித்த வேத மார்க்கத்தினரின் சாதுரியம் வியத்தற்குரியதாகும். வாசுதேவனைப் பரதெய்வமாகக் கொண்ட பாகவதத்தைப் பிரசாரம் செய்த கிருஷ்ணனை, விஷ்ணுவாகவும் நாராயணனாகவும் வழிபடுதற்குரிய தெய்வமாக

ஏற்றுக்கொண்டனர் [8]. அதற்கு மக்களை உடன்பட வைக்க உதவியது, எனவே அவர்கள் அங்கீகாரம் பெற்றிருந்த அவதாரக் கோட்பாடென்றே கொள்ளவேண்டும் [9]. விஷ்ணு சூரியனின் வடிவமாகக்கொள்ளப்பட்டவர். நாராயண என்றால் கடவுளரதும் மக்களதும் தரிப்பிடம் என்று கொள்ளப்படும். யாவற்றுக்கும் மேற்பட்ட ஒரு சக்தியைத் தரிசிக்க விரும்புபவனைத் திருப்திப்படுத்துவதாக விஷ்ணு வடிவமும், பாலில் நெய்போல இயல்பாகவே எங்கும் பரந்துள்ள இறையைத் தியானிக்க விரும்பும் தத்துவ ஞானியைத் திருப்திப்படுத்துவதாக நாராயண விசுவரூபமும் அமைந்தன.

தங்களால் வெற்றிகொள்ளப்பட்ட நாட்டு மக்களை அணைத்துக்கொள்ளக் கருதிய ஆரியர் அம்மக்களின் பிரதான தெய்வமொன்றுக்கு இந்துமதத்தில் இடந்தர விழைந்தமையின் விளைவாகவே விஷ்ணு கருநிறக் கடவுளாய்க் காணப்பட்டான் என்று ஹுமாயுன் கபீர் கூறுவர் [10]. கிருஷ்ணனைத் திராவிட இனத்துக்கு உரியவனாக இனங்காணும், முல்க் ராஜ் ஆனந். திராவிடரைச் சமாதானப்படுத்த வேண்டி ஆரியர் அவனை விஷ்ணுவின் அவதாரமாகக் கொண்டனர் என்பர் [11]. கிருஷ்ணனின் நிறம் அவன் நடு இரவிற் பிறந்ததனால் ஆனதென்றும், விஷ்ணுவின் பிழம்புருவான சூரியனோடு சேர்ந்த ஆகாயத்தின் நீலவண்ணம் கிருஷ்ணனுக்கு அமைந்ததென்றும் விளக்கமளித்து, கறுத்த திராவிட இடையனுக்கு ஆரியர் கௌரவம் அளித்தனர் என்கிறார் முல்க் ராஜ் ஆனந். கிருஷ்ணன் போர்வீரனாகத் திகழ்ந்தபோது அவனது சின்னங்களாகக் கொள்ளப்பட்ட சக்கரமும் சங்கும் விஷ்ணுவோடு அவன் அடையாளம் காணப்பட்டவிடத்து விஷ்ணுவுக்கு மாற்றப்பட்டிருக்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது [12]. பிரம்மமாகவும் விஷ்ணுவாகவும் நாராயணனாகவும் கிருஷ்ணன் கொள்ளப்பட்டமை, அவனுக்கும் அவனை வழிபட்டவர்களுக்கும் அன்றிருந்த பிரசித்தியையும் செல்வாக்கையும் காட்டுவதாகும்.

மகாபாரதம் கிருஷ்ணனைச் சிறந்த வீரபுருடனாகவும் அரசியல் விவேகியாகவும் காட்ட, பகவத்கீதை அவனை ஒரு மார்க்க போதகனாகக் காட்டுகின்றது. கீதையில் அவன் விஷ்ணு அவதாரமாகவோ நாராயணனாகவோ காணப்படவில்லையாகையால் அந்நூல் ஆதியில் பாகவத மதத்துக்குரியதாய் இருந்திருக்கக்கூடும் என்றும் எண்ண இடமுண்டு.

கடவுளுக்கும் கடமைக்கும் ஒருவன் தன்னை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும் என்று பகவத் கீதை வலியுறுத்துகிறது. யாகங்களுக்கும் கிரியைகளுக்கும் அது முக்கியத்துவம் அளிக்கவில்லை. முடிவற்ற கிரியைகளிலிருந்து விடுபட மக்களுக்கு வழிகாட்டுவதாய் அது அமைந்தது. அதனை வேதமாக, உபநிடத சாரமாக ஏற்றுக்கொண்டதன் மூலம், யாக, கிரியைச் சிக்கல்களை ஓரளவேனும் புறங்காணக் கூடியதாயிற்று. பௌத்த சமணக் கொள்கைகள் பரவுவதைத் தடுக்கவும் அது வலுவளிப்பதாயிற்று. வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கிய பௌத்த சமண மதங்களுக்கு மாறாக, கருமத்தை வலியுறுத்திய தோடமையாது, சரணடைந்தோர் வினையனைத்தும் களையவல்ல எங்கும் நிறைந்த யாதுமான இறையாகக் கிருஷ்ணனை நிறுத்தியதன்மூலம் மனித வாழ்க்கையின் ஒரு பற்றுக் கோடாகவும் பகவத்கீதை விளங்கியது. இந்த உலகத்து இன்பங்களும் கடமைகளும் துறந்துவிடத் தக்கன என்ற பௌத்த மதத்தினரின் போலி வேதாந்தத்தை அழிக்கும் பொருட்டாகவே பகவத்கீதை எழுதப்பட்டது என்று தமது பகவத்கீதை மொழிபெயர்ப்பின் முன்னுரையிலே மகாகவி பாரதியார் கூறியிருப்பதையும் இங்கு எண்ணிப் பார்த்தல் ஏற்றதாகும். சுருக்கமாக கூறுவதெனின், மகாபாரதமும் பகவத்கீதையும் தோற்றுவித்த கிருஷ்ண விம்பம், இந்துமதம் புதுத்தெம்புடன் மக்கள் மத்தியிலே பரவ உதவியது எனலாம்.

இந்துமத மறுமலர்ச்சியை ஒட்டியும் அதற்கு உறுதுணையாகவும் பல புராணங்கள் எழுந்தன. அவற்றுட்பல இக்காலத்தில் முதன்மைபெற்றுவிட்ட சிவனையும் கிருஷ்ணனையும் பற்றிய வரலாறுகளைப் பலவற்றாலும் விரித்துரைப்பனவாயின. பொதுமக்கள் மத்தியில் இந்துமத சம்பந்தமான கதைகளை எடுத்துச் சென்ற இப்புராணங்கள் பௌத்த மதப்பரவலைத் தடுப்பதை நோக்கமாகக்கொண்டு எழுதப்பட்டன என்ற கருத்தும் நிலவுகிறது [13].

கிருஷ்ணனைப்பற்றிக் கிடைக்கும் புராணங்களுட் காலத்தால் முந்தியது ஹரி வம்சம். ஆறாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கொள்ளப்படும் இப் புராணம் மகாபாரதத்தின் பின்னிணைப்பாகக் கருதப்படுகிறது. மகாபாரதத்தில் கிருஷ்ணனு டைய இடைக்குலச் செயல்களை ஓரிடத்து சிசுபாலன் இகழ்ந்துரைக்கிறானாயினும் அந்நூல் கிருஷ்ணனுடைய பிறப்பினையும் இளமைப்பருவச் சம்பவங்களையும் பற்றிக் கூறவில்லை. அவ்வரலாறு பின்னெழுந்த புராணங்களிலே விரித்துரைக்கப்படுவதைக் காண லாம். கிருஷ்ணனைப் பூரணாவதாரமாகக் கொண்டு அவனது வரலாற்றை ஒருமுகப் படுத்தி 16,374 செய்யுள்களிலே கூறும் ஹரிவம்சம் அவனுடைய இளமைக்காலத் தீரச் செயல்கலை எடுத்துரைப்பதுடன், கொடுமையினையும் அநீதியினையும் அழித்துப் பூவுல கிலே நன்மையை நிலைநாட்டத் தோன்றிய கடவுளாக அவனைச் சித்தரிக்கின்றது.

அதனையடுத்து 7,000 செய்யுள்களில் இயற்றப்பட்ட விஷ்ணுபுராணம் ஹரிவம் சத்திற் கூறப்பட்ட செய்திகளுக்குப் புத்துயிரளிப்பதாய்க் காணப்படுகிறது. விஷ்ணு வின் முன்னைப் பெருமைகள் யாவும் ஆயர்பாடிக் கிருஷ்ணரைச் சுற்றிப் பின்னப்பட் டுள்ளன. வாசுதேவனுக்கும் தேவகிக்கும் எட்டாவது குழந்தையாகப் பிறந்து ஆயர் பாடியில் யசோதையால் வளர்க்கப்பட்டது முதல் வேடனொருவனின் அம்பினால் மாண் டது வரையிலான கதை விஷ்ணுபுராணத்திற் கூறப்படுகிறது.

கிருஷ்ணன் பற்றி எழுதப்பட்ட புராணங்களிலே கோபிமாதருடன் அவன் புரிந்த லீலைகள் மிகுதியாக வர்ணிக்கப்படலாயின. கவிஞர்களின் கற்பனை காமம்சார்ந்த சல்லாபங்களின்பால் சற்று மிகுதியாகவே செல்வதாயிற்று. கோபியர் கிருஷ்ணன்மீது கொண்ட காதலும் கிருஷ்ணன் அவர்களிடத்துக்கொண்ட காதலும் கிருஷ்ண வழி பாட்டுக்கு ஒரு தனி வசீகரத்தைத் தந்து பொதுசன உணர்வீடுபாட்டை அதிகரித்தது உண்மைதான். என்றாலும், பெருவீரனாகவும் அரசியல் தலைவனாகவும் ஆன்மீக போதகனாகவும் கிருஷ்ணனைக் காணும் தன்மையினை அவை பின்னுக்குத் தள்ளி விட்டதாகவும் தோன்றுகிறது. பத்ம புராணத்திலும் பிரம்ம வைவர்த்த புராணத்திலும் அதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

ராதையைக், கிருஷ்ணனுடைய இதயத்திலிருந்து தோன்றிய அவனுடைய விசேட பிரியத்துக்குரிய கோபிப் பெண்ணாகக் காட்டியமை பின்னைய ராதாகிருஷ்ண வழி பாட்டுக்கு வழிவகுத்தது. ஆறாம் நூற்றாண்டுக்குப்பின் தோன்றிய பல இலக்கியங்களி லும் சிற்ப ஓவியங்களிலும் நடனநாடகங்களிலும் கிருஷ்ணன் கோபியர் காதல் சிரஞ் சீவித்தன்மை பெற்றுவிட்டது. ஹல்லீசக, ராஸக, கோஸ்தீ போன்றவை கிருஷ்ணலீலை களைச் சித்தரிக்க உருவான சமஸ்கிருத நடனங்களாம்[14]. அக்கலைப் படைப்புக்கள் பலவற்றில் அழகியலும் ஒழுக்காறும் முரண்பாடின்றி இசைந்து விளங்குவதும் உண்மையே.

ஆயினும், சம்போக சிருங்கார வர்ணனைகள் எல்லைமீறிய ஒரு நிலை பிரம்மவை வர்த்த புராணத்திலும் ஜயதேவ, சைதன்ய ஆகியோர் பாடல்களிலும் துலாம்பரமாகத் தெரிகிறது. கிருஷ்ணனுக்கும் கோபிக்கும் இடைப்பட்ட காதலைச் சித்திரிக்கும் பாடல் களை இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடையிலான காதலைக் காட்டும் நாயகன் நாயகி பாவப் பாடல்களாக எந்தளவுக்குக் கொள்ளமுடியும்? ''இந்த பாவத்தை ஆளுவது கத்தியின் கூர்ப்பாகத்தின் மீது நடப்பது போன்ற கஷ்டமான காரியம். ஒரு வரம்பு இருக்கிறது; அதற்கு இப்புறம் அப்புறம் போய்விட்டால், அசந்தர்ப்பமாகிவிடும்'' என்று பாரதியாரின் கண்ணன் பாட்டு இரண்டாம் பதிப்புக்கு எழுதிய முன்னுரையில் வ. வே. சு. ஐயர்எழுதியதை இவ்விடத்து எண்ணிப் பாராதிருத்தல் இயலாது, அனேக தமிழ் ஆழ்வார்களும் மீராபாயும் பாடிய நாயகன் நாயகி பாவப் பாடல்களுடன் ஜயதேவ, சைத்தன்ய போன்றவர்கள் பாடல்களை ஒப்பிட்டு நோக்கினால் அப்பாவத்தின் அர்த்தங்களையும் அனர்த்தங்களையும் புரிந்துகொள்ளவியலும்

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் சங்க இலக்கியங்களிலும் தொல்காப்பியம், சிலப்பதிகாரம் முதலானவற்றிலும் விஷ்ணு மாயோனாகவும், மாலாகவும் கண்ணனாக வும் வழிபட்டமைக்குச் சான்றுகள் உண்டாயினும், கிருஷ்ண வழிபாட்டின் உயர்நிலை விளங்குவது ஆழ்வார்களின் பாசுரங்களிலேயாம். ஆழ்வார் என்றால் இறைவனது குணத் திலே ஆழ்ந்து ஈடுபட்டவர் என்றே பொருள்படும். பல்வேறு சாதிகளையும் சேர்ந்த ஆழ்வார்கள் பக்தி வைராக்கியத்துடன் கண்ணனுடைய பெருமைகளையும் தோற்றப் பொலிவினையும் லீலைகளையும் படிப்போர் உள்ளங்களை அள்ளும் வகையிற் பல வாறாகப் பாடியுள்ளனர் பகவத்கீதைக்கும் பிரம்ம சூத்திரத்திற்கும் உரை எழுதிய பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இராமானுஜரும் தமிழரேயாவர். ஆழ்வார் பாசுரங்களிலே, சிறப்பாக ஆன்டாளின் திருப்பாவை ஈடுபாடு மிகக்கொண்ட இராமானுஜர் கிருஷ்ண வழிபாட்டுக்குத் தத்துவப்பரிமாணம் அளித்துள்ளார்

இலங்கையைப் பொறுத்தவரை, வைணவர் எனப்படுவோர் அருகியே காணப்படி னும், கிருஷ்ண வழிபாடு பரவலாக இடம்பெற்றுள்ளது. தென்கோடியிலுள்ள தெவி நுவரவிலும் வடகொடியிலுள்ள வல்லிபுரத்திலும் எழுந்தருளும் சிறப்பு கிருஷ்ணனுக்கு உண்டு. பருத்தித்துறையிலுள்ள வல்லிபுரத்திலும், யாழ்ப்பாணத்துப் பெருமாள் கோவி லிலும், பொன்னாலையிலும், இயக்கச்சிக்கருகேயுள்ள மல்வில்லிலும் கிருஷ்ண வழிபாடு நடை பெறுகிறது இந்துக்களின் ஏனைய தெய்வங்களுக்கான பல ஆலயங்களில் கிருஷ் ணன் வழிபடப் படுகிறான். பௌத்தர்கள் நீலவண்ணக் கடவுளாக, உபுல்வனாக வழிபடுவது கிருஷ்ணனையே. அவர்களுடைய பிரசித்தி வாய்ந்த களனி, தம்புல்லை, அனுராதபுர ஆலயங்களிலே கிருஷ்ணனுக்குச் சிறப்பான இடம் அளிக்கப்பட்டுள்ளது.

இன்றைய தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் போற்றும் கிருஷ்ணன் அல்லது கண்ணன் மகாபாரதம், பகவத்கீதை, ஆழ்வார் பாசுரங்கள் ஆகியவற்றின் மூலமும் மகாகவி பாரதியார், கண்ணதாசன் முதலான தற்காலக் கவிஞர்கள் வாயிலாக வும் அறியப்பட்டவனாவான். அவனிடத்துப் பிரம்மத்தோடு விஷ்ணுவும் வாசுதேவ னும் அடங்குவர் மகாபாரதம் சித்தரிக்கும் கிருஷ்ணன் தீரமும் அரசியற் தந்திரோபாய மும் பிரச்சினைகளை நிலைமைக்குத்தக்கவாறு எதிர்கொண்டு புறங்காணும் விவேகமும் மிக்கவன். பகவத்கீதை காட்டும் கண்ணன் இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் இம்மைக்கும் மறுமைக்கும் வழி காட்டும் கூட்டாளியாகவும் ஆசிரியராகவும் விளங்கு கின்றான்.

ஹரிவம்சம், விஷ்ணு, பாகவத, பத்ம, பிரம்மவைவர்த்த புராணங்களைத் தமிழ் மக்கள் அவ்வளவுக்கு அறியமாட்டார்கள். அவற்றிற் கூறப்பட்டவற்றை ஆழ்வார்கள் பிழிந்து வடிகட்டி வழங்கியுள்ளனர். அவற்றை இக்கால அனுபவ உணர்வோடு பாரதி யார், கண்ணதாசன் முதலானோர் பாடியுள்ளனர் தந்தையாக, தாயாக, அரசாக ஆண் டானாக மட்டுமின்றித் தோழனாக, காதலனாக, சீடனாக, சேவகனாக, குழந்தையாக வெல்லாம் கண்ணன் தமிழ் மக்களுக்குத் தரிசனம் தந்துள்ளான். காதலனாகவும் குழந்தையாகவும் பாவனை செய்து பாடப்பட்ட பாடல்கள் கிருஷ்ணக் கவர்ச்சி சாதா ரண மக்களிடை மிகுதியாகப் பரவக் காரணமானதைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

கண்ணனுடைய கண்டாரைப் பிணிக்கும் வசீகரமும், ஆயர் பாடியில் கோபிமாத ருடன் அவன் புரிந்ததாகக் கூறப்படும் லீலைகள் சல்லாபங்களும், இதயத்துக்கு இத மான காதலனாக அவன் கொள்ளப்படுவதற்கு ஏதுவாய் அமைந்தன. கொடுமைமிகு ஹம்ஸனைக் கொன்று தருமத்தையும் தாய் தந்தையரையும் காக்கப் பிறந்த பிள்ளை ஆயர்பாடிக்குக் கடத்தப்பட்டு ஆபத்துக்களின் மத்தியில் யசோதையிடம் வளர்ந்த கதை, கண்ணுங் கருத்துமாகப் பேணப்பட வேண்டிய பெறுமானமிக்க ஒரு குழந்தை யாகக் கண்ணன் காணப்படுவதற்கும் பொருத்தமான பகைப்புலமாயிற்று.

இறைவனைத் தாயாக அல்லது தந்தையாக நோக்குவது பழைய மரபு. அது மறுதலையாக்கப்பட்டு, மனிதனின் மிருதுவான பராமரிப்பினை வேண்டிநிற்கும் கள்ள மற்ற, மென்மையான குழந்தையாக அவன் நோக்கப்படுவது ஓர் அழகிய புதுமைதான். அவனது துடுக்குத்தனமான குறும்புகளைப் பொறுக்க முடியாது கடிவதும் கண்டிப்பதும் ஒறுக்கமுனைவதும், ஒன்றும் பலன் தராதவிடத்து, "தோற்றுவிட்டேனடா! சூழ்ச்சிக ளழிந்தேன்." [15] என்று கையை விரிப்பதும் அற்புதமான கற்பனைகளாகும். இயற்கை யான வாழ்வோண்டும் மானிடப் புலனுணர்வுகளோடும் ஒட்டிய அனுபவங்களை மனித உள்ளங்களிலே கிளர்ந்தெழவைக்கும் தமிழ்ப் பாசுரங்களும், பிரம்மத்தையும் விஷ்ணுவை யும் கரந்து விளங்குபவனாகக் கண்ணனை தமிழர் உள்ளங்களில் நிறுத்திவைத்துள்ளன.

## அடிக்குறிப்புக்கள்

1. நாச்சியார் திருமொழி 13:1
2. மண்டலம் 8, சூக்தம் 6.
3. Benjamin Walker, Hindu World, London 1968, p. 559.
4. Bahadur Mal, Shri Krishna, His Philosophy and His Spritual Path, Hoshiarpur 1960 pp. 6, 50, 51.
5. John Dowson: A Classical Dictionary of Hindu Mythology and Religion, Geography, History and Literature, London, 1879, p. 164.
6. எஸ். இராமகிருஷ்ணன், இந்தியப் பண்பாடும் தமிழரும், மதுரை 1971, பக், 157 - 58.
7. பகவத்கீதை 11:37 (மகாகவி பாரதியார் மொழிபெயர்ப்பு
8. E. S. வரதராஜ அய்யர், தமிழ் இலக்கிய வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1957, பக். 214.
9. W. D. P. Hill, Bhagavad Gita, Oxford 1928, p. 10.
10. Humayun Kabir, Our Heritage, Bombay 1946, p. 31.
11. Mulk Raj Anand, The Krishna Theme in Indian Art, Cultural Forum, New Delhi Oct 67 - Jan. 68, p. 10.
12. P. L. Bhargava, Fundamentals of Hinduism, New Delhi, 1982, p. 48.
13. Elizabeth A. Reed, the Ancient Books of India, New Delhi 1988, p. 354.
14. E. W. Marasinghe, The Sanskrit Theatre and Stagecraft, New Delhi 1989 pp. 471 - 73.
15. மகாகவி பாரதியார், கண்ணன் - என் சேடன்.

*With the Best Compliments*

*From*

SRI RANEE SCISSOR SONG
LADIES & GENTS
HAIR DRESSERS BEAUTY PARLOURS

# SRI RANEE
## BEAUTY PLAZA

**No. 13, KING STREET,**
**K A N D Y.**

THE FORE - RUNNERS IN INTRODUCING MOD STYLES
IN THE WORLD OF HAIR STYLE

# ஈழமும் மரவணக்கமும்

— கலாநிதி திரு. சி. க. சிற்றம்பலம் —
தலைவர்/வரலாற்றுத்துறை, யாழ் பல்கலைக்கழகம்

மரங்களை வழிபடும் மரபு மிக நீண்டதொரு பாரம்பரியத்தைக் கொண்டதொன்றாகும். முன்பொருகால் உலகெங்கனும் வியாபித்ததொரு வழிபாட்டு மரபாக இது இருந்தது மட்டுமன்றிக் கால வெள்ளோட்டத்தில் பின்னர் வழிபாட்டு மரபுகளில் ஏற்பட்ட பல்வகை மாறுதல்கள், வளர்ச்சிகள் மத்தியிலும் தப்பிப் பிழைத்து இன்றும் இத்தகைய வழிபாட்டு மரபு நிலைத்திருப்பது இதன் தொன்மைக்கும் தொடர்ச்சிக்கும் அசைக்கமுடியாத சான்றாகும். மனித சமுதாயம் நாகரீக வளர்ச்சி காண முன்னரே, கற்கால சமுதாயத்தின் இறுதிக் கட்டத்தில் தோன்றி வளர்ந்த வழிபாடாக இது காணப்படுகிறது. இச் சகாப்தத்தில் இயற்கைச் சக்திகளை உயிருள்ளனவாக (ஆத்மா) கருதி அவற்றை வழிபட்ட மரபுவழி வந்ததொன்றே இஃதெனலாம். மரங்கள்/தாவரங்களோடு பண்டைய மனிதன் கொண்டிருந்த நெருங்கிய ஈடுபாடும், அவனது வாழ்க்கை முறையுமே இத்தகைய வழிபாட்டு மரபின் தோற்றுவாயாக அமைந்திருக்கலாம் போலத் தெரிகிறது. இக்கால வாழ்வும் இயற்கையோடு இணைந்த வாழ்வாகவே அமைந்தது. மரம், செடி, கொடிகள் ஆகியனவற்றின் தன்மைகளை அவதானித்த மனிதன், இவை உற்பத்தியாகிப் பூத்துக் கனி கொடுத்து, மடிந்து, மறுபடியும் சந்ததியைப் பெருக்கியதை அவதானித்த இவன் சிருஷ்டி, வளம், சந்ததிப் பெருக்கு, மறுபிறப்பு (அவதாரமெடுத்தல்) ஆகியனவற்றின் அம்சமாக இவற்றைப் போற்றியிருக்கலாம். இவற்றின் வனப்பும் இவனைக் கவரத் தவறவில்லை. வாழ்க்கையின் சுழற்சி பற்றிய தன்மைகளையும் இவை உணர்த்த தவறவில்லை. பண்டைய மனிதன் இவற்றைக் குல மரபுச் சின்னங்களாகப் போற்றவும் தவறவில்லை. சங்கப் பாடல்களில் பல்வேறு போர்கள் பற்றி வரும் வர்ணனைகளை உற்று நோக்கும் போதும் அப்போர்களில் அவர்கள் பயன்படுத்திய பூமாலைகளை அவதானிக்கும் போதும் நாடோடியாக வாழ்ந்த மனிதன் குலங்களாக வளர்ச்சி பெற்ற நிலையில் இவற்றைக் குல மரபுச் சின்னங்களாகப் போற்றிய நிலையை இவை எடுத்துக் காட்டுகின்றன எனலாம். நாகரீக நிலையை அடைந்த மனிதன் மரங்களுக்கான தனது வழிபாட்டு மரபை இரு வழிகளிற் பேணினான். ஒன்று மரங்களைத் தெய்வங்களாக வணங்குதல், இரண்டாவது மரங்களைத் தெய்வமுள்ள இடங்களாகக் கருதுதல், ஒரு வகையில் பார்க்கும் போது இத்தகைய மரவழிபாடு கூடப் பொழில்களை, காடுகளை காவுக்களைத் தெய்வங்களாக தெய்வமுள்ள இடங்களாகப் போற்றிய மனிதனின் ஓரெச்சம் போன்றே விளங்குகிறது எனலாம். பண்டைய மக்களின் சிந்தனையில் தெய்வ முறை இடங்களாகப் பொழில்கள், நகரங்கள், சந்திகள், சதுக்கங்கள், நீர் நிலைகள் ஆகியன இருந்ததும் வரலாறு. இத்தகைய இடங்களின் தெய்வங்களாக 'யக்ஷ' தெய்வங்கள் என அழைக்கப்பட்ட தெய்வங்கள் விளங்கின. யக்ஷ என்றால் வழிபாட்டிற்குரிய தெய்வமாகும். கால கதியிற்றான் பிற்காலத்தில்

இவை துன்பம் தரும் தெய்வங்கள் என்ற நிலையிற் தரம் குறைக்கப்பட்டன. இத்தகைய 'யக்ஷ' வழிபாட்டின் ஓரம்சமாக இம் மரவழிபாடும் இருந்தது எனலாம். இம் மரவழிபாடு, வனத்தோடு தொடர்புடைய வழிபாட்டு நெறி வந்ததென்பதற்கான தடயங்கள் இந்து மதத்தில் பல உள. பிற்பட்ட காலக் கோயில்கள் எல்லாம் வனங்களை மையமாக வைத்தே எழுச்சி பெற்றதும் குறிப்பிடத்தக்கது. அது மட்டுமன்றி கடவுள் உறையும் இடங்களாகக் காடுகளும் வனங்களும் இருந்ததைப் பின்வரும் அடிகள் எடுத்துக்காட்டுகின்றன. பொருநராற்றுப்படை (52) 'காடுறை கடவுள்' என விளிக்கிறது. துர்க்கையை ஐங்குறு நூறு (345) 'கானமர் செல்வி' என அழைக்கிறது. பதிற்றுப் பத்தில் (88) 'கடவுட் பெயரிய காணமொரு' என்ற குறிப்பும், திருமுருகாற்றுப்படையில் (223) 'காடுங் காவும் கவின் பெறு துருத்தியும்' என்ற குறிப்பும், நற்றிணையில் (398) வரும் 'பன்மலர் நறும் பொழில் பழிச்சி' என்ற குறிப்பும் இதனையே உணர்த்துகின்றன எனலாம்.

இதனால் மரவழிபாடு இயற்கையான பொழில்களை வழிபட்ட நிலையில் அப் பொழில்களில் நின்ற மரங்களை வழிபட்ட நிலையின் ஓரெச்சமே எனலாம். இந்தியாவின் பழைய நாகரீகமாகிய இந்து வெளி நாகரிகம் இற்றைக்கு 5000 ஆண்டுகட்கு முன்னர் தோன்றி வளர்ந்த நாகரிகமாகும். இந் நாகரிகம் தோன்ற முன்னரே தென்னாசியா என் அழைக்கப்படும் பிராந்தியத்தில் (இந்தியா, ஈழம்) இது பரந்திருந்ததற்கான சான்றுகள் உள. குறுணிக்கற்கால மக்களாகிய ஒஸ்ரலோயிற் இன மக்கள் இத்தகைய வழிபாட்டு முறைகளைத் தோற்றுவிக்க பின் வந்தோர் இதனைப் பேணி வளர்த்திருக்கலாம் போல் தோன்றுகிறது. ஈழத்திலும் இந்தியாவைப் போல் குறுணிக்கற்கால மக்கள் கி. மு. 28, 000 ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்ததற்கான தடயங்கள் காணப்படுவதாலும், இவர்கள் விட்டுச் சென்ற தடயங்கள் இந்தியாவிலிருந்தே இத்தகைய கற்கால மக்கள் ஈழத்துக்கு வந்தனரென்பதை எடுத்துக் காட்டுவதாலும் ஈழத்திலும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகட்கு முன்னதாக இவ் வழிபாடு தோன்றி வளர்ந்திருக்கலாம் போல் தோன்றுகிறது. இவ் வழிபாட்டிற்குரிய மக்கள் தான் தென்னாசிய நாகரிகத்தின் ஆரம்ப கர்த்தாக்கள், அடித்தளமானவர்கள் என்றால் மிகையாகாது. இவர்களின் வழிபாட்டை நாகரிக வளர்ச்சி கண்ட நிலையிலும் தென்னாசியா ஏற்றுக்கொண்டு பேணி வந்ததைச் சிந்து வெளி நாகரிகம் தொடக்கம் இற்றை வரை காணும் தடயங்கள் உணர்த்துகின்றன எனலாம்.

சிந்துவெளி நாகரிகத்தில் மரங்கள் இரு நிலையில் வழிபட்டதற்கான தடயங்கள் உள. ஒன்று மரத்தையே தெய்வமாக வழிபடல். இத்தகைய தெய்வீக நிலையில் வைத்து வழிபடப்பட்ட மரமாக 'அரசு' காணப்பட்டது. அரசமரம் என்றாலே மரங்களுக்கெல்லாம் அரசன் போன்ற மரம் என்பது பொருளாகும். சிந்து வெளியிலும் சிவ வணக்கம் காணப்படுவதால் இம்மர வழிபாடானது சிவ வணக்கத்துடன் பிற்காலத்தைப் போல் இணைந்துமிருக்கலாம். மற்றது தெய்வங்கள் உறையுமிடங்களாக மரங்கள் போற்றப்பட்ட நிலையாகும். பல் வகையான மரங்கள் இங்குள்ள முத்திரைகளிற் சித்தரிக்கப்பட்டுள்ளன. முத்திரை ஒன்றில் மரத்தின் கிளைகளுக்கிடையே ஒரு தெய்வத்தின் உருவம் காணப்படுகிறது. இம் மரத்தின் கீழே வழிபடுவோன் முழந்தாளில் நிற்பதும் சித்தரிக்கப்பட்டுள்ளது. இது போன்ற பல் வகை உதாரணங்களை எடுத்துக் காட்டலாம். இந்து வெளிநாகரிகத்தின் பின்னர் வேத காலக் கலாச்சாரத்திலும் இவ் வணக்க முறை பெற்றிருந்த முக்கியத்துவத்திற்கான தடயங்கள் உள. வேத காலக் கலாச்சாரம் சிந்து வெளியைப் போன்று உருவ வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்காது யாக வழிபாட்டிற்கே முக்கியத்துவம் அளித்தாலும் கூட, யாகத்தில் அக்கினியை வளர்க்கப் பயன்படுத்திய பல்வகை விறகுகள் இவ் வழிபாட்டின் மேன்மையை எடுத்துக் காட்டுகின்றன எனலாம். இன்றும் இந்து மதத்தில் யாகத்தில் பயன்படும் 'சமித்துக்கள்' என அழைக்கப்படும் இவ் விறகுகள் இதன் தொடர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றன என்றால் மிகையாகாது. எனினும் பிற்பட்ட பௌத்த மத எழுச்சி காலத்தில் குறிப்பாகப் பௌத்த நூல்களிலும்,

பௌத்த சமயக் கலையிலும் இம் மர வணக்கத்திற்கான தடயங்கள் பல உள எனலாம்.

ஈழத்தின் வரலாற்று நூல்களாகிய மகாவம்சம் போன்ற பாளி நூல்களிலும் இவ் வழிபாட்டு மரபுகள் பற்றிய எச்சங்களைக் காணக் கூடியதாக இருக்கிறது. பொதுவாகவே பௌத்த மத வரலாற்றைக் கூற வந்த இந்நூலாசிரியர்கள் இவ் வழிபாட்டு முறைகளில் அக்கறை செலுத்தவில்லை எனலாம். அத்துடன் பௌத்தத்தோடு ஒப்பிடுகையில் இவை தரம் குறைந்தவையே என்பதும் இவர்களது நோக்கமாகும். இதனால் பௌத்த வழிபாட்டு மரபில் இவ் வழிபாட்டு மரபுகள் இந்தியாவைப் போல் ஈழத்திலும் சங்கமித்த நிலையையே பௌத்தம் இவற்றை வெற்றி கொண்ட நிலையையே எடுத்துக் காட்டுகின்றன எனலாம். இருந்தும் இந்நூலாசிரியர்கள் இந் நாட்டின் ஆதிக் குடியேற்றம் பற்றிய கட்டுக் கதைகளுக்கு கருப்பொருளாக வட இந்திய பௌத்த ஜாதகக் கதைகளை எடுத்துக்கொண்டதால் இந் நாட்டில் வட இந்தியாவிலிருந்து வந்த மக்கட் கூட்டத்தினரே இத்தகைய வழிபாட்டுமரபையும் இங்கு எடுத்து வந்தனர் எனவும் கூறத் தயங்கவில்லை. இந்நூல்களை ஆதாரமாக வைத்து வரலாற்றை எழுதியோரும் வட இந்திய குடியேற்றத்தை (ஆரியரது குடியேற்றம்) எனக் கூறி, அங்கிருந்தே இவ் வழிபாடுகள் பரவின எனக் கொண்டதோடு இம் மக்கள் பௌத்தத்தைத் தழுவியதால் வட இந்தியா போன்றே இவர்களது வழிபாட்டு மரபுகளும் அமைந்திருந்தன எனவும் எடுத்துக் காட்டினர். வட இந்தியாவை விட புவியியல் ரீதியில் மிக அண்மித்து இருக்கும் தமிழகத்தின் செல்வாக்கு ஈழத்தில் சமயத் துறையில் ஏற்பட்டிருக்குமோ என்று கூட இவர்கள் எண்ணத் துணியவில்லை. அண்மைக் காலத் தொல்லியல் ஆய்வுகள் ஈழத்தின் நாகரிகத்திற்கு வித்திட்ட மக்கள் தென்னிந்தியரே என்பதனை எடுத்துக் காட்டியுள்ளமையால் புவியியல் ரீதியில் வட இந்தியாவை விட அண்மித்துள்ள தமிழகத்தின் சமய வரலாற்றின் அடிப்படையிலேதான் ஈழத்து ஆதி வணக்க முறைகளை ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தமிழகத்து வழிபாட்டு முறைகளை எடுத்தியம்புவனவாகச் சங்க இலக்கியங்கள் அமைந்தாலும் கூட ஏற்கனவே குறித்த வண்ணம் தென்னாசியா முழுவதிலும் திராவிடருக்கு முன்பிருந்தே வழக்கில் இருந்த யக்ஷ வழிபாட்டின் ஓரம்சமாக இம் மரவணக்கத்தினை இவை எடுத்துக் காட்டுகின்றன எனலாம். ஒரு கலாசார அம்சங்கள் பின் வரும் கலாசார அம்சங்களுடன் கலப்பது வழக்கு. பின்வந்த கலாசாரமும் இவற்றைப் பேணும் மரபுமுண்டு. இதனால் ஈழத்துப் பாளி நூல்களை இச் சங்க இலக்கியங்களின் பின்னணியில் மட்டும் அன்றி, ஈழத்தின் ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்களின் அடிப்படையிலும் ஆராயும் போதுதான் மேலும் இவ் வழிபாடு பற்றி பல விபரங்களை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

ஈழத்தில் நிலவிய மர வழிபாடு பற்றி மகாவம்சத்தில் குறிப்புக்கள் உள. நிச்சயமாக பனை, ஆல் ஆகியன ஆதி ஈழத்தில் வழிபாட்டுப் பொருட்களாக விளங்கியதை இக் குறிப்புக்கள் எடுத்துக் காட்டுகின்றன. இக் குறிப்புக்களை ஆராய்ந்த பரணவித்தான (**Paranavitana, S 1929**) ராகுல (**Rahula, W. 1956**) போன்றவர்கள் இவற்றுக்கான விளக்கங்களையும் தந்துள்ளனர். மகாவம்சக் குறிப்புக்கள் கி. மு. நான்காம் நூற்றாண்டில் அரசோச்சிய பண்டுகாபய மன்னன் காலத்தோடு இணைந்து காணப்பட்டாலும் கூட இக் காலத்திற்கு முந்திய காலப் பகுதிக்குரியனவாகவே இவை விளங்குகின்றன எனலாம். இம் மன்னன் நகரத்தின் மேற்குப் புற வாசலில் ஆல மரத்தின் கீழ் வைசிராவணக் கடவுளை உறையச் செய்து அவனுக்குரிய வழிபாட்டை மேற்கொண்டதையும் இதே திசையில் 'வியாததேவன்' என்ற கடவுளை பனைமரத்தின் கீழ் உறையச் செய்து அவனுக்குரிய வழிபாட்டை மேற்கொண்டதையும் மகாவம்சம் குறிக்கிறது. பனைமரமும், ஆலமரமும் இக் குறிப்பில் அருகருகே காணப்படுவதும் ஈண்டு அவதானிக்கத் தக்கது. இது பற்றி ஆராய்ந்த பரணவித்தான அவர்கள் கி. மு 6 ஆம் நூற்றாண்டிலிருந்து அதாவது புத்தர் காலத்திலிருந்தே பனை ஒரு புனித மரமாக வட இந்தியாவில் பேணப்படுவதற்குப் பனை வடலி ஓலையில் இருந்து

செருப்புத் தைத்தல் இக் காலத்தில் கண்டிக்கப்பட்டதை காரணமாக எடுத்துக் காட்டியுள்ளார். இவ்வாறு கண்டிக்கப் பட்டதற்குப் காரணம் பனை ஓர் அறிவுப் பிராணியாக விளங்கியமையே என்றும் இவர் கூறியுள்ளார். ராகுலாவோ இது தவறு எனக் கூறி பனை மட்டுமல்ல புல் உட்பட எல்லாத் தாவரங்களும் ஓரறிவுப் பிராணியாதலால், பனைக்கு மட்டும் இத் தகைய கண்டனம் பொருந்தாது எனவும் எடுத்துக் காட்டி இச் சான்று பனை எவ் விதமும் புனிதப் பொருளாக மதிக்கப் பட்டத்தை விளக்கவில்லை எனவும் கூறி உள்ளார். அத்துடன் மகாவம்சத்தில் காணப்படும் இச் சான்றைவிட வேறெந் நூலிலோ அன்றி இன்றைய வழிபாட்டு நெறியிலோ பனை ஒரு முக்கிய இடத் தினைப் பெறவில்லை எனவும் எடுத்துக் காட்டியுள்ளார்.

ஏற்கனவே குறிப்பிட்ட வண்ணம் பனை மரத்தின் கீழ் இருந்த தெய்வத் தினை மகாவம்சத்தினை மொழிபெயர்த்து பதிப்பித்த கெய்கர் 'வியாததேவ' என்று கூற, மலலசேகர (Malalasekara, G. P. 1928) இப் பதத்தினை வியாதி தேவ எனவும் குறிப்பிட்டுள்ளமை ஈண்டு நினைவு கூரற்பாலது. இக் கடவுளை 'வியாதேவ' என்றெண்ணிய பாக்கர் (Parker, H. 1929) தென்னிந்திய பழங் குடியினரின் மலைத் தெய்வமாகிய இது 'வேட்டையாடுவோர் தெய்வமே' எனக் கூறியதோடு, மிகப் பழைய காலத்தில் இம் மக்கள் ஈழத்திற் புகுந்த போது இவ் வழிபாட்டையும் புகுத்தினர் எனவும் கூறிச்சென்றார்.

இச் சந்தர்ப்பத்தில் சங்க நூல்களிலும் பிறவற்றிலும் பனை வணக்கம் பற்றிய சான்றுகளை அவதானித்தல் பொருத்தமுடையதாகும். நற்றிணை (303) கடவுள் உறையும் விருட்சமாகப் பனையைக் கூறுகிறது.

அஃதாவது,

'கொன்றுறை கடவுளர் சேர்ந்த பராரை
மன்றப் பெண்ணை!

இவற்றோடு பனை குல மரபுச் சின்னங்களாக வணங்கப்பட்டதையும் புறநானூற்றுச் செய்யுள் எடுத்துக் காட்டுகிறது. நக்கீரர் (புறம் 56 - 4 - 14) இக் குலமரபுச் சின்னங்களாக மழு, கழுகு, மயில், யானை ஆகியனவற்றோடு பனையையும் இணைத்துக் கூறுவது ஈண்டு அவதானிக்கத் தக்கது. தமிழகத்தில் சிவனுக் குரிய ஸ்தலங்களில் ஒன்றானதும், நாயன் மார்களது பாடல் பெற்றதுமான திருப் பனந்தாள் சிவஸ்தலம் பனையைத் தல விருட்சமாகக் கொண்டுள்ள ஸ்தலமென்பது ஈண்டு நினைவு கூரற்பாலது. அத்துடன் மகாவம்சம் குறிக்கும் வியாததேவ/ வியாதிதேவ என்ற பதங்கள் கூடச் சிவனுக் குரிய நாமங்களாக இருக்கலாமென்று எண்ணத் தூண்டுகிறது. வியாதேவ என்றால் 'வேட்டுக் கடவுள்' என்பதே பொருள். இது அருச்சுனனது கடுந் தவத் தினைச் சோதிக்க சிவனெடுத்து வந்த 'கிராத' (வேட்டுவ) அம்சத்தைக் குறிக் கலாம் போல் தெரிகிறது. இவ்வாறின்றி இதனை வியாதிதேவ எனக் கூறினாலும் 'நோய் நொடியிலிருந்து' காப்பவர் என்று பொருள்படும் இப் பதம் சிவனது 'வைத் தியநாத' அம்சத்தினைக் குறிப்பதாகவும் இருக்கலாம். இவ்வாறு சிவனோடு இணைப்பதற்கு பல சான்றுகளும் ஈழத்தில் உள. ஈழத்தில் சிவ வணக்கம் மிக ஆதியான வணக்கம் என்பதனைப் பாளி நூல்கள் மட்டுமன்றி கிறிஸ்தாப்தத்திற்கு முந்திய பிராமிக் கல்வெட்டுக்களும் எடுத்துக் காட்டுவதையும் இங்கே குறிப்பிடுதல் அவசியமாகின்றது.

பனை சிவனோடு மட்டுமன்றி விஷ்ணுவோடும் தொடர்புடைய ஒரு விருட்சம் என்பதும் ஈண்டு குறிப்பிடுதல் அவசியமாகின்றது. ஈழத்தில் ஆதியில் நிலைத்திருந்த விஷ்ணு வழிபாடு பற்றிய இலக்கிய பிராமிக் கல்வெட்டுச் சான்றுகள் காணப்படுவதால் பனை வழிபாட்டிற்கும் விஷ்ணு வழிபாட்டிற்கும் இடையே உள்ள தொடர்பினையும் இங்கே சுட்டிக்காட்டலாம். வட இந்தியாவில் விஷ்ணு வழிபாட்டோடு இணைந்த கல்லிலான துவஜஸ்தம்பங்கள் (தவதுவஜ) பற்றி பனர்ஜி (Banerjee, N. J. 1966) குறிப்பிட்டுள்ளார். சங்க இலக்கியங்களோ விஷ்ணுவின் தம்பியாகிய பலராமனுடன் பனையைத் தொடர்புபடுத்துகின்றன. புறநானூற்றில் (56: 3 - 4) இப் பலராமன் கடற்சங்கு போன்ற நிறத் தினையும் நாஞ்சிற் படையையும் பனைக்

கொடியையுமுடையவன் என விளிக்கப் பட்டதைப் பின்வரும் வரிகள் எடுத்தியம்பு கின்றன.

> 'கடல் வளர் புரிவளை புரையு மேனி
> அடல் வெந்நாஞ்சிற் பனைக் கொடியோனும்'

இதே நூலில் இன்னோரிடத்தில் (புறம் 58:14) 'மானிறவுருவிற் பனைக்கொடியோ னும்' என்ற குறிப்புள்ளது. ஈழத்திலும் பலராமன் வழிபாடு நிலைத்திருந்ததைப் பிராமிக் கல்வெட்டுக்கள் எடுத்தியம்புவ தால் இப் பனை வழிபாடு இக் கடவுளுட னும் இயைந்திருக்கலாம். எவ்வாறெனினும் பனை ஈழத்தில் இந்துக் கடவுளர்களாகிய சிவன்/பலராமன் ஆகியோருடன் தொடர் புடைய விருட்சமாக வழிபடப்பட்டதை மேற்கூறிய சான்றுகள் எடுத்துக் காட்டு வது மறுப்பதற்கில்லை எனலாம்.

இத்தகைய பின்னணியிற்றான் ஆலமரக் கடவுளான 'வைசிராவண' பற்றி மகாவம் சம் தரும் குறிப்பும் ஆராயற்பாலது. வைசிராவண என்றால் குபேரன் என்பது பொருளாகும். குபேரனே ஏற்கனவே குறிப்பிட்ட 'யக்ஷ' தெய்வங்களின் தலைவன். இவ் 'யக்ஷ' தெய்வங்கள் பிற் பட்ட இந்துத் தெய்வங்களான கணபதி, உமை, சிவன், முருகன் போன்றவற்றோடு நெருங்கிய தொடர்புடையன. இவ் 'யக்ஷ' தெய்வங்களைப் பூதங்கள் கணங்கள் என அழைப்பதும் வழக்கு. சிவனே பூதங்களின் தலைவன். இதனால் 'பூதேஸ்வரன்' என்ற நாமத்தையும் பெற்றான். கணங் களின் தலைவனானபடியால் பிள்ளையார் 'கணபதி' என்ற நாமத்தையும் பெற்றார். குபேரனது ஏவலாட்கள் 'குகர்கள்' என அழைக்கப்பட்டனர். இத்தகைய ஏவலாட் களை முருகன் பெற்றிருந்ததால் 'குகன்' எனவும் இவன் அழைக்கப்பட்டான். சிவ னுடைய தேவியாகிய மீனாட்சி, யக்ஷர் தலைவனான குபேரனின் மகளே. குபே ரனுடைய வாசஸ்தலமான 'அழகாபுரி' சிவனது வாசஸ்தலமாகிய கைலாசத்தில் உள்ளது என்பது ஐதீகம் இதனாற் போ லும் கி. மு. 2ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பதஞ்சலி முனிவர் சிவன் பற்றிக் கூறும் போது 'சிவ-வைஸ்ராவண' என்று சிவ னையும் வைசிராவணனான குபேரனையும் சேர்த்தழைத்தார். இதனால் இத்தகைய ஒற்றுமையைப் புரிந்தோ/புரியாமலோ சிவ னையே ஆலமரக்கடவுளாக வைசிராவண என்ற கடவுளாகப் பாளி நூலோர் விளித் திருக்கலாம் என்பதனை சங்க நூல்களில் வரும் குறிப்புக்கள் எடுத்துக் காட்டு கின்றன.

ஆலமரம் முழு இந்தியாவிலும் வழிபாட்டுப் பொருளாக விளங்கியது உண்மை. வட இந்தியாவில் பனை முனையை உடைய கொடிஸ்தம்பம் போன்று ஆல் முனையை உடைய கொடி ஸ்தம்பங்களும் கல்லில் செதுக்கப்பட்டு வழி படப்பட்டதற்கான சான்றுகள் காணப் பட்டாலும் (**Coomaraswamy, A.K. 1971**) சங்க இலக்கியங்களில் இது பற்றி விரி வான தகவல்கள் உண்டு எனலாம். ஆல் தெய்வீகத் தன்மை உடைய விருட்சமா கப் பேணப்பட்டதையும் இவ்வால மரத் திற்கான நிவேதனப் பொருட்கள் வைக் கப்பட்டதையும் இப் பொருட்களை உண்டு இம் மரத்தில் கூடுகட்டி வாழ்ந்த காக்கைகள் பற்றியும் பின்வரும் நற்றிணைச் செய்யுள் (343) உரைக்கின்றது அஃதாவது.

> முல்லைதாய் கல்லதர்ச்சிறு நெறி
> அடையாதிருந்த வங்குடிச் சீறூர்த்
> தாதெரு மறுகின் ஆபுறந் தீண்டும்
> நெடு வீழிட்ட கடவுளாலத்து
> உகு பலியருந்திய தொகுவிரற்காக்கை
> புன் கணந்திக் கிளைவயிற் செறிக.

இதனையே அகநானூறு (270) 'கட வுள் மரத்த' என்று விளக்க, புறநானூறு (199) 'கடவுளாலத்து' எனக் கூறுகிறது. ஆல மரத்தின் கீழே காணிக்கைப் பொருட் களைப் படைக்க அமைந்திருந்த இடம் பற்றியும் அகநானூறு (287) பின்வரும் அடிகளால் குறிக்கின்றது. அஃதாவது,

> "சுரையிவர் பொதியிலங் குடிச் சீறூர்
> நாட்பலி மறந்த நரைக் கணிட்டிகைப்
> புரிஞறு மூழ்கிய பொரியரை யாலத்து"

அகநானூறு ஆலைச் சிவனுக்குரிய தாக்கி வாவிக் கரையிலுள்ள இம் மரத் தை அதிகாலையில் துப்பரவு செய்து அலங்கரித்து இளம் பெண்கள் இங்கே மேற்கொண்ட 'பாவை ஆடல்' என்ற வழிபாடு பற்றி இயம்புகிறது (அகம் 181). இதனைப் பின்வரும் குறிப்புக்கள் எடுத்தி யம்புகின்றன.

*நான்மறை முது நூன் முக்கட் செல்வன்*
*ஆல் முற்றங் கவின் பெறத்தை இய*
*பொய்கை சூழ்ந்த பொழின் மனைமகளிர்*
*கைசெய் பாவைத் துறைக்கணிறுக்கு*
*மகர நெற்றி வான்றோய் புரிசைச்*
*சிகரந் தோன்றாச் சேணுயர் நலவிற்*
*புகா அர் நன்னாட்டதுவே.*

ஆலமரம் சிவனது விருட்சமே எனவும் சங்க இலக்கியங்களிலும் பிற்பட்ட இலக்கியங்களிலும் குறிக்கப்பட்டுள்ளது. புற நாநூற்றில் (198) வரும் 'ஆலமர் கடவுளன்ன நின் செல்வம்' என வரும் அடிகள் கலித்தொகையில் (83) "ஆலமர் செல்வன் அணிசால் மகன் விழா" என வரும் அடிகள் சிலப்பதிகாரத்தில் (24) வரும் 'ஆலமர் செல்வன் புதல்வன் / ஆலமர் செல்வன் பெயர் (சிலப்பதிகாரம் 23:144) போன்ற அடிகள் மணிமேகலையில் (111-91) வரும் "ஆலமர் செல்வன் மகன் விழாக்கால் கோல்" என வரும் அடிகள் ஆகியன இதற்கான சான்றுகளாக அமைகின்றன. இவற்றைவிட சிவன் / தக்ஷிணாமூர்த்தியாக ஆலின் கீழிருந்தே தெற்கு நோக்கி உபதேசம் செய்ததாக ஐதீகமும் உண்டு. இதனையே கலித்தொகை (133) பின்வரும் அடிகளால் குறிக்கிறது.

*சீர்மிகு சிறப்பினோன் மரமுதற் கைசேர்ந்த*
*நீர்மலிகரகம் போறற் பழந் தூங்கு முடத்தாழை*

ஆலை சிவனோடு தொடர்பு பீடுத்தும் மரபு மிகச் செல்வாக்குடையதொன்றாகக் காணப்பட்டாலும் திருமாலுடன் (விஷ்ணுவோடு) இணைக்கும் மரபும் உள்ளதை இங்கே குறிப்பிடுதல் அவசியமாகின்றது. ஆல் இலையிலிருந்து திருமால் குழந்தையாக உதித்ததாக ஓர் ஐதீகம் உண்டு. பரிபாடலில் (4:66 - 69) வரும் 'ஆலமும் கடம்பும்' போன்ற வரிகள் ஆலை விஷ்ணு உறைகின்ற மரமாகவும் எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

ஆல் போன்று கடம்பை மரமும் ஆதி காலத்தில் வழிபாட்டிற்குரிய பொருளாக விளங்கியதைச் சங்க கால இலக்கியங்கள் பேசுகின்றன. கடம்பமரம் கொடியோரைத் தண்டிக்கும் மரயாக, கடவுள் மரமாகக் குறுந்தொகையிற் (87) பேசப்படுகிறது.

*மன்ற மராஅத்த பேஎ முதிர் கடவுள்*
*கொடியோர்த் தெறூ உ மென்ப*

இம்மரத்தின் கீழே காணப்பட்ட வணக்கத்துக்குரிய நடுகல் பற்றியும் மலைபடுகடாம் (395 - 396) பின்வரும் அடிகளால் குறிக்கின்றது.

*கல்லெறிந்தெழுதிய நல்லரை மரா அத்த*
*கடவுளோங்கிய காடேசு கவலை*

முருகனைக் கடம்பு மாலை சூடியவனாகவும், கடம்ப மரத்தின் கீழ் காணப்பட்ட முருக வழிபாட்டு முறை பற்றியும் இவ் இலக்கியங்கள் குறிக்கத் தவறவில்லை. திருமுருகாற்றுப்படை (10 - 11) இதனை 'இருள்படப் பொதுளிய பரா அரை அத்து, உருள் பூந்தண்டார் புரளுமார் பினன்' என்று கூற, மதுரைக் காஞ்சி (613 - 614),

*கார் மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்*
*சீர்மிகு நெடு வேட் பேணி*

எனக் கூறுகிறது. முருகனைக் கடம்போடு தொடர்புபடுத்த மேலும் பல உதாரணங்களைக் கூறலாம். அவையாவன,

*கடம்மர் நெடுவேள்*
(பெரும்பாணாற்றுப்படை 75)
*கடம்பமரணிநிலை*
(பரிபாடல் 19:104)
*சதுக்கமும் சந்தியும் புதுப்பூங்கடம்பும்*
(திருமுருகாற்றுப்படை 225)

இவற்றைவிட மதுரைக்குக் கிட்ட உள்ள முருக தலமாகிய திருப்பரங்குன்றத்திலுள்ள முருகனது வழிபாட்டுக்குரிய விருட்சமாகிய கடம்ப மரத்தடியில் மாலை நேரத்தில் அடியார்கள் இசை வாத்தியங்களுடன் தினமும் சந்தனமும், ஊதுவர்த்தி, மலர்கள், தோரணம், இலை, துணிகள், மணிகள், வேலாயுதம் முதலிய கொண்டு இயற்றிய வழிபாடு பற்றி பரிபாடலில் (17:1 - 8) வரும் பின்வரும் அடிகள் உணர்த்துகின்றன.

*தேம்படுமலர் குழை பூந்துகில் வடிதேம்மணி*
*ஏந்திலை சுமந்து சாந்தம் விரைஇ*
*விடையரை யசைத்த வேலன் கடிமரம்*
*பரவின ருரையொடு பண்ணிய விசையினர்*
*விரிமலர் மதுவின் மரநனை குன்றத்துக்*

*கோலெரி கொளை நறைபுகை கொடியொருங்கெழ*
*மாலை மாலையடி யுறை யியை நர்*
*மேலோ ருறையுளும் வேண்டடநர் யா அர்'*

இத்தகைய வரிகளில் மட்டுமின்றித் தேவாரம், திருப்புகழ் ஆகியவற்றிலும் முருகன் கடம்பன் என அழைக்கப்படுவதும் ஈண்டு நினைவு கூறற்பாலது. அப்பர் தேவாரத்தில் வரும், 'கடம்பவர் காளை தாதை கழலடி காணலாமே என்ற குறிப்பும்' 'நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்' என்ற குறிப்பும் அருணகிரிநாதர் திருப்புகழில் 'கந்தக் கடம்பன்' என வரும் குறிப்பும் அவதானிக்கத் தக்கவையாகும்.

கடம்பு முருகனது விருட்சமாக சித்தரிக்கப்படுவதோடு சிவனது விருட்சமாகிய ஆலுடனும் இணைத்துக் கூறப்படுவதும் சிவ / முருக வணக்கங்களுக்குக்கிடையே இணைவிட்டோரும் ஒற்றுமையை எடுத்துக் காட்டுவனவாக அமைகின்றன எனலாம். கலித்தொகையில் (101)

*துறையும் ஆலமுந் தொல்வலி மராஅமும்*
*முறையுளி பராஅய்ப் பாய்ந்தனர் தொழுகூ*

என்ற குறிப்பும் பிறிதோரிடத்தில் (கலித்தொகை 106)

*ஆலுங் கடம்பு மணிமார் விலங்கிட்*
*மாலை போற்றுங் குஞ்சினை*

என்ற குறிப்பும் அவதானிக்கத் தக்கவையாகும். முருகவனும் செவ்வேளே. சிவனும் சிவந்த மேனியனே. இதனால் கடவுளைச் செங்கதிரவனின் நிறமாக நம் முன்னோர் கண்ட நெறி திருமூலர் கூறுவது போல் ஆதியில் ஆதவன் வழிபாட்டு மரபு நெறி வந்த நெறியாகவும் இருக்கலாம்.

ஈழத்திலுள்ள சிவவழிபாட்டிற்குரிய தொன்மையான வரலாறு முருக வழிபாட்டிற்கும் உண்டு எனலாம். வேல் வழிபாட்டிற்குரிய குலமரபுச் சின்னமாகத் தமிழ் நாட்டில் விளங்கியது போன்று ஈழத்திலும் காணப்பட்டதை பொம்பரிப்பிலும், கந்தரோடையிலும் கிடைத்த வெண்கலத்திலான வேற்சினங்களும் பழைய மட்பாண்டங்களிற் காணப்படும் வேல் உருவத்தில் அமைந்த குறியீடுகளும், பிராமிக் கல்வெட்டுக்களிற் காணப்படும் (வேலன்) என்ற பெயரும், இன்றும் கதிர்காமம், மண்டூர், செல்லச்சந்நிதி ஆகிய ஆலயங்களில் நிலைத்து நிற்கும் வேலன் பூசாரிகளது வெறியாட்டுப் பூசை மரபும் எடுத்துக் காட்டுகின்றன எனலாம். இவ் வழிபாட்டுடன் தமிழகம் போன்று வட இந்திய முருக வழிபாட்டம்சங்களும் இணைந்ததைப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் கடலி (ஸ்கந்த) விகாச, குமார, கார்த்திகேய, குக, சுமாமிதத்த போன்ற பெயர்களும் உறுதி செய்கின்றன. இப் பின்னணியிற்றான் மகா வம்சத்தில் 'மல்வத்து ஓயா' என அழைக்கப்படும் கடம்பநதி, பற்றிக் குறிப்பிடுதல் அவசியமாகின்றது. மல்வத்து ஓயா என்றால் பூந்தோட்ட ஆறு என்றே பொருள்படும். மகா வம்சத்தில் இது கடம்பை நதியாகக் கூறப்படுவது இதன் பழமையை எடுத்துக் காட்டுகின்றது எனலாம். கடம்பவனத்தில் ஓடியதால் கடம்ப நதி எனப் பெயர் பெற்றதா? என்பதும் ஆராயற்பாலது. முருகன் உறையும் இடங்களாக திருமுருகாற்றுப்படை (223 - 226)

*காடுங் காவுங் கவின் பெறு துருத்தியும்*
*யாருங் குளனும் வேறு பல் வப்புஞ்*
*சதுக்கமுஞ் சாந்தியும் புதுப் பூங்கடம்பமும்*
*மன்றமும் பொதியுலும் தந்துடைநிலையும்*

குறிப்பதால் வனமாகவிருந்ததாலோ அன்றி நதியாயிருந்ததாலோ கடம்பனான முருகனுக்குரிய இடம் நதியாக இப்பெயர் வழக்கில் வந்ததா என்பது ஆராயற்பாலது. மதுரைப் பெருங்கோயில் கடம்பவனத்திலேயே தான் உற்பத்தியானது என்பது ஈண்டு நினைவு கூரற்பாலது. மதுரைக்குக் கிட்ட உள்ள பகுதியே மன்னார் மாவட்டம் ஆகும். இதனாற் கடம்பவன மரபு கூட இறுதியிலே இங்கே பரவி இருக்கலாம். கடம்பவனத்தின் ஊடே சென்ற நதி கடம்ப நதியாக பெயர் பெற்றிருக்கலாம். எவ்வாறு தாமிர (பொன்மயமான) மண்ணினூடே ஓடும் ஆறு தாம்பரவர்ணி எனப் பெயர் பெற்றதோ, அவ்வாறே இப் பெயரும் இந் நதிக்கு ஏற்பட்டிருக்கலாம். சங்க இலக்கியங்கள் பேசும் கடம்ப வம்சத்தில் காவல் மரமாகக் கடம்ப மரம் காணப்பட்டதாற் றான் அவர்கள் கடம்பர்கள் என அழைக்

கப்பட்டதும் ஈண்டு குறிப்பிடத் தக்கது. பூந்தோட்ட ஆறு அல்லது பூம்பொழில் ஆறு எனப் பொருள் தரும் மல்வத்து ஓயா என்ற இதன் தற்காலப் பெயர் கூட முன் பொருகால் பொழிலுடன் இதற்கிருந்த தொடர்பினை எடுத்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது எனலாம். கதிர்காமத்திலுள்ள மாணிக்ககங்கை கூட மாணிக்கம் நிறைந்த பகுதியினூடாக ஓடுவதால் மாணிக்ககங்கை எனப் பெயர் பெற்றது எனலாம்.

மேற்கூறிய மரங்கள் மட்டுமன்றி இன்னும் பல தெய்வமுறை மரங்களாகக் தெய்வங்களோடு தொடர்புடையனவாகவும் பண்டைய காலத்திலிருந்து கருதப் பட்டு வந்துள்ளன. சிவனுக்குரிய மரங்களாக ஆல், அரசு, திருவாத்தி விளங்க அம்மனுக்குரிய மரமாக வேம்பு விளங்குகின்றது. கடம்பு, வேங்கை முருகனுக்கே சிறப்பான விருட்சங்களாகும். சிவசக்தியின் வெளிப்பாடாக அரசும் வேம்பும் கொள்ளப்படுகின்றன. அரச வம்சங்களால் தங்கள் குலத்தின் காவல் மரங்களாக பல மரங்கள் மதித்துப் பேணப்பட்டன. இவற்றின் அழிவு இவ் வம்சங்களின் தோல்வியையே குறித்தது. இம் மரங்களே பொதுவாக ஊரில் முக்கிய இடங்களாகவும் கருதப்பட்டு இவை அமைந்த இடங்களிற்றான் ஊரோடு தொடர்புடைய பல கருமங்களும் அன்று நடந்தன. சங்க இலக்கியங்களிற் காணப்படும் பொதியில், மன்றம் போன்ற பதங்கள் இதனையே எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறு வழிபாட்டுக்குரிய மரங்களே ஆதியில் கோயில்களாகவும் செயல்பட்டன. இம் மரங்கள் பட்ட நிலையிலும் இவை பேணப்பட்டன. என்பதைச் சங்க இலக்கியங்களிற் காணப்படும் 'கந்துடை நிலை' போன்ற சொற்களும் தொல்காப்பியத்திற் காணப்படும் 'கந்தழி' போன்ற சொற்களும் எடுத்துக் காட்டுகின்றன. கந்துடை நிலை என்றால் மரக்குற்றியைப் பேணிய நிலை என்பதே பொருளாகும். வழிபாட்டுப் பொருளான கந்தழி என்பது கந்த+அழி என்ற இரு கூறுகளை உள்ளடக்கியதாகும். அதாவது மரக் கொம்பை அல்லது குத்தியை அழித்து அதனிடத்தில் வேறொன்றை அமைத்தல் என்பது பொருளாகும். கந்து எனப் பொருள்படும் மரம்/மரக்கொம்பு பட்டபின் நெடுநாட்களுக்கு நின்று நீடிக்கும் சக்தியற்றதாய்க் காணப்பட்டதால் அதனிடத்தில் கல்லாலான மரத்தண்டு போன்று ஒன்றை வைத்து வணங்கியதையே கந்தழி காட்டி நிற்கின்றது என்று கருதப்படுகின்றது. (Subramaniapillai, G. 1948) வழிபாட்டிற்குரிய இக் கந்தழியிலே காலக் கிரமத்தில் அபிஷேகம் செய்யும் நீர் போவதற்கு வழி சமைக்கப்பட்டது. இவ் வழியே பின்னர் ஆவுடையாரென அழைக்கப்பட்டு லிங்க வழிபாடாகப் பரிணமித்தது என்றும் கூறுவர் அறிஞர். இதனால் லிங்க வழிபாட்டின் தோற்றம் லிங்க யோனி வழிபாட்டிலல்ல என்பதும் இம் மரத்தண்டிலிருந்தே என்பதும் இவர்கள் வாதமாகும். தென்னிந்தியாவில் காணப்படும் மிகப் பழைய லிங்கமான குடிமல்ல லிங்கத்தின் அமைப்பும் இதனையே காட்டுகின்றது. இதில் ஆவுடையார் காணப்படவில்லை. இக் காட்சி பிற்பட்ட காலத்திற்றான் ஆவுடையார் இத் தண்டோடு இணைக்கப்பட்டதை இது எடுத்தியம்புகிறது எனலாம். இக் கல்லாலான தண்டில் உள்ள சிவனின் வடிவம் கூட மர வணக்கத்தோடு இணைந்த கடவுள் வணக்கத்திற்கான சான்றாகவே காணப்படுகிறது எனலாம்.

இம் மரங்களே பண்டைய கோயில்கள் ஆகும். கற்களாலும் செங்கட்டிகளாலும் கோயில்கள் கட்டப்பட்ட பின்னரும் ஸ்தலவிருட்சங்களாக இம்மரங்கள் இத்தலங்களின் மேன்மையை எடுத்தியம்புவதொன்றே இவற்றின் சிறப்புக்குச் சிறந்த உதாரணமாகிறது. காஞ்சிக்கு மாமரம், மயிலாப்பூருக்கு புன்னை, சிதம்பரத்திற்குக் தில்லை குற்றாலத்துக்கு குறும்பாலா, திருவானைக்காவுக்கு வில்வம் திருவிடை மருதூருக்கு மருது, திருமுல்லை வாயிலுக்கு முல்லை, மதுரைக்குக் கடம்பு போன்ற செய்திகள் இத்தலங்களின் மேன்மைக்கும் இத் தலவிருட்சங்களின் மேன்மைக்கும் சிறந்த உதாரணங்களாகும். ஈழத்திலும் இத்தகைய நிலை காணப்பட்டிருக்கலாம். துரதிஷ்டவசமாகப் பிரசார மதமாகிய பௌத்தத்தின் செல்வாக்கால் இத்தல விருட்சங்கள் பல அழிக்கப் பட்டன எனலாம். இருந்தும் இவ் விருட்சங்கள் அமைந்த கோயில்களைப் பாளி நூல்கள் 'சேத்தியங்கள்'

(கோயில்கள்) என அழைக்கின்றன. இத்தகைய கோயில்களில் ஒன்று பௌத்த மதம் முதல் முதல் இங்கு பரவிய போது அமைக்கப்பட்ட தூபராமக் கட்டிடத்தில் அமிழ்த்தியதை மகாவம்சம் (M.V.X : 90) குறிப்பதை நோக்கும் போது இவற்றைப் போல இன்னும் பல இவ்வாறு அழிக்கப் பட்டிருக்கலாமென்பது புரிகிறது.

மேற்கூறியவற்றிலிருந்து தென்னாசியாவிலே நிலைத்திருந்த மர வணக்கம் ஈழத்திலும் நிலைத்திருந்தது புரிகிறது. இன்றும் மரங்களை அலங்கரித்தல், பூமாலை சூட்டல், கழுவுதல், அபிஷேகம் செய்தல், ஆராதனை செய்தல், விளக்கேற்றல், பொங்கலிடல், வேள்வி, செய்தல் போன்ற நிகழ்ச்சிகள் இதன் பழமையைப் பறைசாற்றுகின்றன. இம் மரவழிபாடு இந்து மதத்திலும் பௌத்தத்திலும் சங்கமித்தாலும் கூட இன்றும் அழியாத கிராமிய மட்டத்தில் பேணப்படுவது குறிப்பிடத் தக்கது. பல புராணக்கதைகள் கூட இவ் வணக்கத்தின் தெய்வீகத் தன்மையை எடுத்துக் காட்டுகின்றன. கந்த புராணத்தில் வள்ளியுடன் உரையாடிய முருகன் வள்ளியின் உறவினரைக் கண்டதும் வேங்கை மரமாக மாறிய செய்தியும் சூரன் முருகனிடம் போரிட்டபோது மாமரமாக மாறிய செய்தியும் மரத்திற்குரிய தெய்வீகத் தன்மையை எடுத்துக் காட்டும் கதைகளே எனலாம்.

## SELECTED BIBLIOGRAPHY


| | | |
|---|---|---|
| **Banerjee, J. N.** | 1966 | Puranic and Tantric Religion (Calcutta). |
| **Coomaraswamy, A. K.** | 1971 | Yaksas (Delhi) |
| **M. V. Mahavamsa** | 1960 | Ed & Tran. Geiger, W. |
| **Malalasekara, G. P.** | 1928 | The Pali Literature of Ceylon (Lond) |
| **Paranavitana, S.** | 1929 | Pre-Buddhist Religious Beliefs in Ceylon J.R.A.S (C,B,) Vol. xxxi No. 82 pp. 302-327. |
| **Parker, H.** | 1909 | Ancient Ceylon (Lond) |
| **Rahula, W.** | 1956 | History of Buddhism in Ceylon (Colombo). |
| **Subramania Pillai, G.** | 1948 | The tree worship and ophiolatry (Annamalai) |


இக் கட்டுரையிலுள்ள சங்க நூல்களிலும் பிற நூல்களிலுமுள்ள தகவல்கள் திரு. சுப்பிரமணியபிள்ளையின் மேற்கூறிய நூலிலிருந்தே (Subramania Pillai, G. 1948) பெறப்பட்டவை என்பதை இக் கட்டுரை ஆசிரியர் நினைவுகூர விரும்புகிறார்.

*With Best Compliments*

*from*

**Latha**

*JEWELLERS*

(AIR CONDITIONED)

27, Kotugodella Vidiya,

KANDY.

*WITH BEST COMPLIMENTS*

*FROM*

**VASANTHAS**

**Pawn Brokers & Jewellers**

*56, D. S. Senanayake Street,*

*KANDY.*

*Dial: 08-23015*

**With Best Compliments**

**From**

**Maheswari Stores**

34, Castle Hill Street,

KANDY.

*Best Wishes From*

*Sri Lanka*

*Pharmacy Ltd.*

*39, D. S. Senanayake Vidiya.*

*KANDY.*

நல் வாழ்த்துக்கள்

# ரத்ன மாளிகை

( நகை மாளிகை )

இல. 48, 50, டி. எஸ். சேனாநாயக்க வீதி,
கண்டி.

தொலைபேசி : 23630

With Best Compliments

*for Sovereign Gold Jewelleries in Latest Designs*

***VISIT :***

# SooRyaS
## GOLD

No. 37, Kotugodella Veediya,
KANDY.

நந்தன் அச்சகத்தின்

அன்பு

வா ழ் த் து க் க ள்

# NANDHAN PRINTERS

SPECIALISING IN PRINTING TO
ESTATES & COMMERCIAL HOUSES

**8, Kotugodella Vidiya,**
**KANDY (Sri Lanka)**

Phone : 08-23694

# ஒரு பொம்மலாட்டம் நடக்கிறது...

வே. சிவகுமார்
(2ம் வருடம் விஞ்ஞான பீடம்)
பேராதனைப் பல்கலைக்கழகம்

அழகாக அலங்கரிக்கப்பட்ட மிகப் பெரிய மேடை, திரை விலகுகிறது. கண்ணைக்கவரும் பொம்மைகள் அங்கே ஆடுவதற்கு ஆயத்தமாக இருக்கின்றன. மேடையின் பின்புறத்தில் இருந்து பாடல் ஒன்று கேட்கிறது. இதோ அந்தப் பொம்மைகள் இப்போது நடனமாடுகின்றன, கையை தட்டிக்கொண்டும் ஒன்றை யொன்று கைகோத்துக் கொண்டும் அவை அழகாக ஆடுகின்றன. இந்த பொம்மைகள் ஆடுவதற்கு காரணமாய் இருப்பவர்கள் யார்? திரைக்குப் பின்னால் இருக்கும் ஒரு கூட்டத்தினரே இப் பொம்மைகளை ஆட்டுவிக்கின்றார்கள். அவர்கள் அசையும் போது இப் பொம்மைகளும் அசைகின்றன. அப்படியாயின் அவர்களுக்கும் பொம்மைகளுக்கும் இடையில் ஒரு தொடர்பு இருக்கவேண்டுமே? ஆம் அத்தொடர்புதான் எமது கண்களுக்கு தென்படாத மெல்லிய கயிறு. அதாவது கயிற்றின் உதவியால்தான் அந்தப் பொம்மைகள் ஆட்டுவிக்கப்படுகின்றன. எனவே மொத்தத்தில் இப் பொம்மலாட்டத்தில் இரு விடயங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒன்று திரைக்கு பின்னால் உள்ளவர்கள் ஆடுவது. மற்றது அவர்களுக்கும் பொம்மைகளுக்கும் இடையிலான தொடர்பாகவுள்ள கயிறு. வட மொழியிலே கயிறு என்பதற்கு பாசம் என பொருள். எனவே உலகம் என்று சொல்லப்படும் அந்த மேடையில் ஐம் பொறிகள் என்று சொல்லப்படும் ஐவர் சேர்ந்துகொண்டு பாசம் எனும் கயிற்றை பயன்படுத்தி ஒரு பொம்மலாட்டம் வைக்கிறார்கள். அதிலே ஆடப்படும் பொம்மைகளாக நாம் இருக்கின்றோம்.

எமது இந்த ஆட்டத்திற்கு காரணமான மெய், வாய், கண், மூக்கு, செவி என்று சொல்லப்படும் ஐம் பொறிகள் பற்றி அவதானிக்கும் போது எமது மனம் முக்கிய பங்கு வகிக்கிறது. இவ்வுலகில் எங்கு சென்றாலும் எமது மனம் ஆனது ஆங்காங்கே விரிக்கப்பட்டிருக்கும் பல்வேறு வகையான வலைகளில் சிக்குண்டு பெரிதும் அவதிப்படுகின்றது. உதாரணத்திற்கு இறைவன் திருக்கோயில் நாடிப் போகிறவர்களும் அங்கே விரிக்கப்பட்ட வலையில் சிக்கப்படுவதை காணலாம். அது எப்படி? பல கோடிக்கணக்கில் செலவு செய்து கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்யப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்திகளையே திருடிக்கொண்டு போபவர்கள் இல்லையா? அவர்களும் கோயிலுக்கு வந்தவர்கள் தான், இருப்பினும் அவர்கள் மனம் அங்கிருந்த வலையில் சிக்கப்பட்டுவிட்டது. இதே போன்றே கோயிலில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. எம் பெருமான் முருகன் அழகாக அலங்கரிக்கப்பட்டு வீதிவுலா வருகின்றார். இதைப்பார்க்கும் ஒவ்வொருவரது மனதும் வெவ்வேறு விதமாக சிந்திக்கின்றது. உண்மையில் தமது மனதை பாதுகாத்துக் கொண்டவர்கள் ''ஆ! முருகனின் திருக்கோலம்தான் என்ன அழகு! இக்குமரேசனின் இரு தாளும், சிலம்பும், சதங்கையும், தண்டையும் சண்முகமும் தோளும் உடம்பும் எனக்கு முன்னே எந்நாளும் வந்து தோன்றக்கூடாதா? என நெஞ்சுருகி வேண்டுகிறார்கள். ஆனால் அங்கே உள்ள ஒரு பெண் ''அங்கே பார் முருகனுக்கு போடப்பட்டிருக்கும் வைரப்பதக்கத்தை! அது எவ்வளவு அழகாக இருக்கிறது, இது மிக அண்மையில் வெளியான வடிவமைப்பு போல் இருக்கிறதே. இப்படி ஒன்று என்னிடத்தில் இருந்தால்?'' என்றவாறு வலையில் சிக்குண்டவளாக காணப்படுகிறாள். உண்மையில் புன்னகையை விட பொன்

னகையில் ஆசையுடைய எமது பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் கூட இவ்வாறான வலைகளில் சிக்குவதை நாம் காணலாம். இவ்வாறு கோயில் தொடக்கம் எங்கு சென்றாலும் அங்கு வரைக்கும் இந்த கண்ணி பரப்பப்பட்டிருக்கிறது. இவற்றில் இருந்து மனம் தப்பித்துக்கொள்ள வேண்டுமானால் ஞானம் என்று சொல்லப்படும் கத்தி வேண்டும். இஞ்ஞானமாகிய கத்தியின் உதவியால்தான் பாசவலைகள் அறுக்கப்படலாம். எனவே மனம் என்ற ஒன்று காலில் ஞானம் எனும் கத்தியை கட்டிக்கொண்டு போனாலொழிய கண்ட இடங்களில் வீழ்ந்து சிக்கிக் கொள்ளும்.

இவ் உடம்பை பெற்ற எவருக்கும் கட்டாயமாக ஐந்து பொறிகளும் உண்டு. மெய்ஞானிகள் என்று சொல்லப்படுபவர்களுக்கும் இவை உண்டு. அவர்களும் எம்மைப் போல் கண்ணால்தான் பார்க்கிறார்கள். காதால்தான் கேட்கிறார்கள். அவர்கள் மெய்ஞானிகள் என்பதால் குருடர்களாகவோ அன்றி செவிடர்களாகவோ மாறுவதில்லை. அவ்வாறாயின் மெய்ஞானிகளுக்கும் எமக்கும் என்ன வித்தியாசம்? அவர்களுக்கும் எம்மைப்போல் ஐம்பொறிகளும் வேலை செய்கின்றன ஆனால் நாம் பாசம் எனும் கயிற்றினால் கட்டுண்டு உள்ளோம். திரைக்கு பின்னால் இருப்பவர்கள் எவ்வளவு ஆட்டினாலும் பொம்மைகள் ஆடவில்லையே, காரணம் அவர்களை இணைத்திருக்கும் கயிறு அறுந்துபோய் விட்டது. இவ்வாறே பொறிகளுக்கும் மனத்திற்கும் இடையே உள்ள பாசமாகிய கயிறு அறுந்து போனால் மனம் ஆடுவதில்லை. அமைதி பெற்றுவிடும், பார்ப்பதற்கு நாமும் ஞானிகளும் ஒரேமாதிரி இருந்தாலும் நாம் பாசமாகிய கயிற்றினால் பொறிகளோடு கட்டப்பட்ட மனதை உடையவர்கள். அவர்கள் அந்த கயிற்றை ஞானம் எனும் கத்தியால் அறுத்துவிட்டவர்கள். எனவே அவர்கள் என்ன காரியம் செய்தாலும் அனைத்தும் ஞானத்தின் விளைவாகவே அமைந்திருக்கும்.

இவ்வாறு பொறிகள் வசப்படும் உயிர்களின் முடிவு என்ன? முடிவு துன்பமாகத்தான் இருக்கும். விட்டில் பூச்சி எரிந்துகொண்டிருக்கும் விளக்கை கண்ணால் பார்க்கிறது. கட்பொறிக்கு அடிமைப்பட்ட அது அதனை ஏதோ உணவாக கருதி அதில் வீழ்ந்து உயிரை மாய்த்துக்கொள்கிறது. இவ்வாறு பூச்சிகள், பறவைகள் அல்லது விலங்குகள் மட்டுமன்றி ஆறறிவு படைத்த மனிதன்கூட இவ்வாறு துன்பப்படுவதை நாம் காணலாம்.

இவ்வாறு பொறிகள் வசப்பட்ட மனதை உடையவர்களுக்கு உபதேசம் செய்யலாமா? விளைவு எப்படி இருக்கும்? உண்மையில் இவ்வாறு பொறிகள் வசப்பட்டு மனமானது சுழன்று கொண்டே இருக்கிறது. அது தொடர்ச்சியாக சுழன்றுகொண்டே இருப்பதால் இறைவனைப்பற்றி நினைக்கவே முடிவதில்லை. இயங்கிக்கொண்டிருக்கும் இயந்திரம் ஒன்றினுள் ஒரு கல்லைப் போட்டால் அது வெளியே தூக்கி எறியப்படும் இவ்வாறே சுழலும் மனதை உடையவர்களுக்கு செய்யும் உபதேசத்தால் எந்த பலனும் கிடைக்காது. அது நாம் சொன்ன வேகத்தை காட்டிலும் கூடிய வேகத்தில் வெளியேறிவிடும். இராமாயணத்தில் தாடகை மீது இராமனால் ஏவப்பட்ட அம்பு எவ்வாறு ஊடுருவிச் செல்கிறது என்பதை கம்பர் பின்வருமாறு கூறுகிறார்

சொல் லொக்கும் கடிய வேகச் சுடு சரம் கரிய செம்மல்
அல்லொக்கும் திறத்தினாள்மேல் விடுதலும் வயிரக் குன்றக்
கல்லொக்கும் நெஞ்சில் தங்கா தப்புறம் கழன்று கல்லாப்
புல்லார்க்கு நல்லோர் சொன்ன பொருள் எனப் போயிற்றன்றே!

இராமன் விட்ட அம்பு வைரம் போல் இறுகிய அவள் மார்பை துளைத்துக் கொண்டு போயிற்று என்கிறார். அதற்கு கம்பரின் உவமானம் என்ன வென்றால் "கல்லாத மனிதர்களுக்கு கற்றவர்கள் உபதேசம் செய்தால் அது அவர்களது ஒரு காதில் புகுந்து மறுகாதின் வழியே எவ்வளவு வேகமாக வெளியேறுமோ அவ்வாறு வேகமாக போயிற்று" என்கிறார். எனவே ஐம் பொறிகளுக்கு அடிமைப்பட்டு சுழன்று கொண்டிருப்பவர்களுக்கு எவ்வளவுதான் கூறினாலும் ஏற்கமாட்டார்கள்.

அவ்வாறாயின் இவ்வாறு அடிமைப்பட்ட ஆன்மாக்கள் விமோசனம் பெற வழியே இல்லையா ? இருக்கிறது, தாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் எதற்காக செய்கிறோம்? பலன் என்ன? பொறிகளின் வேண்டுகோளை திருப்தி செய்வதற்காகவா செய்கிறோம்? என அறிந்து செய்கிறபோது பல துன்பங்களில் இருந்து தப்பிக்கொள்ள முடிகிறது. இதைவிட மன அமைதிக்காக இறை வழிபாட்டை விட சிறந்த நிவாரணம் ஏதும் இருக்க முடியாது. அருணகிரிநாதர் சொல்கிறார் 'இந்த உலகமாகிய பாசவாழ்க்கையில் கூத்தாடும் ஐவர் என் நெஞ்சை ஆட்டுகிறார்கள். அவர்களது சுழற்சிக்கு ஏற்ப என்மனம் சுழன்று கொண்டே இருக்கிறது. ஒரு நிமிஷம்கூட நிற்பதே இல்லை. உன் நினைவு ஒரு கணம் வந்தாலும் சிதறுண்டு போகிறது. மொத்தத்தில் சுழற்சியடைந்த பாச நெஞ்சினை உடைய பாவியாக நான் இருக்கிறேன். என்னை ஈடேற்றுவாயா?'' என இறைவனிடம் முறையிடுகிறார். எனவே மன அமைதிக்கு பிரார்த்தனை என்பது ஒரு சிறந்த வழியாகும்.

திருமுருகாற்றுப்படையில் ஒரு காட்சி புலவன் ஒருவன் வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டான். இறைவனை தேடி வீடு வாசல் மாடு மனைவி எல்லாவற்றிலும் பற்றைவிட்டு முருகனை தேட அவன் கிளம்பி விட்டான். வழியில் நக்கீரர் வருகிறார். அவர் முகத்தை பார்க்கும் போதே அவனுக்கு முருகன் எங்கே இருக்கிறான்? என்று அவரிடம் கேட்க வேண்டும் போல் தோன்றுகிறது. ''சுவாமி உங்களைப்பார்த்தால் ஆண்டவனின் அருள் அனுபவம் உள்ளவர் போல் தோன்றுகிறது. ஆண்டன் முருகன் எங்கே இருக்கிறான்?, என்று கேட்கிறான். ''ஆ! முருகனை தேட ஆரம்பித்து விட்டாயா? வீட்டை விட்டு கிளம்பிவிட்டாயா? மெத்த மகிழ்ச்சி, அப்படியானால் இனி ஒரு கணமும் தாமதிக்காதே. அவன் அருளை இப்போதே நீ பெறுவாய்! உடனே புறப்படு'' என்கிறார். "நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?'' என அவர் கேட்கவில்லை, ''உடனே புறப்படு நீ தேடுவதை கண்டுகொள்வாய்'' என்றே கூறினார். இவ்வாறே ஞானிகள் இறைவன் அருள் பெற்ற மாத்திரத்தில் அவனுடைய திருவடியை அடைய ஒருகணமும் தாமதிப்பதேயில்லை.

எம்மை பொறுத்தவரை ஆண்டவன் கோயிலுக்கு போவதும் தர்மம் செய்வதும் மாத்திரம் மன அமைதியை தராது, மனதை பக்குவப்படுத்த பெரியவர்கள் கூறும் ஒரே அறிவுரை ''நான்'' எனும் அகங்காரமும் ''எனது'' எனும் மமகாரமும் அகற்றப் படவேண்டும். என்பதே நான் என்பது உருவாகிய பின்னர் தான் என்னுடையது என்பது உருவாகின்றது. நான் என்பதை நீக்குவதற்கு முன்னர் எனது என்பதை மறந்து எல்லாம் இறைவனுடையது என மனதை நினைக்கச் செய்யவேண்டும். எனது, எனது. என்று சொல்லிப் பழகின மனதை என்னுடையதல்ல என்று நினைக்கச் செய்ய முடியாது. ஆனால் எல்லாம் இறைவனது என்று சுலபமாக நினைக்கச் செய்யலாம். ஒரு கல்லை எடுத்து ஆற்றில் போட்டால் அது ஆற்றினுள் அமிழ்ந்து விடுகிறது. ஆனால் ஒரு தக்கை கட்டையை போட்டு அதில் ஒரு கல்லை ஏற்றினாலும் தண்ணீரின் மேல் மிதக்கிறது நான் இருக்கிறேன் எல்லாம் என்னுடையது என்றால் தண்ணீரிற்குள் மூழ்க வேண்டியது தான். என்னுடையது அன்று எல்லாம் இறைவனுடையது, இறைவன் சார்பிலே இருக்கிறேன் என்று நினைப்பவர்களுக்கு அந்தக்கவலை இல்லை. மிதக்கிற பொருளுக்கு. ஆழத்தைப்பற்றி கவலை இல்லை. ஆழ்கின்ற பொருளுக்குத்தான் ஆழத்தைப்பற்றிக் கவலை, தண்ணீரிற்குள் தனித்து வீழ்ந்தவன் நான்கு அடி ஆழமாக இருந்தால் தப்பலாமே ஒன்பது அடி ஆழமாக இருந்தால் செத்துப் போவோமே என்று கவலைப்படுவான், தெப்பக்கட்டையோடு புகுந்தவனுக்கு ஆழத்தைப்பற்றி என்ன பயம்.

உலகில் துன்பங்கள் பலவற்றிற்கு நடுவில் வாழ்கிற மனிதனுக்கு இறை திருவருள் தெப்பமாக அமைகிறது. அவ்வாறு அமைந்து விட்டால் எத்தனை துன்பங்கள் வந்தாலும் கலங்கமாட்டான். அப்படிப்பட்ட இறை அருளை நாம் எல்லாரும் பெற்று ஐம்புல அடக்கத்துடன் வாழ்ந்து உய்வடைவோமாக.

'' மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம் ''

With Best Compliments

**THIVAGAN COMPANY**

General Merchants & Commission Agents for Local Produces

**208, 4th CROSS STREET,**

**COLOMBO-11.**

28556

With Best Compliments

**ENKAY**

*AUTHORISED DEALERS FOR NATIONAL PAPER CORPORATION*

*PAPER CONVERTERS AND STATIONERS ETC.*

140, Sri Ratnajothi Sarawanamuthu Mawatha,

**COLOMBO-13.**

32988 - 31892

# இலக்கியமும் இறைபுகழும்

— கலாநிதி துரை மனோகரன் —

முதுநிலை விரிவுரையாளர் / தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

தமிழ் இலக்கிய வரலாற்றினை ஊன்றிக் கவனிப்போர்க்கு ஒருண்மை புலனாகத் தவறாது. நீண்ட காலமாகத் தமிழ் இலக்கியமும் சமயச்சார்பும் ஒன்றுடனொன்று இணைந்து வளர்ச்சி பெற்று வந்துள்ளன. இன்னொரு வகையிற் கூறுவதாயின், சமயத்தின் புலப்பாட்டுக் கருவியாகத் தமிழ் இலக்கியம் தொழிற்பட்டு வந்துள்ளது. சிறப்பாக, சங்க மருவிய காலம் முதலாக பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியிற் சமயச்சார்பே தமிழ் இலக்கியத்தில் முதன்மை பெறும் போக்கினைக் கண்டுகொள்ள முடிகின்றது. வெவ்வேறு காலப்பகுதிகளில் வெவ்வேறு சமயங்கள் தம்முட் போட்டியிட்டும், வளர்ச்சியெய்தியும், பின்தங்கியும் வந்துள்ள போக்கினைத் தமிழ் இலக்கிய வரலாறும், தமிழர் சமூக வரலாறும் உணர்த்துகின்றன. ஒருபுறத்தில் தமிழ் மக்களுக்குரிய பழைய வழிபாட்டுணர்வுகள் போற்றப்பட, மறுபுறத்தில் வட இந்தியாவிலிருந்து புகுந்த இறை நம்பிக்கைளும், சமயக் கோட்பாடுகளும், சடங்குகளும் வளர்ச்சி பெற்றன. இந்தியாவிலே தோன்றாத சமயங்களும் கூடத் தமிழ் மக்களிடையே செல்வாக்குப் பெறத் தொடங்கின, இவ்வாறு, பல சமயங்களும் சங்கமிக்கும் பேராறாக தமிழ் இலக்கியம் விளங்குவதைக் காணலாம்.

சமய வாழ்வின் முதன்மையான அம்சமாக இறை வழிபாடு அமைந்துள்ளது. ஓர் இறைவனை அடிப்படையாகக் கொள்ளாத சமயங்கள்கூட, நடைமுறையில் இறைவழிபாட்டுக்குரிய அம்சங்களைப் பேணுவதைக் காணலாம். இறைவழிபாடு இறைவனின் புகழைத் துதிப்பதிலும், தமக்கு நன்மைகள் கிடைக்கவேண்டும் என்ற மக்களின் எதிர்பார்ப்பிலுமே பெருமளவு தங்கியுள்ளது. இறைவனை அடிப்படையாகக் கொண்ட சமயங்கள் அவ்வனைத் துதித்துப் போற்றுவதன் மூலமே சகல நன்மைகளும் கிடைக்கும் என மக்களுக்குப் போதிக்கின்றன. இறைவனின் பெருமையைப் பேசாத நாளெல்லாம் பிறவாத நாளே, என்ற வகையிலேயே சமய அடியார்களின் உணர்வும் காணப்படுகின்றது. இறைவனை அடிப்படையாகக் கொண்ட சமயங்களில் உலகம் இயங்குவதற்கு அவனே சூத்திரதாரி என்பதை வற்புறுத்துகின்றன ''அவனன்றி ஓர் அணுவும் அசையாது'' என்ற பழமொழியும் இதனையே உணர்த்துகின்றது. மனிதனும் தனது நம்பிக்கையுணர்வை வளர்த்துக் கொள்வதற்கும், உலகத்தில் தனது ஆதாரத்தை நிலைப்படுத்திக் கொள்வதற்கும் இறைவனைப் பற்றுறுதியாகக் கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டது. இத்தகைய நம்பிக்கையுணர்வும், இறைவனைப் பற்றுக்கோடாகக் கொண்டு அவன் புகழ் பாடுதலும் தமிழ் இலக்கியத்தில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன. 'தூய உருப்பளிங்கு போல் வாள் என் உள்ளத்தினுள்ளே இருப்பளிங்கு வாராதிடர்'' என்று கம்பர் கூறுவதும், ''அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் தருவாள்'' எனப் பாரதி பாடுவதும் இறைவன் பற்றிய நம்பிக்கையுணர்வின் வெளிப்பாடுகளேயாகும்.

சங்ககாலம் முதலாக எமக்குக் கிடைக்கப்பெறும் தமிழ் இலக்கியங்களிற் பழந்தமிழ் மக்களின் சமயவுணர்வுகளைக் காணலாம். ஆயினும், பிற்காலத்திற் சமயச்சார்பு தமிழ் இலக்கியத்தில் முதன்மை பெற்ற அளவுக்குச் சங்ககாலம் சமய அம்சங்களுக்கு முக்கியத் துவம் அளிக்கவில்லை. எவ்வாறாயினும், முருகன், கொற்றவை, சிவன், திருமால், இந்திரன், வருணன், இலக்குமி முதலான தெய்வங்கள் இலக்கியங்களிற் போற்றப்பட்டு உள்ளன. எனினும், சங்ககால மக்களின் வாழ்க்கைக் கூறுகளோடு இணைந்த முக்கிய தெய்வங்களாக முருகனும், கொற்றவையும் விளங்கின. சங்க இலக்கியங்களிலே தெய்வங்கள் பற்றிய செய்திகளும், வழிபாட்டு முறைகளும் இடம்பெற்றிருப்பினும், இறைபுகழை முழுமையாகப் புலப்படுத்தும் முதல் இலக்கியமாகத் திருமுருகாற்றுப்படையே விளங்கு கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விலக்கியத்தில் முருகன் தொடர்பாக தமிழரின் பழைய வழிபாட்டுக் கூறுகளும், ஆரியத் தொடர்புடைய சுப்பிரமணியனின் தெய்வீக அம்சங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு முருகனின் புகழ் பாடப்பட்டுள்ளது. தமிழ் இலக் கியத்தில் இறைபுகழ் பேசப்படுவதற்கு முன்னோடியாக அமைந்த பிறிதொரு நூல் பரி பாடலாகும். செவ்வேளும் திருமாலும் இவ்விலக்கியத்திற் புகழப்படும் முதன்மையான தெய்வங்களாக விளங்குகின்றன.

சங்ககாலத்தினை அடுத்து, தமிழ் இலக்கிய வரலாற்றிலே குறிப்பிடப்படும் சங்க மருவிய காலத்திலே, தமிழகத்திற் சைவம், வைணவம் மாத்திரமன்றி, பௌத்தம், சம ணம் ஆகிய சமயங்களும் போட்டி நிலையில் முதன்மை பெற ஆரம்பித்தன. சமயம் ஒவ் வொன்றும் வளர்ச்சி பெறத் தொடங்கி, அத்தகைய சூழலிலே தமிழ் இலக்கியமும் சமயக்கணக்கர்தம் வழியிலே செல்ல ஆரம்பித்தது. அக்காலகட்டத்தில் தோன்றிய சிலப்பதிகாரம் சமணசமயச் சார்பாக இருப்பினும், பிற சமயத் தெய்வங்களையும் போற்றுவதாக அமைந்துள்ளது. ஆனால், சிலப்பதிகாரத்துடன் கதைத் தொடர் புடைய மணிமேகலையோ அவ்வாறன்றிப் பௌத்த சமயப் பெருமையே பேசுவதாக அமைந்துவிட்டது. சிலப்பதிகாரத்திலே இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம், வணிக வம்சத்துக் குடும்பப் பெண்ணான கண்ணகி, தெய்வீக ஆற்றல் பெற்ற பாத்திரமாக வளர்க்கப்பட்டு, ஈற்றில் பத்தினித் தெய்வமாகப் போற்றப்படுவதாகும். இந்த அடிப் படையில் நோக்கும்போது சிலப்பதிகாரம் பத்தினித் தெய்வத்தின் புகழ்கூறும் இலக்கிய மாக விளங்குவதைக் காணலாம்.

சங்கமருவிய காலகட்டத்துச் சமுதாயப் போக்கைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்த அற இலக்கியங்களும் சமயச்சார்பு உள்ளவையே. அத்தகையவற்றுள் முதன்மை நிலை வகிக்கும் திருக்குறள், தனது சமயச்சார்பினை வெளிப்படையாகக் காட்டிக்கொள் ளாது, பொதுவான இறையின் புகழைப் பேசுகின்றது. திருக்குறளின் கடவுள் வாழ்த்து இதனையே உணர்த்துகின்றது. ஒவ்வொரு சமயத்தவரும் திருக்குறள் தமது சமயச்சார்பா னது என்று கருதத்தக்க வகையில் அந்நூலின் கடவுள் வாழ்த்து அமைந்துள்ளது. உலகப் பொதுமறை எனத் திருக்குறள் போற்றப்படுவதற்கு முக்கிய காரணம், வள்ளுவர் தமது சமயச்சார்பினைப் புலப்படுத்துவதைவிடவும் இறையின் புகழை எடுத்தியம்புவதை நோக் கமாகக் கொண்டமையேயாகும்.

சங்கமருவிய காலத்துப் பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் தோன்றிய கட்டத்தில் நூல்களுக்கு கடவுள் வாழ்த்துப் பாடும் முறையும் தோற்றம் பெற்றது. ''எடுத்துக்கொண்ட இலக்கண இலக்கியம் இடுக்கண் இன்றி இனிது முடியும் வண்ணம்'' கடவுள் வாழ்த்துப் பாடுவது ஒரு மரபாகிவிட்டது. நூல்களின் கடவுள் வாழ்த்து என்பது இன்னொரு வகையிலான இறைபுகழேயாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றினைப் பற்றிய அறிமுகம் உள்ளவர்களுக்கு, பல்லவர் காலம் என்றதுமே பக்தியியக்கம் பற்றிய செய்திகளே உடன் நினைவுக்கு வரும். இறை புகழ் பற்றிய உணர்வுகளுக்குப் பொருத்தமானதொரு வடிகால் அமைத்துக் கொடுத்தது பல்லவர் காலத்திலே தோன்றிய பக்தியியக்கமாகும். இறைவனை எவ்வெவ் வகைகளிற் புகழ்ந்துரைக்க இயலுமோ, அத்தகைய முறைகளிலெல்லாம் சிவனடியார்களான நாயன்

மார்களும், திருமால் பக்தர்களான ஆழ்வார்களும் முயற்சித்தனர். இறைவனைப் பல்வேறு வடிவங்களிற் பாவனை செய்து, அவன் புகழை எடுத்தியம்பினர். மானிட வாழ்க்கையிற் காணத்தரும் உறவு முறைகளை அடிப்படையாகக் கொண்டு, இறைவனின் மாண்புகளைப் புலப்படுத்தினர். இத்தகைய உறவு முறைகளை அடிப்படையாகக் கொண்டு இறைபுகழைப் பாடும் முயற்சிகளில் நாயன்மாரை விடவும், ஆழ்வார்கள் அதிக அக்கறை செலுத்தியுள்ளமையை அவர்களது பாடல்கள் காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, பெரியாழ்வார் தம்மை யசோதையாகப் பாவனை செய்து குழந்தைக் கண்ணனைப் பாடியவற்றையும், குலசேகராழ்வார் தம்மைத் தசரதனாகவும், தேவகியாகவும் பாவித்து, இராமனையும், கண்ணனையும் பாடியமையையும் இங்கு நினைவுகூரலாம். ஆழ்வார்களுள் ஆண்டாளின் பாடல்கள் இறைபுகழைப் பாடுவதில் வேறுபட்ட இயல்புகளைக் கொண்டவையாக விளங்குகின்றன. மானிடக் காதலை வெறுத்து, இறைவனுக்கு வாழ்க்கைப்பட விரும்பிய ஒரு பெண்ணின் தாபங்களை உணர்த்தும் போக்கில், இறைபுகழ் அவரது பாடல்களில் விரவியுள்ளது. திருமங்கையாழ்வார் தம்மால் இயன்ற பல்வேறு உத்திகளையும் பயன்படுத்தி இறைபுகழைப் பாடுவதற்கு முயன்றிருக்கிறார். அவற்றுட் குறிப்பிடத்தக்கது மடலேறுதல் என்ற உத்தியினை அவர் பயன்படுத்தியமையாகும். பெண் மடலேறுதல் தவறு என்றிருந்த கொள்கைக்கு மாறுதலையாக, இறைக் காதலனுக்காகப் பெண்ணொருத்தி மடலேறும் புதிய உத்தியைப் பயன்படுத்தி, தம் இறைவனின் புகழைப் புதிய வடிவத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.

நாயன்மார் ஒவ்வொருவரும் தனித்துவம் மிக்க அடியார்களாக விளங்கினும், இறைபுகழைப் பாடும் முறையின் அடிப்படையில் நோக்குமிடத்து, சம்பந்தரும், சுந்தரரும் ஒரு தொகுதியிலும், அப்பரும், மாணிக்கவாசகரும் இன்னொரு தொகுதியிலும் அடக்கத்தக்கவர். சம்பந்தரும், சுந்தரரும் அழகுணர்ச்சி நிரம்பியவர்களாகவும் இயற்கையை விதந்து இறைவனைப் புகழ்பவர்களாகவும் விளங்கினர். அப்பரும், மாணிக்கவாசகரும் இறைவனுக்குத் தூரத்திலேயே தம்மை நிறுத்திக்கொண்டு, கழிவிரக்கத்தோடு இறைபுகழைப் பாடிப் பரவசம் எய்தினர்.

ஆழ்வாரும், நாயன்மாரும் இறைபுகழைப் பேசுவதற்குப் பெரும்பாலும் தெய்வங்களது உருவ அழகையே வருணித்தனர். அதனோடு, இறைவனின் பேராற்றலைப் புகழ்ந்துரைப்பதற்கு அவ்வத் தெய்வங்கள் சார்ந்த புராணக் கதைகளை வேண்டிய அளவு பயன்படுத்தினர். எளிமையாகவும், இனிமையாகவும் கூட இறையின் புகழைப் பேசலாம் என்பதற்கு, அப்பரின் தேவாரமொன்று சான்றாக விளங்குகின்றது.

> ''குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்
> குமிண் சிரிப்பும்
> பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
> பால் வெண்ணீறும்
> இனித்த முடைய எடுத்தபொற் பாதமும்
> காணப் பெற்றால்
> மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
> மா நிலத்தே''

விளக்கம் வேண்டாத வகையில், இப்பாடல் இறைபுகழை இறைவனது தோற்றப் பொலிவின் வாயிலாக உணர்த்துகின்றது. மாணிக்கவாசகரைப் பொறுத்தவரையில், இறைவனின் உருவத்தை மறந்து, பெரும்பாலும் தமது உணர்வுகளினாலேயே அவனின் புகழைப் பாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். 'அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே பெருந்திறல் அருந்தவர்க்கரசே பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த போகமே யோகத்தின் பொலிவே'' என்று மாணிக்கவாசகர் பாடும்போது, பிற அடியார்கள் பாடியமைக்கு மாறான புதிய இறைபுகழைக் கேட்கமுடிகிறது.

சோழப் பெருமன்னர் காலம் உலகியல் உணர்வும் சமய நம்பிக்கைளும் ஒன்றுட னொன்று பின்னிப் பிணைந்து வளர்ச்சியெய்திய காலகட்டமாகும். பல்லவர் காலத்தில் இருந்து பெருவளர்ச்சி பெறத் தொடங்கிய சிவன், திருமால் ஆகிய தெய்வங்கள் தொடர்பான வழிபாடுகள் சோழர் காலத்திலே மிகுந்த முக்கியத்துவம் பெற்றன. சிறப்பாக, சேக்கிழாரின் கைவண்ணத்திற் சிவபெருமானின் புகழும், கம்பரின் கவியாற் றலாலே திருமாலின் பெருமையும் பேசப்பட்டன. பேரரசு சிறப்பிடம் பெற்ற சோழர் காலப் பகுதியிற் பேரரசனையும், பெருந்தெய்வங்களையும் பொருத்திப் புகழ்ந்து பாடும் மரபும் ஏற்படத் தொடங்கியிருந்தது. கவிச் சக்கரவர்த்தி கம்பர் தமது இராமகாதையில்

"உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகு இலாவிளை யாட்டுடை யார் அவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே"

என்று கூறும்பொழுது, பேரரசின் பகைப்புலத்திற் பெருந்தெய்வத்தின் புகழ் பேசப்படு வதை உணரலாம்.

நாயக்கர் காலத்துத் தமிழ் இலக்கியங்கள் இறைபுகழைப் பாடுவதற்கென்றே செயற்கையாக அமைக்கப்பட்டவை போலத் தோன்றுகின்றன. தலபுராணங்கள் இதற்குத் தகுந்த உதாரணங்களாகும். பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் முதலான நாடகத் தன்மை கலந்த சிற்றிலக்கிய வகைகள் சற்று வேறுபட்ட வகையில் இறைபுகழை உணர்த்துகின்றன. சிறப்பாக பள்ளு இலக்கியத்தில், நிந்தாஸ்துதி, அல்லது பழிப்பது போலப் புகழ்தல் என்ற அம்சம், நாடகப்பாங்கில் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். மூத்தபள்ளி, இளையபள்ளி, என்ற பாத்திரங்களின் வாயிலாக, இருவேறு தெய்வங்களின் பெருமை புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு நிந்தாஸ்துதியாகப் பாடப் பட்டுள்ளன.

தமிழ் இலக்கியப் பரப்பில் சித்தர்களது பாடல்கள் நிறுவன எதிர்ப்புத்தன்மை கொண்டவையாக விளங்குவதைக் காணலாம். அதாவது, கோயில் மரபுகள். சடங்கு ஆசாரங்கள், புராணக்கதைகள் முதலானவற்றைக் கண்டித்து, அல்லது அலட்சியப்படுத்தி, ஆத்மீக ஞானத்தின் அடிப்படை மூலப்பொருளான இறைவனை மாத்திரமே போற்றும் வகையில் அவர்களது இறைபற்றிய நோக்கு அமைந்துள்ளமையைக் காணலாம். இவ் வகையில், இறைபுகழ் பாடும் அவர்களது போக்கு தனித்துவம் மிக்கதாகக் காணப்படு கின்றது.

அதேவேளை, தாயுமானவர், இராமலிங்க வள்ளலார் போன்றவர்களது சமயச் சிந்தனைகள் பரந்துபட்ட வகையில் வளர்ந்து சென்றமையைக் காணமுடிகின்றது. சர்வ சமய சமரசப் போக்கு இவர்களது பாடற்களாற் காணத்தக்கதாக அமைந்துள்ளது. எல்லாச் சமயங்களதும் இறைக்கோட்பாடுகளை மதித்து, அவற்றை இந்துமதத்து இறைக்கோட்பாட்டோடு இணைத்து அமைதி காணும் முயற்சியை இவர்களது பாடல் கள் உணர்த்துகின்றன, அதனால், அவர்களது இறைபுகழ் பாடும் இயல்பு, சமுதாய வளர்ச்சி நிலைகளையும் இனங்காட்டத்தக்கதாக அமைந்துள்ளது. தமிழ் இலக்கியப் போக்கின் யுகசந்தியாக விளங்கிய பாரதியை இவர்களது கருத்துக்கள் பாதித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது,

தமது காலத்து முற்போக்கான அம்சங்களை இயன்றவரை வரவேற்று, சமுதாய, அரசியல் அம்சங்களை உள்ளடக்கி, அவற்றை ஆத்மீக அடிப்படையில் வெளிப்படுத்திய பாரதியின் இறைபுகழ் பாடும் போக்கில், அவருக்கேயுரிய தனித்துவம் காணப்படுகின் றது; ஓர் உதாரணம் பாரதியை இனங்காட்டப் போதுமானது.

"நின்னருள் வேண்டுகின்றோம் - எங்கள்
நீதியும் தர்மமும் நிலைப்பதற்கே,
பொன்னவிர் கோயில்களும் - எங்கள்
பொற்புடை மாதரும் மதலையரும்
அன்ன நல் லணிவயல்கள் - எங்கள்
ஆடுகள் மாடுகள் குதிரைகளும்
இன்னவை காத்திடவே - அன்னை
இணைமலர்த் திருவடி துணைபுகுந்தோம்.
எம்முயி ராசைகளும் - எங்கள்
இசைகளும் செயல்களும் துணிவுகளும்
செம்மையுற் றிட அருள்வாய் - நின்தன்
சேவடி அடைக்கலம் புகுந்துவிட்டோம்"

அதேவேளை, அறிவியற் கூறுகளின் அடிப்படையில் இறைபுகழைப் பாடும் போக்கினையும் பாரதியிடத்துக் காணமுடிகின்றது.

இறைபுகழைப் பாடுவதில் இருபதாம் நூற்றாண்டைச் சார்ந்த இரு கவிஞர்கள் புதிய சுவடுகளைப் பதித்துள்ளனர். ஒருவர் தமிழகத்தவரான கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை; மற்றவர் இலங்கையரான விபுலானந்த அடிகள். கவிமணி, நாடிப் புலங்கள் உழுவார் கரத்தையும், நயவுரைகள் தேடிக்கொழிக்கும் கவிவாணர் நாவினையும், செழுங் கருணை ஓடிப்பெருகும் அறிவாளர் நெஞ்சினையும் தெய்வம் உவக்கும் என்று பாட, அடிகளார் உள்ளக் கமலத்தையும், கூப்பிய கைக்காந்தளையும், நாட்டவிழி நெய்தலையும் இறைவன் விரும்புவான் என்று குறிப்பிடுகின்றார். தெய்வம் மக்கள் சமுதாயத்தோடு நெருங்கிய தொடர்புடையதாக விளங்குகின்றது என்பதை உணர்த்தி, அதுவே தெய்வத்தின் பெருமையுமாகும் என்பதைக் கவிஞர்கள் புலப்படுத்துகின்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து சமூகவியல், மானிடவியல், உளவியல், உளப் பகுப்பாட்டாய்வியல், உயிரினவியல் முதலான அறிவியலின் பன்முக வெளிப்பாடுகள் வளர்ச்சிபெறத் தொடங்கின. சர்வதேசரீதியாக அறிவுப் பரிமாற்றங்களும் ஏற்பட ஆரம்பித்தன. இத்தகைய காரணங்களினாற் கல்வியறிவு பெற்றவரிடையே சமயவுணர்வு மெதுவாகக் குறையத் தொடங்கியமையைக் காணலாம். எதனையும் தர்க்கரீதியாக அலசி ஆராயும் சமூக விஞ்ஞான நோக்கு வளர்ச்சிபெறத் தொடங்கியது. "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா; சுடர் விட்டுளன் எங்கள் சோதி" என்று சம்பந்தர் கூறியவற்றை ஏற்பதற்கு இன்றைய நவீன உலகிலே ஓரளவு தயக்கம் காணப்படுகின்றது. மக்கள் தமது சமயவுணர்வுக்குப் பங்கம் ஏற்படக்கூடாது என்று விரும்பும் அதேவேளையில், தெய்வம் பற்றிய தெளிவற்ற நிலையும் அவர்களிடத்துக் காணப்படுகின்றது. "இல்லையென் றுரைக்கத் தைரியம் இல்லை; தொல்லையென் றதனைத் துறக்கவும் துணிவிலை" என்று நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை பாடுவது போன்ற உறுதியற்ற நிலைப்பாடே இன்றைய நிலையிலே தெய்வம் பற்றிய சிந்தனை நிலையாகக் காணப்படுகின்றது. இத்தகைய நிலைப்பாட்டின் இன்னொரு போக்கினையே புதுமைப்பித்தனின் "கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்" என்ற சிறுகதையும் உணர்த்தி நிற்பதாகக் கொள்ளலாம் இச்சிறுகதையிலே, கடவுளும் மனிதனும் முரண்படும் நிலை எடுத்துக்காட்டப்படுகின்றது. அதேவேளையிலே, இறைக்கோட்பாட்டினைப் பயன்படுத்தி, உழைப்பினைப் பெருமைப்படுத்தும் முனையும் போக்கு விரிவடைந்து வருவதையும் காணலாம். உழைப்பாளரைப் பற்றிக் குறிப்பிடும் பாரதி, "தேட்டமின்றி விழியெதிர் காணும் தெய்வமாக விளங்குவிர் நீரே" என்று பாடுவதையும், உழைப்பைப் பற்றிப் பாடும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், "செய்யுந் தொழிலே தெய்வம் - அந்தத் திறமைதான் நமது செல்வம்" என்று குறிப்பிடுவதையும் நாம் இவ்வாறுதான் விளங்கிக்கொள்ள வேண்டும்.

காலத்துக்குக் காலம் தமிழ் இலக்கியத்தில் இறைபுகழ் பற்றிய அம்சம் புதிய பல உருமாற்றங்களைப் பெற்று வந்துள்ளமையினைக் காணமுடிகின்றது. இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்களில் இந்த அம்சம், பொருளிலும், பாடும் முறையிலும் காலத்துக்கேற்ற வகையில் பெரும் மாற்றங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

*With Best Compliments*

*from*

**GLORY TEXTILES**
**AND**
**GROCERES**

**Dealers in: GROCERIES**

*125C, D. S. Senanayake Vidiya,*
*K A N D Y.*

*Dial : 08-23979*

*WITH BEST COMPLIMENTS*

*FROM*

**Central Agencies**
**(Pte) Ltd.,**

*IMPORTERS - CONTRACTORS - SUPPLIERS*
*WHOLESALE DEALERS IN*
*ELECTRICAL GOODS*

91, Kotugodella Vidiya,
K A N D Y.
Sri Lanka

Phone: 32290
24203

With Best Compliments

From

**K. B. M. BROS**

142, COLOMBO STREET,

K A N D Y.

*Best Wishes From*

**Sun Electricals**

*Dealers in Electrical Products and*
*Contractors for all Domestic*
*Electrical Requirements*

*127 B, D. S. Senanayake Vidiya.*

*K A N D Y.*

# சைவ சித்தாந்தம்

## பற்றிய சில அறிமுகக் குறிப்புகள்

— கலாநிதி அம்பலவாணர் சிவராஜா
முதுநிலை விரிவுரையாளர்/அரசியல் விஞ்ஞானத்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

திராவிடர்களின் உயர் அறிவில் தேர்ந்த உற்பத்தியே சைவ சித்தாந்த முறை எனத் திருவாசகத்தினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவரும் சைவ சமயத்தின் தத்துவங்களை ஐயம்திரிபுறக் கற்றவருமான வண பிதா ஜி. யு. போப் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். தமிழ்ச் சொற்களின் அர்த்தங்களிலும் அமைப்பு முறையினூடாகவும் சைவ சித்தாந்த முறையின் அடிப்படைச் சிந்தனைகள் வெளிவந்துள்ளன. உதாரணமாக கடவுள் என்ற சொல் சிந்தனை, எழுத்து, உடம்பு, எல்லா வற்றையும் கடந்தது என்ற பொருள்களைத் தருகிறது. கடவுள் என்ற சொல் அதன் உண்மை அர்த்தத்தில் எல்லாவற்றையும் இயக்குவிக்கும் சக்தி என்று பொருள் படும் அதே போன்று பிரமம் என்ற சொல் பெரியது என்ற பொருளைத் தருகிறது. கடல், வானம், மலை போன்ற மிகவும் பெரிய விடயங்களைக் குறிக்கவும் அது பயன்படும். ஆனால் கடவுள் என்ற சொல் எல்லாம் வல்லவனை மட்டுமே குறிக்கப் பயன் படுகிறது அது இவ்வுலகை ஆள்பவன், எல்லா வற்றுக்கும் மேம்பட்டவன் அவனாலேயே நாம் வாழ்கின்றோம். நாம் நாமாக இருக்கின்றோம். என்றே பொருள்படும்.

எமக்குக் கிடைக்கின்ற மிகவும் பழைய தமிழ் நூலின் துணை கொண்டு பார்க்கும் போது சைவ சித்தாந்தம் தமிழரின் மிகவும் தனித்துவமானதும் பழைமை மிக்கதுமான ஒரு பாரம்பரியம் என்பது தெரியவரும். தொல் காப்பியத்தில் கடவுள், உயிர், மெய் வினை, கந்தழி போன்ற சொற்கள் பயன் படுத்தப்பட்டுள்ளமையை பார்க்கும் போது தமிழர் மிகவும் பழைய காலத்திலேயே சைவ சித்தாந்தத்தினைப் பற்றிச் சிந்தித்துள்ளனர் என்பதைக் காட்டுகின்றது. திருக்குறள் இம் முறையின் பிரதான எண்ணக் கருக்களை வெளிப்படுத்தியுள்ளது. கடந்த காலங்களில் இதனை திருநெறி பொருள் நெறி செந்நெறி என அழைத்தனர். கலாநிதி கிறியர்சன் என்பவரின் கருத்துப்படி 'சிவ' என்ற சொல் ஒரு தமிழ்ச் சொல்லாகும். அச் சொல் ஆதி காலத்திலேயே ஆரிய மொழியினைச் சென்றடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். பெரிய புராணத்தினை இயற்றிய சேக்கிழார் சைவ சித்தாந்தத்தினை முதற் சைவ நெறி எனக் கொண்டார். தொல் காப்பியமும் திருக்குறளும் மாத்திரமல்ல சங்க கால இலக்கியங்களுள் பல சைவ சித்தாந்தத்தின் இன்றியமையாக் கூறுகளை வெளிப்படுத்தியுள்ளன. சங்க காலத்திற்குப் பின்பு சுமார் 55 பாக்களைக் கொண்ட ஆத்மீக அனுபவத்தின் மிகவும் செழுமை வாய்ந்ததெனக் கொள்ளப்படும் திருவாசகத்தில் சைவ சித்தாந்தம் தனது அழகுமிக்க கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளது. சைவ சமயப் போதனையான பதினோராவது திருமுறை ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பல சைவத் துறவிகளின் பக்திப் பாக்களை உள்ளடக்கியுள்ளது. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த மூன்று பெரும் ஆக்கங்கள் சைவ சித்தாந்த எண்ணக் கருத்துக்களை சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளன. கல்லாடம் தமிழரின் காதல் வாழ்வினை சித்தரிக்கின்ற போதிலும் அது சைவ சித்தாந்த கருத்துக்களையும் தெரிவிக்கின்றது. உண்மையில் திருமூலரின் திருமந்திரமே சைவ சமயம், சைவ சித்தாந்தம் என்பவற்றின் நடைமுறை, கோட்பாடு என்பவற்றைத் திட்ட வட்டமாக வெளிப்படுத்தியுள்ளது. தமிழ் இலக்கியங்களுள்ளே முதன் முதலாக ''சைவ சித்தாந்தம்'' என்ற சொற்றொடர் திரு

மந்திரத்திலேயே பயன் படுத்தப்பட்டது. பழைய முறையை அடியொட்டி இதில் பதி, பசு, பாசம் என்பன விளக்கப்பட்டுள்ளன. நவீன விஞ்ஞான அணுகு முறையில் சித்தாந்த எண்ணக் கருக்களை ஆராய்ந்த முதல் நூல் ஞானாமிர்தமாகும். சைவ சித்தாந்த அடிப்படையில் உண்மையினைக் கண்டறிந்த திருஞான சம்பந்தரும் அப்பரும் ஏழாம் நூற்றாண்டில் சிறப்பு மிகு பக்தி இலக்கியத்துக்கு வழி வகுத்தனர். ஒன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் மேற்சொன்ன இலக்கியத்தை மேலும் மெருகூட்டினார். பதினோராம் நூற்றாண்டிலும் பன்னிரண்டாம் நூற்றாண்டிலும் பெரிய புராணம், கந்த புராணம், கம்ப இராமயணம் போன்ற காவியங்கள் சித்தாந்த எண்ணக் கருக்களுக்கு மேலும் பங்களித்தன. ஆனால் பதின்மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மெய்கண்ட தேவர் இயற்றிய சிவஞான போதமே சித்தாந்தத்தின் மத்திய மயமான பங்களிப்பாகியது. அதுவே நவீன காலத்தில் சைவ சித்தாந்த இயக்கத்தினை தொடக்கி வைத்தது. பன்னிரண்டு சூத்திரங்களை உள்ளடக்கி மிகவும் சுருக்கமான ஆக்கமாக இது அமைந்துள்ள போதிலும் இதுவே சைவ சித்தாந்த முறையினை இரத்தினச் சுருக்கமாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தி உள்ளது.

சைவ சித்தாந்தத்தின் உட் பொருள்

சைவசித்தாந்தம் இரண்டு பெரும் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. (1) உண்மை பற்றிய விசாரணை, (11) ஆத்மீக அனுபவம். இவ்விரண்டு பிரிவுகளிளதும் விளக்கங்களை இங்கு நாம் காண்போம்.

சைவ சித்தாந்தத்தினை விளக்கிய ஆத்மீக சிந்தனையாளர் அதனை அளவையியல் முறை கொண்டு விளங்கியுள்ளதோடு வாதங்கள் நாம் கண்ணால் கண்டவற்றிலிருந்து காணாதவற்றை நோக்கி வழிப்பட்டும் உள்ளன.

நாம் கணும் உலகத்தின் இயற்கை, தோற்றம் என்பவற்றை ஆராய்வதன் மூலம் கடவுள் இருக்கிறார் என்பது நிரூபிக்கப் படுகிறது. சைவ சித்தாந்தத்தின்படி உலகம் என்பது யதார்த்தமானது. ஏனெனில் உலகத்தில் அவன், அவள், அது என்பவற்றை இனங்காணக் கூடியதாகவுள்ளது இவை யதார்த்தமானவையாயினும் மாற்றங்களுக்குட்படக் கூடியவையே. ஆனால் தண்ணீர் என்பதை எல்லாக் காலங்களிலும் ஒரே மாதிரி தண்ணீர் எனவே இனங் காணக் கூடுமாயின் அது மாயையல்ல என்பது பெறப்படுகிறது. கானல் நீர் தண்ணீர் போன்று எமக்கு தூரத்தில் தெரிந்தாலும் அதனை அண்மிக்கும் போது அது தண்ணீர் அல்ல என்பது தெரிய வரும். இவ்வாறு நிரந்தரமாக எதை எதையெல்லாம் இனங் காண முடியுமோ அவையெல்லாம் யதார்த்தமானவை. மாயையல்ல உண்மைப் பொருட்களின் நிகழ்போக்கு உலகம் என்பதால் உலகம் யதார்த்தமானது இல்லை எனில் அதனை உருவாக்கியவர் பற்றி உரையாடுவது அல்லது ஆராய்வது அவசியமற்றதாகி விடும். ஆகவே உலகம் என்பது யதார்த்தமானது எனக் கொள்வது அவசியமானது. அப்போதுதான் அதனை உருவாக்கியவர் பற்றிய விசாரணையினை மேற் கொள்ள முடியும்.

உலகம் புத்திசாலிகளையும் புத்தி சாதுரியமற்றவர்களையும், கொண்டிருக்கிறது. புத்திசாலிகளை பத்திசாலிகளான ஆண்கள், புத்திசாலிகளான பெண்கள் என்று பிரிப்பதில் ஒரு புத்திசாலித்தனமான தேவை தெரிகிறது. புத்திசாலிகளின் தேவைகளுக்காக மற்றையோர் பயன்படுத்தப் படுகின்றனர். ஆகவே உலகத்தை புத்திசாலிகளே ஆட்சி செய்ய வேண்டும். எமது உடம்பினை எடுத்துக் கொண்டால் புத்திசாலித்தனமான ஆத்மா புத்திசாலித்தனமற்ற உடம்பினை ஆட்சி செய்கிறது. ஆனால் உடம்பில் அமைந்துள்ள ஆத்மா உலகில் நடக்கும் நிகழ்வுகளைக் கட்டுப்படுத்த முடியாது. உலகில் ஒவ்வொரு புத்திசாலித்தனமான நபரினால்தான் நடத்தப்படுகிறது.

ஒரு கல்லினை நாம் எடுத்து எறிந்தால் அக் கல் விழுந்த இடத்தில் இருந்து நகராது இருக்கிறது. அசைதல் அதன் இயல்பல்ல. அதனை நகர்த்துவதனால் இன்னொரு தனியான முகவரினால் தான் அது நடைபெற முடியும். காற்று அல்லது ஒரு மனிதனுடைய கை அங்கு தேவைப்படுகின்றது. இதுவே உணர்ச்சி

யற்ற பொருளின் இயல்பாக இருப்பதை நாம் அறிவதோடு புத்திசாலியான ஒரு உயிர் அதன் தேவைக்கேற்ப அசைந்தும் அசைவற்றும் இருக்கும் என்பதும் தெரிகின்றது.

உலகில் உள்ள எல்லாம் பிறத்தல், வளர்த்தல், அழிதல் என்ற வழிமுறைகளினூடாகச் செல்கின்றன வளர்த்தல் என்பது இயல்பானதாயின் அதன் எதிர் வழிமுறையானது அழிவு, இது இயல்பானதாக இருக்க முடியாது. அது செல்வாக்கு ஒன்றினாலேயே நடைபெற முடியும். ஏற்கனவே நாம் உலகத்துக்கு ஒரு புத்திசாலித்தனமான தேவை இருக்கிறது எனக் கண்டோம், அது மிக உயர்ந்த புத்திசாலித்தனத்தாலே வழி நடத்தப்படுகிறது ஆகவே உலகின் வழிமுறை ஒரு புத்திசாலித்தனமான கடவுளினால் இடம் பெறுவதோடு கட்டுப் படுத்தவும் படுகிறது.

ஆகவே பிறத்தல், வளர்த்தல், அழிதல் என்பவற்றை உள்ளடுக்கும் எல்லாமே ஆத்மாவினால் இயக்கப்படுவதனால் இங்கு பல ஆத்மாக்கள் உண்டே தவிர கடவுள் இல்லை எனலாம். இக் கருத்து தவறானது. ஏனெனில் இக் கருத்து தூர திருஷ்டியற்றது. உலகில் உள்ள நடைமுறைகள் மீது தனியொரு ஆத்மா கட்டுப்பாடு செலுத்த முடியாது. அதனை மிகவுயர்ந்த புத்திசாலியின் உயர் சக்தியினால்தான் செய்ய முடியும். இவ்வுலகம் ஒரு முறைப்படியமைந்த ஒருமைப் பாட்டினைக் கொண்டுள்ளது. அந்த ஒருமைப் பாட்டினை ஒரு தனித்துவம் வாய்ந்த சக்தியினால்தான் ஏற்படுத்த முடியும். அதுவே எல்லாம் வல்ல இறைவனாவான். சித்தாந்தத்தின் முழு உலகமும் தோற்றமும் அழிவும் முழுமையும் என்ற வழி முறையினூடாகச் செல்கின்றது. எனக்குறிய சக்தியைக் கொண்டிருக்கிறாரோ அவரே இதன் தோற்றத்துக்கும் காரணமாவார் எனவும் கொள்கின்றார், அதையே ஆக்குதல், காத்தல் அழித்தல் எனவும் கொள்வர். இவற்றுள் அழித்தலைச் செய்யும் கடவுளே மிக உயர்ந்த கடவுள் எனக் கொள்கின்றனர். சைவர்கள் மற்ற இரு கடமைகளையும் செய்யும் கடவுளர் அழித்தல் எனும் கடமையைச் செய்யும் சிவ சக்தியின் முகவர்களாகக் கடமையாற்றுகின்றனர்.

உலகம் ஆத்மாக்களின் நன்மைக்காகவே உருவாக்கப்பட்டுள்ளது. பரிமாணம் வளர்ச்சி காரணமாக ஆத்மாக்கள் தமது உடம்புகளை எடுத்துக் கொள்கின்றன. சிறிது காலம் அங்கு வசித்துவிட்டு அவற்றைவிட்டு விலகுகின்றன. இவ்வாறே பிறப்புகளும் இறப்புகளும் நிகழ்கின்றன.

சைவ சித்தாந்த கருத்தின்படி கடவுளை போல் ஆன்மாக்களும் அழிவில்லாதவை. அவை சூன்யத்தில் இருந்து கடவுளால் உருவாக்கப்பட்டவையல்ல அவை கடவுளின் பகுதிகளுமல்ல. ஏனெனில் அவற்றுக்கு கடவுளுக்குறிய தகுதிகள் இல்லை. ஆத்மாவின் அறிவு படிப்படியாக வளர்ச்சியடைகின்றது. அதன் நல்ல கெட்ட நடத்தைகளே கன்மம் என அழைக்கப்படுகிறது. மாயை என்பதுதான் கடவுளை அறிவதற்குத் தடையாய் இருக்கிறது. ஆணவம் என்பது இத்தகையதே. ஆகவே ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றையும் ஒழித்தாலே ஆத்மா கடவுளின் மட்டத்தை அடைய முடியும்.

ஞானத்தின் விடுதலை நிலையில் நான்கு கட்டங்கள் உள. அவை முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என அழைக்கப்படுகின்றன. கடவுளின் சொற்களை (சம்பாசனை) நேரடியாகக் கேட்பது சரியை என அழைக்கப்படுகிறது. கடவுளின் உபதேசத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் கிரியை ஆகும். உண்மையில் உறுதியாயிருத்தலும் அதன் மீது கவனங் கொள்ளுதலும் யோகமாகும். கடவுளை உணர்ந்து கொள்ளுதலும் நிஸ்டையினூடாக அவனது தரிசனத்தைப் பெறுதலும் ஞானமாகும். இதுவே இவ்வுலகில் ஒரு மனித ஆத்மா அடையக் கூடிய மிக உயர்ந்த இறுதிக் கட்டமாகும். அத்தகைய ஆத்மா ஆத்மாவினையும், உலகத்தையும் கடவுளையும் சரியான நோக்கில் வைத்துப் பார்க்கும்.

நன்றி: தினகரன்

With the Best Compliments

of

# V. K. M. NAGALINGAM & SONS

JEWELLERS, RADIO & T. V. DEALERS

**97, COLOMBO STREET,**

**KANDY.**

☎ 23108

With Best Compliments

DEVI JEWELLERS

The fore - runners in introducing - Day - To - Day
Designs in 22kt Jewelleries

No. 38, TRINCOMALE STREET,
KANDY.

☎ 24110

இந்து மாணவர் சங்கத்தை வாழ்த்துகின்றோம்

22 கரட் தங்க நகைகளுக்கு கண்டியில் ஓர் தனியான இடம்

சித்ரா ஜுவலர்ஸ்

41, டி. எஸ். சேனநாயக்க வீதி,
கண்டி.

☎ 08-23290

With Best Compliments

# T. S. K. RICE AGENCIES

COMMISSION AGENTS, RICE & SRI LANKA PRODUCE ETC.

**19 & 21, 4th CROSS STREET,**

**COLOMBO - 11**

*Phone:* 4 3 8 2 5 7

# மதசுதந்திரம்

செல்வன்: சு. சத்தியகீர்த்தி
3ம் வருடம்/பொறியியற் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

மதம் பற்றி அறியாதவர் இல்லை: ஆயினும் மதம் பற்றிய கருதுகோள் எல்லோரிடமும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. மதநம்பிக்கையுடையோர் எல்லாரும் தத்தமக்குள் வெவ்வேறு அடிப்படைகளைக் கொண்டிருந்தபோதும் 'மதநம்பிக்கையுடையோர்' என்ற பொதுவரையறைக்குள் உட்பட்டுவிடுகிறார்கள். மதநம்பிக்கை உடையோர் ஒவ்வொருவரும் அதனைப் பேணவும் பிரச்சாரம் செய்யவும் உரிமையுடையவர் என ஐ. நா. மனித உரிமைகள் சாசனம் விதந்துரைக்கிறது. இதனை அநேக நாடுகள் ஏற்றுக் கொண்டு தமது அரசியல் சாசனத்தில் வலியுறுத்தியும் உள்ளன.

ஆயினும் வேறுபடும் நம்பிக்கைகளின் தராதரங்கள் அந்தந்த அளவில் வைத்து மதிக்கப்படுகின்றனவா என்பது சந்தேகமே. இலங்கையிலும் மதசுதந்திரம் அரசியல் சாசனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. மதச்சார்பற்ற நாடாகச் சொல்லும் ஜனநாயகவிருப்பும் எமது அரசியற் சாசனத்திற்குண்டு. பௌத்தம் அரசமதமாக கோலோச்சுவதை அந்த சாசனவசனங்கள் எவ்வகையிலும் பாதிக்கவில்லை என்பது வெளிப்படை.

ஒரு உலகநோக்கு (தத்துவம்) என்ற அடிப்படையில் பௌத்தத்துடன் எம் மதத்தவரும் உடன்பாடு கொள்ளத்தக்கமை பற்றி Henri Van Zeyst எனும் தத்துவவியலாளர் தமது "The Cultural Evolution of Buddhism" என்ற நூலிற் பின்வருமாறு கூறுகிறார்.

"Not Buddism as a religion which as a system is as dead as any other -ism but Buddism as living in each one of as which has the real germinating power of life, giving meaning to life through its philosophy and ethics; its comprehension and action".

பௌத்த தத்துவம் மதிக்கப்படுகிற அளவுக்கு பௌத்தமதம் போற்றப்பட முடியாமல் இருப்பது திணிப்பு மிகையாவதனாலேயே. திணிப்பு மூலமாய் எந்த உண்மையும் நிலைபேறடைய முடியாது. புத்தரைப் போற்றும் இன்னொரு நெறியை இலங்கையிற் செல்வாக்கு பெற்ற தேரவாதப் பௌத்தத்தாற் சகிக்க முடியவில்லை; அது இலங்கையிற் பரவுவதை அனுமதிக்க முடியவில்லை; ஒருவழிபாதையே வேண்டப்படுகிறது. இங்குள்ள பௌத்த குருமார் தமக்குச் சரியெனத் தீர்மானித்ததை மக்களிடம் திணிப்பதற்கு இதன் வாயிலாக அரசிடம் பாதுகாப்புப் பெற்றுக் கொள்கிறார்கள். எமது அரசியற் சாசனம் தேரவாதப் பௌத்தத்தின் புனிதத்தைக் காக்க உறுதி பூண்டிருப்பது இங்கே கவனத்திற் கொள்ளப்படவேண்டிய அம்சமாகும்.

உலகின் பெரும்பான்மை மக்கள் பௌத்தமதத்தினரே. ஆயினும் சீன – யப்பானியப் பௌத்த நெறிகளை ஏற்காத தேரவாதப் பௌத்தர்கள் இலங்கையிற் பௌத்தம் இல்லாவிட்டால் உலகமே அழிந்துவிடும் என்று மக்களை நம்பச் செய்கிறார்கள். புத்தர் பௌத்தத்தைக் காக்கும் பொருட்டு இலங்கையைத் தான் தெரிவு செய்து வைத்திருக்கிறார் என்று சொல்வதன் வாயிலாக ஏனைய மார்க்கங்களை நிராகரிக்கும் மனோபாவம் வளர்க்கப்பட்டுள்ளது.

இத்தகைய சகிப்பின்மை பௌத்தத்திடம் மட்டுமல்ல கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகியவற்றிடமும் உண்டு. போர்த்துக்கீசர் பரப்பிய கத்தோலிக்க கிறிஸ்தவத்தைச் சகிக்கமுடியாத ஒல்லாந்தர் யேசுவின் பெயராலேயே கத்தோலிக்க கிறிஸ்தவத்திற்குத் தடைவிதித்தார்கள். சில்லாலை கதிரைமாதாவிலிருந்து தென்கோடி தேவாலயம் வரை கத்தோலிக்க யேசு மரப் பொந்துகளில் அடைக்கலந்தேட வேண்டியிருந்தது. ஆங்கிலேயர் அவர்கட்கு விடுதலை வழங்கிய போதும் கிறிஸ்தவப் பிரிவுகளுக்கிடையே போட்டி இன்னும் தொடர்கின்றது.

அவ்வாறே இஸ்லாமிய நாடுகளில் வெவ்வேறு இஸ்லாமிய மார்க்கங்களிடையே முரண்பாடுகளும் போராட்டங்களும் இடம் பெற்றுக் கொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு பிரிவினரும் தாமே புனிதத்தைப் பேணுவதாகப் பிரகடனப்படுத்துவதும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இதேவகை முரண்பாடுகள் இந்துமதப் பிரிவுகளிடமும் உள. சைவத்துக்கும் வைணஷத்துக்கும் இடையே அவ்வப்போது மோதல்கள் எழுந்ததுண்டு. அது கடவுள்களையும் விட்டுவைக்கவில்லை. விஷ்ணுவையும் பிரம்மாவையும் சிவனின் அடிமுடியைத் தேடுகிற அளவுக்கு விண்ணுக்கும் யுத்தத்தைக் கொண்டு சென்றது. வைணவத்தினுள்ளேயே வடகலை – தென்கலை முரண்பாடுகள் உள. சைவத்திலும் தென்னாடுடைய சிவன்; வீரசைவம், காஷ்மீரசைவம் ஆகியன போற்றும் சிவன்களிலிருந்து சற்று மேம்பட்டவராய் இருப்பதாகத்தான் எமக்குத் தெரியும்.

ஆயினும், ஏனைய மதங்களைவிட இந்துமதம் அனைத்துப் பிரிவுகளையும் தொடர்ந்து ஒரே குடும்பமாய்ப் பேணிவருகிறது. வெவ்வேறு தத்துவப்பிரிவுகளை இந்துமதம் தன்னுள் அடக்கியுள்ளது. அவற்றுள் ஒன்றையொன்று முழுமையாய் நிராகரிக்கும் கோட்பாடுகளும் அடங்கும். கடவுள் உலகைப்படைக்கவில்லை என்று கூறும் சாங்கிய தத்துவம் முதல் சிவனை முழுமுதற்கடவுளாகக் கருதும் சைவசித்தாந்தம் வரை உள்ள தத்துவ பேதங்களுள், வேற்றுமையில் ஒற்றுமை காண்பது இந்துமதம்.

அக்காரணத்தால் மதசுதந்திரம் இந்துமதத்திற் சற்று அதிகமுள்ளதாய்க் கூறினால் மிகையாகாது. எல்லா மதங்களும் ஒரு முழுமுதற் கடவுளை அடைய வழிகாட்டும் என்று கருதுவதும், ஒவ்வொருவரும் விரும்பிய தத்துவப் பிரிவைத் தெரிந்து விரும்பிய மார்க்கத்தை அனுஷ்டிக்க முடியும் என்ற சுதந்திரமும் இந்துமதத்தின் பொதுப்பண்பு எனலாம்.

மதசுதந்திரம் என்பது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒரு வரையறைக்குள் மனிதனின் சிந்தனையைச் செக்குமாடு போல உழல விடுவதாக அமையாதிருப்பதும் என்று சேர்த்துச் சொல்வோமாயின் அந்த மத சுதந்திரம் இந்துதர்மத்தில் ஏனையவற்றிலும் அதிகம் என்று துணிந்து கூற முடியும். ஆயினும் இந்துமதத்திலே தான் சாதியத்தின்

பெயராக இந்துக்களின் தொகையில் ஐந்தில் ஒரு பங்கிற்கு மேலானோர் தீண்டத்தகா தோராய் ஒதுக்கப்பட்டு ஒடுக்குமுறைக்குள்ளாயினர் என்பதும் வரலாற்றுண்மை. இன்னமும் தொடரும் சாதியவெறி முன்னைய கொடுமைகட்கு உரைகல்லாய் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

பொது இடங்களில் தீண்டாமை பேணப்படுவதைத் தகர்க்கும் குறிக்கோளுடன் இலங்கையில் 1966ம் ஆண்டு ஒக்டோபர் 21 எழுச்சியிலிருந்து முனைப்புப்பெற்ற தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் தனது இலக்கை வெற்றி கொண்டதன் பேரில் ஆலயங்களின் கதவுகள் எல்லோர்க்கும் திறக்கப்பட்டன. இன்னமும் திறக்கப்படாத ஆலயங்களும் தொடரும் போராட்டங்களூடாகத் திறக்கப்படுவதன் மூலமாக 'மதசுதந்திரமும்' அர்த்தபுஷ்டியானதாக அமைய முடியும்.

இந்துமத இராஜ்ஜியமான நேபாளத்தில் இன்று, மதசார்பின்மையினை அரசு கடைப்பிடிக்க வேண்டும் என மக்கள் வலியுறுத்துகின்ற அதே வேளை இந்தியாவில் தமது குறுகிய அரசியல் நோக்கத்திற்காக, பாரதீய ஜனதாவினால் 'இந்துமத வெறி' வளர்க்கப்பட்டு வருகிறது. இது மதசுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் விளைவிப்பதாக மட்டுமல்ல, இந்துமதத்தினது பொதுப்பண்பையே மாசுபடுத்துவதாக அமைந்துள்ளது. இத்தகைய சக்திகளை இனங்கண்டு கொள்ள வேண்டிய கடமை எம்முன் காத்து நிற்கின்றது.

பலாத்காரம், இம்சை, கொடுமை என்றால் நாம் எப்போதும் கத்தியையோ, துப்பாக்கியையோதான் நினைத்துக் கொள்கிறோம். ஆனால் உண்மையில் நாம் நம் நாக்கினாலும் நடத்தையினாலுமே அதிக கொடுமைகளைச் செய்கிறோம். நாம் ஒருவனுடன் பழகும் விதத்திலேயே அன்பினாலும், புன்சிரிப்பினாலும், ஹிம்சை செய்வதைத் தவிர்த்துச் சமாதானத்திற்கு அடிக்கல் நாட்ட வேண்டும்.

- அன்னை தெரேசா

''அரசன் ஒழிக'' என்று கைதிகள் கூச்சலிட்டாலும் கைதிகளுக்கு உணவு கொடுத்து அரசன் காப்பாற்றுகிறான்.

அது போலவே ''கடவுள் இல்லை'' என்று நாத்திகம் பேசுபவனையும் கடவுள் காப்பாற்றுகிறார்.

- கிருபானந்தவாரியார்.

*With Best Compliments*

**SHREEVISNU**

ASSOCIATES

142-144, 4th Cross Street,

COLOMBO 11

T. P. 449924

With Best Compliments

**SUBRAMANIAM & CO.**

*GENERAL MERCHANTS*

198, Fourth Cross Street,

COLOMBO 11.

*Phone : 23844*

*With Best Compliments From*

**WOODLANDS HOTEL**

192, 4th Cross Street,

COLOMBO 11.

**Phone : 27451**

*With the Best Compliments*

**S. P. S. AGENCY**

113, 4th Cross Street,

COLOMBO 11.

*Phone: 26204*

# God in Hinduism
# Where do we stand?

— T. Kugarajah -
*Instructor / Electriacl & Electronics Dept.*
*Peradeniya University*

Hinduism as it exists today seems immersed in soulless ritualism, menacing superstitions and degrading practices. This is, indeed, a gigantic transformation for a highly metaphysical religion. Where is the God in our rituals? Is the God so veiled in Maya that only a few *'learned'* and *'cultured'* in the metaphysical sense can realize God? And where exactlly do we stand?.

From a purely rationalistic viewpoint, the questions will be extended to the very basis of religions, the very existence of God. We, however, agree with Pascal that "the supreme achievement of reason is to realise there is a limit to reason", and confine ourselves to certain historical considerations and a study of Hindu Scriptures - in the process, asking pertinent questions (rational, perhaps!),

We are at once faced with a dilemma. Shall we accept history as it is or shall we yield to the temptation to throw history into the garbage can? In the context of our own life and times, it does not need a hiehard sceptic to assert that history is all lies and half truths. Yet, the nature of our endeavour demands that we accept, at least, non controversial facts of history.

Historians consider the Vedic age as the starting point of any study of Hinduism. This was the age of Mantras, Upanishads and Epics. If Vedanta is the essence of Hinduism, the Brahma - Sutra (of Upanishads) is too quintessence of Vedanta. The Commentaries on this sutra are numerous and varied. We will consider Sanakara's interpretation, which is widely regarded as the correct one.

In Sankara's commentary, there is only one ultimate Reality - Advaitha principle - the eternal, impersonal Absolute, which the Upanishads Call "*Brahman*". We can have no Cenceptual knowledge of this Absolute. Liberation could be attained by discovering this Brahman. But this Brahman can only be discovered experienced by a special experience - illumination or Gnana that comes as a result of meditation on the Upanishads

There now arises a fundamental problem. If there is an Absolute, it exists independently, of our knowledge, acceptance or denial of it. This Absolute exists therefore, even for the atheist who sees the world as an absolute in itself. How. then, does this Absolute (Brahma) enables human beings to realize that this world is not an Absolute, that this world needs a cause, a Prime Mover? Is natural reason enough or is some form of revelation or illumination required? If revelation is required, then, does this require knowledge of scriptures? If appears, that Sankara is Silent on this and the questions remain open. In Hindu Philosophy faith in, and acceptance of scriptures is fundamental. If one questions the existence of God, Hinduism says, that if there is no God, one cannot ask the question in the first place. One cannot even be. This then, is a vicious cycle and we will not pursue this.

If we accept Sankara's interpretation, it is obvious that such a highly metaphysical Vedantic religion could be for a few only. Vedanta does not offer an easy solution to the problem of human suffering. We may note here that Buddha refused to accept the authority of Vedanta and taught that the solution to all suffering lies in the extinction of the flame of desire. Buddha's solution is essentially a monastic solution - we must become sanyasis.

In order to divert Hinduism of thie Vedantic rigor mortis, the Bhagavad Gita appeared in the scene with a personal God. Gita's solution to human suffering is the very anti - thesis of Buddha's solution. The spirit "Learn to live in this world without becoming wordly" of Sanyasa should persuade us in doing our duty - the "Dharma" Gita sees the duty as imposed on man by his own nature and tendencies, Bhagavan in the Gita is a friend nnd survivor, and there will be no suffering if one recognizes this as the Lord. Gita thus added two new dimensions to Sankara's gnana (illumination); namely karma (action) and Upasana (devotion or Bhakti): The Upanishadic Brahman was transfomed from an It, which has no conscience into He, the personal God who redily responds to the call of devotion. Commentaries on the Brahma Sutra subsequent to that a Sankara, (most notably Ramanuaj's) recoganize this personal God. Easwara and give a significant place to devotion (Bakthi).

What were the implications of this concept of personal God? At once this personal God appealed to the hearts and minds of the multitudes and human imagination produced a variety of deities and all the paraphernalia of religim. There are these who argue, that the rituals and image worship a next step in the logical progression of this concept well, we think that these pratices cannot be entirely done away with after this evolution. We however, human sceptical of their relevance in the content of our times, and of their claim to be part and parcel of Devotion. Well now where do we stand?.

*With Best Compliments*

**Anandavissnu Associates**

General Merchants & Commission
Agents For Agro Produces

234, Keyzer Street,
COLOMBO 11.

**Phone: 26462**

With Best Compliments From

**VISNU TRADING CO.**

174, 4th Cross Street,
COLOMBO 11.

Phone: 24364
434874

*With Best Compliments From*

**Lanka Products Trades**

*DEALERS IN GROCERIES &*
*COMMISSION AGENTS*

21, St, John's Road,
COLOMBO 11.

**T. P. 26740**

***With the Best Compliments***

**Perera And Company**

174, 4th Cross Street,
COLOMBO 11.

T. P. 434874 - 24364

*WITH BEST COMPLIMENTS*
*FROM*

**V. Manickam & Brother**

General Rice Merchants &
Commission Agents For
Local Produce

34, 4th Cross Street,

COLOMBO 11,

Phone: 23986 - 23408

With Best Compliments

**VIJEYA ENTERPRISE**

44 - B, 4th Cross Street,

COLOMBO 11,

With Best Compliments

**KUMARAVEL COY**

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS
DEALERS IN PROVISIONS

**217, FIFTH CROSS STREET,**
**COLOMBO 11,**

**Phone: 421057**

# இந்துமத நிலையாமைக் கோட்பாடு

## (தமிழ் இலக்கியங்களை அடியொற்றிய சில குறிப்புகள்)

— கலாநிதி க. அருணாசலம் —
முதுநிலை விரிவுரையாளர்/தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

ஆறறிவு படைத்த மனிதனுக்கு மட்டுமன்றி உலகின் உயிர்கள் யாவற்றுக்கும் உயிர் வாழும் ஆசை உண்டு. ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு உயிரும் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளவே முயலுகின்றன; நிதமும் உயிர்களை ''யமபயம்'' வாட்டி வதைக்கின்றது. சூழ்நிலை நிர்ப்பந்தங்களே சில சந்தர்ப்பங்களில் உயிரைப் போக்கும் துணிவைக் கொடுக்கின்றன. நீண்ட நாட்கள் வாழ ஆசைப்படும் உயிர்கள் குறுகிய நாட்களில் மடிகின்றன; திடீரென அகால மரணமடைகின்றன. இன்பங்களை அனுபவிக்கத் துடிக்கும் உயிர்கள் தொடர்ச்சியாகத் துன்பங்களுக்காளாகின்றன. என்றும் முதிரா இளமைத்துடிப்புடன் வாழ ஆவல் கொள்ளும் உயிர்கள் விரைவில் மூப்பு, பிணி, சாக்காடு முதலியவற்றுக்காளாகின்றன. செல்வத்திளைப்பிலே உலக இன்பங்களைச் சுகித்து வாழத்துடிக்கும் உயிர்கள் வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கித்தவிக்கின்றன.

பகுத்தறிவு படைத்த மனிதனைத் தவிர ஏனைய உயிர்வர்க்கங்கள் உலகின் நிலையாமையை - அநித்தியத்தைப் பற்றிக் கவலைப் படாமலே பிறந்து வளர்ந்து வாழ்ந்து மடிகின்றன. சிந்தனா சக்தியற்ற அல்லது மிகக்குறைந்த சராசரி மனிதர்களும் வாழ்வின் அநித்தியம் பற்றி அதிகம் கவலை கொள்வதில்லை. சிந்திக்கத் தெரிந்த மனிதனே உலக நிலைமையை அநித்தியத்தையிட்டுக் காலம் காலமாகச் சிந்தித்து வந்துள்ளான்; கவலைப்பட்டுள்ளான். நிலையற்ற இவ்வுலகில் எப்படி வாழலாம்; எவ்வாறு வாழவேண்டும் என பதிற் சமய, சமூக ஞானிகளிடையே முரண்பாடுகள் நிலவி வந்துள்ளன; நிலவி வருகின்றன. இத்தகைய சிந்தனையின் வளர்ச்சியே 'நிலையாமைக்கோட்பாடு' உருவாக வழிவகுத்ததெனலாம்.

'இவ்வுலக இன்பங்கள், யாக்கை, செல்வம், இளமை முதலியவற்றின் நிலையாமையை உணர்ந்து தெளிந்து பற்றுக்கள் யாவற்றையும் துறந்து துறவு நெறியில் நின்று நிலையான உண்மைப் பொருளை உணர்ந்து உய்தி பெறுதலே' நிலையாமைக் கோட்பாட்டின் சாராம்சம் எனலாம். நிலையாமைபற்றிய திருக்குறட்பாக்களும் அவற்றுக்குப் பரிமேலழகர் எழுதியுள்ள உரையும் மேற்கண்ட கருத்தினை வலியுறுத்துகின்றன.

கடந்த இரண்டாயிரம் ஆண்டு காலத் தமிழ் இலக்கியப் பரப்பிற் சங்கச் சான்றோர்கள் முதல் இன்றைய திரைப் படக் கவிஞர்கள் வரை எவரையும் நிலையாமைக் கருத்துக்கள் விட்டு வைக்கவில்லை. தமிழ் இலக்கிய வரலாற்றின் சிலகாலகட்டங்களில் நிலையாமைக் கோட்பாடும் ஊழ்வினைக் கோட்பாடும் துறவு நெறியும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த வகையில் முனைப்பாக வற்புறுத்தப்பட்டு வந்துள்ளமையும் சில காலகட்டங்களில் நிலையாமைக் கருத்துகள் தீவிரமாகப் பிரச்சாரம் செய்யப் பட்டுள்ளமையும் சில காலகட்டங்களில் முக்கியத்துவம் குறைந்து காணப்பட்ட

மையும் நிலையாமைக் கருத்துக்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வெவ்வேறு நோக்குகளில் வற்புறுத்தப்பட்டுள்ளமையும் சிந்திக்கத்தக்கவை. இவற்றுக்கு ஒவ்வொரு காலகட்டப் பகுதியிலும் நிலவிய காலச்சூழ்நிலை வேறுபாடுகளே அடிப்படையாக அமைவதனையும் அவதானிக்கலாம்.

இந்துமத வரலாற்றின் ஆரம்ப காலகட்டங்களில் நிலையாமைபற்றிய கருத்துக்களோ துறவு நெறியோ முனைப்புப் பெற்றிருக்கவில்லை. "வேத காலத்திலே துறவு நெறிபோற்றப்பட்டது" என ஒரு சந்தர்ப்பத்திற் சுவாமி விவேகானந்தர் கூறிய கருத்தினைப் பாரதியார் மறுத்துரைக்குமிடத்துப் பின்வருமாறு கூறியுள்ளமை சிந்திக்கத்தக்கது. "வேதகாலத்திலே இந்தத் துறவு வழி ஹிந்துக்களுக்குள்ளே கிடையாது. வேதகாலத்தில் சந்நியாசம் நமக்குள்ளே இருந்துதிருப்பதாகச் சுவாமி விவேகானந்தர் சொல்லியிருக்கிறார். வசிஷ்டர், வாமதேவர் முதலிய வேதரிஷிகள் அத்தனை பேரும் மணம்புரிந்துகொண்டு மனைவி மக்களுடனேயே இன்புற்று வாழ்ந்தனர். மகாபாரதத்திலும் மற்றப் பூர்வ புராணங்களிலும் வேதரிஷிகளைப் பற்றிய கதைகளும் சரித்திரங்களும் ஒரே சித்தாந்தமாக வேதரிஷிகளுக்குத் துறவறம் என்ற விஷயமே இன்னதென்று தெரியாது என்ற என்வார்த்தையை நிலை நிறுத்துகின்றன. மேலும் சுவாமி விவேகானந்தர் வேதத்தின் பிற்சேர்க்கைகளாகிய உபநிஷத்துக்களையே முக்கியமாகப் பயின்றவர். இந்த உபநிஷத்துக்கள் வேதாந்தம் என்ற பெயர் படைத்தன. அதாவது வேதத்தின் நிச்சயம், இவை வேதரிஷிகளால் சமைக்கப்பட்டனவல்ல ஸம்கிதைகள் என்று மந்திரங்களில் சொல்லப்படுவனவே உண்மையான வேதங்கள், அவையே ஹிந்து மதத்தின் வேர், . . ." (பாரதியார்; பகவத்கீதை; மொழிபெயர்ப்பு; முன்னுரை)

இந்து மதத்தின் மூலவேர்களாகக் கருதப்படும் வேதங்கள் தோன்றியதையடுத்துக் காலப்போக்கில் இந்து மதத்திற் பல குறைபாடுகளும் ஊழல்களும் மலியத்தொடங்கின. பிறப்பினடிப்படையிலான சாதி ஏற்றத்தாழ்வுகளும் சமய, சமூகத்துறைகளிற் பிராமணரின் மேலதிக்கமும் வளரத் தொடங்கின; பிராமணர்கள் தம்மைப் பூவுலகத் தேவர்கள் எனக் காட்டிக்கொள்ள முனைந்தனர். உயிர்ப் பலியிடுதலும், யாகங்கள், வேள்விகள் செய்தலும் பெருகளாயின. இத்தகைய நிலையில் இந்து மதத்தில் நிலவிய இத்தகைய ஊழல்களையும் குறைபாடுகளையும் சிலர் வன்மையாகக் கண்டிக்கத் தலைப்பட்டனர்; புதிய கருத்துக்களை முன்வைத்தனர். இத்தகையவர்களுள் கி. மு. ஆறாம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்களான மகாவீரர், கௌதம புத்தர் ஆகிய இருவரும் விதந்து கூறத்தக்கவர்கள். இவ்விருவரும் உலக நிலையாமை, துறவுநெறி, அகிம்சை, ஒழுக்கம் நிறைந்த தூய வாழ்வு ஆகியவற்றை முனைப்பாக வற்புறுத்தினர். இந்நிலையிலேயே சமண, பௌத்த மதங்கள் தோன்றின.

சமண, பௌத்த மதங்கள் வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் வேகமாகப் பரவத் தொடங்கியதையடுத்து இந்து மதத்திலும் நிலையாமைக் கருத்துகளும் துறவு நெறியும் முக்கியம் பெறலாயின.

கி. மு. மூன்றாம் நான்காம் நூற்றாண்டுகளிற் சமண பௌத்த மதங்கள் படிப்படியாகத் தென்னிந்தியாவிற் பரவத் தொடங்கின. கி. மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் நாட்டுக் குகைச் சாசனங்களும் சங்க இலக்கியங்களும் பிற வரலாற்றாதாரங்களும் இதனை நிரூபிக்கின்றன. எனினும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதிவரையிலான தமிழகத்தின் சூழ்நிலை சமண, பௌத்த மதங்கள் செல்வாக்குப் பெறுவதற்கு இடமளிக்கவில்லை. ஆயின் கி. பி. நான்காம் நூற்றாண்டளவில் ஏற்படத் தொடங்கிய அரசியல், சமூக, பொருளாதாரச் சூழ்நிலைகள் சமண பௌத்த மதங்கள் வேகமாகப் பரவுவதற்கும் சமயம் முதல் அரசியல்வரை பெருஞ் செல்வாக்குப் பெறுவதற்கும் வழிவகுத்தன. களப்பிரர் ஆட்சியினை அகற்றித் தமிழகத்தின் வடபகுதியிலும் தென்பகுதிலும் முறையே பல்லவ, பாண்டியப் பேரரசுகளை விஸ்தரித்த பல்லவப் பேரரசனும் பாண்டிய பேரரசனும் பக்தி இயக்கம் வலுப்பெறும் வரை சமணர்களாக விளங்கியமையும் மனங் கொளத்தக்கது

சங்ககால மக்கள் வாழ்க்கையிற் சமண, பௌத்த மதக்கருத்துக்கள் முக்கியத்துவம் பெறவில்லையெனினும் சங்க காலப் பிற்பகுதியளவில் அவை படிப்படியாகப் பரவலாயின என்பதும் நிலையாமைக் கருத்துக்கள் கணிசமான அளவிற்கு இடம்பெறத் தொடங்கின என்பதும் சங்ககால இலக்கியங்கள் வாயிலாகப் பெறப்படும் செய்திகளாகும்.

உலக நிலையாமையின் மூன்று முக்கிய அம்சங்களாகக் கொள்ளப்படுவன உடல் நிலையாமை, இளமை நிலையாமை, செல்வ நிலையாமை என்பனவாகும். புத்த மதத்தின் ஸ்தாபகரான கௌதம புத்தரும், 'தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி . . .' என்பது போல் மூப்பு, பிணி, சாக்காடு முதலியவற்றை முதன்முதலில் உணர்ந்தபோதே வாழ்க்கையில் வெறுப்புற்று உள்ளொளி பெற்றுத் துறவினை மேற்கொண்டார் எனக் கூறப்படுகிறது. புறநானூறு முதலிய சங்க இலக்கியங்களில் நிலையாமைக் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளனவெனினும் அவை கூறப்பட்டுள்ள முறைமைக்கும் நிலையாமையை வற்புறுத்தியதற்கான நோக்கத்திற்கும் சங்கமருவிய காலப்பகுதியிற் சமண, பௌத்த மதத்தினரால் இயற்றப்பட்ட இலக்கியங்களில் நிலையாமைக் கருத்துகள் கூறப்பட்டுள்ள முறைமைக்கும் வற்புறுத்தியதற்கான நோக்கத்திற்குமிடையே வேறுபாடுகள் பல காணப்படுகின்றன.

புறநானூறு, மதுரைக்காஞ்சி முதலிய சங்க இலக்கியங்களில் உடல், இளமை, செல்வம் முதலியவற்றின் நிலையாமைபற்றி விளக்கப்பட்டு அவை அழியுமுன்பே இவ்வுலக இன்பங்களை நன்றகத் துய்க்க வேண்டும் என வற்புறுத்தப்படுகின்றது. இங்கு நிலையாமை பற்றிய நோக்கு மக்களுக்கு வாழ்கையில் வெறுப்பையும் விரக்தியையும் ஏற்படுத்தித் துறவு நெறிக்கு இட்டுச் செல்வதல்ல; மாறாக மக்களுக்கு உலக வாழ்க்கையில் உள்ள பற்றினையும் பிடிப்பினையும் மேன் மேலும் அதிகரிக்கச் செய்வதற்கும் கொடைப்பண்பை மேலோங்கச் செய்வதற்குமே நிலையாமைக் கருத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்குப் புறநடையாகவும் ஒருசில செய்யுட்கள் காணப்படுகின்றன. மேலும் சங்க இலக்கியங்களில் நிலையாமைக் கருத்துக்கள் கூறப்படுமிடத்துச் சகிக்க முடியாத அளவிற்குப் பெண் வெறுப்பை ஏற்படுத்துவதையோ அருவருக்கத்தக்கவகையில் பெண்களது அங்கங்களையும் குண இயல்புகளையும் இழித்துக் கூறுவதையோ 'புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்குமூடி', 'புன்புலால்யாக்கை' என்றெல்லாம் உடலை இழிவாக வர்ணிப்பதையோ காணமுடியாது. சங்கச் சான்றோர்கள் எவரும் துறவு நெறியினை வானளாவ உயர்த்திப் புகழ்ந்ததுமில்லை.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரசீகக் கவிஞர் உமர்கய்யாம் தமது பாடல்களில் உலகின் பல்வேறு வகையான நிலையாமைகளை எடுத்துக்காட்டி அவற்றையிட்டு மக்கள் கவலைப்படாது வாழும் மட்டும் நன்றாக உண்டு, உடுத்தி, மது, மாந்தி, ஆடிப்பாடி, அரிவையரைக் காதலித்து வாழ்க்கையை நன்றாகச் சுவைக்குமாறு வற்புறுத்தியது போல் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னரே சங்கச் சான்றோர்களும் போதித்துள்ளமை சிந்திக்கத்தக்கது. "ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டாம் நாமும் அதுவழியே போமளவும் நமக்கென்னென்றிட்டுண்டிரும்," என ஔவைப்பாட்டி உபதேசிப்பதும் மனங்கொளத்தக்கது. ஆயின் சங்க காலத்தை அடுத்துவரும் காலப்பகுதிகளில் நிலைமைகள் மாறலாயின.

தமிழகத்திற் சமண, பௌத்த மதங்கள் தம் செல்வாக்கின் உச்ச நிலையிலிருந்து கி. பி. நான்காம் ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டுகளிற் சமண, பௌத்த மதத்தினரால் இயற்றப்பட்டனவாகக் கருதப்படும் நாலடியார், திருக்குறள், பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், ஏலாதி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களைக் கூர்ந்து நோக்குமிடத்து நிலையாமைக் கருத்துகள் பற்றிய பிரச்சாரம் உச்சநிலையை அமைந்திருந்தமை புலப்படும். மேற்குறிப்பிட்ட நூல்களில், 'அறப்போதனை' என்னும் [illegible]யில் நிலைய[illegible]கோட்பாடு வற்புறுத்தப்பட்டுள்ளமையும் கவனிக்கத் தக்கது.

இதே காலப்பகுதியிற் சைவ, வைணவ சமயத்தினரால் இயற்றப்பட்டனவாகக் கருதப்படும் ஆசாரக்கோவை, நான்மணிக்கடிகை, முதுமொழிக்காஞ்சி, திரிகடுகம், இன்னாநாற்பது, இனியவை நாற்பது முதலிய நூல்களிலும் காரைக் காலம்மையார் பாடல்கள், முதலாழ்வார் மூவர் பாடல்கள் முதலியவற்றிலும் நிலையாமைக் கருத்துக்கள் முக்கியம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சங்கமருவிய காலப்பகுதியில் எழுந்த இலக்கியங்களில் நிலையாமை வற்புறுத்தப்படுமிடத்து உடலின் இழிவு, அசுத்தம் முதலியனவும் தீவிர பெண் வெறுப்பும் சகிக்க முடியாத அளவிற்கு விபரிக்கப்படுவதனையும் இளமை, செல்வம், முதலியவற்றின் அநித்தியம் ஓங்கி ஒலிக்கப்படுவதனையும் அதன்மூலம் மக்களைத் துறவு நெறிக்கு இட்டுச்செல்ல முயல்வதனையும் காணலாம். பட்டினத்தார் பாடல்கள் தவிர வேறு எந்தத் தமிழ் இலக்கியத்திலும் காணப்படாத அளவிற்கு நாலடியார், மணிமேகலை முதலியவற்றிற் பெண் வெறுப்பு, அவர்களது உடலின் அங்கங்களையும் அருவருக்கத்தக்க வகையில் இழிவுபடுத்துதல் ஆகியன அளவு கடந்து விபரிக்கப்பட்டுள்ளன. பெண்களே இவ்வுலக வாழ்விற் பற்றுதல் ஏற்படுவதற்கும் ஆண்கள் துறவினை மேற்கொள்ளாதிருப்பதற்கும் மூலகர்த்தாக்கள் எனக் கதிருயதனாற்போலும் ஆண்களுக்கேற்படும் பெண்கவர்ச்சியை நீக்க முனைந்துள்ளனர்.

சங்கமருவிய கால இலக்கியங்களிற் காணப்படும் இன்னுமோர் முக்கிய அம்சம் நிலையாமைக் கோட்பாடும் ஊழ்வினைக் கோட்பாடும் துறவு நெறியும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்கமுடியாதவாறு பின்னிப்பிணைந்து காணப்படுதலே எனலாம். இவ்வுலக வாழ்க்கையை வாழ்வாங்கு அறநெறியில் வாழவேண்டும் என வற்புறுத்திய வள்ளுவர் இல்லறத்தினை ஏற்றிப்போற்றுகின்றாரா? துறவறத்தினை ஏற்றிப்போற்றுகின்றாரா? என்னும்மலைப்பு ஏற்படும் வகையில் இல்லறவியல் துறவறவியல் என்னும் இருபகுதிகளையும் அமைத்துள்ளார். அதே சமயம் 'ஊழிற் பெருவலி யாவுள?' என ஊழ்வினையின் வலிமையையும் வற்புறுத்தத் தவறவில்லை. திருக்குறளின் துறவறவியலில் அமைந்துள்ள விரதம், ஞானம் என்னும் இரு பிரிவுகளையும் கூர்ந்து நோக்குமிடத்து 'நிலையாமைக் கோட்பாட்டின் சாராம்சம்' புலப்படும்.

உலக போகங்களில் மூழ்கிக் காலத்தை வீணே கழிக்காது இறைவனிடம் பக்தி செலுத்தி இறைபதமடைய வேண்டும் என்பதே பக்தி இலக்கியங்களிற் காணப்படும் பொதுப்பண்பாகும். பக்தி இலக்கியகர்த்தாக்களுள் அப்பர் சுவாமிகள், திருமங்கையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் முதலியோரது பாடல்களில் வாழ்க்கைப்பற்றிய அவநம்பிக்கை, நிலையாமைக் கருத்துகள் முதலான முக்யத்துவம் பெற்றுளபோதும் சங்கமருவிய கால அறநூல்களிலிருந்து குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைப் பக்திப் பாடல்கள் கொண்டுள்ளதை அவதானிக்கலாம்.

'வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்' என்னும் பாணியில் உலக நிலையாமை, ஐம்புல ஆசையினால் ஏற்படும் தீமைகள், உலகபோகங்களை வெறுத்து இறைவன் மீது பக்தி செலுத்தி வீடுபேறடைதல் முதலியன பக்தி இலக்கியங்களில் வற்புறுத்தப் படுகின்றனவேயன்றிப் பெண்களை இழித்தொதுக்குவதோ, துறவுநெறியை வற்புறுத்துவதோ, ஊழ்வினையின் வலிமையை ஓங்கி ஒலிப்பதோ மிக அரிதாகவே காணப்படுகிறது. 'இறையருளால் ஊழையும் உட்பக்கம் காண முடியும்' கன்ம வினைகளை ஒழிக்க முடியும் என்னும் திடநம்பிக்கையே பக்திப் பாடல்களின் ஆதாரசுருதியாக அமைந்துஉள்ளது.

'புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்குமூடி மலஞ்சோறும் ஒன்பது வாசற் குடிலான புன்புலால் யாக்கையையும் புரந்தரன், மால், அயன் வாழ்வினையும் வெறுத்தொதுக்கி இறைவனிடம் தீராக் காதல் கொண்ட மணிவாசகர் கூட ஒரு புறம் 'ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தம் கூர்த்த நயனக் கொள்ளைக்கும், ஓயாது வஞ்சனையைச் செய்யும் ஐம்புலன்களுக்கும் அஞ்சிப்பதறுவதையும், மறுபுறம் ''பெண்பால் உகந்திலனேற்பேதாய்

இரு நிலத்தோர் விண்பால் யோகெய்தி விடுவர்காண் சாழலோ'' என இறைவன் மாதொருபாகனாக விளங்குவதற்குரிய காரணத்தைப் புலப்படுத்துவதையும் அவதானிக்கலாம். பக்திப் பாடல்களது 'பிழி' வாகவே சைவ சித்தாந்த நூல்கள் விளங்குகின்றன.

சங்கமருவிய காலத்தின் பின் தமிழ் இலக்கிய உலகில் நிலையாமைக் கருத்து களது வெளிப்பாட்டின் உச்ச நிலையினைப் பட்டினத்தார் பாடல்களிற் காணலாம் இவரைத் தொடர்ந்து அருணகிரிநாதர், சிவப்பிரகாச சுவாமிகள், தாயுமானவர் முத லியோரது பாடல்களிலும் வாழ்க்கை பற்றிய அவநம்பிக்கையும் யமபயமும் இழையோடுவதை அவதானிக்கலாம்.

பெண் உடலையும் பெண்ணின் இயல்புகளையும் இழிவுபடுத்திக் கூறுவதி லும் உடல், இளமை, செல்வம் ஆகியவற் றின் நிலையாமையை வற்புறுத்துவதிலும் சங்கமருவிய காலசமண, பௌத்த இலக் கிய கர்த்தாக்களையும் விஞ்சும் வகையிற் பட்டினத்தார் பாடல்கள் அமைந்துள்ளன. அதேசமயம் பெண்ணின் மீதான ஆசை யைத் தம்மால் முற்றாகத் துறக்க முடிய வில்லையே என்ற ஏக்கமும் தன் உள்ளம் தன்னையும் மீறி எப்பொழுதும் பெண்ணை யே - பிறந்த இடத்தையும் கறந்த இடத் தையும் - நாடுவதைத் தடுக்க முடியவில் லையே என்ற ஆதங்கமும் அவரது பாடல் களில் இழையோடுகின்றன. இவ்வுலகில் முழு முதற்கடவுள் ஒன்றினைத் தவிர ஏனைய யாவும் அழியும் இயல்பின எனவும், உலகியல் இன்பங்கள் யாவும் இன்பங்கள் போலக்காட்டித் துன்பங்களாகவே முடிவு றும் எனவும், உறவுகள், பந்தபாசங்கள் யா வும் பொய்மையே எனவும், நாம் இறக்கும் போது இருவினைப் புண்ணிய பாவம் தவிர ''காதற்ற ஊசியும்'' எம்மோடு வரமாட்டா எனவும் சோகரசம் சொட்டவும் விரக்தி யுணர்வு மேலிடவும் பாடியுள்ளார். எனி னும் பட்டினத்தார் பாடல்களில் நிலையா மைக் கருத்துகள் ''அறப்போதனை'' அடிப் படையில் அமையாமை குறிப்பிடத்தக்கது.

தமிழக வரலாற்றிலே நாட்டின் அரசியல், சமூகம், பொருளாதாரம் முத லிய துறைகள் சீர்கேடுற்று அந்நியர் படை யெடுப்பு முதலியவற்றால் தமிழ் மக்கள் ஆற்றொணாத் துயருற்றுச் சோதனை மேற் சோதனைகளுக்கும் வேதனை மேல் வேத னைகளுக்கும் ஆளாகிய முக்கிய காலகட் டங்கள் சங்கமருவிய காலம், விசய நகர - நாயக்கர் கால முற்பகுதி என்பனவாகும் இவ்விரு காலகட்டங்களிலும் எழுந்த இலக்கியங்களில் ஏனைய காலகட்டப் பகுதி யைச் சேர்ந்த இலக்கியங்களிலும் பார்க்க நிலையாமைக் கருத்துகள் முனைப்புப் பெற் றுள்ளமையும் நிலையாமை பற்றிய நோக் குப் பெருமளவு வேறுபட்டுக் காணப்படு வதும் சிந்திக்கத்தக்கவை. இதே போன்று சித்தர்கணத்தைச் சேர்ந்த பதினெண் சித்தர் பாடல்களை நோக்குமிடத்து உலக வாழ்க்கையை ஓம்புதல், உலக நிலையாமை யை உணர்ந்து வாழ்வைத் துறத்தல் முத லியன பற்றிய கருத்துகளிலும் நிலையாமை பற்றிய நோக்கிலும் அதிக முரண்பாடுகள் இடம்பெறுவதும் நிலையாமைக் கருத்துக் களை ஓங்கி ஒலித்த பட்டினத்தாரும் சித் தர் கணத்துள் ஒருவராக விளங்குவதும், நவயுகத்தை நாவாரக் கூவியழைத்த யுகப் பெருங் கவிஞன் பாரதி தன்னையும் சித் தர் கணத்துள் ஒருவனாகக் கொள்வதும் ஆழ்ந்த சிந்தனைக்குரியவை.

சோழப் பேரரசர் காலப் பேரிலக் கியங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் கூட நிலையாமைக் கருத்துகள் வெவ்வேறு வடிவிலும் வெவ்வேறு வகையிலும் வெளிப் படுவதனைச் சமணக்காப்பியமான சீவக சிந்தாமணி முதல் சைவப் பேரிலக்கிய மான பெரியபுராணம்வரை, நளவெண்பா முதல் பட்டினத்துப் பிள்ளையார் பாடல் கள் வரை காணமுடிகின்றது. இராமனின் புகழ் பாடும் தலையாய பேரிலக்கியமான கம்பராமாயணத்திலும் இவ்வுலகத் துன்பங் களுக்கெல்லாம் மூலகாரணம் 'வாமமேகலை மங்கையரால் வரும் காமமே' என்னும் சமண பௌத்த மதக்கருத்து காவியம் முழுவதும் அடிநாதமாக ஒலிப்பதைக் காணலாம்.

மேலைத்தேயத்தொடர்புகள் காரணமாகத் தமிழகத்தினதும் ஈழத்தினதும் சூழ்நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் நிலையாமைக் கருத்துக்கள் பற்றிய சிந்தனையிலும் பாதிப்பை ஏற்படுத்த தவறவில்லை. இவ்வகையிலே பாரதியாரது கவிதைகள், கட்டுரைகள், கதைகள் முதலியவை நுனித்து நோக்கத்தக்கவை.

இந்துக்கள் மத்தியில் நீண்ட காலமாக நிலவிவந்த மாயாவாதக்கொள்கை நிலையாமை பற்றிய கருத்துக்கள், வாழ்க்கைப்பற்றிய அவநம்பிக்கை முதலியவற்றைத் தமிழ் இலக்கிய உலகில் வேறுஎவருமே கண்டிக்காத அளவிற்குத் துணிகரமாகவும் வீறுடனும் கண்டித்தவர் பாரதியார். பெண்வெறுப்பை ஏற்படுத்துவதற்குப்பதில், பெண்விருப்பை ஏற்படுத்தவும் பெண்ணைத் தெய்வீக நிலைக்கு உயர்த்தவும் முயன்றார். நிலையாமைக் கருத்துக்களைப் போற்றும்வரை நாடும் சமூகமும் உருப்படவே மாட்டாது என்பது பாரதியாரது ஆணித்தரமான கருத்து. 'காலனுக்கு உரைத்தல்', 'மாயையைப் பழித்தல்', 'சங்கு', பகவத்கீதை மொழிபெயர்ப்பு; முகவுரை, 'பொய்யோமெய்யோ' என்ற பாடற்தொகுதிக்கு அவர் எழுதிய முன்னுரை முதலியவற்றிலே அவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் இவ்வகையிலே ஆழ்ந்து சிந்திக்கத்தக்கவை.

பாரதியாரைத் தொடர்ந்து வந்த பாரதிதாசன் முதல் இன்றைய புதுக்கவிதையாளர்கள்வரை, சிறுகதையாசிரியர்கள், நாவலாசிரியர்கள், நாடகாசிரியர்கள் ஆகியோரது ஆக்கங்களில் வாழ்க்கைப்பற்றிய அவநம்பிக்கைக்குப் பதில் வாழ்க்கையிற் பற்றுதலையும் பிடிப்பையும் ஏற்படுத்தும்போக்கே முனைப்பு பெற்றுவருதல் குறிப்பிடத்தக்கது.

வாழ்க்கையைப்பற்றிய திடநம்பிக்கையை எவ்வளவுதான் உரக்கக் கூவினாலும் பாரதியாரது உள்ளத்திலும் நிலையாமைபற்றிய உணர்வும் சிந்தனையும் அடிக்கடி தலைநீட்டுவதையும் 'பொறிகளின் மீது தனியரசாணை' செலுத்த அவர் முயல்வதையும் அவதானிக்கலாம். 'சுயசரிதை' என்னும் அவரது பாடற்பகுதி இவ்வகையில் முக்கியமாக் குறிப்பிடத்தக்கது. இதில் வியப்பதற்கு எதுவுமில்லை மனிதனது வாழ்வில் ஏற்றமும் இறக்கமும் இன்பமும் துன்பமும் சோதனைகளும் சாதனைகளும் இழப்புகளும் ஏற்படுவது இயல்பே. துன்பங்களும் வேதனைகளும் ஏமாற்றங்களும் அடுத்தடுத்து ஏற்பட்டு மனமுடையும் வேளைகளில் நிலையாமை பற்றிய கருத்துக்கள் அவனுக்கு ஆறுதலளிக்கின்றன எனலாம்.

சிருங்காரச் சுவைக்கு அதீத முக்கியத்துவம் வழங்கும் தமிழ்த் திரைப்படங்களையும் திரைப்படபாடல்களையும் கூட நிலையாமைக் கருத்துக்கள் விட்டுவைக்கவில்லை. நீர்க்குமிழி, வாழ்வே மாயம், பட்டினத்தார், தேவதாஸ், வசந்த மாளிகை முதலிய திரைப்படங்களையும் அவற்றில் இடம் பெற்ற பாடல்களையும் மக்கள் அமோக விருப்புடன் இரசிக்கத் தவறவில்லை.

இறை நம்பிக்கையுள்ளவர்கள்கூட ஒரோவிடத்தாவது உலக நிலையாமை பற்றிச் சிந்திக்கத் தவறுவதில்லை.

*WITH BEST COMPLIMENTS FROM*

**ARADHANA'S**

STAINLEES STEEL UTENSILS

No. 103, Colombo Street,

KANDY.

**T. P. 08 - 22781**

With Best Compliments

COMMERCIAL HARDWARE STORES

65 & 67, Colombo Street,

KANDY.

**Tel: 23988 - 23565**

With Best Compliments From

**JAYANTHY'S**

DEALERS IN TEXTILES

106, Colombo Street,

KANDY.

**T. P. 08 - 22464**

*With Best Compliments from*

**SRI LEKAH JEWELLERS**

MANUFACTURER OF FINE AND MOD JEWELLERY

55, Yatinuwara Vidiya,

KANDY.

**T. P. 32430**

*With Best Compliments*

**GREENLANDS HOTEL LTD.**

A First Class Residential Hotel for Vegetarians

3-A, Shrubbery Gardens,
Galle Road, Bambalapitiya,

COLOMBO - 4.

Phone: 585592, 581916

With Best Compliments From

**JEYALATHA JEWELLERS**

No. 79, Sea Street,

COLOMBO 11.

*Phone*: 433257

*With Best Compliments From*

**LUXMI TRADE CENTRE**

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

*No. 40-A, 4th Cross Sreet,*

*COLOMBO - 11*

**Phone :** 446423, 438465

With Best Compliments of

**RAMSETHU & Co.**

No. 65, 4th Cross Street,

COLOMBO 11.

# வாழ்வென்னும் பெருவெளி

— க. அருள்நந்தி —
3ம் வருடம், பொறியியல் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்.

நமது வாழ்க்கை மிகச்குறுகிய கால வட்டத்திற்குள் அடங்கிவிடுவதாகப் பலர் நினைக்கின்றனர். மிகச்சில ஆண்டுகள் வாழ்ந்து மடிவதுதான் இந்த மானிட வாழ்க்கையின் இயல்பு என்பது அவர்கள் கருத்து. உண்மையில் நாம் குறுகிய கால வாழ்க்கையைக் கொண்டவர்களா என சிந்தித்துப் பார்த்தல் அவசியமாகின்றது.

''புல்லாகிப் பூடாய், புழுவாய் மரமாகி வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்...'' என திருவாசகம் கூறுகின்ற கருத்தின் தாற்பரியம் என்ன? மானிடவாழ்க்கை ஒரு பிறவியுடன் முடிவதாக நமது ஞானிகள் கருதவில்லை. இந்த வாழ்க்கைக்கு முடிவேது? தொடர்ச்சியான பிறப்பிலே அழுந்துவதுதான் ஆத்மாவின் இலக்கா?. ''அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது '' எனக் கூறும் கருத்திற்கேற்ப மானிடப்பிறவி விஷேடமானதுதான். ஏனெனில் பிற பிறவிகளுக்குக்கிடைக்காத ஒரு சந்தர்ப்பத்தை மானிடப்பிறவி பெறுகின்றது. தன்னை அறிந்து கொள்ளவும் அதற்கேற்பத் தன்னை வழிநடத்திக்கொள்ளவும், தனது முடிவற்ற வாழ்வை மாற்றிக்கொள்ளவும், இப்பிறவி துணை செய்கின்றது.

இறைவனாலே கிடைத்த இந்த மானிடப்பிறவியிலே தொடர்ச்சியான வாழ்வுத் தொடரை முறித்துக்கொள்வதற்குத் தகுந்த வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இறைவனது உண்மைத்தன்மையை உணர்த்தலும், அவற்றை மற்றவர்களுக் எடுத்து இயம்புதலும், அவனையே சிந்தித்திருத்தலும் மக்கள் மீது அன்பு செலுத்தலும், அந்த அன்புதான் இறைவன் வடிவமானது என உணர்தலும் இப்பிறவியிலே அவசியமாகின்றது. மகா ஞானியான திருமூலர்,

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்,
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.''

எனக் கூறுவது, இறைவன் அன்பு மயமானவன், உயிர்கள் மீது நாம் செலுத்தும் அன்பு இறைவன் மீது செலுத்தும் அன்புக்குச்சமன் எனும் கருத்தை வலியுறுத்துவதாய் அமைகின்றது.

சைவம் அன்பை ஆதாரமாகக்கொண்ட சமயம். எந்த உயிர்களுக்கும் ஊறு விளைவிப்பது சைவத்தையே தூஷிப்பதற்கு ஒக்கும். பிறர் உள்ளத்தைத் துன்புறுத்துவதும், பிறர் உடைமையைப் போகிப்பதும் ஒரு சைவமகன் செய்யும் செயல் அல்ல. உலகிலுள்ள சகலதும் இறைவன் வடிவமாகும் என்பது சைவம்.

அருச்சுனனுக்குப் போதிக்கவந்த கண்ணன் தன்னை அடையாளம் காட்டியபோது, சகலதும் தனக்குள்ளே அடங்கி இருப்பதாகக் காட்டுகிறான். அண்டம், போகங்கள் யாவும் அவனாக விளங்குகின்றான் எனவே இறைவன் வடிவமான இந்த சகல உயிர்கள் மீதும் கருணை காட்டுவது முடிவில்லாப் பெருவாழ்வை முடித்து இறைவனுடன் நிரந்தரமாகச் சேர்வதற்கு வழிவகுக்கும்.

உடம்பினை முன்னம் இழுக் கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறு பொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே.

என்பது திருமூலரின் திருமந்திரம்.

இறைவனை அறிவதற்கு உன்னையே நீ உற்றுநோக்கல் வேண்டும், என்பது திருமந்திரம். இந்த உடம்பினுள்ளே இறைவன் குடிகொண்டிருக்கும் பான்மையை அப்போது தான் அறிந்துகொள்ள முடியும். இந்த உடம்பினைக் கவனமாகப் பேணுவதன் மூலமே இறைவனைக் காணமுடியும். இறைவனிடம் எம்மை வழிப்படுத்தும் முக்கிய கருவி இந்த உடம்பாகும். உடம்பினைக் கொண்டுதான் இறைவனுக்குத் தொண்டு செய்வது, இறைவனைச் சிந்திப்பது, இந்த உலக மக்களுக்கு நன்மை செய்வது என்பவற்றை ஆற்ற முடியும்.

முடிவற்ற இந்த பெரு வாழ்வுக்கு முடிவு ஏற்படுத்துவதற்கு இந்த உடம்பே கருவியாக முடிகின்றது. இந்த உடம்பு பெரும் ஆலயம் என்பது பெரியோர் கருத்து. இந்த ஆலயத்தைத் தூய்மையாக வைத்திருப்பது மிகவும் அவசியமாகின்றது. தூய்மையற்ற ஆலயத்தில் இறைவன் குடிகொள்வதில்லை. எனவே இந்த ஆத்மா முத்திபெற வேண்டுமாயின், ஆலயமாகிய இந்த உடம்பின் மூலம்தான் முயல வேண்டும். உள்ளம், உணர்வு, விழிப்பு, ஞானம், தவம் ஆகிய சகலதும் இந்த உடம்பினாலேதான் வளர்கின்றன. உடம்பில்லாவிட்டால் ஞானம் ஏது, தவம் ஏது, உணர்வு ஏது.

''உடம்பார் அழியர் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவுமாட்டார்.
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே''

எனவும் திருமந்திரம் கூறுகின்றது.

இறைவனை அறிவதற்குப் பலர் முயன்றும் வெற்றி பெறவில்லை. காரணம் மனிதனிடம் குடிகொண்டிருக்கின்ற சந்தேகம் என்னும் நோயாகும். இந்தச் சந்தேக நோயைப் போக்கினாலன்றி அவனைக்காண முடியாது. அவன்து அருள் கிடைத்தாலன்றி உள்ளம் நிம்மதியைக் காணாது வாழ்வென்னும் பெரு வெளியை நிறுத்திக்கொள்ளவும் முடியாது.

''உணர்வொன்றிலா மூடன் உண்மை யோராதோன்''
எனக் கூறுகின்ற திருமந்திரம்,
சீவனெனச் சிவனென வேறில்லை
சீவனார் சிவனாரை யறிகிலர்
சீவனார் சிவனாரை யறிந்தபின்
சீவனார் சிவனாயிட் டிருப்பாரே
எனவும் கூறுகின்றது.

ஆத்மா இறைவனுடன் ஒன்றிக்கலந்திருக்கின்றது. இந்த ஆத்மா இறைவனைப் பற்றி அறியாத நிலையே அஞ்ஞான நினையாகும். ஆத்மா இறைவனை அறியுமாயின் அந்த ஆத்மா இறைவனாகவே இருப்பதை அறிவார். இந்த நிலைக்கு உணர்வு ஒன்றிட இறவனைத் துதிக்க வேண்டும். அதற்காகவேதான் இந்த உடல் ஆத்மாவுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. நல்ல தியானம் மன மகிழ்ச்சியைத் தருகின்றது. உள்ளக் கறைகளைக் களைந்து தெளிந்த மனிதராக்கி இறைவனோடு ஒன்றினையச் செய்கின்றது, தொடர்ச்சியாக ஆத்மா படும் துன்ப நிலையை வேரோடு களைந்து ஆனந்த நிலையைத் தருகின்றது. இதுவே ஞானிகளது முடிவாகும்.

"இந்து தருமம்" என்னும் இந்து சமய சஞ்சிகையின் மேல் வளர்ச்சிக்கு
எல்லா வல்ல குறிஞ்சிக் குமரன் அருளை பிரார்த்திக்கின்றோம்

# NAGALINGAMS JEWELLERS

*Designers and Manufacturers of 22 Carat*
*Sovereign Gold Quality Jewellry*

**101, COLOMBO STREET,**

**KANDY.**

☎ 08-32545

With Best Compliments
of

**SARASWATHI STORES**

**No. 90, COLOMBO Street,**

**KANDY.**

★ நம்பிக்கை

★ நாணயம்

★ உத்தரவாதம்

**கணேசா ஜுவலர்ஸ்**

**52, செட்டியார் தெரு,**
**கொழும்பு 11.**

தொலைபே *32164*

*With Best Compliments*

**SRI MURUGAN'S**

**94,** Colombo Street,

KANDY.

*With Best Compliments From*

**RAJAH & SONS**

109, COLOMBO STREET,

**KANDY.**

# புருடார்த்தங்கள்

செல்வி : பா. சோதிமலர்
துணை விரிவுரையாளர்/தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

இந்துக்களுடைய வாழ்க்கை ஒரு இலட்சியத்தை நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய வாழ்க்கையின் குறிக்கோளாக புருடார்த்தங்கள் விளங்குகின்றன. புருடார்த்தங்களை தமிழில் உறுதிப் பொருட்கள் என்றழைப்பர்.

சேற்று நிலத்தில் நடந்து செல்லும் ஒருவனுக்கு ஊன்றுகோள் துணை செய்வது போல உலகமாகிய சேற்று நிலத்தில் வாழ்பவனுக்கு உறுதிப் பொருட்கள் துணை செய்கின்றன இப்புருடார்த்தங்களை வாழ்க்கையின் இலட்சியமென்றும், இலக்குகளென்றும் கூறுவதுண்டு

புருடார்த்தங்களானவை நான்காக வகுக்கப்பட்டுள்ளன. அவையாவன, வடமொழியில் தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் எனவும், தமிழில் அறம், பொருள், இன்பம் வீடு எனவும் அழைக்கப்படுகின்றன. பெரும்பாலான இந்துசமய நூல்கள் இவ்வுருதிப் பொருட்களைப்பற்றி பலவாராகவும் குறிப்பிடுகின்றன. ஒளவையார் புருடார்த்தங்களைப் பற்றி பின்வருமாறு விளக்குகின்றார்.

"ஈதல் அறம் தீவினை விட்டு ஈட்டல்
பொருள் இவ்விரண்டும்
காதலர் இருவர் கருத்தொருமித்து
ஆதரவு பட்டதே இன்பம்
பலனை நினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்பவீடு"

புருடார்த்தம் பற்றி குறிப்பிடுகின்ற நூலாக மனுதர்மசாஸ்திரத்தையும், திருக்குறல் போன்ற ஏனைய இந்துசமய நூல்களையும் நாம் குறிப்பிடலாம். இந்நூல்கள் யாவும் புருடார்த்தங்களுக்கு பின்வருமாறு விளக்கமளிக்கின்றன. இதில் தர்மம் என்பது மனு முதலியவற்றில் விதித்தவற்றை செய்வதும், விலக்கியதை கழித்தலுமாகும். பொருள் என்பது செவ்விய அல்லது நேரிய வழியில் பொருள் ஈட்டுவதைக் குறிக்கும். இன்பம் என்பதில் பொதுவாக உலக இன்பம் குறிப்பிடப்பட்டாலும் கூட, இல்லற இன்பமே சிறப்பாக எடுத்துக் கூறப்படுவதைக் காணலாம். முதல் மூன்று புருடார்த்தங்களையும் ஒழுங்காக அனுபவிக்கும்போது நான்காவது வீடுபேறு தானாக கிட்டும் என்று இந்து அறிஞர்கள் குறிப்பிடுவர்.

இந்துமதத்தில் நான்கு வருணத்தவருக்குமுரிய அறங்கள் போதிக்கப்படுகின்றன. சடங்குகளை செய்தல், ஐம்பெரும் வேள்விகளை செய்தல் ஆகியன பிராமணருக்குரிய அறமாக கூறப்படுகின்றது. பொய், வஞ்சகமின்றி கடவுளை பக்தியோடு வணங்குதல், ஐம்பெறும் வேள்விகளை செய்வித்தல் அனாதைகள், விதவைகள், ஏவலாளர்கள். தண்டனை அனுபவிப்பவர்கள் ஆகிய பொதுமக்களைப் பாதுகாத்தல் போன்றன சத்திரியருக்குரிய கடமைகளாக கருதப்படுகின்றன. கொடைத் தன்மைகளைப் பாதுகாத்தல் வைசிகனுடைய கடமையாகக் கருதப்படுகின்றன. ஏனைய வருணத்தாருக்கு தொண்டு செய்தலே சூத்திரரின் அறமாகக் கருதப்படுகின்றது.

இந்துமத நூல்கள் அரசருக்குரிய அறங்கள், அமைச்சருக்குரிய அறங்கள், குடிமக்களுக்குரிய அறங்கள் என அறத்தை பலவாறாக வகுத்துள்ளன. திருவள்ளுவரும் அறத்தோடு கூடிய வாழ்வே இன்பம் தரவல்லது என குறிப்பிட்டுள்ளார். இவ்வாழ்க்கையிலே கணவன், மனைவி, மக்கள் எவ்வாறு அறத்தை மேற்கொள்ளவேண்டும் என்பதைத் தனித்தனியாகச் குறிப்பிட்டுள்ளார். மனைவியானவள் மனைமாட்சியுள்ளவளாக இருக்க வேண்டும். அவள் கணவனையே தெய்வமாக கொள்ளவேண்டும்.

'மனைமாட்சி யில்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை எனைமாட்சித் (து)
ஆயினும் இல் ''

'' தெய்வந் தொழா அள் கொழுநற் தொழுதெழுவாள் பெய்யெனப்
பெய்யும் மழை''

மேற்குறிப்பிட்ட அடிகள் மனைவிக்குரிய நற்பண்புகள் சிலவற்றை விளக்குவனவாக அமைந்துள்ளன.

கணவனானவன் வையத்துள் வாழ்வாங்கு வாழுவதற்குரிய வழிவகைகளை அறிந்து அதன்படி இல்வாழ்க்கையை நடாத்துவதோடு, தன் மக்களை சான்றோராக்குவதும் அவனது கடமையாகும்.

மகனானவன் ''இவன் தந்தை இவனை பெற என்ன தவம் செய்தானோ'' என்று மற்றவர்கள் கூறுமளவுக்கு தர்மங்களுக்கு இணங்க வாழவேண்டும். மேற்கூறியவை திருவள்ளுவரினால் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

அன்புடைமை, வாய்மை, அடக்கம் அருளுடமை போன்ற பண்புகள் உலகில் வாழும் எல்லா மக்களுக்கும் இருக்கவேண்டிய அறப்பண்புகளாகும். அறவழியில் நின்று தன் மனைவியையும் மக்களையும் பேணி விருந்தினரை உபசரித்து வாழுதல் இல்லறத்தானுக்குரிய நற்கடனாகும். அவ்வாறு வாழும் காலத்தே அவன் நல்லொழுக்கம் வாய்ந்தவனாகவும், பிறர்மனை விரும்பாதவனாகவும் இருத்தல் வேண்டும். களவு கோபம் போன்ற தீயசக்திகளை அகற்றி இன்சொல்லும் ஈகையும் உடையவனாக வாழவேண்டும். காப்பியத்தலைவர்கள் இப்பண்புகளைக்கொண்டு வாழ்ந்துள்ளார்கள். இதற்கு கம்பராமாயணத்தில் இடம்பெறும் இராமன், மனுநீதிகண்டசோழன் மகாபாரதத்தில் பாண்டவர்கள் என்போர் சிறந்த உதாரண புருஷர்களாக அமைகின்றனர்.

இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் இன்றியமையாதது பொருளாகும். பொருளானது இன்றும் அன்றும் எல்லா துறைகளிலும் முக்கியம் பெற்று வந்துள்ளமையை நாம் காண்கிறோம். வள்ளுவர் கூட

'' பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை '' என குறிப்பிடுகின்றார்.

திருவள்ளுவர் தன்நூலில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்றாக அதிகாரங்களை வகுத்து, அதில் பொருட்பாலுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார், இதிலிருந்து பொருளின் சிறப்பை நாம் அறிந்துகொள்ளலாம். பெற்ற தாய்க்கு உணவு கொடுக்க சான்றோர் பழிக்கும் செயல்களை செய்யக்கூடாது. பாரை வருத்தி பொருளைத் தேடினால் அது நாமே வருந்த வேண்டிய நிலையை உருவாக்கும். எனவே நல்ல வழியில் பொருளைத் தேடவேண்டும். தேடும் பொருள் மற்றவர்களுக்கு தீமையில்லாத வழியில் தேடப்படுதல் வேண்டும். அவ்வாறு தேடியபொருளை கனிமரம் பழுத்து எல்லோருக்கும் பயன்படுவதுபோல நாமும் எல்லோருக்கும் உதவுதல் வேண்டும். அப்படி செய்யாது தானும் அனுபவியாது பிறரையும் அனுபவிக்க விடாமல் இருப்பது நச்சுமரம் பழுத்தது போல அமையும்.

காமம் என்ற வடமொழிச்சொல் தமிழில் இன்பம் எனப் பொருள்படும். இது "காமம்" என்ற அடியாகப் பிறந்தது. சங்ககால காதல் ஒழுக்கம் (காதல், கற்பு) இன்பத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. பல்லவகால நாயன்மார், ஆழ்வார்கள் ஆகியோரது இன்பம் கடவுள் வழிபாட்டுடன் தொடர்புபட்டதாக காணப்பட்டது. இதன் நாயகன். நாயகி பாவத்திலமைந்த வழிபாட்டு முறையென குறிப்பிடலாம்.

பிரமச்சரிய வாழ்வை முடித்தவன் ஒத்தகுலம். குணம் உள்ள பெண்ணை மணம் முடித்து வாழும் வாழ்க்கையே இல்வாழ்க்கை எனப்படும். பண்டைக்காலம் தொட்டு இன்றுவரை கணவன் மனைவி அன்பே விவாகமாகக் கருதப்பட்டு வருகின்றது. கணவனானவன் ஏகபத்தினி விரதனாக இருந்து வாழும் இல்வாழ்க்கையே சிறந்ததென அற நூல்கள் கூறுகின்றன. வள்ளுவன் "ஒருவனும் ஒருத்தியும் கூடும்போது தோன்றுவது தான் இன்பம்" என கூறி இன்பத்திற்கு மனத்தூய்மை அவசியம் என்கிறார். கணவனும் மனைவியும் ஓர் உடலும் ஈருயிரும் போல வாழவேண்டுமென இந்து தர்மம் வலியுறுத்துகின்றது. இல்வாழ்வில் அன்பும் அறிவும் உடையவராக இருந்தால்தான் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, அறிவுடைய மக்களைப் பெற்று வாழமுடியும். தனிவாழ்க்கை உலக வளர்ச்சியை தடைசெய்யும். ஒருவனும் ஒருத்தியும் சேர்ந்து வாழும் வாழ்க்கையானது சிற்றின்பத்தின் பாற்படும்.

வீடு என்பது மோட்சம், விடுதலை முத்தி ஆன்மீக விடுதலை என பல கருத்துக்களை தரும் இந்து சமயத்தில் இறைவனுடன் இரண்டறக் கலத்தலே ஒரு மனிதனின் இறுதிக் குறிக்கோளாகும். சிற்றின்பத்திலிருந்து, உலக பந்தத்திலிருந்து சம்சார பந்தங்களிலிருந்து விடுதலை பெறுவதே முத்தி அல்லது வீடுபேறு எனப்படும். இதனையே புத்தமதம் நிர்வாண நிலையென்றும், உபநிடதம் ஜீவாத்மா, பரமாத்மாவை அடையும் நிலை என்றும், சித்தாந்தம் அத்துவித நிலை என்றும் கூறுகின்றது.

அறம் உலக இன்பத்துக்கு மட்டுமல்ல மோட்சத்துக்கும் வழிவகுக்கும். அறவழியில் ஈட்டிய பொருளை நல்ல வழியில் செலவு செய்தால் அதுவும் சிற்றின்பத்திலிருந்து பேரின்பத்துக்கு வழிவகுக்கும். எனவே மேற்கூறிய நிலைபடிகள் மூலம் மூன்றையும் அனுபவிக்கும்போது முத்தி தானாக கிடைக்கும் என வள்ளுவர் கூறுகின்றார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

இந்துமத நூல்கள் பற்றுக்களை அழிப்பதெ முத்திக்கு வழி என கூறுகின்றன.

"பற்றுக பற்றற்றான் பற்றினை.........."

இதுதவிர, சரியை. கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பாதங்களும், மூவகை யோகங்களும் பற்றற்ற நிலைக்கு இட்டுச்செல்கின்றன.

வீடுபேற்றை அடைவதே இந்துமதத்தின் குறிக்கோளாக இருந்தபோதிலும், அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றுமே முக்கியமான இடத்தில் வைத்து நோக்கப்படுகின்றது. வீடுபேற்றை அடைவதற்கு பற்றற்றவனாக திகழவேண்டும். ஆனால் எல்லோரும் சந்நியாசியாக முடியாது. நான்கு ஆச்சிரமத்தில் கடைசி ஆச்சிரமம்தான் சந்நியாசமாகும். உயிர்கள் வீடுபேற்றை அடையும்வரையும் மாயையிலான இவ்வுலகில் சீவிக்க வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் அன்புடையவனாகவும் அறத்தையுடையவனாகவும் வாழலாம்.

இல்லறத்தைப்போலவே பொருளும் மனித வாழ்வுக்கு இன்றியமையாதது. பொருள் இருந்தால்தான் இவ்வுலக வாழ்வில் தருமம் முதலியவற்றை செய்யமுடியும் எனவே பொருளை நல்ல வழியில் ஈட்டி நல்ல வழியில் செலவழித்தல் மனிதனின் கடனாகும்.

மனித வாழ்வில் இன்பம் அவசியம். இன்பம் இல்லாவிட்டால் வம்ஷ விருத்தி, விருந்தினரை உபசரித்தல், தம்மையும் பிறரையும் பேணல் என்பன அற்றுவிடும். எனவே இல்வாழ்வில் இன்பம் அவசியமானது. வீடுபேறு என்பது இறுதியான பேரின்பத்தை குறித்து நின்றாலும், புருடார்த்தம் நான்கும் ஒன்றுடனொன்று தொடர்புடையதாகவும் இன்றியமையாததாகவும் உள்ளன.

*WITH BEST COMPLIMENTS FROM*

**S. S. WILSON & Co. (Pvt) Ltd.**

176, 4th Cross Street,

COLOMBO - 11.

**Phone : 27662**

*With Best Compliments from*

**NOORJAHAN RICE AGENCY**

General Merchants & Commission Agents

Rice & Sri Lanka Produce Etc.

20, 22, Fourth Cross Street,

COLOMBO - 11

T. P. 422208

With Best Compliments

**Arasan COMPANY**

GENERAL RICE MERCHANTS

72, - A 4th Cross Street,

COLOMBO - 11

T. P. 29407

With Best Compliments From

**CHANDRA STORES**

Importers Exporters, General Merchants Commission Agents & Wholesale Dealers

207, COLOMBO STREET,

KANDY.

T. P. 08 - 24136

# தேடலும் பெறலும்

சி. கருணானந்தராஜா
விவசாய பட்டமேற்படிப்பு நிறுவகம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

**1976**

சூனியத்தைத்தேடுகிறேன் சூனியத்தைத்தேடுகிறேன்
சக்தியற்ற சடமற்ற வெட்டவெளிச் சூனியத்தை.
எங்கே நான் காணுவது? எப்படியங்கேங்குவது?

உருண்டையுலகம், சூரியக்குடும்பம்.
எல்லாம் கடந்து பால் வெளி மண்டலம்.
அதற்கும் மேலாய் அடியை வைத்து,
அப்பா... என்று தலை நிமிர்கையிலே
தொலை தூரத்திற் பிரபஞ்சத்தீவுகள்
கண்ணைச் சிமிட்டி என்னைக்கொல்லும்
கொடுமையை விட்டுச் சூனியம் காண
எங்கு நான் போவேன்? எப்படிப் போவேன்?

கருமையான காட்சி கூட என் கண்ணிற்குத் தெரிதல் வேண்டா.

வெட்டவெளிதான் எனக்கு வேண்டும். வெறுமை, வெறுமை,
அதுதான் வேண்டும்.

ஐயோ! என்னை அழைத்துச் செல்லுங்கள். ஆருமிருந்தால்
ஓடி வாருங்கள்.

சடம் பிரிந்து சக்தியாகிச் சக்தியொடுங்கிச் சடமாய் மாறும்

சமநிலைக் குழம்பல் எனக்கு வேண்டாம். வெறுமை, வெறுமை
அதுதான் வேண்டும்.

சடமாய் நானே இருந்திட்டாலும் சக்தியாக்கிக்கொண்டு செல்க.

ஒன்றிலும் சாரா வெறுமையிலெந்தன் உள்ளம் குதித்து மகிழச்செய்க.

# 1984

பாலை வனத்தினிலே வெறும் பாழ்வெளி மீதினிலே
காலைப் பரிதியின் தண்ணென்ற வெண்ணொளி
காட்டிடும் ஜாலம் அகத்தில் நிறைவுற
பாழொன்றை நானறிந்தேன் அகப்
பாழொன்றை நானறிந்தேன்.

மேலைப் புருவ நெரிப்புடனே ஒரு
வெற்றிடம் நானறிந்தேன் - அங்கு
காலத்தை வென்ற மகிழ்வின் முயங்கலில்
கண்களை நான் மறந்தேன். பாலைவனத்தினிலே.. ...!

சூனியம் கண்டுவிட்டேன் அகச் சூனியம் கண்டுவிட்டேன்
தோழன் அருகழைத்தே அகச் சூனியம் காட்டி விட்டான்.
போகமுடியவில்லை என்னைப் போகம் தடுக்கிறது.
போகமுடியாமல் அங்கு போகமுடியாது.
மோகத்தில் ஆழ்ந்து விட்டால் அந்த
மோனத்தில் மூழ்கி விட்டால்
சாகும் கொடுமையில்லை - வெற்றுச்
சஞ்சலம் ஏதுமில்லை. பாலைவனத்திலே......

---

எல்லா மனிதர்களிடத்திலும், ஈஸ்வரன் இருக்கிறான்
ஆனால் ஈஸ்வரனிடத்தில் எல்லா மனிதர்களும் இல்லை
இதுதான் அவர்கள் துன்பப்படுவதற்கு காரணம்.

— ஸ்ரீ இராமகிருஷ்ணர்

---

தாழ்ந்த குரலில் அன்புடன் இனிமையாகப் பேசினால்
எல்லாப் பிராணிகளும் மகிழ்ச்சியடைகின்றன.
ஆகவே இனிமையாகப் பேசுதலென்ற
தானத்தைச் செய்யவேண்டும்.
இனிய பேச்சுக்கென்ன
ஏழ்மை வந்து விட்டது ?

உபநிஷதம்

---

# இலங்கையின் இந்துப்பண்பாடும் சேர் பொன்னம்பலம் இராமநாதனும்

— கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் —
தலைவர்/இந்து நாகரிகத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**இலங்கையின்** இந்துப் பண்பாடு நீண்டகால வரலாறு கொண்டதாகும். கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலே பௌத்தம் பரவுமுன்பே இந்துமதம் இலங்கையில் ஏற்பட்டுவிட்டது என்பதற்கு இங்கு கிடைத்துள்ள காலத்தால் முந்திய பிராமிச்சாசனங்களும் வேறு சில தொல்லியல் சின்னங்களும், இலக்கிய மூலங்களும் சான்று பகருகின்றன. கி. மு மூன்றாம் நூற்றாண்டிலே பௌத்தம் பரவி, அரச மதமாக மாறிய பின்னரும் இந்துமதம் தொடர்ந்து நிலவி வந்துள்ளது. பௌத்தம், இந்து மதம் ஆகியன அக்கம் பக்கமாகவே, பொதுவாக நிலவி வந்துள்ளன; பரஸ்பர தொடர்பும் கொண்டிருந்தன. இந்துமதத்திற்கு இந்துக்கள் மட்டுமன்றிப் பௌத்தரும் அரும் தொண்டுகள் ஆற்றியுள்ளனர். இதேபோல இந்துக்களும் பௌத்தத்திற்குத் தொண்டுகள் புரிந்துள்ளனர். இதற்குப் பாளி மொழியிலுள்ள தேரவாத பௌத்தம் சார்பான மஹாவம்சம் போன்ற நூல்களும் சான்று பகருவன. எல்லாளனுடைய வரலாறு இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அதேவேளையில் தீவிர பௌத்தனான மகாசேனன் போன்ற சிலர் திருகோணமலையிலிருந்த புராதன கோணேஸ்வரம் உட்படச் சில இந்து வழிபாட்டுத் தலங்களை அழித்துவந்தனர். இத்தகைய போக்குப் பெரும்பாலும் புறநடையாகவே நிலவிற்று எனலாம். மானவர்மன், முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு ஆறாம் பராக்கிரமபாகு, முதலாம் ராஜசிங்கன் போன்ற சிங்கள மன்னர்களின் இந்துசமயத் தொண்டுகள் ஈண்டுக்குறிப் பிடற்பாலன. இக்காலத்திற் போன்றே இலங்கையின் பல்வேறிடங்களிலும் இந்து சமயம் பல்வேறு அளவுகளில் நிலவி வந்துள்ளது. புராதன சிவத்தலங்களான திருக்கோணஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், (திருத்தம்பலேஸ்வரம்), முன்னேஸ்வரம், சந்திரசேகரேஸ்வரம் போன்றவை இலங்கையின் பல்வேறிடங்களிலும், பிரபல முருகவழிபாட்டுத்தலமான கதிர்காமமும், தெவிநுவரயில் உள்ள விஷ்ணு ஆலயமும் பிறவும் இலங்கையின் தென்கோடியிலும் அமைந்துள்ளமை குறிப்பிடற்பாலது. சமஸ்கிருதத்திலுள்ள ஸ்காந்தபுராணத்தின் ஒரு பகுதியெனக் கருதப்படும் தக்ஷிண கைலாச மாஹாத்மியம் இலங்கையின் பல்வேறிடங்களிலுமிருந்த சைவ, வைஷ்ணவக் கோவில்கள் பற்றி விவரிக்கின்றது. இலங்கையைப் புத்த தருமத்திற்கான தீவு (தம்மதீப) என மஹாவம்சம் போன்ற நூல்கள் கூறுவது போலவே, மேற்குறிப்பிட்ட நூலும் இலங்கையை இந்துசமயத்தின் இருப்பிடம் எனவும், வேறு எந்த நாட்டிலுள்ள திருத்தலங்களிலும் பார்க்க இங்குள்ள திருத்தலங்கள் மிகச்சிறந்தவை எனவும் கூறுகின்றது.

வட இலங்கையிலே யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்டு கி. பி. 13ம் நூற்றாண்டு தொடக்கம் 1619லே போர்த்துக்கீசர் கைப்பற்றும்வரை நிலவிவந்த தமிழ் அரசிலே ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்கள் இந்து சமயம், தமிழ், சமஸ்கிருதம், கலைகள், மருத்துவம், சோதிடம் முதலியவற்றை நன்கு போற்றிவந்தனர். இந்து சமயத்தைக்குறிப்பாகச் சைவத்தையும், தாய்மொழியாகிய தமிழையும், இந்து சமய புனித பண்பாட்டு மொழியான சமஸ்கிருதத்தையும் இவர்கள் நன்கு போற்றினர். இம்மூன்றும் ஒன்றிணைந்த மரபாகவே இங்கு நிலவிய சைவப்பண்பாட்டு

மரபு விளங்கிற்று. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களிலே அரச ஆதரவு இழந்து நலிவுற்றிருந்த இந்து சமயம், பிரித்தானியர் ஆட்சியின் முற்பகுதியில் கி. பி, 19ம் நூற்றாண்டிலே ஆறுமுகநாவலர் தலைமையிலே நன்கு புத்துயிர் பெற்றது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் குறிப்பாகத் தமிழகத்திற்குமிடையிலே ஆதிகாலம் தொட்டு இந்து, பௌத்தத் தொடர்புகள் நன்கு நிலவி வந்துள்ளன. அங்கிருந்து அறிஞர்களும், மதகுருமாரும், பிறரும் இங்குவந்து தங்கினர் அல்லது திரும்பிச் சென்றனர். இதுபோலவே, இங்கு இருந்தும் இத்தகையோர் அங்கு சென்று தங்கினர் அல்லது திரும்பி வந்தனர். வட இலங்கையிலேயே கி. பி. 17ம் நூற்றாண்டிலே போர்த்துக்கீசரின் சமயக் கொள்கையை விரும்பாது, குறிப்பாக அவர்களின் பசுக் கொலையினை வெறுத்து இந்தியா சென்று சிறப்பாக வடமொழி, சைவசித்தாந்தம், வேதாந்தம் முதலியன வற்றிலே மிக்கதேர்ச்சி பெற்றுப் புகழடைந்த திருநெல்வேலி ஞானப்பிரகாசர் குறிப்பிடற்பாலர். இவரின் நெருங்கிய உறவினரின் வழியில் வந்த ஆறுமுக நாவலரும், அவரின் மாணாக்கரான காசிவாசி செந்திநாதய்யரும் இவ்வாறே இந்தியாவில் பெரும் புகழ் பெற்றவர்கள். இத்தகைய சைவத்தமிழ் அறிஞர் வரிசையிலே சேர் பொன்னம்பலம் இராமநாதனுக்கும் (1851 - 1930) ஒரு சிறப்பிடம் உண்டு.

இராமநாதன் பல திறப்பட்ட அறிவியல்களிலே தேர்ச்சியும், புகழும் பெற்றவர்; சமகால இலங்கை அரசியல், சட்டம் முதலானவற்றிலே பிரபல்யம் வாய்ந்து விளங்கியவர்; சிறந்த தேசியவாதி; அதே வேளையில் சமயத்துறையிலும் சிறந்து விளங்கினார்; இந்து சமயத்திற்கும் பண்பாட்டிற்கும் பெருந்தொண்டாற்றியவர்; இந்துசமய மரபிற்கேற்பச் சமய வெறியின்றிப் பரந்த நோக்குடைய சமரசஞானியாகவும் மிளிர்ந்தார்.

இவர் யாழ்ப்பாணத்திலுள்ள மரபுவழிச் சைவக்குடும்பத்திலே பிறந்தார். இவரின் தகப்பனாகிய பொன்னம்பல முதலியார், மாமனாராகிய சேர் முத்துக் குமாரசுவாமி, சகோதரர் சேர் அருணாலம் போன்றோர் 19ம் நூற்றாண்டு, 20ம் நூற்றாண்டு முற்பகுதி இலங்கையின் அரசியல், சமய, சமூக, பண்பாட்டு வரலாற்றிலேபுகழ்பெற்றவர்கள். இவர் இலங்கையிலும், பின்னர் சிலகாலமாக இந்தியாவிலே தமிழகத்திலும் கல்விபயின்றவர். அங்கு அருட்பரானந்தரிடம் ஞானோபதேசம் பெற்றுச் சமய வாழ்விலே மேம்பட்டவர், இந்துசமயம் மட்டுமன்றிப் பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் முதலிய மதங்களிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தார். ஒப்பியல் சமய அறிவிலும் இவரின் பங்களிப்புகள் உள்ளன. கிறித்த வேதத்திலுள்ள பரி. மத்தேயு சுவிசேஷம், பரி. யோவான் சுவிசேஷம் ஆகியனவற்றிற்குத் தமது இந்துசமய மறைஞான நோக்கிலே விளக்கம் அளித்துள்ளார். இவ்விளக்கங்களை மேலைத்தேயக் கிறித்தவ அறிஞர்களும் பாராட்டியுள்ளனர். இவருடைய வாழ்க்கையிலே இங்கிலாந்து தேசத்தவராய் பின் அவுஸ்திரேலியாவிலே வாழ்ந்து, ஆன்மீக ஞானத்தைத் தேடி இங்கு வந்து முதலில் மாணவியாகவும், செயலாளராகவும், சகதர்மசாரிணியாகவும், (மனைவியாகவும்,) விளங்கிய லீலாவதி (முன்னர் செல்வி எல். ஆர் ஹரிசன்) அம்மையார் இவரின் பல்வேறு நடவடிக்கைகளிலும் முக்கியமான ஓரிடத்தை வகித்துள்ளார். கணவனைப் போலவே, இந்துசமயம், தத்துவம், தமிழ், சமஸ்கிருதம் முதலியனவற்றிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். ஏறக்குறையச் சமகாலத்திய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், குறிப்பாகச் சுவாமி விவேகானந்தர் போன்று இராமநாதனும் இந்து சமயத்திற்குக் குறிப்பிடத்தக்க சில பணிகளாவது செய்துள்ளார். சுவாமி விவேகானந்தர் போல உலகளாவிய நிலையிலே இந்து மதச் சிறப்பினை இவரும் எடுத்துக் கூறியவர்.

ஏற்கனவே குறிப்பிட்டவாறு, இலங்கை இந்துசமயத்திலே குறிப்பாகச் சைவ மரபிலே திட்டவட்டமான பங்களிப்புகள் செய்த பெரியோர்கள் அனைவரும் சைவ சமய அறிவுடன் தமிழிலும், சமஸ்கிருதத்திலும் பாண்டித்தியம் பெற்றிருந்தனர். இராமநாதன் இத்தகைமைகளுடன் லத்தீன், கிரேக்கம், ஆங்கிலம், சிங்களம், ஒப்பியல் சமயம் முதலியனவற்றிலும் பரிச்

சயம் பெற்றிருந்தார். சமகால மூத்த சைவப் பெரியாராகிய ஆறுமுகநாவலரிடத்து நன்மதிப்புக் கொண்டிருந்தார். நாவலர் பெருமானுடைய சமய, பண்பாட்டு வாரிசுபோலவும், அவரின் பணிகள் சிலவற்றை இவரும் தொடர்ந்து செய்து வந்தார்.

நாவலர் போலவே இராமநாதனும் சைவம், தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகியனவற்றை ஆதரித்து வளர்த்தவர்; கல்விக்குச் சமயம் அவசியம் என அழுத்திக் கூறியவர்; செயலிலும் செய்து காட்டியவர்; பரந்த தேசிய மட்டத்திலே அரசாங்கமே கல்விக் கொள்கையை வகுத்து அனைவருக்கும் கல்வி வசதியளிக்க வேண்டும் என விரும்பியவர். எனினும், சைவச் சிறுவர்கள் சைவச் சூழ்நிலையிலே தான் கல்வி கற்க வேண்டும் என நாவலர் கருதியதுபோல இவரும் கருதிச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டார். தமது மேனாட்டுப் பயணத்தின் பின் சைவச்சிறுவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக முதலிலே பெண்பிள்ளைகளுக்கான இராமநாதன் கல்லூரிக்கு 1910லே அத்திவாரமிட்டு 1913ல் அதனைத் தொடக்கிவைத்தார். பெண் கல்வியின் அவசியத்தினை நன்கு உணர்ந்து செயலாற்றியவர், ''ஒரு ஆணைக்கற்பிப்பதிலே ஒரு தனி நபரே கற்பிக்கப்படுகிறார். ஆனால் ஒரு பெண்ணைக் கற்பிக்கும் போது ஒரு குடும்பம் முழுவதற்கும் கல்வி கற்பிக்கப்படுகின்றது.'' என்ற மூதுரைக்கேற்பப் பணியாற்றினார். சைவப் பெண் பிள்ளைகளுக்கான முதலாவது கல்லூரியாக இராமநாதன் கல்லூரி விளங்கிற்று. சைவ மங்கையர் சபையினையுமிவரே தொடக்கி வைத்தார். மேலும், இலங்கையில், ஆண்களுக்கான முதலாவது கல்லூரியாகப் பரமேஸ்வரக் கல்லூரியினை 1921 லே தொடக்கி வைத்தார். பரமேஸ்வர வித்தியாலயம் எனில் ''மிக உயர்ந்த கல்வியின் உறைவிடம்'' எனப்பொருள் படும்.

''பரமேஸ்வரக்கல்லூரியின் இலட்சியங்கள்'' எனும் சிறு நூலிலே இவர் கொண்டிருந்த கல்வியின் இலட்சியங்கள் புலனாகின்றன. ''இந்திய ஞானிகளின் ஞானத்துடன், தமிழ், சமஸ்கிருத இலக்கியச் செல்வங்களுமிணைந்து, பிரித்தானியரின் மிகச்சிறந்த கல்விப்பாங்கினைத் தமிழ்ச் சிறுவர் பெறக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தவே பரமேஸ்வரக்கல்லூரி நிறுவப்பட்டது. இக் கல்வியினால் தீயவன் நல்லவனாக மாறும் நன்மை ஏற்படும் குறும்புகளாலும், வல்லுணர்ச்சிகளாலும் உந்தப்படுபவன் அவற்றினை அடக்கி நற்பணிக்கு உதவுவோனாவன்'' எனத் தொடர்ந்து கல்வி நோக்கம் இந்நூலில் விவரிக்கப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட கல்லூரிகளிலே கற்போரும், கற்பிப்பவரும் வழிபடுவதற்காக கோவில்களும் அமைக்கப்பட்டன. மாணவர்கள் கீழைத்தேசக் கல்வியை மட்டுமன்றி, ஆங்கிலம், விஞ்ஞானம் முதலிய மேனாட்டுக் கல்வியையும் பயில வேண்டும் என்பது அவரின் இலக்காகும். இரு கல்லூரிகளிலும் மேனாட்டு ஆசிரியர்களும் இலங்கை, இந்திய ஆசிரியர்களும் பணிபுரிந்தனர். காலத்திற்கு ஏற்றவாறு கல்வி அமையவேண்டும் என்பதும் அவரின் நோக்கமாகும். இராமநாதன் கல்லூரியிலே சில காலமாகச் சைவ சித்தாந்தம் பற்றிய கலந்துரையாடலும் நடைபெற்று வந்தது. மேலும், பரமேஸ்வரக்கல்லூரியிலே விஞ்ஞான ஆய்வுகூடத்தினை நிறுவுவதற்காக கொழும்பிலுள்ள ''சுகஸ்தான்'' எனும் தமது வீட்டினை வங்கியில் ஈடு வைத்தார் எனவும் அது மீட்கப்படவில்லையெனவும் அறியப்படுகின்றது. எனவே ஒரு கல்வி நிலையத்தின் தேவைக்காகத் தமது இல்லத்தினையும் தியாகம் செய்ய இவர் பின்னின்றிலர்.

இக்கல்லூரிகளிலே தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், விஞ்ஞானம், கணிதம், இசை, நடனம் முதலிய பாடங்கள் தகைமை வாய்ந்த ஆசிரியர்களாலே கற்பிக்கப்பட்டு வந்தன. இவை கல்லூரிகளாக விளங்கினாலும் இவை அமைந்துள்ள விசாலமான வளவுகளை நோக்கும்போது, காலப்போக்கிலிவை பல்கலைக்கழக வளாகங்களாகமிளிரலாம் என்ற நம்பிக்கை இவருக்கு இருந்திருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது. இவ்வகையில் 1974ம் ஆண்டு பரமேஸ்வரக் கல்லூரியினை மையமாகவைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடங்கியதுடன் அவரின் அபிலாஷை நிறைவேறிற்று எனலாம். இசை, நடனம் முதலிய நுண்கலைகளிலுமிவருக்கு மிக்க ஈடுபாடு இருந்தது. இவற்றை வளர்க்கும்

முகமாக இவரின் மருகரான திரு. சு. நடேசபிள்ளை 1960லே இராமநாதன் கல்லூரி வளவிலே "இராமநாதன் இசைக் கல்லூரி"யினை நிறுவினார். அது இன்றும் அவரின் பெயரைத் தாங்கியதாக "இராமநாதன் நுண்கலைக்கழகம்" எனும் பெயருடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியாக இருந்து வருகின்றது.

1892லே சைவபரிபாலன சபை நிறுவப்படுதற்குமிவர் தூண்கோலாகத்திகழ்ந்தார் அக்காலத்திலே பெரும்பாலன பாடசாலைகள் கிறித்தவர்களாலே நடத்தப்பட்டு வந்தன. சைவச் சிறுவர்கள் சைவச் சூழ்நிலையிலே கற்கவேண்டுமென விரும்பிய இராமநாதன் ஏற்கனவே இருகல்லூரிகளை நிறுவியிருந்தார். எனினும், திரு. சு. இராசரத்தினம் முதலியோருடன் சேர்ந்து 1923ல் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினைச் சிலகாலமாக அதன் தலைவராக இருந்து வழி நடத்திவந்தார். வட இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் பாலர் பாடசாலைகளும், கல்லூரிகளும் நிறுவப்பட்டுச் சைவக் கல்வியும் புகட்டப்பட்டு வந்தது. 1960லே அரசாங்கம் தனியார் பாடசாலைகளைத் தேசீய மயமாக்கும் வரை இவை நன்கு செயற்பட்டு வந்தன. இப்பாடசாலைகளிலே மாணவர் யாவரும் சமமாகக் கல்வி பயின்று வந்தனர். இவர் யாழ்ப்பாணத்துச் சாதி முறையினை எதிர்த்தவர் கல்வி மூலமே சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள மக்களை மேம்படுத்த முடியும் எனக் கூறிச் செயலாற்றினார். அனைவருக்கும் சம கல்வி வாய்ப்புகள் அவசியமெனக் கூறினார்.

தமிழ்க் கல்வியை வளர்க்குப் நோக்குடன் செந்தமிழ் இலக்கணம் ஸ்ரீ இராமநாத தர்மசாஸ்திர பாடம் - ஆத்திசூடி மந்திர விளக்கம் திருக்குறள் பாயிரத்திற்கான ராமனாதீயம் எனும் விரித்தியுரை நூல்களை எழுதியுள்ளார்.

இந்துக்களின் பிரதான நூல்களிலொன்றான பிரஸ்தானதிரயங்களான உபநிஷதங்கள், பிரமசூத்திரங்கள், பகவத்கீதை ஆகியன மூன்றில் ஒன்றான பகவத்கீதைகுத் தமிழ் மொழி பெயர்ப்பும், விருத்தியுரையும் எழுதியுள்ளார். பகவத்கீதைக்கு எழுதத்ப்பட்ட முதலாவது தமிழ் மொழி பெயர்ப்பு இவருடையதாகும் என ஒரு சாரார் கருதுகின்றனர். ஏற்கனவே முற்காலத்தில், சங்ரகர், ராமாநுஜர் போன்ற பெரியதத்துவஞானிகள் இதற்கு வட மொழியில் உறை எழுதியுள்ளனர். வட மொழியல்லாத பிற இந்திய மொழிகளிலே முதன் முதலாக மஹாராஷ்டிரஞானியான ஞானேஸ்வரர் என்பவரே தமது தாய் மொழியாகிய மஹாராஷ்டிரியிலே ஞானேஸ்வரி எனும் பெயரிலே பகவத் கீதைக்கு உரை எழுதியுள்ளார். பிற்காலத்திலே, மேற்குறிப்பிட்ட ஞானிகளைப் போன்று இவரும் பகவத்கீதைக்கு உரை எழுதியுள்ளப்படியால் இந்து உலகில் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தினை இவர் பெற்றுள்ளார் எனலாம். இவரின் சமஸ்கிருத அறிவையும், குறிப்பாக உரையினையும் பிரபல சமஸ்கிருத அறிஞரான மு. சர்வேஸ்வசரர்மா இதற்குத் தாம் எழுதிய அணிந்துறையிலே நன்கு பாராட்டியுள்ளார்.

வாழ்மீகி இராமாயணத்திலும் இவருக்கு மிக்க ஈடுபாடிருந்தது, இவரது மனைவியான லீலாவதி அம்மையார் இவருடைய நெறிப்படுத்தலிலே, இராமாயத்தினை ஆங்கிலத்திலே சுருக்கமாக எழுதியுள்ளார் இதற்கு இராமநாதன் ஒரு சிறந்த முகவுரை எழுதியுள்ளார். இந்திய இதிஹாசங்களில் இவருக்கு இருந்த ஈடுபாடு தெளிவு.

வேதங்கள், ஆகமங்கள், இதிஹாசங்கள், புராணங்கள், பகவத்கீதை, சைவத் திருமுறைகள் முதலியனவற்றினிலே நன்கு ஈடுபட்டுக், இவற்றைக் கற்ற இராமநாதன், இவற்றிற்கேற்பவும் தமது வாழ்க்கையினை நடத்தி வந்தார். யோக நெறியிலும் அவருக்கு மிக்க ஈடுபாடு இருந்தது, அவருடைய கம்பீரமான தோற்றத்திற்கும், நீண்ட ஆயுட்காலத்திற்கும், யோகாசனப் பயிற்சியும் ஒரு காரணமெனக் கருதப்படுகின்றது.

சிவாலயங்களை அமைத்த சீரிய சைவ நெறியாளனாகவும் இவர் திகழ்ந்தார். இவர் அமைத்த அல்லது முற்றுப்படுத்திய சிவாலயங்களிலே கொழும்பில் உள்ள கொச்சிக்கடையில் அமைக்கப்பட்டுள்ள பொன்னம்பலவாணேசர் கோவிலை முதலிற் குறிப்பிடலாம். தந்தையார் 1856லே அத்திவாரமிட்டுக் கட்டிவந்த

கோவிலை மிகச்சிறப்பான முறையிலே (1907 - 1912) கட்டிமுடித்தார். இதற்கான ஸ்தபதிகள் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டனர். இக்கோவில் ஆகம விதிகளை நன்கு பின்பற்றி அமைக்கப்பட்டதாகும். ''பாரிய கட்டிடத்தை உள்ளடக்கிய இக்கோவிலைக் கட்டிமுடிப்பதிலே பல பிரச்சினைகள் உள்ளன, எனக் கூறி இவரின் இளைய சகோதரரான சேர் அருணாசலம் ''இத்தகைய முயற்சி மன்னரால் தான் முடியும்'' எனக் குறிப்பிட்டுப் பின்வாங்கிய போதும்'' மன உறுதியுடன் தளராது முன்னின்று இவர் இதனைக் கட்டி முடித்தார். இங்கு ஆகம முறையிலான ஆறுகாலப்பூசைகளைத் தகைமை வாய்ந்த அந்தணர் மூலம் செய்வித்து வந்தார். இலங்கையிலுள்ள கருங்கல்லாலான சிவாலயங்களில் இவ் ஆலயம் முதலிடம் வகிக்கின்றது, முற்பட்ட அனுராதபுரம், பொலன்னறுவை, யாழ்ப்பாணம், கோட்டை அரசுகள் காலத்திய சிவாலயங்கள் பல முற்றாக மறைந்து விட்டன. அல்லது சிதைந்த நிலையில் உள்ளன. இத்தகைய நிலையிலே பொன்னம்பலவாணேசர் ஆலயம் இலங்கையில் உள்ள திராவிடக் கட்டடக் கலைக்கு ஓர் உரைகல்லாகவும் இயங்குகின்றது.

முன்னைய பரமேஸ்வரக் கல்லூரி இன்றைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளவில் உள்ள பரமேஸ்வரன் ஆலயத்தினையும் இவரே அமைத்தார். இதிலுள்ள சிவலிங்கமும், விக்கிரகங்கள் பலவும், இராமநாதன் கல்லூரியில் உள்ள நேர்த்தியான நடராசர், அம்பாள் சிலைகள் முதலியனவும் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டவை.

அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா முதலிய வெளி நாடுகளிலே இந்து சமய, குறிப்பாகச் சைவசமயச் சிறப்புகளைக் கவர்ச்சிகரமான முறையிலே கிறித்தவத்துடன் ஒப்பிட்டும் எடுத்துக் கூறினார் இவ்வகையில் சுவாமி விவேகானந்தரின் சிறப்பான பணிகளையும் இவர் நினைவூட்டுகின்றார்; இவருடைய சிறந்த விரிவுரைகளைக் கேட்டு சில வேற்று நாட்டவர் இவரின் சிஷ்யராயினர். இவர் ஓர் இல்லற ஞானியாக விளங்கினார். மேனாட்டு உலகியல் நாகரிக வளர்ச்சியால் மனிதனுக்கு நிலையான அமைதி யேற்படாதெனவும், கீழ்நாட்டு (இந்தியா) ஆன்மீகமே நிலையான அமைதியினை ஏற்படுத்தவல்லதெனவும் விவேகானந்தர் போல இவரும் கூறியுள்ளார்.

இலங்கைச் சட்டமா அதிபராக இருந்த காலத்திலேதான், இவர் மேனாடுகளிலே சைவசமயச் சிறப்புகளை எடுத்துக் கூறிப் புகழ் பெற்றார். இவ்வகையிலிவர் பெரும்பாலும் முதன் முதலாகச் சைவசித்தாந்தச் சிறப்பினை மேனாட்டவர்க்கு எடுத்துக்கூறிய தமிழன் என்ற வகையிலும் குறிப்பிடற்பாலர். இவரது மாமனாராகிய சேர் முத்துக்குமார சுவாமி இவருக்கு முன்னோடியாக விளங்கினார்

''சைவர்களின் கோயில்'' எனச் சிறப்பித்துக் கூறப்படும் சிதம்பரத்திலே தொன்று தொட்டுப் பூசை செய்து வந்த சிவப்பிராமணர்களாகிய தீஷிதர்கள் (முற்காலத்தில்லை மூவாயிரவரின் பிற்சந்ததியினர்) பிரித்தானிய அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையால் இழக்க இருந்த உரிமைகளை அவர்கள் தொடர்ந்து பெறும் வண்ணம் அவர்கள் சார்பாக நீதிமன்றத்திலே வாதாடி வெற்றி பெற்றார். இவ்வாறு இலங்கைச் சைவப் பெருமகன் ஒருவன் சைவ உலகின் கேந்திர நிலையமாக விளங்கும் சிதம்பரத்தின் நலன் கருதிச் செயற்பட்டமை குறிப்பிடற்பாலதே. இவருடைய தமிழ், சைவசித்தாந்த அறிவைத் தமிழகம் பாராட்டிற்று. 1912லே சிதம்பரத்திலே நடைபெற்ற முதலாவது சைவசித்தாந்த மகாநாட்டிற்கும், 1912லே மதுரையில் நடைபெற்ற தமிழ் விழாவிற்கும், 1917லே மைலாப்பூ

ரிலே நடைபெற்ற திருவள்ளுவர் மகா சபைக்கும் இவர் தலைமைதாங்கித் தமிழ் கூறும் நல்லுலகத்திலே சிறப்பு அடைந் தார். இவருடைய ஆழ்ந்த சைவசித் தாந்த அறிவையும், பணிகளையும் அறி ஞர் பாராட்டியுள்ளனர்.

இவர் சமகால இலங்கைப் பௌத் தர்களின் கல்வி, சமயம், சமூகம் முதலி யனவற்றிற்கும் பங்களிப்புகள் செய்து அவர்களின் நன்மதிப்பினைப் பெற்றிருந் தார். கொழும்பிலே பௌத்த - இந்துக் கல்லூரி ஒன்றினை நிறுவ இவர் மேற் கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. பௌத்த பிரமஞான சங்கத்திலும் இவ ருக்கு ஈடுபாடு இருந்தது. இராமநாதர் கல்லூரி வளவிலுள்ள இவருடைய சமாதி யின் மீது இராமநாதேஸ்வரம் எனும் பள்ளிப்படைக் கோவில் அமைக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பல்வேறு வழிகளிலும் இலங்கையின் இந்துப் பண்பாட்டிற்கு இராமநாதன் ஆற்றியுள்ள பங்களிப்புகள் நன்கு குறிப்பிடற்பாலன.

## இரகசியங்கள்

நல்ல காரியங்களில் வெற்றி பெற சில இரகசியங்கள் உண்டு.
அவை, அளவற்ற பொறுமை, முடிவில்லா முயற்சி,
அளவுகடந்த தூய்மை இவைகளே.

## பயப்பட வேண்டாம்

உண்மையை, அன்பை, தூய உள்ளத்தை
எதுவும் எதிர்த்து நிற்க முடியாது.
நீங்கள் மட்டும் உண்மையானவர்களாகவும், அன்புடைய
வர்களாகவும் இருந்தால் போதும்
யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை.



# இந்துக்களின் விக்கிரக வழிபாடு

— செல்வன்: சிவராசா சுரேஷ் —
இறுதியாண்டு/பொறியியற் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

சாதாரண மனிதன் தன் மனதையடக்கி ஒருவழிப்படுத்துவது சிரமமாகும். எனவேதான் விக்கிரக வழிபாடு நடைமுறையில் வந்தது. விக்கிரகத்தைக் கொண்டு மனிதன் தன் மனத்தை அடக்குவது ஓரளவுற்குச் சுலபமானது. அதனால் இம் முறை மக்களிடையே தெய்வ சிந்தனையை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. ஆகம கிரிகைகள் திருவுருவ வழிபாட்டைத் தனி அம்சமாகக் கொண்டு விளங்குகின்றன. ஆலயங்களிலுள்ள திருவுருவங்கள் கல்லினாலும் மரத்தினாலும், வெண்கலம், இரும்பு போன்றவற்றினாலும் உருவாக்கப்பட்டவை.

சாந்தினாலும், கல்லினாலும் உருவத்தைப் தோற்றுவிப்பதற்கும் அழகு செய்வதற்கும் கலைஞன் ஓவியத்தைக் கையாளுகின்றான். இவ்வுருவ வழிபாடு தனிமனிதனுக்காக உருவாக்கப்படவில்லை. பெருந்தொகையான மக்கள் பயனடைவதற்காக கையாளப்பட்ட ஒரு வழியாகும். எல்லோராலும் சுலபமாக வழிபடக்கூடியது விக்கிரகமே ஆகும். உருவமற்ற இறைவன் ஆன்மாக்கள் உய்வதற்காக உருவம் எடுக்கிறான்.

அவன் பல நிலைகளை மேற்கொண்டு அருள்பாலித்ததினால் உருவங்கள் பல நிருப்பனவாகின்றன,

மனதினாலே கிரகிக்க முடியாத இறைவனை அறிய வழி தெரியாமல் தடுமாறியவர்களுக்கு இந்தத் திருவுருவங்கள் உதவி செய்கின்றன.

விவேகமும், பக்குவமும் மிக்கவர்களுக்குரிய சிவலிங்கத் திருமேனியை வழிபட்டு நன்மையடைய முடியாதவர்களுக்கு கை, கால் முதலிய உறுப்புகள் கூடிய மற்றைய விக்கிரகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. உலகில் நிகழும் செயல்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(1) தோற்றுவித்தல் - படைத்தல்
(2) தோற்றம் பெற்றவற்றைப் பேணல் - காத்தல்
(3) அவற்றை அழித்தல் - அழித்தல்

இம் மூன்று நிகழ்வுகளும் இறைவனால் நிகழ்பவை என்பதை புராணங்கள் கூறுகின்றன. இப் பெரும் செயல்களைச் செய்யும் நிலைகளைக் காட்டுபவையாக திருவுருவங்கள் காணப்படுகின்றன. ஒரு வரலாற்றினைக் காட்டும் வகையில் உருவாக்கப்பட்ட சிற்பத்தைக் காணுகின்ற ஒருவன் தனது மனக்கண் கொண்டு பார்க்கும் போது அந்தச் சிற்பம் காட்டுகின்ற வரலாற்றினையும் அதிலே அடங்கியுள்ள உயர்ந்த தத்துவங்களையும் மற்ற இந்து அறிந்துகொள்கின்றான்.

மொகஞ்சதாரோ பல்லத்தாக்கில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின் போது அகப்பட்ட பழைய உருவங்கள் அக்கால வரலாற்றிலே உபயோகிக்கப்பட்டவை என்பது ஆராய்ச்சியாளர் கருத்து எனினும் அக்காலத்தில் ஆலயங்கள் இல்லாமையினால் இவ்வுருவங்கள் வழிபடப்பட்டவை என நிச்சயமாகக் கூற முடியாது. வேதங்களிலுள்ள விரிவான வர்ணனைகளைக் காண்கிறோம். இங்கு தெய்வங்கள் கை, கால் முதலியவற்றைக் கொண்டனவாக வர்ணிக்கப்பட்டுள்ளன. இவ்வர்ணனைகளைப் பயின்ற அக்காலத்து மக்கள் உருவங்களை அமைத்து வழிபட்டனர்

ஆயினும் உபநிடதங்கள் கூறும் கருத்துகள் திருவுருவ வழிபாட்டிற்குப் பிறம்பானவை. எனினும் இச் சூழ்நிலையில் தத்துவக் கருத்துக்கள் வளர வழி செய்யப்படுகின்றன. திருவுருவங்கள் இறைவனை மனத்தினால் நினைவுகூர்ந்து கிரகிப்பதற்கு உதவுகின்றன. இறைவனின் பெருமையை அறிய அவன் திருக்கோலங்கள் வழி செய்கின்றன உதாரணமாக சிவனது திருவிளையாடல்கள் விக்கிரக வடிவங்களில் கோயில்களில் நிறுவப்பட்டிருப்பதை நாம் காணலாம்.

தென்னாட்டு சைவர்களிடையே கூடிய அளவிற்கு இம் முறை நிலவுகின்றது. இவ்வுருவங்களை வழிபடும் போது அந்தந்த திருவிளையாடல்கள் மனதில் நினைவிற்கு வருகின்றன. நிகழ்வுகளை எடுத்துக் காட்டிய இத் திருவுருவங்கள் நாளடைவில் எம்முடைய அறிவிற்கு ஏற்ப அந்த நிகழ்வுகளின் பின்னனியில் புதைந்து கிடக்கின்ற உண்மைகளை எடுத்துக் காட்டுகின்றன. உருவ அமைப்பு, அது காட்டும் வரலாது, இறைவன் அணிந்திருக்கும் ஆபரணங்கள், அவன் கரங்களில் விளங்கும் படைக்கலங்கள் முதலிய பொருட்கள் திருவுருவங்களைத் தரிசிக்கும் போது மனதிலே ஆழமாகப் படிகின்றன. இறைவன் தனது பக்தர் மேல் கொண்டுள்ள அன்பினாலேயே பல்வேறு வடிவங்களை எடுக்கின்றான்.

இறைவன் கொண்ட பயங்கரமான வடிவங்களும் உண்டு. தவறு இழைக்கின்றவர்களைத் தண்டித்து அவர்களை நல்வழிப்படுத்தவே இப்பயங்கர வடிவங்களின் நோக்கமாகும் இவ்வகைத் தோற்றங்கள் இறைவன் பெருமைகளைக் காட்டுகின்றன. இறைவனுக்கெனச் சிறப்பாகவுரிய படைத்தல் முதலான ஐந்தொழில்களை மிக இலகுவாகவும் தெளிவாகவும் அமைத்துக்காட்டும் உருவமாக நடராசர் உருவம் விளங்குகின்றது. திருவுருவங்களை அமைத்து, அதற்கு இணங்க நடத்தும் கிரியைகளில் அமையும் இறைவழிபாடு அறிவு முதிர்ச்சியும் அனுபவ பொருளுமற்ற எம்மைப் பொறுத்தவரை ஒரு விளையாட்டேயாகும். பெரும் குறிக்கோளாய் அமைந்திருக்கின்ற வீடு பேற்றினை அடைய விரும்புகின்றவர்கள் வியந்து நின்ற செயல்களே கிரியையாகும். சாதாரண நிலையிலுள்ளவன் கிரியைகளின் முக்கியத்துவத்தை உணரமாட்டான். ஆனால், நாளடைவில் அவன் அதன் மகிமையை உணரும் நிலையை அடைவான். ஆலயங்களில் திருவுருவம் நிறுவுவதற்கு, முன்பு பீடத்தில் உரிய கருமங்களைச் செய்த பின்னரே விக்கிரகத்தை அதன் மேல் நிறுவுவார்கள்.

சைவ வழிபாட்டில் லிங்கம் முக்கிய இடம் வகிக்கிறது. பாரத நாட்டில் புண்ணிய தீர்த்தங்களிலே லிங்கத்தின் உருவங்கள் நிறுவப்பட்டுள்ளன. அங்கே சிவனுடைய கோயில் அமைந்துள்ள இடங்களிலெல்லாம் லிங்கத்தையே முக்கிய விக்கிரகமாக அமைத்துள்ளார்கள். கன்னியா குமரியிலிருந்து காஷ்மீர்வரை லிங்கம் மட்டுமே ஒரே மாதிரியாக வழிபாடு செய்யப்படுகிறது. கோயிலின் கர்ப்பக்கிரகத்தில் நிறுவப்பட்டுள்ளது லிங்கமே. சைவத்தின் கிளைகளான முருக, கணபதி வழிபாடு ஆகியன நிகழும் இடங்களிலும்

லிங்கத்திற்குத் தனியிடம் உண்டு. இதனை, இந்தியாவிலும் இலங்கையிலும் முறைப்படி அமைக்கப்பட்ட ஆலயங்களில் காணலாம். இலிங்கத்தின் உருவம் எதனைக் குறிக்கிறது? இலிங்க வழிபாட்டின் நோக்கம் என்ன? சிவனுக்கென சிறப்பாகவுள்ள திருமேனிகள் 3 உண்டு. ஊனக் கண்களுக்குப் புலப்படாத அருவத்திருமேனி யோகிகளுக்கு மட்டுமே எட்டக்கூடியதாகும்.

கை, கால் முதலிய உறுப்புகளோடு கூடிய உருவத் திருமேணி, உருவத்திற்கு வேண்டிய கை, கால் முதலிய உறுப்புக்கள் இல்லாததனால் அருவமாகியும், கண்ணால் பார்க்கும் போதும், கையால் தொடுக்கும்போதும் உணரத்தக்கதனால் உருவமாகியும், இந்த இரு நிலைகளும் உடையதனால் அருவுருவ நிலையுமாகக் காணப்படுகிறது. இந்த அருவுருவ நிலை சிவனுக்கு மட்டுமே சிறப்பாக அமைகிறது. இதுவே லிங்கம். சிவனுக்கு மட்டுமே உரியதனால், சிவலிங்கம் என அழைக்கப்படுகிறது. வேதகால வழிபாடு அக்கினியைத் தெய்வமாகக் கொண்டது. தெய்வங்கள் அனைத்திற்கும் "அவி சொரிதல்" அக்கினியிலேயே நடைபெற்றது. அக்கினி மூலமே வேதங்களை வழிபட்டார்கள். இந்த அக்கினி இல்லாவிடில் வேள்வியில்லை கண்ணுக்குத் தெரியாத தேவர்களுக்குகும் கண்ணுக்குத் தெரிந்த அக்கினியே பிரதிநிதி. இந்த அக்கினி குளிர்ந்து நொருங்கி உருகி திரண்ட உருவம் கொண்டது. பொன்னிறமான தீ குளிர்ந்த நிலையில் கரிய நிறம் பெறுகிறது. இவ்வாறு அக்கினி எய்திய நிலைதான் லிங்கம். பிரம்மாவும் திருமாலும் அடிமுடி தேடும் வண்ணம் இறைவன் ஒளி வீசும் தீப்பிழம்பாய்த் தோன்றிய நிலையினை லிங்கம் நினைவூட்டுகிறது.

இவ்வாறாக, இறைவனின் ஒவ்வொரு திருவிளையாடலின் மூலம் பெறும் ஒவ்வொரு வித்தியாசமான வடிவத்திலேயே விக்கிரகமும் விக்கிரக வழிபாடும் ஆரம்பமாயின.

"மனதிற்கு நிம்மதி ஆண்டவன் சன்நிதி"

பலாத்காரம், இம்சை, கொடுமை என்றால் நாம் எப்போதும் கத்தியையோ, துப்பாக்கியையோ தான் நினைத்துக் கொள்கின்றோம். ஆனால் உண்மையில் நாம் நம் நாக்கினாலும் நடத்தையினாலுமே அதிக கொடுமைகளைச் செய்கிறோம். நாம் ஒருவருடன் பழகும் விதத்திலே, அன்பினாலும் புன்சிரிப்பினாலும், ஹிம்சை செய்வதைத் தவிர்த்துச் சமாதானத்திற்கு அடிக்கல் நாட்டவேண்டும்.

— அன்னை தெரேசா —

# "அன்பே சிவம்"

**சிவஸ்ரீ பா. நித்தியானந்தக்குருக்கள்**
பிரதமகுரு / குறிஞ்சிக் குமரன் ஆலயம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

**அன்பே** சிவம் என்பது சைவசமய சித்தாந்தம். எம்மதத்துக்கும் சம்மதமானதும் அன்புதான். தூய அன்பானது தெய்வீக மானது. சமநோக்குடையது. மனதுக்கு அமைதியை அளிப்பது. ஆற்றலையும் அறிவையும் பெருக்குவதுடன், ஆன்மீக ஈடேற்றத்தையும் கொடுக்கும். சரியை, கிரியை, யோக, ஞான மார்க்கங்களின் உயிராக விளங்குவதும் அன்பே. அனைத்து மதங்களின் சாரங்களை சுருக்கி எடுத்தால் மிஞ்சுவதும் அன்புதான்.

முழுமையான அன்புடனும் ஆதரவுடனும் வளர்க்கப்படும் குழந்தைகள் பிற்காலத்தில் ஒழுக்கச்சீலர்களாகவே வாழ்கின்றார்கள்; சாதனைகள் புரிகின்றார்கள். அன்பான நியாயமான கண்டிப்புக்களை யாரும் மீறுவதில்லை. நோய்வாய்ப்பட்டிருக்கும் ஒருவரை அன்புடன் பராமரிப்பதால் விரைவில் குணமாகிவிடுகின்றார். இறக்க நேரிட்டாலும் அவருடைய ஆன்மா நிம்மதியும் திருப்தியும் அடைகின்றது. நிம்மதியுடனேயே தெய்வீகமாக மரிக்கின்றார். இருப்பதும் இறப்பதும் முக்கியமானதல்ல ஆன்ம திருப்தி எதில் கிடைக்கின்றது என்பதையே நாம் கருத்தில் கொள்ளவேண்டும். கஷ்டங்கள் வரும்போது கஷ்டப்படுவோரைப் பார்த்து, "எல்லாவற்றையும் கடவுள் பார்த்துக்கொள்வார். கடவுளிடம் பாரத்தைப் போட்டுவிட்டு சும்மா இரு" என்று ஆறுதல் கூறுகின்றோம். இங்கே நாம் கூறும் அன்பு கலந்த வார்த்தைகளாலும், அவர் கடவுளை அன்புடன் வழிபடுவதாலும் அவருக்கு ஆறுதல் கிடைக்குமானால் அது அன்புப் பரிமாற்றத்தின் வெளிப்பாடு ஆகும். ஏனெனில் நாம் கூறியதுபோல் அவரால் சும்மா இருக்கமுடியாது.

'சும்மா இரு' என்ற தத்துவம் உண்மையான ஞானிகளுக்கும் யோகிகளுக்கும் மட்டுமே முடியக்கூடிய காரியம். சாதாரண வாழ்க்கை வாழ்வோருக்கு அன்புடன் செய்யப்படும் கர்மங்களே நிம்மதியையும் பெருவாழ்வையும் கொடுக்கின்றன.

அன்பை நாம் எவ்வாறு வெளிப்படுத்துகின்றோம், அன்பு நிறைந்த பார்வைகள் அகமும் முகமும் மலர இன்சொல் பேசுதல், உபசரித்தல், போன்றவற்றால் ஆரம்பிக்கின்றோம். உறவினர்களிடமோ நண்பர்களிடமோ இவ்வாறு நடந்துகொள்ளும் போது கருத்துப் பரிமாற்றங்கள் சுமுகமாக நடக்கின்றன. இன்பதுன்பங்கள் பகிர்ந்துகொள்ளப்படுவதால் ஒருவருக்கொருவர் புத்திமதிகள் கூறிக்கொள்கின்றோம். தீங்குகள் நேருவதை தடுக்கின்றோம். தேவைகள் ஏற்படும்போது உதவிகளும் செய்கின்றோம். செய்யப்படும் உதவிகளைவிட காட்டப்படும் அன்பே பெரிதாக மதிக்கப்படுகின்றது.

அன்பைவிட ஆசை, பந்தபாசம், நேசம் மேலோங்கிவிடும்போது கஷ்டங்கள், துயர் என்பன ஏற்படுகின்றன.

தூய்மையான அன்புகொண்டவர்கள் வாழ்விலோ, தாழ்விலோ, பிரிவிலோ துயர் அடைவதில்லை. அவர்கள் மனம் எப்போதும் நிம்மதியும், நிறைவும் கொண்டதாகவே இருக்கும். அன்பு குறையும்போது தான் விரிசல்கள் ஏற்படுகின்றன. நிறை குடம் ஒருபோதும் தளம்புவதில்லை, வெறும் குடமும் தளம்புவதில்லை. அதை மரக்கட்டைக்குத்தான் ஒப்பிட முடியும்.

எல்லோரிடமும் வித்தியாசமின்றி அன்புகொள்ளும் உயர்குணம் வரும்போது தான் அது இறை பிரார்த்தனை ஆகின்றது. காதலன் காதலி, கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள், உற்றார் உறவினர், நண்பர்கள், இனம், சாதி, மொழி தேசம் எனும் அடிப்படையில் ஒவ்வோர் வட்டத்தில் நின்று, ஆசை, பாசம், பற்றுதல் என்பன ஊடாக காட்டும் அன்பானது பல சந்தர்ப்பங்களில் செயலிழந்து விடுகின்றது. பற்றுதல் காரணமாக வெறித்தனம் மேலோங்கிவிடும்போது நிம்மதி இழக்கப்படுகின்றது, விரக்தி ஏற்படுகின்றது. அதனால் நாசமும் மோசமும் அதிகரித்து துன்பமும் துயருமே மிஞ்சுகின்றன. அன்பு பரவலாக்கப்படாது ஏதோ ஒருவட்டத்தில் நிற்கும்போதுதான் இவை நிகழ்கின்றன.

உறவுமுறையில் காட்டப்படும் அன்பில் தேவையும், ஆசையும் அதிகரிப்பதால் பற்றுதல் மேலோங்கி துயர் ஏற்பட வழி வகுக்கின்றது. அங்கும் அன்பு மேலோங்குமாயின் துன்பங்கள் நேரமாட்டா.

தன் குழந்தைகள், பிறர் குழந்தைகள் சிறியோர், பெரியோர், அழகானவர்கள் அவலட்சணமானவர்கள், குமரிகள், குடுகுடு கிழவிகள், இனம், மொழி, தேசம் போன்ற வித்தியாசங்கள் பாராட்டாது காட்டும் அன்பே பற்றற்ற தெய்வீக அன்பாகும்.

ஆண்டவன் சன்னதியில் அனைவரும் சமம்; அனைவரும் ஆண்டவன் படைப்பே; என்றால் சக உயிருக்கு நாம்காட்டும் அன்பு இறை பிரார்த்தனை ஆகிவிடும். சக உயிருக்கு நாம் தீங்கு இழைத்தால் அது தெய்வநிந்தனையே, ஓர் ஏழைக்கு அன்புடன் உணவு அளிப்போமாயின் அது இறைவனுக்கு நிவேதனம் செய்ததாகின்றது. எவ்வளவு அன்போடு அதை செய்கின்றோமோ அந்த அளவிற்கு மனம் நிறைவு அடைகின்றது. உதவிபெற்றவரும் நாம் உதவி செய்வதற்கு சந்தர்ப்பம் அளித்ததன்மூலம் நமது ஆன்ம திருப்திக்கு உதவி இருக்கின்றார். செய்யப்படும் உதவிகளால் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்பதல்ல. தேவைகள் வளரவே செய்யும், ஆனால் ஏற்படுத்தப்படும் அன்புப் பரிமாற்றமே நிறைவை ஏற்படுத்துகின்றது.

வைத்தியர்கள், தாதிமார்கள் நோயாளிகளை அன்புடன் பராமரித்து சிகிச்சை அளிப்பதால் தொழில் புனிதமடைகின்றது. அவர்களிடையே ஏற்படும் அன்புப்பரிமாற்றம் இறைவணக்கமாகிவிடுகின்றது. இரு பகுதியினரும் புனிதமடைகின்றனர்.

பொருளீட்டுவதே தொழிலின் முக்கிய குறிக்கோள் ஆக இருப்பின் நிம்மதி என்றோ ஒரு நாள் இழக்கப்படும். நமது வாழ்வில் எத்தொழிலும், எந்தச் சந்தர்ப்பங்களிலும் நாம் இவற்றை நன்கு உணரலாம்.

பல ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் தூரசேவை பேருந்து ஒன்றில் பிரயாணம் செய்வதற்காக ஏறினேன், அதன் சாரதி என்னைப்பார்த்து கனிவான சிரிப்பொன்றை உதிர்த்து வரவேற்றார். அவரை எனக்கு முன்பின் தெரியாது. ஆகவே எனக்குப்பின்னால் யாராவது நிற்கிறார்களா என்று திரும்பிப்பார்த்தேன். அங்கு யாருமே இல்லாததால் நானும் பதிலுக்கு சிரித்து மகிழ்ச்சியினை தெரிவித்தேன். பின்னர் எனது ஆசனத்தில் அமர்ந்துகொண்டு

அவரது செயல்களை அவதானித்தேன். அவர் சிறியோர், பெரியோர், ஆண்கள், பெண்கள் என்ற பேதமின்றி எல்லோரிடமும் நன்கு பழகியவர்போல் அனைவரையும் அன்புடன் சிரித்து வரவேற்றார். அவ்வாகனத்தில் ஏறிய அனைவரும் மகிழ்ச்சியுடனும் மனநிறைவுடனும் பிரயாணம் செய்தனர். பாதையில் போவோர் வருவோருக்கும் அவர் சிரித்து தலையசைத்துக்கொண்டார். அவர்களும் கையசைத்தும் சிரித்தும் மகிழ்ச்சியை தெரிவித்தனர். பிரயாணம் முடியும்வரை அவரது செயலில் மாறுதல் எதுவும் இருக்கவில்லை. இத்தனைக்கும் அவர் நிதானத்துடனும் மகிழ்ச்சியுடனுமே வாகனத்தைச் செலுத்தினார். யாருக்கும் எந்தச் சலுகையும் அவர் செய்யவில்லை. சலுகை கேட்டவர்களுக்கும், சிரிப்புடனும், அன்புடனும் பதிலுரைத்தார். அவர் பிரயாணிகளிடமிருந்து எதுவித தேவையையும் எதிர்பார்க்கவில்லை. ஆயினும் அவர் இனிய சுபாவம் கொண்டிருந்தார். அவரை நினைக்கும்போதெல்லாம் என்மனம் இனிய உணர்வுகளால் நிறைவுறும். அந்த ஒரு நாளின் பின் அவரை நான் சந்திக்கவில்லை.

தமது தொழில்களை விருத்தி செய்யும் நோக்குடன், பலர் இன்முகம் காட்டி வரவேற்றல், உபசரித்தல் போன்றவற்றை செய்கின்றார்கள். வியாபாரஸ்தாபனங்களில் இவற்றை வெளிப்படையாக காண முடியும். தேவைகளையும் எதிர்ப்பார்ப்புகளையும் முன்னிட்டு அன்புகாட்டப்பட்டாலும், அன்பு மேலோங்கி விருத்தி அடையுமாயின் அது ஆத்ம திருப்தியை அளிக்கும்.

தொழில் புரிவோர் தம்மைச் சார்ந்தவர்களிடம் அன்புகாட்டி எத்தொழில் புரியினும் அத்தொழில் புனிதமடைகின்றது. நாம் எந்தெந்த நிலையில் இருக்கின்றோமோ அங்கங்கெல்லாம் அன்பு வெளிக்கொணரப்படாவிட்டால் எல்லாம் வெறும் யந்திரமயமே. சலிப்பும் விரக்தியுமே அங்கு மிச்சமடையும். சில நிமிடங்களே பழகிய சிலர் நெஞ்சில் என்றென்றும் நிறைந்திருப்பர். அது தூய அன்புப் பரிமாற்றத்தையும் தெய்வீகத்தையும் உணர்த்தும் அன்புப் பரிமாற்றம் ஆகும்.

மக்கள் மனதை அன்பு மயமாக்கி புனிதப்படுத்துதல் சைவ சமய கிரியைகளின் உள்நோக்காகும். பற்றற்று சும்மா இருத்தல் அல்லது யோக ஞான நிலை கைகூடும்வரை சரியை, கிரியை என்ற பக்தி வழிபாட்டு முறைகள், செய்கின்ற கர்மங்களை அன்புடன் செய்வதற்கும், ஆத்ம திருப்தி பெறுவதற்கும் உந்து சக்தியாக அமைகின்றன.

சகல கிரியைகளும் மனதை தூய்மைப் படுத்தி அன்பு நெறியில் செல்வதற்காக ஆக்கப்பட்டவையே. இங்கே முறையான புறத்தூய்மையும் பேணப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இது அகத்தூய்மைக்கு உந்து சக்தியாக அமைகின்றது.

''மனமது செம்மையானால் மந்திரமது தேவையில்லை'' என்ற அலட்சிய நோக்குடன் கொள்ளாது, ''மனமது செம்மையாகும்வரை மந்திரம் தேவை'' என்று செயற்படுதல் அவசியமானதாகின்றது. மேற்சொல்லப்பட்ட இரு வசனங்களினதும் பொருள் ஒன்றேபோல் தோன்றினாலும், உணர்வில் ஏற்படும் வித்தியாசங்களை நாம் கருத்தில்கொள்ள வேண்டும். ஆசாரத்துடன் உள்ளேவர வேண்டும் என்பது தான் உண்மையான வரையறை. ''ஆசாரமில்லாதோர் உட்பிரவேசிக்க கூடாது'' என்பது உணர்வில் கசப்பை வளர்க்கும் பிரயோகமாகும். உத்தரவின்றி உட்பிரவேசியாதீர் என்ற உணர்ச்சிகள்மாறி உத்தரவு பெற்று உள்ளே வருக எனும் அன்பு உணர்வுகள் வெளிப்படுவதே வரவேற்கத்தக்கதாகும். பொது ஸ்தாபனங்கள் அலுவலகங்கள் யாவற்றுக்கும் இதுவே பொருத்தமானது.

சைவ சமயத்தை சேர்ந்த ஒவ்வொருவரும் ஏழு வயதில் தீட்சைபெற்று அனுஷ்டானங்கள் செய்வது போன்ற நித்திய கருமவிதியில் ஆரம்பிக்கும் வழிபாட்டு முறைகள், சிறுவயதிலிருந்து மனதைச் செம்மைப்படுத்த ஏற்பட்டவையாகும். அன்புகலந்த உணர்வுமுறையிலேயே பயிற்சி பெறுதல் வலியுறுத்தப்பட்டுள்ளது. படிப்படியாக பயிற்சி முறையோடு கிரியைகளை பயிலுதல் சாலச் சிறந்ததாக கருதப்படுகின்றது.

வெறுமனே கிரியை முறைகளை அறிய முற்பட்டால், உதாரணமாக, நிறைகுடத்தின் விளக்கத்தை ஆசாரியார் பின்வருமாறு விளக்குவர். செம்பு அல்லது முட்டி உடலாகவும், சுற்றப்படும் நூல் நரம்புகளாகவும் நிரப்பப்படும் நீர் இரத்தமாகவும், உள்ளே இடும் நவரதித்னங்கள் எலும்புகளாகவும், நாணயம் அல்லது தங்கம் சுக்கிலமாகவும், தேங்காய் சிரசாகவும், மாவிலை மயிராகவும் கூர்ச்சம் குடுமியாகவும் பாவனை செய்து, அன்புடன் உச்சரிக்கும் மந்திரத்தை உயிராககொடுத்து இறைவனை எழுந்தருளச் செய்தல் வேண்டும் என்பர். இது கேட்போருக்கு பைத்தியக்காரத்தனமாகத் தோன்றக்கூடும்,

குழந்தை ஒன்று சிறுவயதில் ஒரு குறிப்பிட்ட விளையாட்டில் நாட்டம் கொண்டிருக்குமானால் அவ்விளையாட்டு சம்பந்தமான தொழிலில் ஆர்வமும் அறிவும் பெற்று பிற்காலத்தில் அத்தொழிலில் மேன்மையுறுகின்றது. குழந்தையின் மனம் எந்த அளவுச்கு பக்குவமடைகின்றதோ அந்த அளவுக்கு அக்குழந்தை பயன் பெறுகின்றது.

இங்கேயும் அன்பின் வளர்ச்சிக்கும் அன்பின் ஈடேற்றத்துக்கும் கிரியைகளின் பாவனை உந்து சக்தியாகின்றது.

மேலும் ஆலய வழிபாட்டு முறைகளில் விளக்கேற்றுதல் முக்கிய அம்சமாகும். விளக்கின் சுடராக விளங்குவது சூரியனின் அம்சமாகிய நெருப்பு ஆகும். உலக இயக்கங்களுக்கெல்லாம் எமது அறிவுக்கு எட்டிய வரை காரணமாய் விளங்குவது சூரியனே. நாம் எல்லாமறிந்த ஒரு குருவிடம் தெரியாத விடயங்களை கற்கின்றோம். இங்கும் ஆன்மீக ஈடேற்றத்தை விளக்கும் குருவாக சூரியனே (விளக்கே) முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. விளக்குகள் ஏற்றிவழிபடுதல் மூலம் தெரிந்தும் தெரியாமலும் சூரியனையும் வழிபடுகின்றோம், நாளாந்தம் சிவபூசை செய்பவர்களும், சங்காபிஷேகம், கும்பாபிஷேகம் போன்ற கிரியைகளிலும் முதலில் சூரிய பூசை செய்கின்றனர். சூரியனிடம் நாம்கொள்ளும் அன்பின் அளவுக்கு ஏற்பவே நமது ஆன்மீக சித்திகள் கைகூடும்.

கற்பிப்போர் ஏணிப்படிகள் போன்று அந்தந்த இடத்திலேயே நின்று விடக்கூடும், முன்னேறிச் செல்வோர் தத்தம் பக்குவத்திற்கு ஏற்ப ஈடேற்றம் பெறுவார்கள். அர்ச்சகர்கள், குருக்கள்மார். போதகாசிரியர்கள் தத்தம் நிலையில் நின்று பக்தர்களை ஊக்குவிப்பதுடன் நின்று விட்டாலும் தவறொன்றும் இல்லை. அன்புடன் சிறிதளவு ஊக்குவிப்பு செய்தாலும் அது பெரிதாகவேகொள்ளப்படும். அன்பின்றி செய்வதுதான் போலிகளாகின்றன. மனம் செம்மையாகிக்கொண்டு போகும் போது தவறுகள் தாமாகவே மறைகின்றன.

புதுப்புதுக் கருமங்களை சைவசமய கிரியை முறைப்படி ஆரம்பிப்பதை நோக்கினால் அந்தந்த தொழில் விற்பன்னர்கள் அன்புடன் கௌரவிக்கப்படுகின்றார்கள். தேர்வெள்ளோட்டம். வீடு குடிபுகுதல் போன்ற எல்லா ஆரம்பக் கிரியைகளிலும் அந்தந்த தொழில் புரிவோருக்கு அன்பு மரியாதை செய்யப்படுகின்றது. ஊதியத்தைக் கூட பேரம் பேசி சம்பளம் என்ற அடிப்படையில் கொடுக்காது கொடுப்பவர் மனதையும் வாங்குபவர் மனதையும் அன்பால் பிணைக்கும் தட்சணை முறை இருந்துவருகிறது. சம்பளம் என்ற முறை தற்போது புகுந்திருப்பது விரும்பக்கூடிய ஒன்று அல்ல. தட்சணை என்பது கொடுப்பவர் வாங்குபவரின் மனதின்தன்மையை பொறுத்த விடயமாகும், வெறும் பேரம் அல்ல.

ஆலயத்திற்கு வழிபாட்டிற்கு வருவோர் எல்லாம் கிரியை முறைகளை அறிந்திருக்கவேண்டும் என்பதில்லை மனப்பயிற்சியுடன் சிறிது சிறிதாக அறிந்துகொள்வதே சாலச் சிறந்தது, மனம் பக்குவம் ஏற்பட்டுவிடின் கிரியை முறைத் தத்துவங்கள் பிறர் விளக்காமலே துலங்கி விடும்.

வைத்தியரிடமிருந்து வைத்திய விபரங்களை அறிந்தபின்தான் சிகிச்சை பெற நினைத்தால், அது சாத்தியமானதல்ல, வைத்தியர் ஆக நினைப்பின் அல்லது வைத்தியம் தெரிந்து கொள்ள நினைப்பின் அதற்கான முயற்சியில் பயிற்சியும் அவசியமாகின்றது.

கிறியைகளை பயில விரும்புவோர் வட மொழியும் பயில வேண்டிய அவசியம் எழுகின்றது. பொதுசன தொடர்ப்புக்காகவும் தொழிலுக்காகவும் பலமொழிகளை கற்கும் நாம், ஆத்ம ஞானம் பெற வட மொழி பயிலுவது சாலச்சிறந்ததே, உருவாகிய மொழியில் பயில்வதால் பிரயோசனம் அதிகமாகின்றது.

ஆலயங்கலிலும் சைவ சமயத்தினரிடையேயும் பெருமதிப்பு பெற்ற தேவார, பாராயண பாடல் கன்ஸ்தோத்திரங்கள் யாவும் இறைவனிடம் காட்டப்படும் அன்பின் வெளிப்பாடுகளே. அன்புமயமான பாடல்களை பாடுவதால் மனம் அன்புமயமாக பெருவாய்ப்புகள் உருவாகின்றன. தியானம் இதைவிட உன்னதமான பல படிகளை உணர்த்துகின்றது.

அன்னதானம் போன்ற ஏழைகளுக்கு உதவும் செயல்கள் வெறுமனே பசிபோக்கும் நடவடிக்கையோ, அல்லது தேவைகளை பூர்த்தி செய்வதோ அல்ல, ஒரு பசிபோக இன்னோர் பசி உருவாகும். ஒரு தேவை நிறைவேற பல தேவைகள் உருவாகும். தேவையை பூர்த்தி செய்யும் போது கொடுப்பவர் வாங்குபவரிடையே ஏற்படும் அன்புப் பரிமாற்றமே மிக முக்கியம். அன்புப் பரிமாற்றம் செய்ய ஏற்பட்ட சந்தர்ப்பங்களே மற்றவை.

எழுத்துக்களை எழுத ஆரம்பிக்கும் போது பிள்ளையார் சுழி போடுவதும் சிவமயம் போடுவதும் உலகம் சிவமயம் என்று கொண்டாலும், விக்கினங்கள் அகல அன்பாயிருங்கள் என்பதே சாலச்சிறந்த உண்மை.

உலகம் எந்தநிலையில் இருக்கின்றது என்று நோக்கினால் அது தன் நிலையில் இருத்தபடியே இருக்கின்றது. அது தன் நியதிப்படி மாறுபாடு அடையும் அதை யாரும் தடுத்து விட முடியாது, ஆயினும் அவரவர் நிலைப்பாட்டிற்கும் சிந்தனைக்கும் ஏற்ப நினைவுகள் மாறுகின்றன.

குழந்தையோ உலகில் உள்ளன எல்லாம் விளையாட்டுப் பொருட்களே எல்லாவற்றையும் விளையாட்டிற்கு பயன்படுத்த நினைக்கின்றது. இளைஞர்களோ எல்லாமே இன்பமயம் அனைத்தையும் நாமே அனுபவிக்க வேண்டும் என்று நினைக்கின்றார்கள்.

வயோதிபர்களோ உலகில் ஒன்றுமே இல்லை என்று ஒதுங்க நினைக்கின்றார்கள். விஞ்ஞானிகளோ, புதுமைகள் படைக்க ஆவல் அடைகின்றனர். தேவைகளை நிறைவேற்ற நினைக்கின்றார்கள். நான் எதையும் சாதிப்பேன் என்று ஆணவமும் பற்றுதலும் கொண்டவர்கள். சாதனைகள் படைக்க முனைகின்றனர். ஒரு தேவையை பூர்த்தி செய்தால் மறுபடி பல தேவைகள் உதயமாகின்றன, முடிவோ தீர்வோ ஏற்படுவதில்லை.

என்றோ ஒருநாள் எல்லாம் அழியலாம் மாறலாம் சரித்திரங்களே புரியாமல் போகலாம். அப்போது சாதனைகள் யாவும் வேதனை ஆகலாம்.

எமது சமயசித்தாந்தங்களோ யாவற்றையும் அன்பு மயமாக்கி ஆன்ம திருப்தி காணவிழைகின்றது. நாம் அன்புடன் வளர்க்கும் பிராணிகளே அன்புக்கு கட்டுப்படும் போது ஆறறிவு படைத்த மனிதன் அன்புக்கு கட்டுப்படமாட்டானா? அப்படியாரும் அன்புக்கு கட்டுப்படாமல் போனால், அங்கு அன்பு செலுத்தப்பட்ட முறையில் தவறு ஏற்பட்டிருக்கும் அல்லது அவரது பக்குவத்திற்கு அளிக்கப்பட்ட அன்பின் அளவு போதாமல் இருக்ககூடும்.

தூய அன்பு காட்டப்படும் போது தவறுகள் ஏற்பட நியாயம் இல்லை.

ஆசைகள், தேவைகள், பருவக் கோளாறுகள் பற்றுதல்கள் போன்ற கலப்பு அன்பில் ஏற்படும் போதுதான் குழப்பங்களும், குரோதங்களும் துயரும் ஏற்படுகின்றன.

மக்கள் சேவை மகேசன் சேவை என்பதெல்லாம் அன்புடன் செய்யும் சேவைகளால், அறநெறியால் அவரவர் மனம் திருப்தியுறுவதையே குறிக்கும். இறைவன் அவரிடம் குடிகொள்கின்றார் என்றால், அவர் அன்புமயமாகின்றார் என்பதே பொருள். அவரவர் செய்வது அவரவர்க்கே என்ற சாதாரண வாக்கியங்களே உண்மைகளை உணர்த்தப் போதுமானவை.

ஆணவத்தோடும் கர்வத்தோடும் செய்பவை போலிகளாகின்றன, இக்காலத்தில் பந்தம் பிடித்தல் என்று கூறப்படும் தேவை நோக்கோடு அன்புகாட்டுவதாக வெறுமனே பாசாங்கு செய்வதும் போலிகளே. அன்பு கொஞ்சமாவது இருக்குமாயின் அதற்கேற்ப பலன்கள் இருக்கும். தம்முடன் இருப்போரோடு அன்போடு நடக்கமுடியாமல் இறைவனிடம் மட்டும் அன்பு கொள்வோம் என்று பாசாங்கு செய்வதும் போலியே.

தேவைக்காக இறைவனிடம் அன்பு கொள்வது தவறு ஆகாது, ஆனால் அவ்வன்பு வளர்ச்சி காணுதல் வேண்டும்.

நாளாந்தம் கர்மங்கள் செய்து தேவைகளை பூர்த்தி செய்ய நினைக்கும் நாம் அன்புடனும் பண்புடனும் கர்மமாற்றுவதன் மூலம் கர்மயோகம் கைகூடப் பெறுவோம், யோகமும் ஞானமும் கைகூடுவதற்கு கர்மங்கள் யாவும் அன்புமயமாதல் வேண்டும், அதுவே தெய்வீகமும் ஆகும்.

அனைவரும் அன்புடையோர் ஆக, அருளன்புடையோர் உதவ வேண்டும், சேவையை பெறுவோரும், சேவையாற்றுவோருக்கு சந்தர்ப்பம் அளிப்பதால் அவர்களும் ஓரளவு சேவை செய்தவர் ஆகின்றனர்.

ஆகவே உலகம் அன்புமயமாக அன்புப் பரிமாற்றமே காரணமாகின்றது.

சைவ சித்தாந்தங்களில் சில, காலக் கோளாறுகளால் துருப்பிடித்து தீயன போல் காட்சியளிக்கின்றன. அவற்றை துலக்கி எடுத்து பயன் பெறுவோமாக.

''எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு''

''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது''

திருக்குறள்

''தம்முயிர் போலெவ்வுயிருந்தானென்று தண்ணருள் கூர்
செம்மையருக்கேவலென்று செய்வேன்பராபரமே''

தாயுமானவர்

# மனமும் எண்ணமும்.

க. கணேசராஜா
கலைப்பீடம் 2ம் வருடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

மனம்! மனம்! என்கிறார்களே மனம் என்றால் என்ன? மனம் உண்டா அது எவ்விடத்தில்? அதற்கு வடிவம் உண்டா? எப்படி? அதன் இருப்பிடம் என்ன? அது எப்போது தோன்றுகின்றது, மறைகின்றது என்று யாருக்கும் தெரிவது இல்லை. சற்று சிந்தியுங்கள் மனம் வேறு எண்ணம் வேறு என்று யாரும் நினைக்க வேண்டாம். மனதில் இருந்துதான் என்ன அலைகள் புறப்படுகின்றன ஆனால் அந்த அலைகளை பரவ விடாமல் தடுத்து அந்த அலைகலை ஒரு நிலைப்படுத்தி நோக்கினால் இவ்வெண்ண அலைகளின் வீச்சுக்கு தகுந்தபடி மனதில் வலிமையே, பின்பு மனம் திருப்திப் படுவதற்கு காரணமாகும். இவ்விதம் வலிமை பெற்றதனை இந்த உதாரணத்தின் மூலம் புரிந்து கொள்ளலாம். பெரிய ஏரி குளம்களில் பொருட்களைப் போட்டால் பொருள் விழுந்த இடத்தில் இருந்து சிறிது அலைகள் புறப்பட்டு எட்டுத்திசைகளிலும் பரவி வட்டமாக போய்க் கொண்டே இருக்கும். சிறிது நேரம் சென்றபின் அலைகள் மெல்ல மெல்ல மறைந்து விடும். இதுபோல் சுமார் 10 விட்டமுள்ள ஒரு தண்ணீர் தொட்டிலில் நீர் இறைக்கப்பட்ட பின் சிறிய ஒரு தகரடப்பாவை நாம் வலது விரல்களால் அதன் வாய்ப்பக்கத்தில் பிடித்துக் கொண்டு அதன் அடிப்பாகத்தை தண்ணீர் மீது வைத்து சிறிது அழுத்தினால் நாம் பிடித்து இருக்கும் டப்பா சிறிது கீழ் நோக்கி தாழ்வாகும், அலைகள் அதைச்சுற்றி புறப்பட்டுப் போய் நீர்த் தொட்டியில் குறிப்பிட்ட சுவர்வரை சென்று மீண்டும் அந்த அலைகள் திரும்பி வந்து அந்த டப்பாவை மேல் நோக்கி தூக்கும். இதுபோல் சிறிது நேரம் செய்தோம். ஆனால் நமது கையையும் சேர்த்து மேலே தூக்கும். எந்த இடத்தில் இருந்து சக்தி புறப்பட்டு சென்றதோ அந்த இடத்தே கட்டுப்படுத்தியதன் பலனாக மீண்டும் திரும்பி வலுவுடன் வருகிறது. மேற் கூறியது போலவே மனதில் இருந்து புறப்படும் எண்ணம்களை பரவலாக சிதறவிடாமல் நாம் தடுத்துவிட்டால் மீண்டும் மனத்திடமே வந்து வலிவு பெறும். இழந்த சக்தியை மீண்டும் பெற்றால் மனதிற்கு மன வலிமை கிடைக்கும்.

மேலும் இத்தகைய மனம் குறித்தும் எண்ணங்கள் குறித்தும் ஐரோப்பா தத்துவ நியாயவாதிகளான 'டேகாட், ஸ்பினோசா லைபினிஸ்'' போன்றோரது கருத்து மனம் என்ற ஒன்று உண்டு என்றும் அந்த மனத்தின் மூலமே இந்த எண்ணங்கள் எழுகின்றன என்றும் இந்த எண்ணத்தை நம் வழியில் பெறுவதற்கும், பேரின்ப அறிவினை பெறுவதற்கும் மனம் தனது சிந்தனை எண்ணங்களை ஒருமித்து ஆசாபாசங்களில் இருந்து விடுதலை அடைவதன் மூலமே அறிவின் இரகசியத்தை காணலாம் என்றனர். இந்த அறிவியல் வாதிகள் ஏன் கிரேக்கத்தில் கூட ''பைதகரஸ்'' சிந்தனை ரீதியாக மனத்தை ஒரு நிலைப்படுத்துவதன் மூலம் ஆன்மாக்கள் ஒவ்வொன்றும் தன்னுடைய வாழ்வில் சிறந்த பிறவிப் பேற்றினை அடைகின்றனர் என்றும் ''தினைவிதைத்தவன் தினை அறுப்பான்

வினை விதைத்தவன் வினை அறுப்பான்'' என்ற முது மொழிக்கு இணங்க இவர் தனது சினேகிதனை பின்னர் ஒரு நாயுடன் தொடர் படுத்தி கூறினார் இது கிட்டத்தட்ட 6ம் நூற்றாண்டில் வெளிப்படுத்தப்பட்டது. மேலும் இது குறித்து கனடா நாட்டு அறிவியல் அறிஞர் சிந்தனைவாதி ''ஜெக்கல் - ஏ. புல்வான்'' என்பவரின் கருத்துரை எமது எண்ணங்கள் கட்டுப்படாத நிலையில் கடல் அலைகளைப்போல் காரணம் இன்றி அலைமோதி தன் ஆற்றலை மனத்தின் சக்தியை வீணடிக்கின்றன. இவ்வாறு அலைபாயும் எண்ணங்களை கட்டுப்படுத்தி ஒரு முனை நோக்கிய நிலையில் நிறுத்தும் போது எண்ணங்கள் கற்பனை செய்து பார்க்கமுடியாத அளவுக்கு மின்சக்தி பெற்றுவிடுகின்றது. இவ்வாறு எண்ணங்களில் அதிசயிக்கத்தக்க மின் சக்தியை நாம் விரும்புகின்ற திசையில் - அது எவ்வளவு தொலைவில் இருந்தாலும் செலுத்தி சிந்தனைக்கும், கற்பனைக்கும் எட்டாத சாதனைகள் அற்புதங்கள் ஆச்சரியங்களை செய்ய முடியும் என்றார்.

மேற்கூறிய அறிவியற் கருத்துப்படியே சில ஞானிகள் அல்லது சீவன்முத்தர்கள் தாங்கள் நினைத்தவற்றைச் செய்து கொண்டார்கள். இவர்கள் பிரகிருதியின் தொடர்பு நீக்கியவர்கள் ஆசையும் துன்பமும் அவரை அனுகா இவர்களின் மன வலிமையினால், மன உறக்கத்தினால் செய்யும் அற்புதங்கள் அவர்களுக்குத் தெரியாது பார்வையாளருக்கே தெரிகிறது இதற்குகாரணம் என்ன? உடலா?, மனமா?, எண்ணமா? இதனைத்தான் பிளேட்டோ (Plato), இமானுவல்காண்ட், போன்றோர் கூறினார்கள். சீரான அறிவியல் சிந்தனையியல் ஒவ்வொரு ஆன்மாவும் தனது எண்ணங்களை பகுத்தறிவோடு செயற்படுத்தும் போது கடமை அதாவது பற்றற்ற கடமை (நிஸ்காமிக கருமம்)கள் புனிதமே, அவை பற்று அடிப்படையில் அமையும் வரையில் நல்லன என்றோ தீயன என்றோ கூறமுடியாது. அதன் மூலம் நாம் நன்மை தீமை எதனையும் எதிர்பார்க்க முடியாது. ஒவ்வொருவரும் தமது மனத்தினை ஒரு நிலைப்படுத்தி தமது எண்ணங்கள் மூலம் கடமையை அல்லது செயல்களை அறப்பண்புடையவைகளாக ஆக்குவது கடமையுணர்வே ஆகும். இதனை சைவசித்தாந்தம் நிஸ்காமிக கருமம், காமிக கருமம் என்கின்றது. இதில் பற்றற்ற கடமையாகிய நிஸ்காமிக கருமமே சிறந்தது என்கிறது இதுவே அறவாழ்க்கையோடு இனைந்தது இதுவே எதிர்காலத்துக்கு வித்திடுவது இதனைத்தான் எல்லா மதங்களும் கூறுகின்றன. பௌத்தமதத்தை எடுத்தாலும் கூட அங்கும் இதுவே போதிக்கப்படுகிறது. சித்தார்த்தர் என்ற பெயருடைய கௌதம புத்தர் கூட தனது இளம் வயதில் தனது சொத்துக்கள், அரண்மனை பதவி யாவற்றையும் துறந்து இவர் உண்மையை கண்டறிய பற்றற்ற கடமையைப் பற்றி விளக்கமாக கூறியதோடு ஒவ்வொருவருடைய மன எண்ணமும் பற்றற்ற வகையில் கடமையை செய்யக்கூடிய எண்ணமாக ஒவ்வொருவருடைய மனமும் ஆழமாக மாற வேண்டும் அப்போதுதான் அவனது மனம் பூரணமடைகின்றது என்றார்.

ஏன் ஆன்மாக்கள் ஒவ்வொன்றினுடைய எண்னமும் அல்லது கடமையும் எவ்வாறு இருக்க வேண்டும் என சமய நூல்களும் எடுத்துக் கூறுகின்றன. சமயம் என்பது ''வெறும் நம்பிக்கை கிரியைகளோடு மட்டும் அமையாது ஒரு உயர்ந்த குறிக்கோளை தனது உள்பொருளாகக் கொண்டுள்ளது அதன் சிறப்பான குறிக்கோள் நேர்மையான வாழ்க்கைக்கு உதவுவதாகும்''. இத்தகைய சமய நூல்கலும் கூட ஒரு உதாரணத்துக்கு பகவத்கீதையிலே கண்ணன் கூறியதையே இன்று உலகம் போற்றும் கீதோபதேசமாக போற்றுகின்றனர். இது எல்லா மொழியிலும் அமைத்துள்ளனர். இதன்மூலம் மனம் ஒவ்வொன்றும் நல்லதையே செய்ய வேண்டும், நல்லதையே நினைக்கவேண்டும், நல்லதை

யே பேச வேண்டும் என கூறுவார்கள் சமயப் பெரியார்கள். அது ஏன்? மனத்தூய்மையே உண்மையான ஆத்மீகத்தூய்மையாக கொள்ளப்படும், இந்த ஆத்மீகத்தூய்மையே ஆசையை ஒடுக்குவதற்கு வித்திடும் ''அறத்தால் வருவதே இன்பம் மற்றெல்லாம் புறத்தார்க்கு புகழும் இல'' என்கிறது திருக்குறள். உலகில் பெரிய பெரிய சாதனைகளை செய்த சமய அறிஞர்கள் எல்லோருக்கும் மனம் தூய்மையாக இருந்தது. இதனால் அவர்களின் செயல்கள் எல்லாம் விசித்திரமாகவே அமைந்து காணப்பட்டன, இந்தவகையில் மனத்தையும் எண்ணத்தையும் ஒரு நிலைப்படுத்திய சித்தர்களின் பல பெருமைகளோ சொல்லால் சொல்ல முடியாத அளவு. இத்துணை நின்றவர்களில் அன்மைய நாட்டில் இருந்து அதாவது இந்தியாவில் இருந்து இங்கு வந்தவர்கள் செய்த அற்புதங்களை நாம் அறியாமல் இல்லையா? இதற்கு உதாரணமாக நவநாதச் சித்தர், பெரியானைக் குட்டி அதேபோன்று காரைதீவில் சமாதி அடைந்துள்ள சித்தானைக்குட்டி போன்றோரை குறிப்பிடலாம். இவர்களின் செயல்கள் அன்றைய மக்களுக்கு எளிதில் விளங்கிக் கொள்ள முடியாமல் இருந்தது.

''ஒவ்வொருவரும் இவ் உலக பிரகிருதியில் இருந்து பிரிந்து மனத்தை எண்ணங்கள் வாயிலாக ஒரு நிலைப்படுத்தி அறிவு மயமான உண்மை சொரூபத்தை புருடன் அடைவதே உண்மையான மேலான அறிவு, அதுவே யோகநிலையும்'' என கூறுகின்ற பகவத் கீதை மனம் ஒரு நிலைப்படுவதற்கும் நான்குவகையான யோகங்களை கூறுகிறது. ஒவ்வொரு சீவனும் பரம் பொருளோடு சேர்தலே உபநிடதம் யோகம் என்கிறது. உலகில் உள்ள ஆன்மா தனது மனத்தினை எண்ண அலைகள் மூலம் ஒருநிலைப்படுத்துவது யோகம் ஆகும். உள்ளத்தை தூய்மைப்படுத்துவதற்கு முதலில் உடலின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டும். அதாவது எம்மிடம் உள்ள 'நான்'' ''எனது'' என்ற நினைவு அறவே ஒழிதலே யோகமாகும். மனம் எதையும் நுகரும் தன்மை வாய்ந்தது. கண்ட கண்டதை நுகரவிடாது தடுப்பதற்காகவே அட்டாங்க யோகப் புருடார்த்தங்கள், நாற்பாதம் என்பன போன்ற பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன.

மனம்தான் தனது எண்ணங்கள் மூலம் கற்பனையை தோற்றுவிக்கிறது. என்றும் அதனை தோற்றுவிக்கும் இடம் இதுவே ஆகும். இயல்பாக தங்கத்தைச் சுட்டாலும் தங்கம்தான் பெறலாம் ஆனால் மனத்தை சுட்டால் என்ன பெறலாம்? அதன் மூலம் எண்ணம் எவ்வாறு அமையும்? இதனைத்தானே கல்லால் அடித்த அடி வலிக்கவில்லை சொல்லால் அடித்த அடி வலிக்கிறது என்கிறார்களோ? அந்த அடி விழுந்த இடம் எங்கு என்று தெரிந்து கொண்டீர்களா? இதனாலே தானோ அனுபவவாதிகளில் ஒருவராகிய 'லாக்' என்பவர் மனம் ஒன்றுமே எழுதப்படாத வெற்றுப்பலகை (Tabula rasa) என்றாரோ? அப்படியானால் கற்பனை என்பது எவ்விடத்திலே என்று சிந்தித்தால் இலகுவில் விளங்கும். ஆனால் மனம் பற்றிய ஆய்வில் ஈடுபட்ட நவீன உளவியலாளர் சிக்மன் புறைட் (1910) இந்த மனத்தை மூன்றுவகையாக பிரித்தார் அடிமனம், நனவு நிலை மனம், நனவிலி மனம் என்பனவே அவை. இவ்வாறு நவீனகால மெய்யியலாளரும் உளவியலாளருமான இவர் நன்றாக மனத்தைப்பற்றி ஆய்வு செய்தே இவ்வாறு கூறினார்.

மேலும் மனத்தை அதன் நோக்குக்கு விட்டுவிட்டால் மனித எண்ணங்கள் அல்லது குறிக்கோளை அடையமுடியாது. ஒருவழியில் இதனை இழுத்துப் பிடித்தாலும் மறுவழியில் பிய்த்துக்கொண்டு ஓடிவிடும். ஓரளவு கட்டுப்படுத்தி இருக்கும் போது பிற

ரது ஒருவார்த்தையினால் அல்லது சிறிய சம்பவத்தினால் எண்ணங்கள் நிலைகுலைந்து கட்டவிழ்ந்து, சிதறி தாறுமாறாக முரண்பாடான (Abnormal) நடத்தைக்கு வழிவகுக் கிறது. இதனை மனிதன் கடைப்பிடித்தால் பிரபஞ்ச வெளியோடு தொடர்பு கொள்ள லாம். அதன் மூலம் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம், ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம்; பிறருக்கும் கூறலாம்.

தகுந்த பயிற்சியும் அதற்கு ஏற்ப ஒழுங்கு முறைகளும் கைக் கொண்டாலும் நல் ஒழுக்கம், சுத்தம், அன்பு, பிறர் பசி போக்கும் அருங்குணங்களும் அடையப் பெற்றோர் இறுதிக் குறிக்கோளை அடைந்து வெற்றி பெறக்கூடியதாக உள்ளது. இதனைத்தான் இந்திய தத்துவ வரலாற்றில் முழுக்க முழுக்க ''ரீதக்'' கோட்பாடு கூறுகிறது. சாதாரண மக்கள் இதற்கு சாதகமாக மேலும் பல கருத்துக்களை கூறுவர் ''மனம் கொண்டதே மாளி கை.'' ''மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்'' (நியுட்டன்), ''அலைபாயுதே மனமே,'' 'மனம் ஒரு சிறைச்சாலை போன்றது,' ''போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து,' ''மயங்காதே மனமே'' போன்றன எல்லாம் இந்த மனத்தினை குறிப்பிடுவதற்கு வழங்கும் பேச்சுவழக்குப் பொருள் படுவன ஆகும். ஆனால் இந்த மனத்திற்கு அல்லது சிந்தனைக்கு உடம்புக்கு பரப்பு இருப்பதைப் போன்று பரப்பு இல்லாத பொருள் மனம், இது எவ்வாறு,? பரப்பு இல்லாத பொருள் எவ்வாறு தொழிற்படுகின்றது?. சற்று சிந்தியுங்கள்! மனம் கொண்டதே மாளிகை அது ஏன்? எவ்வாறு? மனம் ஒரு இயந்திர மாம் அதற்கு என்ன எரி பொருள்? சற்று பகுத்தறிவோடு அணுகுங்கள்.

மனம் பாதிக்கப்பட்டால் உடல் பாதிக்கப்பட்டது போன்று எம் உடல்நிலை சோர்வடைகிறது. உடல் நலம் பாதிக்கப்படுமானால் வைத்தியர் சிகிச்சை அளிப்பார் மனம் பாதிக்கப்பட்டால் சிகிச்சை பூரணமாக அளிக்க முடியாது எனலாம். இதனை உளக்கோளாறு என்பர். மனம்தான் உடல் நலம் குன்றுவதற்கு காரணமாகலாம் என்றால் திருமணமானவர்கள் பலர் அதிகமாக பருத்த உடம்பினை பெறுகிறார்களே அது ஏன் அவர்களின் உளரீதியான சந்தோசமோ? ஓம் இருக்கலாம். இதனால் உளம் சோர் வடையக் கூடாது. இதனால் பல விளைவுகள் ஏற்படும் என்ற கருத்தினை இன்று வைத்தியர் உட்பட சமூகம் வரை பேசப்படுகிறது.

இந்த மனத்தை ஒரு குரங்கிற்கு ஒப்பிடுவர். அதாவது ஒரு வினாடி கூட ஓடி ஒடுங்கி அடங்கி அமைதியுடன் இருக்கும் குரங்கைக் கூட நாம் யாராலும் பார்ப்பது சாத்தியமன்று. அது கிளைக்கு கிளைதாவும், மரத்திற்கு மரம் தாவும், கரணமடிப்பது போன்ற ஏதாவது ஒரு வேலையை தொழிற்படுத்திக் கொண்டே இருக்கும். இக் குரங்கை கட்டிப் போடுவதாலும், அச்சுறுத்துவதாலும், தண்டனை வழங்குவதாலும் அதன் செயலை கட்டுப்படுத்த முடியாது. நமது மனமும் மனத்தைச் சார்ந்த செயலும் கிட்டத் தட்ட இதைப்போன்ற நிலையில்தான் காணப்படுகின்றன. எந்த நேரமும் ஒரு வினாடி கூட ஏதாவது ஒரு விடயம் குறித்து அலைமோதிக்கொண்டிருப்பது, அல்லது பாய்ந்து கொண்டு இருப்பது மனத்தின் இயல்பாகும்.

நாம் எமது ஆசாபாசங்களை அடக்கி அல்லது ஒடுக்கி சும்மா அல்லது பரிநிர் வாண நிலையை அடைவது அரிது என சிவஞானசித்தியார் கூறி உள்ளது, மனிதன் தனது குரங்காட்டத்தை அதே போக்கில் விட்டு விட்டால், மனித வாழ்க்கை என்பது சிதைந்து சீரழிந்து போய்விடும். அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது அதனினும்

அரிது கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் உலகில் மனிதனால் முயன்றால் முடியாத காரியம் உண்டோ, முயற்சி உடையார் இகழ்ச்சியடையார், என்பர். ஒவ்வொரு ஆன்மாவும் முயற்சி செய்தால் உலகில் முடியாத எதுவும் உள்ளதோ என்று சிந்தித்துப் பாருங்கள்! அதற்காக ஓ மனமே என்று தேடும் எண்ணத்தை ஆரம்பித்து விடாதீர்கள். அது உங்களுக்குள் உள்ள ஒரு பொருள்தான் அது. இதனால் ஒவ்வொரு ஆன்மாவும் ஆத்மீகத் துறையிலே நமது எண்ணங்களை பலியிடுவதன் மூலம் தனது தனு, கரண, புவன போகம் என்ற இந்திரியங்களை கட்டுப்படுத்தி செயற்படும் ஆன்மா ஒவ்வொன்றினுடைய மனமும் இவ் உலக இன்பங்களில் அல்லது வாழ்க்கையில் தோயாது நின்று விடுகின்றது. இந்த நிலையை நாம் ''தாமரை இலையில் தண்ணீர் போல'' என்று ஒப்பிட முடியும். தாமரை இலையில் தண்ணீர்பட்டாலும் அது எவ்வாறு அதில் ஊறாது அல்லது தேயாது உள்ளதோ அதுபோன்று ஒவ்வொரு ஆன்மாவும் தனது ஆசாபாசங்களை கட்டுப்படுத்தி அதனூடாக ஆத்மீகத் துறையில் வளர்ச்சிகண்டு விடுகின்றது. இந்நிலையைத்தான் சைவசித்தாந்தம் பெத்த நிலையில் இருந்து முத்தி நிலைக்கு போகின்ற நிலை என்று கூறுகிறது. இவ்வாறு எண்ணத்தையும், அதன் மூலம் மனந்தினையும் ஒருநிலைக்கு கொண்டு வந்தவர்களே இன்று உலகம் போற்றும் உத்தமர்கள். இவர்கள்யாவும் தம் மனத்தில் தூய எண்ணத்துடனும் கட்டுப்பாட்டுடனும் வாழ்ந்தனர். இவர்களை ஞானிகள் சீவன் முத்தர்கள் என்பர், இவர்களே அவர்களது மனத்தினையும் எண்ணத்தினையும் மேற்கூறியது போன்று உலகில் ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்ந்தவர்கள். இவர்களில் விவேகானந்தர், இராமகிருஷ்ணபரமஹம்சர், பகவான் அரவிந்தர், சுவாமி விபுலானந்தர் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் கூட மனம் பற்றி கூறவில்லை?

எனவே ஒவ்வொரு ஆன்மாவும் இந்த உலகிலே தெய்வத்திற்கு அடுத்ததாக மனிதப் பிறவியை எடுத்துள்ளான். அந்த மனிதப் பிறவியினையே நாம் எடுத்தது ஒரு தவம், அதை வைத்துக் கொண்டு நாம் எமது எண்ணச் செயல்களை எல்லாரும் போல் அல்லாமல் சற்று சிந்தித்து செயலாற்றுவதன் மூலம் சிறந்த எண்ணச் சிந்தனையின் மூலம் எமது மனத்தை ஒருநிலைப்படுத்தும் போது உண்மையிலேயே இந்தப் பிறவியிலேயே நாம் பேரின்பத்தை அடைய முடியும், அடைந்தும் இருக்கிறார்கள் என்பது உலகம் உணர்ந்த உண்மையாகும் அத்தோடு உணர்த்தும் உண்மையும் ஆகும்.

---

உனக்கு எழுதப்படிக்கத் தெரிந்தால் தான் பிறருக்கு எழுதப்படிக்கக் கற்றுக் கொடுக்கலாம். பல நாட்கள் சிட்சைக்கு உட்பட்டபின் அல்லவோ பிறருக்குச் சொல்லித்தர முடியும். நல் வாழ்வு போதிப்பதும் இவ்விதமே. எழுத்தறிவு புகட்டுவதை விட நல் வாழ்வு புகட்டுவது எளிதல்ல.

— மார்க்க அரேலியர்

---

# ஒருமுனைப்படுதலும் ஈடுபடுதலும்

## பகவத்கீதையின் அடிப்படைத் தத்துவம்

— கலாநிதி திருமதி. மகேஸ்வரி அருட்செல்வம்
முதுநிலை விரிவுரையாளர் / சமஸ்கிருதத்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

பகவத்கீதை பலரும் அறிந்த ஒரு நூல், பகவத்கீதை கூறும் நிஷ்காம கர்மக் கோட்பாடும் பலர் அறிந்ததொன்றே ஆனால் பகவத்கீதை நிஷ்காம கர்மத்தோடு முடிந்து விடவில்லை. பகவத்கீதையின் அடிப்படைத் தத்துவத்தை ஒருமுனைப்படுதலும் ஈடுபடுத்துதலுமென்று வருணிக்கலாம். இப்பொருள்படும் சமஸ்கிருதப் பதங்கள் நிவிருத்தி, பிரவிருத்தி என்பன. நிவிருத்தி எனின் 'விலகுதல்', 'துறத்தல்' 'உலகக்கருமங்களினின்று' விடுபடுதலாம். பிரவிருத்தி இதற்கு நேர் எதிரான பொருள் படும். பிரவிருத்தி எனின் 'முன்னே போதல்' 'பங்குபற்றுதல்' ஈடுபடுதலாம். பகவத்கீதையிற் கிருஷ்ண பகவான் மனிதன் செயலாற்றுதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். மனிதன் வாழ்க்கையிற் பங்குபற்ற வேண்டும் அவன் தன் கடமைகளைத் துறக்கக்கூடாது என்கிறார். கிருஷ்ணர் மனிதன் செயலிற் சுதந்திரமாய் ஈடுபடுவதனால் அவன் தனக்குள் ஒருமுனைப்பட வேண்டும். தன் மனக்கண்களை உள்ளே திருப்பித் தன் உள்ளான உண்மையை உணர்ந்து கொளல் அவசியம். உலகத்தின் உடலின் ஈர்ப்புகளினின்று விடுபட வேண்டும். பகவத்கீதையிற் காணப்படும் பல்வேறு கருத்துப் போக்குகளையும் தெளிவுபடுத்தி, இவையெல்லாம் இவ்விரு அடிப்படையாக கருத்துகளாகிய நிவிருத்திக்கும் பிரவிருத்திக்கும் இட்டுச் செல்கின்றமையை இக்கட்டுரையில் மேலே காண்போம்.

பகவத்கீதையின் ஆக்கியோன் தமது நூலுக்கு சிறந்த பின்னணியொன்றைத் தெரிந்து கொள்கிறார். அன்றைக்குப் பாரதப்போரின் முதலாம் நாள். கௌரவ பாண்டவ சேனைகள் எதிர் எதிரே அணிவகுத்து நிற்கின்றன. அருச்சுனன் தனது நண்பனும் தேரோட்டியுமாகிய கிருஷ்ணரோடு தேர்த்தட்டில் நின்று கொண்டு எதிரே நிற்கும் கௌரவ சேனையைப் பார்வையிடுகிறான். தன் தன் மதிப்பிற்குரிய ஆசாரியர்களாகிய துரோணர், பீஷ்மர், கிருபர் என்போரை தன் மைத்துனர், உறவினர், சக அரசரையும் கண்டதும் அவன் மனம் ஆற்றொணாத் துயரடைகிறது. இவர்கள் எல்லோரும் போரில் மடியப் போகின்றனரே என்ற சிந்தனை அவனைத் துணுக்குறச் செய்கிறது. அவன் மனம் தளர்கிறது தன் வில்லைப் போட்டு விட்டுத் தான் போர் புரிய மாட்டேனென்று சொல்லிக் கொண்டு தேர்த்தட்டில் அமர்கிறான். இந்த இக்கட்டான நிலையில் அருச்சுனனுக்குப் புத்தி புகட்டி அவனைப் போரிற் பங்கு பற்றச் செய்யும் கடமை கிருஷ்ணருடயதாகிறது.

இந்நூலைச் சரிவரப் புரிந்துகொள்ளுவதற்கு இந்நூலின் தத்துவப் பின்னணியைப் புரிந்துகொள்ளல் அவசியம். அக்காலத்தில் இந்து சமயம் மூன்று சவால்களையெதிர் நோக்க வேண்டியிருந்தது.

(1) துறவு வழியும் துறவு வழியை போற்றும் சமயங்களும் விடுத்த சவால்

(2) இறைவனின் உண்மையை மறுக்கும் கோட்பாடு

(3) உலகத்தின் உண்மையை மறுக்கும் அல்லது இழித்துக் கருதுவோர் போக்கு

முதலில் சன்னியாச வழி அல்லது துறவு மார்க்கம் விடுத்த சவாலைக் கவனிப்போம். உபநிடதங்களுள் மிகப் பழைமையானவற்றையடுத்து கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுமட்டிலே கீதை இயற்றப்பட்டது என்று ஆராய்ச்சியாளர் கருதுவர். இதே காலத்திலேயே துறவுமார்க்கத்தை விதந்து கூறும் பௌத்த சமண சமயங்கள் பெருமதிப்புப் பெற்றன. உலகத்தின் அடிப்படை உண்மையாகிய பிரமத்தையறிதல் உலகச் செல்வங்களைப் பெறுதலிலும் மேலானது என்று உபநிடதங்கள் கூடக் கூறின. பிரம உலகத்தின் இன்பம் உலக இன்பத்தைக் காட்டிலும் பல கோடி மடங்கு கூடியது என்று தைத்திரீய உபநிடதத்தின் ஆனந்தவல்லிப் பகுதி கூறுகிறது. இந்நிலையிற் துறவு வழி சிறந்ததென்று பலர் கருதியதில் வியப்பெதுவுமில்லை. பிரமத்தையறிந்ததும் மனிதன் தன் வீட்டை விட்டுத் துறவு வாழ்க்கை மேற்கொண்டு ஐயம் ஏற்றுச் சீவனம் பண்ணுகிறானென்று ''பிருகதாரணிய'' உபநிடதம் கூறுகிறது. கிரியை நம்பிக்கையற்றவர்களாய்ச் சமுதாயத்தினின்று விலகி வாழ்ந்தோர் வேதகாலங்களிற் கூட இருந்தனரென்று அறிகிறோம். சமுதாய வாழ்க்கையினின்றும் கடமைகளினின்றும் விலகும் இப்போக்கு, பௌத்த சமண சமயங்கள் வளர்ச்சியுற்ற இக்காலத்தில் வலுப்பெறலாயிற்று. இந்நிலையில் உலகியல் வாழ்க்கையை அங்கீகரிக்கும் (World - Affirmation) தனது தத்துவத்தைப் பேணிக்கொள்ள இந்து சமயம் சில வழிமுறைகளைக் கையாள வேண்டியிருந்தது. இவ்வெத்தனத்தைச் சாதிக்க இந்து சமயம் ''சதுராஷ்ரமக்கோட்பாடு'' புருஷார்த்தக்கோட்பாடாகிய இரு வழிமுறைகளை வகுத்தது. சதுராஷ்ரமம் அல்லது நான்கு வாழ்க்கைப் படிநிலை ஒழுங்கின்படி மனிதன் தன் வாழ்க்கையின் முதற்பகுதியைப் பிரமச்சரிய நிலையில் மாணவனாக வேதம் ஓதிக்கொண்டு கழிக்கிறான். படிப்பு முடிந்ததும் வீடு திரும்பி திருமணம் செய்து இல்லற நிலையில் இருந்து சமுதாயத்திற்கும் குடும்பத்திற்கும் ஆற்ற வேண்டிய பணிகளைச் செய்கிறான். இக்கடமைகள் முடிந்ததும் குடும்பத்தினின்று விலகி வானப்பிரஸ்தனாகக் காட்டில் வாழ்கிறான். ஈற்றில் நான்காம் படிநிலையாகிய சன்னியாசத்திலே அவன் நிலையான இருப்பிடமற்ற சன்னியாசியாகிறான். புருஷார்த்தக் கோட்பாடு, தர்மம், அர்த்தம், காமம், அதாவது அறம், பொருள், இன்பமாகிய மூன்று இலட்சியங்களோடு மோட்சம் (வீடு) என்னும் நான்காம் இலட்சியத்தையும் ஏற்றுக் கொள்கிறது. இங்ஙனம் சன்னியாசத்தையும் மோட்சத்தையும் முறையே நான்காவது படிநிலையாகவும் இலட்சியமாகவும் ஏற்று துறவு வழிக்கும் ஒரு காலம் வகுத்துக் கொடுத்து, இந்து சமயம் இந்தத் துறவுப் போக்கைக் கட்டுப்படுத்த முயற்சித்தது.

பகவத்கீதையில் அருச்சுனன் உடனடியாக சன்னியாசம் மேற்கொள்ள முனையவில்லை. எனினும் சத்திரியனாகிய தன்னுடைய கடமையைத் துறக்க அவன் தயாராகவிருந்தான். போரிற் தன் உற்றார் உறவினரைக் கொல்ல நேருமே என்ற அவலம், அரச பரம்பரையிலே பிறந்த தன்னுடைய கடமை அதர்மத்தை

ஒழித்து தர்மத்தை நிலைநாட்டுவது என்பதை மறக்கச் செய்தது.

கீதையிலே கிருஷ்ணபகவான் அருச்சுனனுக்கு அவன் கடமையென்ன என்பதை விளக்குகிறார். தர்மம் என்ற சொல் 'நீதி' 'ஒழுக்கம்' 'கடமை' என்று பொருள் பெறுவது மட்டுமல்லாமல் இந்து சமயம் விதந்து கூறும் அன்னியோன்னிய ஒத்துழைப்பையும் குறிக்கின்றது. ஒவ்வொரு தனி மனிதனும் தனது கடமையை, சுயதர்மத்தைச் செய்தாற்றான் சமுதாயச்சக்கரம் ஒழுங்காக இயங்கும். ஒரு குறிப்பிட்ட வருணத்திற் பிறந்தால் ஒருவனைச் சாரும் கடமையே சுயதர்மம் எனப்படுவது. பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரரென்றும் சமுதாயத்தின் நால்வருணப் பாகுப்பாடும்[2] பகவானுடைய அங்கீகாரத்தைப் பெற்றதே. "தாமே சமுதாயத்தை வருணங்களாகப் பகுத்து அவற்றிற்குரிய கடமைகளையும் வகுத்தேன்" என்று கிருஷ்ணபகவான் கூறுகிறார். பிற்காலத்தில் வருணங்களுக்கிடையிற் காணப்படும் பூசல்களையும் அநீதிகளையும் பகவான் ஆமோதித்தாரென்றும் கூறுவதற்கில்லை, எனினும் மனிதன் பிறப்பினாற் தன்னைச் சாரும் கடமைகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் வருணப்பாகுபாடு சமுதாயத்தின் ஒழுங்கான இயக்கத்திற்கு அவசியம் என்பதையுமே கிருஷ்ணர் வலியுறுத்துகிறார். தன் சுயதர்மத்தை முறையாகக் கடைப்பிடிப்பவன் அடுத்தடுத்த பிறவிகளில் உயர்ந்தவொரு வருணத்திலே பிறத்தலும் கூடும். தன் சுயதர்மத்தைக் கிரமமாக அனுசரிப்பவன் முழுமையடைகிறானென்று கிருஷ்ணர் கூறுகிறார்[3]. எனவே சமுதாய ஒழுங்கின் உறுதிப்பாட்டைப் பேணுவதற்காக லோகசங்கிரகத்திற்காக, அருச்சுனன் தன் சத்திரியக் கடமையைச் செய்தேயாக வேண்டும்.

"சமுதாயம் மட்டுமல்ல, படைப்பு முழுவதுமே தேவர்களும் கூட, இத்தகைய ஓர் அந்நியோன்னிய ஒத்துழைப்பு ஒழுங்கினைக்கப்பட்டுள்ளனர்" என்று கிருஷ்ணர் மேலும் விளக்குகிறார். மனிதன் தேவர்களுக்கு ஆகுதிகளைப் படைக்கத் தேவர்கள் மழையால் நிலத்தைப் போஷிக்கின்றனர், வயலின் வனத்தின் விளைச்சலை மனிதன் தேவர்களுக்கு நன்றிப் படையலாகப் அர்ப்பணிக்கின்றான். நிலத்தின் பலனைத் தேவர்களுக்குப் படைக்காமல் உண்கின்றவன் கள்வனென்று கீதை கூறுகிறது[4]. இயற்கையையும் தேவர்களையும் மனிதனையும் இணைக்கும் இவ்வாழ்க்கைச் சக்கரமும் சமுதாயச் சக்கரத்தைப் போன்றதே. எனவே பிறப்பினாற் தன்னைச் சாரும் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதினால் மனிதன் சமுதாய ஒழுங்கையும் வாழ்க்கை ஒழுங்கையும் பேணுகின்றவன் ஆவான்.

அருச்சுனனைப் போரிற் பங்குபற்றத் தூண்டுவதற்குக் கிருஷ்ணபகவான் மேலும் ஒரு காரணத்தைக் காட்டுகிறார். சமுதாயத்தின் முன்னணியிலிருக்கும் சத்திரியனாகிய அருச்சுனன் சமுதாயத்திற்கொரு முன்மாதிரியாக வாழவேண்டுமென்பதை நினைவூட்டுகிறார். "பெரியவனொருவன் எதைச் செய்கிறானோ அதையே ஏனையோரும் செய்வர், அவன் எந்த நெறியைப் பின்பற்றுகிறானோ அதனையே உலகமும் பின்பற்றும்" தாம் கூட செயலிலீடுபடுவது இந்தவொரு நோக்கிலே தான் என்று கிருஷ்ணபகவான் கூறுகிறார். செயலினால் எதையும் தான் பெறுவதற்கோ சாதிப்பதற்கோ அல்ல தாம் செயலில் ஈடுபடாவிடில் உலக மக்களும் தம்மைப்போலவே வாழ்வர். அதனால் சமுதாயத்திற் குழப்பமும் கெடுதியுமே ஏற்படும்[5]. எனவே சத்திரியனாகிய அருச்சுனன் தன் கடமையைத் துறத்தல் சமுதாயத்தை நிலை குலையச் செய்வதோடு நில்லாது தர்மத்தின் அழிவுக்கும் இட்டுச் செல்லும் என்கிறார் கிருஷ்ணபகவான்.

இந்து சமயம் இந்தக் காலத்தில் எதிர் நோக்க வேண்டியிருந்த இரண்டாவது சவால் இறைவனின் உண்மையை மறுக்கும் தத்துவங்களே. பௌத்த சமண தத்துவங்கள் கடவுட் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள வில்லை. அறுவகை தரிசனங்களிலொன்றாகிய சாங்கிய தத்துவமும் கூட இறைவனின் உண்மையை மறுத்தது. சாங்கிய தத்துவத்தின்படி புருஷரெனப்படும் எண்ணிறந்த ஆன்மாக்களும் மூலச்சட்டப் பொருளாகிய பிரகிருதியுமே உள்பொருள்களாம். பிரகிருதி இறைவனின் தொழிற்பாடெதுவுமின்றித் தானாகவே சிருஷ்டியாக மலரக் கூடியது. பகவத்கீதையின் கிருஷ்ணர் பிரகிருதியைப் பற்றிய இந்த இலக்கணத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. படைப்பு முழுவதையும் மேலான கடவுளாகிய புருஷோத்தமனின் ஆணைக்குக் கீதை உட்படுத்துகிறது. தனித் தனி ஆன்மாக்கள் இறைவனின் அம்சங்கள் இயற்கையும் இறைவனின் கண்காணிப்பிலேயேயுள்ளது. அதுவும் இறைவனின் கீழான அம்சமே [6] இங்ஙனம் இறைவனின் உண்மையையும் உள்பொருள் யாவற்றிற்கும் அதிதெய்வம் அவரேயென்பதையும் வலியுறுத்திக் கீதை இந்த இரண்டாவது சவாலையும் எதிர்க்கிறது.

உலகத்தின் உண்மையை மறுக்கிற அல்லது குறைவாகக் கருதுகிற போக்கே இந்து சமயம் எதிர் நோக்கிய மூன்றாவது சவாலாம். இந்தப் போக்கின் தொடக்க நிலையை உபநிடதங்களிலேயே காண்கிறோம். பிரமத்தின் உண்மையையும் முக்கியத்துவத்தையும் போற்றுகின்ற உபநிடதங்கள் உலகத்தை அத்துணை உண்மையாகக் கருதவில்லைப் போலுமென்ற ஊகத்திற்கு இடமளிக்கின்றன. இயற்கையின் பல்வேறு தோற்றங்களை வெறும் நாமமும், ரூபமும், பெயரும், வடிவமுமென்று கூறுமிடத்து, அவை பெயரிலும் உருவிலுமே வேறுபட்டன. அவற்றின் அடிப்படை உண்மை பிரமமொன்றே என்பது புலனாகின்றது. அதுவே சத்தியத்துள் சத்தியம், உண்மையுள் உண்மை. உலகத்தின் உண்மையைக் குறைவாக மதிக்கும் போக்கு சங்கரருடைய மாயைக் கோட்பாட்டில் வளர்ச்சியடைகிறது. கீதையிற் கிருஷ்ணபகவான் இந்த நோக்கையுமேற்றுக் கொள்ளவில்லை. சிருஷ்டி மலரவும் ஒடுங்கவும் செய்பவர் தாமே, தாம் அதனைத் தாங்குபவரும் தாமே, தம் முடைய கீழான அம்சத்தால் உலகம் முழுவதும் வியாபித்துள்ளதாகக் கூறுகிறார் பகவான். இயற்கையில் சிறந்ததெல்லாம் தாமேதான்! நீரின் சுவையும், சூரியனில் சந்திரனின் பிரகாசமும், பூமியின் சுகந்தமும், நெருப்பின் ஒளியும் தாமே தான் என்கின்றார். இங்ஙனம், இயற்கையே இறைவனை வெளிப்படுத்தி நிற்க, மனிதன் இயற்கையின் உண்மையையோ முக்கியத்துவத்தையோ மறுத்தல் கூடாது.

இங்ஙனம் இந்து சமயத்தின் கடவுள் உலகம் பற்றிய கோட்பாடுகளையும் உலகியலை அங்கீகரிக்கும் நோக்கையும் சிதைய விடாது காக்க முற்பட்ட பகவான் பலருக்கும் பொது அனுபவமான இன்னொரு குற்றத்தையுமெடுத்து விளக்குகிறார். அதுவே மோகம் அல்லது விபரீத அறிவாம். மோகம் என்ற பதமும் அதனின்று பெறப்பட்ட சொற்களும் சொற்றொடர்களும் பகவத்கீதையிற் பலதடவை காணப்படுகின்றன. மனிதனுடைய பிரச்சினைகள் பலவற்றிற்கும் இந்த மோகமே காரணியாகக் கீதை கருதுகிறது. கீதை மட்டுமல்ல இந்து தத்துவம் முழுவதுமே மனிதனின் துன்பங்களுக்கு இந்த விபரீத அறிவாகிய மோகத்தைக் காரணியாக காண்கின்றது.

பகவத்கீதையின் முதல் அத்தியாயங்களிலேயே கிருஷ்ண பகவான் ஒரு வகைப்பட்ட மோகத்தை விளக்குகிறார். அதாவது சரீரமே ஆன்மாவென்று கருதும் விபரீத அறிவாம் உபநிடதங்களுக்

குப் பிற்பட்ட இந்து தத்துவம், குறிப்பாக சாங்கிய, யோக, வேதாந்த, சித்தாந்தத் தத்துவங்கள், இயற்கை சடப் பொருளென்றும், மாயை அல்லது பிரகிருதி எனப்படும் சூக்கும சடப்பொருளின் காரியமென்றும் கருதுவன. இயற்கை மட்டுமல்ல, மனித சரீரமும் அதன் உறுப்புகளும் இந்த சடப்பொருளாலானவை. மனிதனுடைய உள்ளுறுப்புகளாகிய (அந்தக்கரணங்கள்) புத்தி, சித்தம், மனம், அகங்காரமென்பனவும் இம்மாயைப் பொருளின் காரியங்களாம். மனிதனுடைய ஆன்மா ஒழிந்த ஏனைய எல்லாம் சடப்பொருளாம். இந்த சடப் பொருளாகிய உடலும் தன் அழிவற்ற ஆன்மாவும் ஒன்று என்று மனிதன் கருதுதல் ஒரு வகைப்பட்ட விபரீத அறிவாம்.

அருச்சுனனைப் போரிற் பங்குபற்றத் தூண்டுவதற்குக் கிருஷ்ணபகவான் எடுத்துரைக்கும் பல காரணங்களுள் ஆன்மாவுக்கும் சரீரத்திற்குமிடையேயுள்ள இந்த அத்தியந்த வேறுபாடுமொன்றாகும். ஆன்மாவை அழிக்கவோ கொல்லவோ முடியாது. உடல் கொல்லப்பட்டாலும் ஆன்மாவுக்கு ஒருபோதும் அழிவில்லை. இந்த சாசுவதமான ஆன்மா பிறவிக்கும் பிறவி செல்லும். ஒரே சரீரத்திலேயே குழந்தைப் பருவம், யௌவனம், வயோதிபம், ஆகிய பருவங்களை அனுபவிப்பது போல ஆன்மா பல பிறவிக்கூடாகப் போகிறது. பழைய ஆடையைக் களைந்து விட்டுப் புதிய ஆடையைப் புனைவது போலவே ஆன்மா ஒரு உடலை விடுத்து இன்னொரு உடலை எடுத்துக் கொள்கிறது. இந்த ஆன்மாவையும் உடலையும் பற்றிய மயக்கமே அருச்சுனனுடைய தவறு [7]. ஆன்மா அழிவற்றதென அவன் தெளிவுற உணர்வானாயின் இங்ஙனம் கலக்கமுற்றுப் போர்செய்ய மறுக்க மாட்டான்.

அடுத்துத் தானே தன் செயலுக்குக் கர்த்தாவென்று கருதுகிற இன்னொரு வகைப்பட்ட மயக்கத்தைப் பற்றியும் கிருஷ்ணபகவான் கூறுகிறார். சாங்கிய வேதாந்த, தத்துவங்களின் ஆன்மா வெறும் சாட்சி, அதாவது பார்ப்பவன்; அது உண்மையில் செயலாற்றுவதில்லை. ஒன்றை நினைப்பதும் செய்வதும் பிரகிருதியின் காரியமாகிய எமது வெளி, உள் உறுப்புக்களே. இத்தத்துவங்களின் படி மூல சடப்பொருளாகிய பிரகிருதி தத்துவம் ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்கள் அல்லது அணுக்களாலாயது. சத்துவ குணம் ஒருவனை உதாரசிந்தை, நீதி, ஒழுக்க முள்ளவனாக்கும். ரஜஸ் குணம் படைத்தவன், ஆத்திரமும் உணர்ச்சிவேகம் மிக்கவனாய் இருப்பான் தமஸ் குணமுடையவனோ உற்சாகமற்ற, மந்த குணமுடையவனாய் இருப்பான். இம்முக்குணங்களும் கூடிய குறைந்த அளவுகளில் எல்லா மக்களிலும் இயற்கையிலும் உள்ளன. இயற்கையாக எமக்கு அமைந்த இந்தக் குணங்களே நாம் வாழ்க்கையை எதிர்நோக்கும் பாங்கை நிர்ணயிப்பன. ஆனால் மனிதன் தன் உடலிலும் உள்ளத்திலும் செல்வாக்குக் கொண்டுள்ள இம் முக்குணங்களின் தொழிற்பாட்டை உணராதவனாய் தான் சுதந்திரமாகச் செயற்படுவதாக நினைக்கிறான். தானே கர்த்தா 'செய்பவன்' என்றும் தான் சுதந்திரமாக எல்லா விடயங்களையும் முடிவு செய்து சாதிக்கிரதாகவும் எண்ணியகங்காரம் கொள்கிறான். அருச்சுனன் தனது விபரீத சிந்தையாலே கலக்கமடைகிறான் என்று கிருஷ்ணபகவான் இங்கும் தெளிவு படுத்துகிறார். தானே போரிற் பகைவரைக் கொல்லப் போகிறேனென்று அருச்சுனன் நினைப்பது தவறு. அவனல்ல சத்திரியனாகிய அவனுள் அமைந்திருக்கும் குணங்களே அவனைக் கொலைத்தொழிலில் ஈடுபடுத்தும். அவன் விருப்பத்திற்கு மாறாகவும் அவனை அக் குணங்களை போரிற் பங்குபற்றச் செய்யும். "எல்லாவித செயல்களும் பிரகிருதியின் குணங்களின் தொழிற்பாடுகளாம். அகங்காரத்தால் மயக்கமடைந்த சிந்தை

யுள்ளவன் தானே கர்த்தாவென்று நினைக்கிறான்,''[9] என்று கீதை கூறுகிறது. தான் என்கிற கருவமே மனிதனை இங்ஙனம் சிந்திக்கச் செய்கிறது. எனவே தன்னுடலின் தொழிற்பாட்டில் செல்வாக்குக் கொண்டுள்ள குணங்களையுணராது ''தானே செய்பவன்'' என்று கருதுதலே மனிதனுடைய மோகத்தின் இன்னொரு வெளிப்பாடாம்.

இன்னுமொரு விடயத்தைப்பற்றி அருச்சுனனுக்குத் தெளிவு இருக்கவில்லை. ''கிருஷ்ணா, மனிதன் தன் விருப்பத்திற்கு மாறாக ஏன் தவறு செய்கிறான்? அவனைப் பலாத்காரமாகப் பாவச் செயலில் ஈடுபடுத்தும் சக்தி என்னவோ'' என்று அவன் கேட்டான். காமம், கோபம், பேராசையாகிய மூன்று உணர்ச்சிகளே மனிதனைப் பாவத்திற்கு ஈர்த்துச் செல்வன வென்று கிருஷ்ணர் விளக்குகிறார். மனிதனுடைய புலன்கள், மனம், புத்தி ஆகியவற்றைத் தமது இருப்பிடமாகக் கொண்டு இம் முக்குணங்களும் தூசி கண்ணாடியை மாசடையச் செய்வது போல அவன் அறிவை மங்கச் செய்கிறன. எனவே தனது அறிவை மறைக்கும் பகைவர் இவையென உணர்ந்து இம் மூவுணர்ச்சிகளின் வசப்படாமல் மனிதன் தன்னைத் தற்காத்துக் கொள்ள வேண்டும்[9].

இந்நிலையில் மனிதன் என்ன செய்ய வேண்டும்? எப்படி செயல்படவேண்டும் தன்னைப் பற்றிய அறிவே, ஆத்மஞானமே முதற்கண் அவசியமென்பது புலனாகிறது. மோகம், விபரீத அறிவே, மனிதனுடைய அடிப்படைப் பிரச்சினையென்று முன்னர்க் கூறியிருந்தோம். தன் சாவற்ற ஆன்மாவைச் சாவுக்குரிய உடலோடு மயங்கும் விபரீத அறிவும், சுதந்தரமாகச் செயல்படும் கர்த்தா தான் என்றெண்ணும் விபரீத உணர்வும் இம் மோகமாமென்றும் கண்டோம். எனவே ஆன்மாவுக்கும் உடலுக்குமிடையேயுள்ள வேற்றுமையையும், தன்னுடலின் வெளி உள் உறுப்புக்களின் இயல்பையுமுணருதல் அவசியமாகிறது.

பகவத்கீதையும் ஏனைய இந்து தத்துவங்களும் உடலின் புலன்கள் உள் உறுப்புகளிலேயொரு படிமுறையொழுங்கைக் காட்டுகின்றன. வெளியுலகோடு தொடர்ப்பு கொள்ளும் புலன்கள் (இந்திரியங்கலோடு) அடிமட்டத்திலுள்ளன. இவற்றைப் பார்க்கிலும் ஒருபடி உயர்ந்த நிலையில் மனம் (இருதயம்) இருக்கிறது. மனதைப் பார்க்கிலும் மேலான நிலையிற் புத்தி (அறிவு) இருக்கிறது. இதற்கும் அப்பாலே ஆன்மா இருக்கிறது.

புலன்கள் வெளியுலகைப் பற்றிய அறிவைப் பெறுகின்றன. காது கேட்க விரும்புகிறது, கண் பார்க்க விரும்புகிறது. இப்புலன்கள் எவற்றை நாடுகின்றனவோ, அவை விஷயங்கள் எனப்படுவன. இந்த விஷயங்கள் பால் வெறுப்பும் விருப்பும் புலன்களில் இயல்பாகவே அமைந்துள்ளன தமக்கு இன்பம் தருவனவற்றைப் புலன்கள் நாடும்; துன்பம் தருவனவற்றினின்று விலகும். இப்புலன்கள் பிரமாதினி என்று வருணிக்கப்படுகின்றன. அதாவது அவை எம்மைப் பிழையான வழியிலிட்டுச் செல்வன. விஷயங்களை நாடி அவையால் எம்மை இழுக்கும் புலன்களின் இவ்வியல்பை உணர்ந்து மனிதன் அவற்றைத் தன் மனத்தால் அடக்கியாள வேண்டும் இன்றேல் அலைகளால் மோதப்படும் மரக்கலம் போல அவனும் அலசடிப் படுவான்[10].

மனம் கூடப் புலன்களையொத்த இயல்புடையதே. அதுவும் சஞ்சலமானது, உறுதியற்றது. காற்றைப் போல் அடக்குதற்கரியது ஆகவே புத்தியினால் மனத்தைக் கட்டுப்படுத்த மனிதன் முயற்சிக்க வேண்டும். மனத்தை அடக்குவது இலகுவான விஷயமல்ல. அதற்கு நீண்டகால அப்பியாசமும் வைராக்கியமும் அவசியம் வைராக்கியம் என்பது பற்றுதல்; பற்றற்ற

சிந்தையோடு மனத்தை கட்டுப்படுத்த முயற்சிப்பின், விஷயங்கள்பால் புலன்களுக்குள்ள நாட்டமும் அற்றுப் போம். விஷயங்கள் கூட மனிதனை ஈர்க்கும் சக்தியை இழக்கும்.[11]

புத்தியும் ஒருமுனைப்பட வேண்டும் உறுதியற்ற மனிதனின் புத்தி "பல கிளைப்பட்டது" என்று கீதை கூறுகிறது. அது ஒரு விடயத்திற்தரியாது; அது குவியாது ஆனால் உறுதியுள்ளவனின் புத்தியோ ஒருமுனைப்பட்டது[12]. புலன்களையும் மனத்தையும் புத்தியையும் அடக்கியாளாதவன் கெடுதியை எதிர்நோக்குகிறான், ஏனெனில் அவன் மனம் புலனின்பங்களைப் பற்றிச் சிந்திக்க அவனுக்கு அவற்றில் நாட்டம் ஏற்படும். நாட்டம் ஆசைக்கு ஏதுவாகிறது, ஆசை திருப்தியடையாத விடத்துக் கோபம் ஏற்படும், கோபம் மோகத்திற்கும், மோகம் நினைவுத் தளர்ச்சிக்கும், புத்தி நாசத்திற்கும் இட்டுச் சென்று ஈற்றில் அம்மனிதன் அழிந்து போகிறான்[13].

இங்ஙனம் மனிதன் புலன், மனம், புத்திகளை அடக்கியாளுகிற முறையே கீதையில் யோகமெனப்படுகிறது. யோகமென்ற சம்ஸ்கிருதச் சொல் 'அடக்குதல்' 'நுகத்தில் பூட்டுதல்' என்ற பொருள்படும். யுஜ் என்ற வினையடியாகப் பிறந்தது. இவ்வினையின்படியாகப் பிறந்த சொற்கள் பலதடவை கீதையிற் காணப்படுகின்றன. அடங்கிய புலன்களையுடையவன் யுக்த இந்திரிய எனப்படுகிறான். யோகம் அடக்குதலைக் குறிப்பதோடு நில்லாமல், மனத்தின் உடலின் சக்திகளைச் சிதறடியாமல், அவற்றை ஒரு முனைப்படுத்தலையும், மனத்தைக் குவியப் பண்ணுதலையும் குறிப்பதாயிற்று. தன் உள்ளான உண்மையான ஆன்மாவை உணர்ந்தவனே தன் புலன், மனம், புத்தியாகியவற்றை ஒரு முனைப்படுத்துவான்.

யோகத்திலே சிறந்தவனெவன் என்று பகவத்கீதை பலதடவை கூறுகிறது எல்லா விடயங்களிலும் மிதமுடைமையும் மன அமைதியுமே ஒரு யோகியிலே சிறப்பாகக் காணப்படும் பண்புகள். பொதுவாக மனிதன் ஒன்றுக்கொன்று எதிரான உணர்ச்சிகளால் உந்தப்படுகிறான். சந்தோஷமும் துக்கமும், மானமும் அவமானமும், வெற்றியும், தோல்வியும், லாபமும், நட்டமும் போன்ற உணர்ச்சி, அனுபவ சோடிகளுக்கிடையில் (துவந்துவங்கள்) மனிதன் ஊசலாடுகிறான். வெற்றி அவன் மனத்தைப் பூரிக்கச் செய்கிறது. தோல்வி அவனை கவலையில் ஆழ்த்துகிறது. மானத்தினாற் பெருமிதம் அடைகிறான்; அவமானத்தாற் கலங்குகிறான். உண்மையான யோகி இங்ஙனம் உணர்ச்சி உந்தல்களுக்கு இடம் கொடுக்கமாட்டான். எது நேரிடினும் அவன் தளராமற் கலங்காமல் இருப்பான். மானமோ, அவமானமோ, வெற்றியோ, தோல்வியோ அவன் மன அமைதியைக் குழப்பா.[14] மிதமுடைமைக்கோர் எடுத்துக்காட்டாகவும் அவன் இருப்பான் போதிய உணவு உண்ணாமற் தன் உடலை வருத்தவும் மாட்டான். போசனப்பிரியனாகவும் இருக்கமாட்டான், அளவுக்கதிகமாய் தூங்கவும்மாட்டான், தூக்கமின்றி விழித்திருக்கவும்மாட்டான் விருப்பு வெறுப்புகள் அவனுக்குக் கிடையா[15]. எல்லாரையும் எல்லாவற்றையும் சமநோக்கோடு மதிப்பான். இவனே பகவத்கீதையின் இலட்சிய மனிதன்.

இத்தகைய அமைதியான சலனமற்ற ஒரு வாழ்க்கை நோக்கு மனிதனுக்கு இலகுவாகக் கைவருவதில்லை. மனித உடலிலே இயல்பாக அமைந்துள்ள நாட்டங்கள் அவன் ஆன்மாவிற்கு விரோதமாக செயற்படுகின்றனவென்றும், மனிதனுடைய புலன்களும் குணங்களும் அவனைப் பிழையான வழியில் இட்டுச் செல்வன வென்றும் முன்னர்க் கண்டோம். எனவே தன் இருதயத்தின் அடித்தளத்திலே இறைவனை உணர்ந்து அவரோடு தொடர்புகொண்டு மனிதன் வாழ்வானாயின்

அமைதியான வாழ்க்கை நடாத்த வேண்டிய பெலனை அவன் பெறுவானென்று கீதை கூறுகிறது. இறைவனுடைய நிட்கள நிலையை அவன் தியானிக்கலாம் அல்லது வடிவத்தோடு கூடிய சகல நிலையைப் பக்தியோடு அணுகி உபாசிக்கலாம். உருவற்ற இறைவனை உணருகின்ற ஞான வழி சிரமானது. உருவுள்ள இறைவனை வணங்கும் பக்தி வழி இலகுவானதும் எல்லோருக்கும் எளியதும் "உன் மனதை என்பால் நெறிப்படுத்து என்னிலே நிலைத்திரு. என்னிடம் உள்ளன. அர்ப்பணி என்னிடம் பக்தி சிரத்தையாய் இரு," என்று கீதையிற் கிருஷ்ணபகவான் பல தடவை கூறுகிறார். "என்னை உணர்ந்தவன் பாவங்களினின்று விடுபடுவான்". "என்னிடத்தில் எப்போதும் அன்பாயிருந்து என்னை வணங்குவோருக்கு நான் ஞானத்தை அருளுவேன், அவர்களுடைய அறியாமையைப் போக்குவேன்." "எவன் தீவிர பக்தியோடு என்னை சேவிக்கிறானோ அவன் முக்குணங்களின் தளையினின்றும் விடுபடுவான்." [16] இங்ஙனம் இறைவனை நாடி அவரிலே தன் சிந்தையைக் குவிய வைக்க, மனிதன் புலன்களின், குணங்களின் ஈர்ப்பிலிருது விடுதலை பெறுவான்.

அருச்சுனனுச்கு அருளப்பட்ட விஸ்வரூபக்காட்சியும் அர்த்தமற்றதல்ல, அந்தச் சில நிமிடங்களில் அருச்சுனன் காலங்களுக்கும் யுகங்களுக்கும் அப்பாற்பட்ட இறைவனைத் தெய்வீகக்கண்கொண்டு காண்கிறான். இறைவனின் விஸ்வரூபக் காட்சியின் சிறப்பையும், மகிமையையும் கண்டதுமட்டுமல்லாமல் அந்தப் பிரமாண்டமான வடிவத்தின் அகன்ற வாயுக்குள் தன் பகைவராகிய கௌரவரும் மற்றைய வீரரும் விரைந்து செல்வதையும், அவ் வடிவத்தின் பற்களுட் சிக்கி நொறுக்கப்படுவதையும் காண்கிறான். அப்பொழுதே அவனுடைய அறிவுக்கண்கள் திறக்கப்படுகின்றன. யுத்தத்திற் பங்கு பற்ற இருக்கும் பலருடைய மரணம் முன்னரே நிர்ணயிக்கப்பட்டுள்ளதென்றும், அறியாமைமிக்க மானிடனாகிய தான் ஏதோ தானே தான் அதனை நிர்ணயிக்கப் போகிறேனென்றும் நினைத்தது எத்தனை மடைமையென்பதை உணர்கிறான். அவன் அறியாமை இருள் கலைந்தது. தன்னையும் அந்தப் போரையும் யுகங்களில் பின்னணியில் உணர்ந்து கொண்டான். தானும் தன் செயலும் தான் நினைத்தளவு முக்கியத்துவமுடையனவல்ல என்பதைக் கண்டு கொண்டான். அவன் ஆணவம் அடங்கியது அவன் கிருஷ்ணரின் பணிவிடையைச் செய்ய ஆயத்தமானான்.

கிருஷ்ணபகவான் கீதையிலே கர்மம் 'செயல்' என்ற பதத்திற்கோர் புதிய விளக்கம் கொடுக்கிறார். கர்ம என்பது யாகக் கிரியை மட்டுமல்ல; மனிதனின் வர்ண ஆச்சிரமக் கடமை முழுவதுமே கர்மத்தின் பாற்படும். ஆனால் அந்தக் கர்மத்தைப் பலன் எதிர்பாராமற் கடமையென்றே மனிதன் செய்ய வேண்டும். ஆசையோடு அல்லது பலனை நோக்காகக் கொண்டு மனிதன் கருமம் ஆற்றுவானேயாகில் அவன் அக்கருமத்தாற் பிணிக்கப்பட்டவனாகச் சம்சாரச் சுழற்சியிற் சிக்குவான். 'சங்க' பற்று என்ற பதம் கீதையிற் பல தடவை காணப்படுகிறது. மனிதன் பற்றற்றிருக்க வேண்டுமென்று கீதை வலியுருத்துகிறது "பற்றில்லாமல், விருப்பு வெறுப்பின்றிச் பலனை எதிர்பாரமற் கடமையாகச் செய்யப்படும் கருமமே மேலான செயல்," என்று கீதை கூறுகிறது. இந்த நிஷ்காம கர்ம "பற்றற்ற செயற்" [17] கோட்பாடு இந்து சிந்தனையில் செயலைப் பற்றிய கருத்துகளில் முதன்மையான தொன்றாகும்.

கர்மத்திற்கு ஒரு புது இலக்கணம் கொடுத்ததோடு அமையாது கிருஷ்ணபகவான் சன்னியாசம் 'துறவு' என்ற பதத்திற்குமொரு புது விளக்கம் கொடுக்கிறார். வெருமனே உலக விவகாரங்களிற் பங்கு

பற்றாதிருத்தல் சன்னியாசமல்ல. சன்னியாசம் மனத்தாற் பற்றறுத்தலுமாம். சரீரத்தால் உலகக் காரியங்களினின்று விலகி மனத்தின் உலக இன்பங்களைத் தியானித்தல் போலி சன்னியாசமாம். உலகக் கடமைகளிற் பங்குபற்றுகிற அதே சமயம் மனதிற் பற்றற்றிருக்கவும் முடியுமென்று கீதை கூறுகிறது. பற்றற்ற சிந்தையோடு ஒரு முனைப்பட்ட மனதோடு வாழ்க்கையில் நமக்கு விதிக்கப்பட்ட கடமைகளையாற்றுதலே கீதை கண்ட இலட்சிய வாழ்க்கையாம். கீதையின் இந்த விளக்கத்தின்படி சன்னியாசமும் வாழ்க்கையில் ஈடுபடுதலும் ஒன்றுக்கொன்று நேர்மாறான வாழ்க்கை நெறிகள் அல்ல. அதாவது பிரவிருத்தி 'ஈடுபடுதலும்', நிவிருத்தி 'விடுபடுதலும்' ஒன்றிற்கொன்று ஒவ்வாத வழிகளல்ல. சரீரத்தால் செயலும் மனத்தால் சன்னியாசமும் அனுசரித்தலே மேலானது.

இதுகாறும் கிருஷ்ணபகவான் பகவத்கீதையில் விளக்கிய கர்ம வழியை ஆராய்ந்தோம். அருச்சுனன் போரிலே பங்குபற்றுவதானால், இந்த உலக வாழ்க்கை அர்த்தமுள்ளது என்றும், வெறும் போலி நாடகமல்லவென்றும், அவன் உணர்ந்து கொள்ளவேண்டும். இறைவனாகிய தாமே சிருஷ்டிக்கு அதிபதியென்றும், எல்லா உயிரும் இயற்கையும் சமுதாய அமைப்பும் தன் கண்காணிப்பிலேயே இயங்குகின்றனவென்றும் பகவான் அருச்சுனனுக்கு விளக்குகிறார், எனவே அருச்சுனன் தயங்கவேண்டியதில்லை. எனினும் செயலில் ஈடுபடும் முறையை அவன் கற்றுக்கொள்ள வேண்டும். அவன் சுதந்திரமாகச் செயலிலீடுபட வேண்டுமானால் முதற்கண் தன் உடலின் புலன்களின் அமைப்பையும் இயல்பையும் அவன் அறிய வேண்டும். மனத்தாலும் புத்தியாலும் புலன்களை அடக்கியாளக் கற்றுக்கொள்ள வேண்டும். பிரகிருதியின் முக்குணங்கள் தன் சிந்தையிலும் உணர்ச்சிகளிலும் கொண்டுள்ள செல்வாக்கையுணர்ந்துகொள்ள வேண்டும். எத்துணை உறுதியுள்ள புத்திகூடப் பலவேளை குணங்களுக்கும் புலன்களின் ஈர்ப்புக்கும் விட்டுக்கொடுக்கிறது. எனவே அருச்சுனன் தெய்வத்தோடு இணைந்துகொள்ள வேண்டுமென்று கிருஷ்ணபகவான் புத்தி கூறுகிறார். மனிதன் தெய்வத்திலே நிலைத்திருந்தாற் தான் உடலின் உணர்ச்சிகளின் ஈர்ப்பினின்று விடுபடப் பெலனைப் பெறுவான். ஒரு முனைப்பட்ட சிந்தையோடு இறைவனிலே நிலைத்திருக்கிறவனே உண்மையான சுதந்திரத்தோடு உலக வாழ்க்கையிற் பங்குபற்றக் கூடியவன். எனவே ஒருமுனைப்படுதலும் ஈடுபடுதலுமே, நாம் கண்டளவில், பகவத்கீதையின் அடிப்படைத் தத்துவம்.

# அடிக்குறிப்புகள்

பகவத்கீதை மகாபாரதத்தின் உத்தியோக பர்வளிற் (vi பிரிவு) காணப்படுகிறது.

பகவத்கீதை பற்றிய தமிழ் நூல்கள் பின்வருமாறு


குமாரசாமி, கு. பகவத்கீதை,
(தமிழ் வசன மொழிபெயர்ப்பு)
சென்னை, 1942

சுப்பிரமணிய பாரதியார், பகவத்கீதை,
தமிழ் மொழி பெயர்ப்பு, பாரதி பிரசுராலயம்,
சென்னை, 1921

பெரியதம்பிப்பிள்ளை, அ. பகவத்கீதை வெண்பா,
கொழும்பு. 1962

கருணாலய பாண்டியனார், பகவத்கீதை,
நம்பி அகவல், 1948

ராஜகோபாலச்சாரியார், ச. பகவத்கீதை கைவிளக்கு,
தமிழ் மொழி பெயர்ப்பு, சென்னை 1958

ராஜகோபாலச்சாரியார், ச. கண்ணன் காட்டிய வழி
அறநூல்கள் பக்கம், 69 - 138 சென்னை, 1952

2. iv 13

3. vi 41 - 43, xviii 45, 47

4. iii 10 - 14

5. iii 21 26

6. ix 4 - 8; x 42; xv 7

7. ii 13 - 25

8. iii 27

9. iii 36 - 41

10. ii 58 - 60; iii 24

11. vi 34 - 35

12. ii 41; vi 12

13. ii 58 - 62

14. ii 56 - 57; iv 22; v 3; xii 13 - 20

15. vi 16 - 17

16. x 3; 10 - 11; xiv 26; xviii 65

17. xviii 23

★ எந்த சக்தியையும், திரவியத்தையும் விரயமாகச் செலவழிக்காமலும் அதேசமயம், ஒரேடியாகப் பூட்டிக்கொண்டு விடாமலும் தானும் சமூகமும் பயனடையும் படி அளவறிந்து செலவழிக்கவும், காத்து வைத்துக் கொள்ளவும் அறிய வேண்டும்

— காஞ்சி பரமாச்சாரியார்

★ இவ்வுலகிலுள்ள எல்லா நீதி மன்றங்களை விடவும் உயர்ந்தது மனசாட்சியேயாகும்

— விக்டர் யூகோ

## அமைதி வரம் தந்தெமை ஆட்கொள வாராய்

குறிஞ்சிமலை மீதினிலே கோயில் கொண்ட குமரனே
குறமகள் வள்ளியுடன் காட்சிதரும் அழகனே
வருந்தி உனைப்பாடி வழிபடும் எம்மவர்க்கு
விரும்பி ஒருவரம் வேலா நீ ஈகுவையோ?

நித்தம் நித்தம் துன்பங்கள் நீங்காத சோதனைகள்
புத்தம்புது மலர்களெல்லாம் பூமிதனில் உதிர்ந்ததென்னே?
கண்ணீருடன் செந்நீரும் கலந்தங்கே பாய்வதென்னே?
எண்ணமெல்லாம் அமைதிக்காய் எம்மவர் ஏங்குவதென்னே?

நீலமயில் மீதினிலே சீலமுடன் வலம்வந்து
நீங்காத துன்பமெலாம் பாங்காய்க் களைந்திடும்
தந்தைக்குபதேசித்த செந்தில்வடி வேலனே
தமிழர்தம் வாழ்விற்கு ஈகுவையோ வரமொன்று

வேதனையை வடிக்க இனி வாசகமும் இல்லையப்பா
சாதனைகள் புரிந்தவெம் சக்தியும் போனதப்பா
சூரனை சங்காரம் செய்திட்ட சுந்தரனே
தாராள மனங்கொண்டு தருகுவையோ வரமொன்று

ஐங்கரனின் சோதரனே அம்பிகையின் மைந்தனே
எங்கரங்கள் கூப்பியுனை இதயத்தால் பணிந்திடுவோம்
அழகுமலர் தூவியுனை ஆராதனை செய்திடுவோம்
அமைதிவரம் தந்தெமை ஆட்கொள வாராயோ!

— செல்வி ஜெயகௌரி - முருகேசு
2ம் வருடம்/பல் வைத்திய பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்

# இந்து தர்மமும் அக்னிஹோத்ரமும்

— செல்வி. அருந்ததி சங்கர தாஸ் —
மூன்றாம் ஆண்டு/மிருக வைத்திய பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்

இந்து தர்மம் காலாதிகாலமாக தனக்கேயுரிய சிறப்புக்களுடன் ஆதார விருட்சமாக மிளிர்ந்து வருகிறது. இது பல தர்மங்களையும் செய்திகளையும் சந்ததி சந்ததியாக எமக்குச் சொல்லி வருகின்றது. அவை எல்லாவற்றையும் நாம் புரிந்து கொள்ளாவிட்டாலும் கூட எமது சமய நடைமுறைகள்/நியதிகள் என்ற நிலைப்பாட்டுகள் அடங்கியுள்ளதால் அவை எம்மால் புரியப்பட்டோ புரியப்படாமலேயோ பயனளித்து வருகின்றன. இந்து தர்ம மெய்ஞானம் கூறுகின்ற விஞ்ஞான மூலம் பலர் அறியாதது; மகத்துவமானது. இந்து சமயத்தின் கிரியைகள் அனைத்திலும் பின்னிப் பிணைந்தது அக்கினியின் பங்கீடு. அக்கினி சாட்சியாக மாங்கல்யதாரணம் செய்வதிலிருந்து சுடுகாட்டில் தகனக்கிரியை வரை மனிதனுடன் அக்னி இரண்டறக் கலந்துள்ளது. எவ்வளவோ தர்மங்களையும் கர்மங்களையும் எமது வேதங்கள் விதித்துள்ளன. கர்மங்களிலேயே மிக மிக உயர்ந்த கர்மா யாகம் செய்வதுதான் என்கிறது வேதம். எல்லா யாகங்களுமே உலக நன்மைக்காகச் செய்யப்படுபவைதாம். உலக நலனுக்காக காலையிலும் மாலையிலும் தீ வளர்த்து செய்யப்படுகின்ற எளிய யாகம் ''அக்னி ஹோத்ரம்'' எனப்படுகின்றது. இந்த யாகங்களைச் செய்வோர் ''அக்னிஹோத்ரிகள்'' **(Agnihotra)** எனப்படுவர்.

''சூர்யாய ஸ்வாஹா
சூர்யாய இதம் நமஹ
பிரஜாபதேய ஸ்வாஹா
பிரஜாபதேய இதம்நமஹ''

என்பவை அக்னி ஹோத்ர மந்திரத்தின் எளிய சொற்களாக விளங்குவன. அக்னி ஹோத்ரம் ஒரு நாளில் இரு தடவை செய்யப்படுகின்றது. இயற்கையின் சுழற்சி காரணமாக சூரியயோதயத்தின் போதும் சூரிய அஸ்தமனத்தின் போதும் இது செய்யப்படுகின்றது. அமெரிக்காவில் வாஷிங்டனில் உள்ள "வஸந்த் பிராஞ்சபே'' என்ற ஆராய்ச்சியாளர் இதுபற்றி பின்வருமாறு கூறுகின்றார். சூர்யோதயத்தின் போது சக்தி மிகுந்த மின் அணுக்கின், நெருப்பு மின்னல்கள் நேரடியாகப் பூமியை நோக்கிப் பாய்கின்றன. தீய பொருட்கள் இவ்வொளி வெள்ளத்தில் கருகி அழிந்து விடுகின்றன. உயிர் கொடுக்கும் சக்தி ஓங்குகிறது. அந்த வேளையில் அக்னி ஹோத்ர மந்திரங்களை இசையுடன் கூறுவது இச்சக்தியைத் தூண்டுகின்றது. (இந்து தருமம் ஒலிகளில், தொனிகளில் கூட வேறுபாடுகளைக்காட்டி அதற்கான சக்திகளைச் செய்வனே அறிந்து [illegible]துள்ளது.) மாலையில் சூரியன் மறையும் வேளை இச்சக்தி சு[illegible]ங்குகின்றது. அப்போதும் இம்மந்திரம் அதன் இயக்கத்திற்கு ஏற்றபடி அமைகின்றது.

ஹோமம் என்பது இயற்கையில் உற்ற விஞ்ஞானவழி வேறுபாடுகளிற்கமைய (Bio Rhythmic Changes) உருவாக்கப்பட்டது. இது வெறும் நெருப்பல்ல, விதிப்படி இதனை தயார் செய்ய குறிப்பிட்ட பொருட்களை உபயோகிக்க வேண்டும். ஹோமங்கள் எல்லாவற்றிலும் சிறியதும் எளியதுமான ஒன்றுதான் இந்த அக்கினி ஹோத்ரம். அக்னி ஹோத்ரத்தின்போது பசும் சாண வரட்டித்துண்டுகளும் நெய்யும் புரதச்சத்து மிகுந்த அரிசியும் அக்கினியில் சேர்க்கப்படுகிறது.

சூரியனின் சக்தியைப் பொருத்தே இயற்கையான வானிலை அமைப்பு காணப்படுகின்றது. அக்கினிஹோத்ரம் வானிலையை மாற்றுகின்றது. அதில் ஈடுபடுபவர்களின் மனத்தையும் பக்குவப்படுத்துகின்றது. அமெரிக்காவிலும் ஜேர்மனியிலும் இது பற்றி நடாத்தப்பட்ட ஆராய்ச்சிகளிலிருந்து மேற்கூறிய பயன்களை அடையமுடியும் என்று விஞ்ஞான பூர்வமாக நிரூபித்துள்ளனர். மேற்கத்தைய நாடுகளில் தற்போது நடைமுறையிலுள்ள அக்னிஹோத்ரத்தின் ''ஹோமாதெரபி'' எனக் குறிப்பிடுகின்றன. ஹோமோ தெரபியின் மூலம் உடலில் எதிர்ப்புத்திறன் அதிகரிக்கிறது. மனம் அமைதிப்படுவதால் இரத்தத்தின் பண்பும் துடிப்பும் மேம்படுகின்றன. மனத்தைத் தூய்மைப் படுத்தி தன்னம்பிக்கையையும் செயற்திறனையும் வளம்படுத்த இது உதவுகின்றது. அதனால் இயற்கையின் இயக்கத்திற்கு ஏற்ற அளவில் மனமும் இயங்கி தெளிந்து படிந்து சக்தியைப் பெறுகின்றது. இதன் காரணமாக இது சிறந்த மனோதத்துவ முறையாகப் பயன்படுத்தப்படுகிறது.

மனித மனத்தைப் பண்படுத்தும் இதன் இயற்கை விஞ்ஞானம் என்னவெனில் பூமியைச்சுற்றியுள்ள மின்காந்த மண்டலம் நமது உணர்ச்சியலைகளையும் எண்ணங்களையும் ஏந்தி நிற்கின்றன. மிதமான நிலையில் இதன் வேகம் ஒரு வினாடிக்கு ஏழு சுழற்சிகளாகும். நாம் மனதை ஒரு முகப்படுத்தி அமைதியான நிலையில் அமரும் போது நம் மூளையில் எழுப்பப்படும் எண்ண அலைகளும் ஒரு வினாடிக்கு ஏழு வட்டங்கள் என்ற வீதத்திலேயே இயங்குகின்றது. ஆகவே தியான நிலையில் நாம் இயற்கையான சூழ்நிலைக்கும் பொருத்தமான இயக்கத்தின் வயப்படி படிந்து நிற்கின்றோம் அக்னிஹோத்ரம் செய்யப்படும் போதும் இயற்கையும் மனித உள்ளமும் இப்படி ஒரே அளவுத்துடிப்பில் லயப்படுவதும் வசப்படுவதும் நிகழ்கின்றது.

அக்னி ஹோத்ரம் செய்யப்படும் சூழ்நிலையில் ஓர் சக்திமண்டலம் (Aura type of energy) உருவாகிறது. இதனால் இச்சூழலில் வளரும் தாவரங்ள் செழுமையும் சக்தியையும் அடைகின்றன. இந்த ஆராய்ச்சியின் போது நான்கு மாதங்களில் பெறக்கூடிய வளர்ச்சியை திராட்சைப்பயிர்களானவை இரண்டு நாட்களில் அடைந்து விடுகின்றன. ''அக்னி ஹோத்ரம்'' செய்யப்பட்ட இடத்தில் பெறப்படும் சாம்பலைக் கொண்டு மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த ''மோனிகா ஜொஹ்வே'' என்ற மருத்துவ நிபுணர் சரும நோய்கள், மூச்சு வியாதிகள், இருதய பாதிப்பு, தொண்டை வியாதிகள் போன்ற நோய்கட்கான மருந்துகளைத் தயாரித்து உள்ளார். மேலும் அக்னி ஹோத்ரம் செய்யும் இடத்தில் உள்ள சூழ்நிலையை ஆராய்ச்சியாளர்கள் அளந்து ஆராய்ந்து பரிசோதித்து சில முடிவுகளைத் தந்துள்ளார்கள். அவையாவன,

(1) அவ்விடத்தின் "மைக்ரோப்" அணுக்கள் நூற்றிற்கு 91% ஆகக் குறைக்கப் பட்டிருத்தல்

(2) சூழலில் தொடர்ந்து காணப்பட்டோரின் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு கணிசமான அளவு குறைந்து காணப்பட்டமை

(3) இந்த ஹோமப் புகையில் சில வகை உயிரணுக்களின் (பார்மல்டிஹைட்) செழுமையை ஊட்டும் பொருள் நிரைந்து இருந்தமை.

தாவரம் முதல் மானிடன் வரை வாழ வளமளிக்கும் மகா சக்தியின் மூலமான யாகத்தின் சிறப்புக்களை மேல்நாட்டார் உணர்ந்து நடைமுறைப்படுத்தி வரும் வேளையில் இந்துக்களாகிய நாம் இதன் முக்கியத்துவத்தையும் மதிப்பையும் உணர்ந்துள்ளோமோ? என்பது சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

அண்மையில் பலரையும் வியப்பிலாழ்த்திய சம்பவமொன்றினை இங்கே குறிப்பிடுதல் நன்று. சில ஆண்டுகட்கு முன்பு இந்தியாவிலுள்ள போபால் நகரில், தொழிற்சாலை ஒன்றிலிருந்து வெளியேறிய கொடிய நச்சு வாயுவின் தாக்கத்தினால் அப்பிரதேசத்தில் உள்ள அத்தனை உயிர்களும் மூச்சுத்திணறி மரணத்தை தழுவிக் கொண்டவேளையில் ஈஸ்வரனை நம்பி ஹோமமம் வளர்த்து பூஜை செய்து வந்த ஆன்மீகக் குடும்பம் ஒன்று மட்டும் எவ்வித இடருமின்றி தப்பியது தான் அச்சம்பவம். மேல் நாட்டு மற்றும் உள் நாட்டு பத்திரிகைகள் யாவும் இதை அபூர்வ நிகழ்ச்சியாக வியக்கத்தக்க நிகழ்ச்சியாக விபரித்திருந்தன. மெஞ்ஞானத்தில் விஞ்ஞானத்தையடக்கும் இந்த இறைமார்க்கத்தில் மனித மூளையின் அறிவியல் ஆராய்ச்சிக்கு எட்டாத இன்னும் பல மகத்துவமான விளக்கங்கள் இனிவரும் காலங்களில் உணரப்படலாம். அதுவரை காலம் காலமாக கூறப்பட்ட சாஸ்திர நடைமுறைகளை உரு மாற்றாது இனிவரும் தலைமுறைகட்கு கடத்துங்கள். ஏனெனில் எமதறிவிற்கு எட்டாததை அடுத்துவரும் சந்ததி உணர்ந்து தெளிவு படுத்தி பயன் பெறலாம்.

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்"

With Best Compliments From

★

NEW SARATHA'S
Trade Centre
General Merchants &
Commission Agents
Wholesale Dealers in Rice &
Sri Lanka Produce

157 A, 5th Cross Street

COLOMBO - 11

T. P. 421785

With Best Compliments
From

JAYALALITHA

Jayalalitha Jewellery Mart
65, Sea Street,
Colombo - 11
T. P. 449177, 422548, 435416

With Best Compliments From

★

S. S. Wilson & Co. (Pvt) Ltd.,
IMPORTERS AND EXPORTERS
GENERAL MERCHANTS & ESTATE SUPPLIERS

No. 176, 4th Cross Street

COLOMBO - 11

Phone: 27662

# இதயக் கோயிலிலே எம் முருகன்

இதயமே இங்கொரு கோயிலாயானது
இவள் இனி உன் கழல் சரணமையா!
விழியது தீபமாய் வேதமாய் வார்த்தையும்
விளங்கிடுமே முருகா வேண்டுகிறோம்

குலமகள் வள்ளியும் கோதையும் பாகமாய்
கொண்டவனே குறிஞ்சி குமரவனே
குவலயம் முழுவதும் குழந்தையுன் சிரிப்பொலி
கொஞ்சிடுமே ஆற்றின் சலசலப்பாய்

மூச்சினில் பேச்சினில் முழுவதிலும் நீயானாய்
முழுமுதலே எங்கள் பரம் பொருளே
காற்றினில் கல்லினால் காசினி எல்லாமாய்
கலந்தவனே எம்மில் நிறைந்தவனே

நீலக் கழுத்தனின் சினத்தில் உதித்தவனே
நேசக் கன்னியர் கரங்களில் தவழ்ந்தவனே
கோவத்தை உமையவள் கொஞ்சிடப் பெற்றவனே
கோயில் கொண்டாய் எம்நெஞ்சில் குமரவனே

— செல்வி. சந்திராதேவி கதிரவேற்பிள்ளை —
இறுதியாண்டு/பல் வைத்தியபீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

*With Best Compliments*
*From*

# Siva Textiles

Dealers in Textiles & Fancy Goods
Specialists in Sarees

172, Main Street

COLOMBO - 11

T. P. 422523

With Best Compliment From

## *A. P. Suppiah*

*Dealers in Animal & Poultry Foods & Medic nes*

**No. 63, Wolfendhal Street,**

**Colombo - 13**

T. P. 431151
324325

இலங்காபுரியில் இந்து மதம் எட்டுத்திக்கும்
இயல் இசை நாடகத்துடன் எங்கெங்கும் பரவ
எங்கள் வாழ்த்துக்கள்

★

# MALAVANS
## MLS

**214, Fourth Cross Street**

**COLOMBO - 11**

**T. P. 23668, 27951**

# யாழ்ப்பாணம் காரைதீவு தந்த

# இரு கண்மணிகள்

— திரு. வை. கனகரத்தினம் —
முதுநிலை விரிவுரையாளர் இந்துப்பண்பாடு/தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணக்குடா நாட்டின் தீவுக் கூட்டங்களுள் ஒரு சிறு தீவான காரைத் தீவு குடா நாட்டின் வட மேற்குப் பகுதியில் 22 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. நிலப்பயன் பாட்டிற்கேற்ப காரைச் செடிகள் நிறைந்து காணப்பட்டதால் இத்தீவு காரைத்தீவு எனப்பட்டது. ஆயினும் இஃது மருதமும் நெய்தலும் இணைந்த நிலப்பரப்பைக் கொண்டது. இன்று இப்பிரதேசம் காரை நகர் (1923) என்று அழைக்கப்படுகின்றது "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்னும் முதுமொழிக்கமைய இங்கே வாழ்கின்ற செல்வப் பெருக்கு மிக்க மக்கள் சைவ சமயப் பண்பாட்டு நெறியில் தம் வாழ்வை வளம்படுத்திக் கொள்பவர்கள்.

ஆரியச் சக்கரவர்த்திகளின் (1216-1621) வீழ்ச்சியின் பின் யாழ்ப்பாணக் குடா நாட்டில் ஏற்பட்ட கிறிஸ்தவ சமய ஆதிக்கம் தீவுப்பகுதியினையும் விட்டு வைக்கவில்லை. காலந்தோறும் கத்தோலிக்க புரடஸ்தாந்து அமெரிக்க மிஷனரி மார்கள் இப்பிரதேசங்களில் பள்ளிகளை நிறுவியும் ஆலயங்களை அமைத்தும் தமது சமயப் போதனைகளை நடாத்தி வந்தனர். நன்கு திட்டமிடப்பட்டு பயிற்சி பெற்ற மிஷனரி மார்களின் போதனைகளுக்கும் கல்வி புகட்டலுக்கும் முன் ஈடு கொடுக்க முடியாத நிலையிலே சைவ சமய வாதிகளும் திண்ணைப்பள்ளி ஆசிரியர்களும் இருந்தனர். சைவசமயிகளுள் வசதியும் கல்வியில் மிகுந்தநாட்டமுமுடையோர் தமது பிள்ளைகளை நவீன பள்ளி அமைப்பு பாடத் திட்டம் ஆங்கிலப் போதனா மொழி ஆகிய சிறப்புக்களைக் கொண்டிருந்த மிஷனரி மார்களின் கல்விக் கூடங்களுக்கு அனுப்பினர். காரை தீவைப் பொறுத்த வரையில் இந்நடைமுறை இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை இருந்து வந்ததெனலாம். இச்சமூகச் சமயப் பணியிலேதான் மு. கார்த்திகேயப் புலவரும் ச. அருணாசல உபாத்தியாரும் காரைதீவில் தோன்றினர்.

பிராமண குலத்தவரும் பெரும் புலவருமான முருகேசர் பல பிரபந்தங்களையும் நாடகங்களையும் இயற்றியவர். "மாவிந்தம்" எனும் காப்பியமும் இவர் உடையதே. இப்பேர்ப்பட்ட புலவரின் மூத்த புதல்வராக கார்த்திகேயப் புலவர் 1819ம் ஆண்டு பங்குனி மாதம் 23ம் திகதி பிறந்தார். அருணாசல உபாத்தியார் சங்கரப்பிள்ளை என்பாருக்கும் பத்தினி அம்மையாருக்கும் ஏக புதல்வனாக 1864ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ம் திகதி பிறந்

தார். புலவருக்கு உபாத்தியாயர் நாற்பத்தைந்து ஆண்டுகள் இளையவர். எனினும் அந்த மண்ணில் இருவரின் நோக்கமும் செயற்பாடும் பெரிதும் ஒரே தன்மை வாய்ந்தவையாக அமைந்தமை இங்கு மனங்கொளத்தக்கதாகும். கார்த்திகேயர் தனது ஆரம்பக் கல்வியை தந்தையரிடத்தும், வடமொழி உயர் தமிழ்க் கல்வி, சைவாகமங்கள் என்பவற்றை முறையே சுவாமிநாத தேசிகர், இருபாலை சேனாதிராய முதலியார், சண்டிலிப்பாய் கார்த்திகேயக் குருக்கள் என்போரிடத்திலும் கற்றார். இளமையிலே சிறந்த விவேகியான இவர் தம் தந்தையாரால் பாடப்பட்டு முற்றுப் பெறாதிருந்த ''திண்ணையந்தாதி''யை இளவயதிலேயே பாடி முடித்தார் என்பர். சேனாதிராச முதலியாரிடம் புலவரவர்கள் பயின்ற காலத்திலேதான் நாவலரும் அவரிடம் பயின்ற காரணத்தினால் இருவரிடையே நெருங்கிய உறவுகள் இருந்தன ''சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல்'' என்னும் இலட்சியத்தோடு தமது இல்வாழ்க்கையை துறந்தவர் நாவலர். தமது இலட்சியத்தை மனங்கொண்டு பாடசாலைகளை அமைத்தல், பாடநூல்கள் எழுதுதல், அச்சுயந்திரசாலை நிறுவுதல், வசனநூல் உரை நூல் போன்றவற்றை எழுதுதல் பதிப்பித்தல், ஆலய புனருத்தாரணம் செய்தல் முதலான பணிகளில் ஈடுபட்டு அவற்றின் வளர்ச்சிக்காக உழைத்துவந்தவர் நாவலர். எமது புலவர்களும் நாவலருடன் இணைந்தும் தனித்தும் அவரது இலட்சியங்களுக்கு வடிவம் கொடுப்பதில் உழைத்து வந்தார். நாவலர்களுடன் இணைந்து கிறிஸ்தவ கண்டனங்களில் ஈடுபட்டார். காரைதீவில் சைவப்பாடசாலைகளை அமைப்பதில் கருத்துடன் உழைத்ததோடு நாட்டின் பல்வேறு ஆலயங்களின் சிறப்புக்களை பிரபந்தங்கள் பாடி வெளிப்படுத்துவதன் மூலம் அவற்றின் வளர்ச்சியிலும் சமய உணர்வினை ஊக்குவிப்பதிலும் ஈடுபாடு காட்டினார்.

நாவலரைப் போன்று புலவர்களும் காரைதீவில் ஒரு சைவப் பாடசாலையை (1852) நிறுவி அதில் தமிழையும் சமயத்தையும் போதித்து வந்தார். அதன் மூலம் புதிய மாணவ பரம்பரையொன்றை தீவகத்தில் உருவாக்கினார். தீவகத்தில் அமைந்திருந்த திண்ணைப்பள்ளிகளிலும் வீடுகளிலும் அறக்கோட்பாடுகள் மிக ஆழமாக போதிக்கப்பட்டு வந்தன. தீவகத்தின் பண்பாட்டு வளர்ச்சியில் இவை முக்கிய பங்கினை வகித்துள்ளன. இப்பண்பாட்டின் உந்துதலே புலவர்களையும் அவரிடத்தும் அவரது மாணவரிடத்தும் கல்வி பயின்ற அருணாசல உபாத்தியாயரையும் சைவசமய வளர்ச்சிக்கு பணியாற்ற தூண்டிற்று எனலாம்.

அருணாசலம் அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை காரைதீவு அமெரிக்க மிஷன் பாடசாலையிலும் பின்னர் நாவலரின் வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையிலும் கல்வி பயின்றார். பின்னர் ஒரு ஆசிரியராகக் கடமையாற்ற விரும்பியமையால் தெல்லிப்பழை அமெரிக்க மிஷன் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் பயில்வதற்குச் சென்று அங்கே அவர் அமெரிக் மிஷனரிமார்களின் கட்டாய மதமாற்றத்துக்குப் பணியாது தமது பரீட்சையை முடித்துக்கொண்டு இரவோடிரவாகி விடுதியை விட்டு வெளியேறி வீட்டை அடைந்தவர் இவர். மிஷனரிமார்களின் பலாத்காரமான மதமாற்ற நடவடிக்கைகளையும் சைவசமயம் பற்றிய பொய்ப்பிரகாரங்களையும் பொறுத்துக்கொள்ள முடியாத அருணாசல உபாத்தியாயர் அவர்கள், நாவலர் காட்டிய வழிக்கே தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட முற்பட்டார். இவரின் பணிகளை மனங்கொள்ளும் போது நாவலர் அவர்களின் இலட்சியங்களுக்கு வடிவம் கொடுக்க முற்பட்டு அவற்றில் வெற்றிபெற முயற்சித்தார். ஓரளவு வெற்றியும் பெற்றார் என்றே கூறுதல் வேண்டும்.

நாவலர் அவர்களைப் போல நாட்டின் பல பாகங்களிலும் சைவ ஆங்கில பாடசாலைகளை நிறுவ வேண்டுமென்றும், கற்றுவல்ல உபாத்தியாயர்களை உருவாக்க வேண்டுமென்றும், பாடநூல்களை எழுதுதல் வேண்டும் என்றும் உலகியல் நூல்களையும் கற்பிக்வேண்டுமென்று இருவரும் விரும்பினர். இவ்விலட்சியங்களை எய்த உபாத்தியாயர் அவர்கள் மேற்கொண்ட பணிகளை பின்வரும் அடிப்படையில் நோக்கலாம். (i) நாட்டின் பல பகுதிகளிலும் பாடசாலைகளை அமைத்தல் ii சைவாசிரிய கலாசாலைகளை உருவாக்குதல். iii சைவ விடுதிப்பாடசாலையை அமைத்தல். (iv) சைவாங்கில வித்தியாசாலையை தாபித்தல், (v) சைவாதீனமொன்றை அமைக்க முயற்சித்தல். (vi) சமய, சமூக நிறுவனமொன்றை நிறுவமுற்படல்.

நாவலர் அவர்கள் தமது கல்விப் பணியினை முதலில் திண்ணைப் பள்ளியில் ஆரம்பித்து பின்னர் நிறுவன வடிவில் பாடசாலைகளை ஆரம்பித்ததைப் போன்று உபாத்தியாயர் அவர்களும் 1885ம் ஆண்டு காரை தீவில் ஒரு திண்ணைப் பள்ளியினை ஆரம்பித்து கல்வி கற்பித்து வந்தார். 1887ம் ஆண்டில் இப்பாடசாலை சுப்பிரமணிய வித்தியாசாலையாக மாற்றமடைந்தது. இங்கே ஆசிரியராக கார்த்திகேயப் புலவரின் மாணவர்களான சி, தில்லையம்பலம், த. நாகமுத்துப்புலவர் ஆகிய இருவரும் கடமையாற்றினர். இப்பாடசாலையைத் தொடர்ந்து உபாத்தியாயர் அவர்கள் கா. வேதக்குட்டி அவர்களின் உதவியோடு வியாவிலில் சைவப் பரிபாலன வித்தியாசாலை என்னும் பெயருடன் பிறிதோர் சைவப்பாடசாலையை அமைத்தார். இப்பணிகளின் மத்தியிலும் உபாத்தியாயர் அவர்கள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிற்கும் சென்று நாவலர் அவர்களின் இலட்சியங்களையும் அவற்றை அடைவதற்கு சைவ சமயிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றியும் எடுத்துரைத்து வந்ததோடு நில்லாது, அப்பணிகளை மேற்கொள்ளும்படி பல பெரியோர்களை வற்புறுத்தியும் வந்தார். கரம்பன். மட்டுவில், கரணவாய், அல்வாய், துன்னாலை, உடுப்பிட்டி, வல்வை, அனலைதீவு முதலான இடங்களில் தோன்றிய சைவப்பாடசாலைகள் உபாத்தியாயரின் பிரசாரத்தால் கிடைத்த வெற்றி எனலாம்.

இரண்டாவதாக, குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் சைவப்பாடசாலைகளை ஆரம்பித்ததன் பயனாக அங்கு கற்பிப்பதற்கு தகுந்த உபாத்தியாயர்கள் வேண்டப்பட்டனர். இதன் காரணமாக சைவாசிரியர்களை பயிற்றுவதற்காக ஆசிரியர் கலாசாலையொன்றினை ஆரம்பிக்க விரும்பினார் காரைதீவிலேயே முதன்முதல் சைவாசிரியர் கலாசாலையினை உருவாக்கினார். அரசாங்கம் இவரது கலாசாலையை அங்கிகரிக்க மறுத்தது. எனினும் மனஞ்சலியாத உபாத்தியாயர், கீரிமலையிலுள்ள கிருஷ்ணபிள்ளை மடத்தில் (1913-1914) ஏரம்பையரின் உதவியுடன் ஆரம்பித்தார். இக்கலாசாலையையும் அரசினர் அங்கீகரிக்க மறுத்தனர். மனஞ்சோர்வடையாத உபாத்தியாயர் சைவர்களுக்கு ஓர் ஆசிரிய கலாசாலை அவசியம் என்பதனை அரசினருக்கு இடைவிடாது வற்புறுத்தி வந்தார். அவரது சட்ட ஆலோசகர்களாக 'இந்து போட்'' இராசரத்தினம் என்று போற்றப்படும் சட்டவல்லுனர் சு இராசரத்தினம் அவர்களும் அவர்தம் தமையனார் சு. கதிரேசு அவர்களும் விளங்கினர். இவ்விடயத்தில் சேர். பொன். இராமநாதன் சேர். பொன். அருணாசலம், சேர். கனகசபை ஆகியோரும் உபாத்தியாயருக்கு தமது ஒத்துழைப்பை வழங்கினர். இதன் பயனாக பல்வகை விசாரணைகளின் பின்னர் 1916ம் ஆண்டு கோப்பாய் ஆசிரிய போதனா பாடசாலையில் சைவாசிரியர்களைப் பயிற்றுவிக்க

அனுமதி வழங்கப்பட்டது. இவ் வெற்றி உபாத்தியாயரின் உழைப்பின் வெற்றி மாத்திரமல்ல சைவர்களின் வெற்றியாகவும் நாவலரின் இலட்சியத்தின் வெற்றியாகவும் அமைந்தது எனலாம். இக்கலாசாலையின் பேராசிரியர்களாக திரு. இளையதம்பி, திரு. முருகேசு, இலக்கண விற்பன்னர் புலோலி வ. குமாரசுவாமிப்புலவர் முதலானோர் கடமையாற்றினர். 1918ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதன் முதலாக இக்கலாசாலையில் இருந்து பயிற்றப்பட்ட சைவாசிரியர்கள் வெளியேறினர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். இக்கலாசாலை 1920 இல் உபாத்தியாயர் தேகவியோகம் அடையும்வரை சிறப்பாக நடைபெற்று வந்தது.

மூன்றாவதாக, சைவாசிரியர்கள் தங்கிப்படிப்பதற்கு விடுதி வசதிகளின் அவசியம் வேண்டப்பட்டது. அவர்களுக்கு கொடுக்கப்பட்ட ஊதியம் மிகவும் குறைந்த தொகையாதலால் கல்விச் செலவுக்கு அது போதாமல் இருந்தது. இந்நிலையில் உபாத்தியாயர் அவர்கள், அ. நாகநாத முதலியாரை அணுகித் தமது மாணவர்களின் நிலைமைகளை விளக்கி விடுதிக்கான நிலத்தினையும் கட்டடமொன்றினையும் நன்கொடையாகப் பெற்றார். காரைதீவு வள்ளல் வை. ஆறுமுகம்பிள்ளையின் வள்ளன்மையால் விடுதி மாணவர்க்கு உணவு வேதனமின்றி வழங்கப்பட்டது. ஆசிரிய கலாசாலை புகுமுக வகுப்பு மாணவர்க்கும் இவ்வசதி அளிக்கப்பட்டது. இதுவே சைவர்களுக்கெழுந்த முதலாவது ஆசிரிய விடுதி எனலாம். நாவலர் அவர்களின் இலட்சிய வெளிப்பாட்டில் பிற்காலத்தில் உருவம் பெற்றதில் இதுவும் ஒன்று.

நான்காவதாக, காரைதீவு மக்கள் ஆங்கிலக் கல்வி பெறும் பொருட்டு அமெரிக்க மிஷனின் யாழ்ப்பாண கல்லூரிக்கும் காரைதீவில் மேற்படி மிஷனால் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கிலப்பாடசாலைக்கும் செல்வதை அவதானித்த உபாத்தியாயர், சி. கந்தப்பு, க. இலட்சுமணபிள்ளை, கோவிந்தபிள்ளை ஆகியோரின் உதவியோடு 1889ம் ஆண்டு ''திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் ஆங்கிலப்பாடசாலை'' என்னும் பெயருடன் ஒரு ஆங்கில பாடசாலையை ஆரம்பித்தார். க. இலட்சுமண பிள்ளையும் சுயம்புச்சட்டம்பியாரும் இப்பாடசாலையின் ஆசிரியர்களாக நியமனம் பெற்றனர். உபாத்தியாயரினதும் சட்டம்பியாரினதும் கடின உழைப்பின் காரணமாக இப்பாடசாலை அடைந்த வளர்ச்சி இங்கமைந்திருந்த மிஷனரி ஆங்கிலப் பாடசாலைக்கு மூடுவிழா நடத்திற்று. இப்பாடசாலையே பிற்காலத்தில் ''காரைநகர் இந்துக் கல்லூரி'' என அழைக்கப்படுகின்றது. உபாத்தியாயர் காரைதீவு மக்களுக்கு கொடுத்த நன்கொடைகளில் தலையாயது இஃதென்றே கூறுவர். நாவலர் அமைத்த ஆங்கில வித்தியாசாலை கல்விச் சட்டங்களாலும் சைவர்களின் அக்கறையின்மையாலும் கைவிடப்பட்ட போதிலும் (1872-79) உபாத்தியாயரின் இப்பாடசாலை அவரின் குருபக்தியாலும் உழைப்பாலும் அறுகு போல் வேரூன்றி ஆல்போல் தழைத்து வருகின்றது எனலாம்.

நாவலர் நன்கு கற்று வல்ல மாணவ பரம்பரையை உருவாக்க எவ்வாறு தீவிரமாக உழைத்தாரோ அவ்வாறே கார்த்திகேயப் புலவரும் அருணாசல உபாத்தியாயரும் உழைத்தனர். புலவரவர்களின் சிரேஷ்ட மாணவர்களுள் கா. வேதக்குட்டி ஐயர், மு. குமாரசுவாமி ஐயர், மு. சீனி ஐயர், இராமசாமி ஐயர், கா. மார்க்கண்டேய ஐயர், சி. கந்தப்பிள்ளை, அ. கணபதிப்பிள்ளை, அ சோமநாதர், இ. சண்முகம், பொ. நாரணபிள்ளை, வே. அம்பலவாணர் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். உபாத்தியாயர் அவர்களின் சிரேஷ்ட மாணவர்களுள் வீ. கணபதிப்பிள்ளை (அச்சுவேலி), சி. இ. சதாசிவம்பிள்ளை (புங்குடுதீவு), வே. மயில்வாகனம் (நீர்வேலி) அ. அருளம்பலம் (வேலணை),

ஏ. சின்னையா (கரவெட்டி), சு. கந்தையா (மந்துவில்), வீ. கணபதிப்பிள்ளை (கரவெட்டி) என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

நாவலரும் அவரது மாணவ பரம்பரையினரும் பாடசாலைகள் அமைத்து பாடநூல்களை எழுதி பிரபந்தங்கள் பாட பணிபுரிந்தமை போன்று அவர்கள் வழிநின்ற புலவர் அவர்களும் உபாத்தியாயர் அவர்களும் பிரபந்தங்களையும் பாட நூல்களையும் எழுதினர். புலவரவர்கள் ''திண்ணபுர வந்தாதி'' (1925), ''முன்னீஸ்வரமும்மணி மாலை'', ''திருப்பேரிசை வெண்பா'' (1924) 'திக்கைத் திருவந்தாதி'', ''வண்ணைத் திருவந்தாதி'', ''திருத்தில்லையகம வந்தாதி'' ''நகுலேசயகம வந்தாதி'' முதலான பிரபந்தங்களைப் பாடினார். தந்தையரான முருகேசையரால் பாடப் பெற்று முடிவுறா திருந்த திண்ணையகம வந்தாதியினை பாடி முடித்தவர் என்று முன்னரேயே குறிப்பிட்டுள்ளோம்.

நாவலர் பொதுமக்கள் மத்தியில் நாட்டுக்கூத்து அதிக முக்கியத்துவம் பெற்று விளங்குவதைப் பெரிதும் விரும்பவில்லை. ஆனால் அக்கலை வடிவம் வர்க்க வேறுபாடின்றி யாவராலும் விரும்பி ஏற்கப்பட்டு வந்தமை குறிப்பிடத் தக்கதாகும். பொதுமக்களின் கலையார்வத்தை நிறைவேற்றும் பொருட்டு புலவரவர்களும் சூரபன்மன் நாடகம், சந்திர வண்ணன் நாடகம் ஆகியவற்றைப் பாடியதோடு தந்தையாரால் பாடப்பட்ட குருஷேத்திர நாடகத்தை திருத்தியும் விரித்தும் பாடிக் கொடுத்தார். உபாத்தியாயரவர்கள் புலவரவர்கள் போன்று சிறந்த புலவராக விளங்கவில்லையெனினும் சிறந்த ஆசிரியராக விளங்கியமையினால் பாடநூல்களை எழுத முனைந்தார். மாணவர்க்கு விளங்கும் வகையில் ''நீதி நெறிவிளக்கம்'' என்னும் நூலுக்கு உரை எழுதி யாழ் - சோதிடப்பிரகாச வித்தியா சாலையில் அச்சிடுவித்து வெளிப்படுத்தினார். புலவரவர்கள் கவிதையும் நாடகமும் பாடுவதோடு நின்றுவிடாது பழைய நூல்களை பதிப்பிப்பதிலும் ஆர்வம் காட்டினார். தட்சிணகைலாய புராணத்தை சர்வ சித்து வருடம் ஐப்பசி மாதம் (1887) பதிப்பித்து வெளியிட்டார். விதான மாலை என்னும் சோதிட நூலை 1881ம் ஆண்டில் பதிப்பித்து வெளியிட்டார்.

1874ம் ஆண்டளவில் நாவலர் சிந்தனையில் வடிவம் பெற்ற தனிமனித சைவ சமூக இயக்கத்திற்கு ''சைவப்பிரகாச சமாகம்'' என்னும் பெயரில் நிறுவன வடிவம் கொடுக்க முயன்று அவர் தம் மாணவ பரம்பரையால் சரியாக நிர்வகிக்க முடியாததன் காரணமாக கைவிடப்பட்ட இதனை உபாத்தியாயரவர்கள் தன்னுடைய ஆரம்பப்பள்ளிகளையும் கலா சாலைகளையும் நிர்வகிக்கின்ற கஷ்டத்தின் காரணமாக அனைத்தையும் ஒரு பொது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர முயன்றார். இதன் பயனாக தலையாளி சேர். கனகசபை சபாரத்தினம் அவர்களைத் தலைவராகக் கொண்டு ''இந்து வித்தியா சங்கம்'' என்னுமொரு நிறுவனத்தை ஏற்படுத்தினார். இந்த நிறுவனமே பின்னர் ''சைவ வித்தியா விருத்திச் சங்கம்'' என்னும் பெயருடன் சேர். பொன். இராமநாதன் தலைமையில் புதுப்பிக்கப்பட்டு சட்ட வல்லுனரும் இந்து போட் திரு. இராசரெத்தினம் அவர்களால் போற்றி வளர்க்கப்பட்டு நாவலரினதும் அருணாசல உபாத்தியாயரினதும் சிந்தனைகளுக்கெல்லாம் ஒரு வடிவம் கொடுத்து சைவமும் தமிழும் வேரூன்றித் தழைத்தோங்க வழி சமைத்தது எனலாம்.

காரைதீவில் கார்த்திகேயப் புலவருக்கு முன்பதாக பல புலவர்கள் வாழ்ந்த போதும் பின்னர் இவர் தம் மாணவ பரம்பரையில் வந்த கா. சிவசிதம்பர ஐயர், நாகமுத்துப் புலவர் (1857 - 1937),

ச. பஞ்சாட்சர ஐயர் (1839 - 1953) முதலான புலவர்கள் வாழ்ந்த போதும் புலவரவர்களின் புலமைக்கு ஈடாகச் சொல்லுமளவுக்கு யாரும் தோன்றவில்லை. புலவரவர்கள் தமது ஆற்றலையும் விவேகத்தையும் நாவலர் வழி நின்றே செயல்படுத்தினார். அந்த உந்தலே கார்த்திகேய ஐயரை புலவர் எனும் நிலைக்கு உயர்த்திற்று. நாவலர் போல் புலவரவர்களும் பல்வேறு பணிகளை மேற்கொண்டார். அவரது பணிகளின் விளைவாகப் புதிய உத்வேகம் மிக்க ஆசிரியர் பரம்பரை காரைதீவில் உருவாகியது. அதன் வழி வந்தவரே அருணாசல உபாத்தியாயர் ஆவார். நாவலர் அவர்களினதும் புலவரவர்களினதும் சிந்தனைக்கு உள்ளூரில் மாத்திரம் வடிவம் கொடுக்காது யாழ் குடாநாடு முழுவதும் பயன்பெறும் பொருட்டு தனது அயராத உழைப்பின் மூலம் வடிவம் கொடுத்தவர் உபாத்தியாயரவர்கள். இதனால் இருபதாம் நூற்றாண்டின் முதற் காற்பகுதி வரையும் சைவமும் தமிழும் இவரால் தழைத்தோங்கியது. ''1918 தொடக்கம் 1922 வரை வெளிவந்த இலங்கையிலுள்ள திருநீறுபூசுகின்ற பயிற்சி பெற்ற ஆசிரியர்களனைவரும் அருணாசலம் பொரித்த குஞ்சுகளே'' எனப் பண்டிதமணி விதந்து கூறுவது இங்கு மனங் கொளத்தக்கதாகும். இவரது பணியை மதிப்பீடு செய்த நாவலரவர்களின் தமையனார் புத்திரர் த. கைலாசபிள்ளை அவர்கள் ''பரோபகாரிகள் என்று யாழ்ப்பாணத்திற் பிறந்தவருள் இரண்டாவதாக நான் மதித்திருப்பது இவரையே'' (முதலாவது நாவலர்) எனக் குறிப்பிடுவது அருணாசல உபாத்தியாயரின் சேவையின் உயர்வைப் படம் பிடித்துக் காட்டுவது போல் அமைகின்றது. பெரும் நிலக்கிழாராகவும் செல்வந்தராகவும் வாழவேண்டிய அருணாசல உபாத்தியாயர் தன் பரோபகார சிந்தையினால் சைவத்தையும் தமிழ் மொழியையும் காத்து வளர்த்த பரோபகாரியாக மிளிர்ந்தார். இதனாலேதான் பண்டிதமணி அவர்கள் உபாத்தியாயர் அவர்களை ''யாழ்ப்பாணத்தின் இரண்டு கண்களுள் ஒன்று'' எனப் போற்றினார். புலவரவர்களும் உபாத்தியாயரவர்களும் காரைதீவு தந்த இரு கண் மணிகள். இவ்விரு கண் மணிகளின் ஒளிப்பிரகாசம் காரைதீவுக்கு அப்பால் பரந்து புதிய ஒளிபாய்ச்சின. துரித வளர்ச்சியை அளித்தன. இவ்விருவரது பணிகள் நாவலர் அவர்கள் என்னும் பேராற்றுடன் கலந்து சைவத் தமிழிலக்கிய வரலாற்றினைச் செழிப்புறச் செய்தன.

# 1990/91ம் ஆண்டுக்கான இந்து மாணவர்சங்க

## 35வது செயற்குழுவின் ஆண்டறிக்கை

இன்றைய சமூகத்தின் நாளைய நற்பிரஜைகளான மாணவர்களை நல்வழிப்படுத்துகின்ற பாரிய பணி பல்கலைக்கழகங்களுக்குரியது. அந்த வகையில், நாட்டின் பல்கலைக்கழகம் எனக் கூறக்கூடிய வகையில், அனைத்து பீடங்களையும் வசதிகளையும் ஸ்தான அமைப்பையும் தன்னகத்தே கொண்டு பல்கலையும் போற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நால் வகை மதங்களுக்கும் தகுந்த அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளமை எமக்கு ஒன்றினை தெளிவுபடுத்துகின்றது. படிப்பில் மட்டுமன்றி பல்கலையிலும் நாட்டம் கொண்டு படிப்படியாக வளர்ச்சியினை எட்டிவரும் மாணவ சமுதாயத்திற்கு சமய உணர்வுகள் ஏதோ ஒரு வகையில் திருப்தியை நிம்மதியைத் தருகின்றன என்பதுதான் அந்த கண்கூடான உண்மை. இந்த வகையில்தான் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவ சங்கம் தன் இயல்பான வளர்ச்சியினை தோன்றிய நாள் முதல் தொடர்ச்சியாக எய்தி வந்துள்ளது. இதுவரையும் இருந்து வந்த பல்வேறு செயற்குழுவினர் ஏகப்பட்ட சிரமங்களை எதிர்நோக்கி, ஒரு கோயிலை அமைத்து கும்பாபிஷேகம் செய்து எம்மால் புதிதாக ஒன்றும் சிரமப்பட அவசியம் இல்லாதவகையில் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தினை பொறுப்பாண்மைக் குழுவினருடன் சேர்ந்து நிர்வகிக்கும் பணியை மாத்திரம் எம்மிடம் விட்டுச் சென்றனர்.

எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இப்பணியை எம்மால் இயன்றவரை செவ்வனே நிர்வகிக்க குமரன் துணை நின்றான் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனவே எங்களால் செய்யப்பட்டவை மிகவும் அற்பமானவை எனினும் மனதிற்கு அவை திருப்தி அளிக்கின்றன என்ற வகையில், எமது ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வெய்துகின்றோம்.

**18 - 11 - 90** எமது மாணவ செயற்குழு பொறுப்பேற்றது

**01 - 12 - 90** திருக்கார்த்திகை

ஆலயமெங்கணும் அகல்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு கண்கொள்ளாக் காட்சிதரும் வேளையில் விசேட பூஜைகள் நடாத்தப்பட்டு திருவருட் குமரன் திருவுலா வெழுந்தருளினார்.

23 - 12 - 90 திருவெம்பாவை

01 - 01 - 91

காலைவேளையில் புலரிப்போது பூபாளமிசைக்க மாணவ மாண வியரின் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை பாராயணங்களுடன் பூஜைகள் தினமும் நடந்து, இறுதி நாளன்று ஆருத்திரா தரிசனமும் இனிதே நிகழ்வெய்தின.

14 - 01 - 91 தைப் பொங்கல்

எல்லாப்பீட மாணவர்களும் தத்தமது பீடரீதியான பொங்கல் களை மேற்கொண்டு பூஜையில் கலந்து கொண்டனர். ஒருபோதும் இல்லாதவாறு இம்முறை கலைப்பீட மாணவர்களும் தமக்கென தனியான ஒரு பானை வைத்துப் பொங்கியமை குறிப்பிடத்தக்கது.

21 - 01 - 91 அலங்கார உற்சவம்

30 - 01 - 91

திருவிழாக்கள் அனைத்தும் ஸ்நபனாபிஷேகம், விஷேட பூஜை, வசந்த மண்டப பூஜை என்றவாறு நியமப்படி நடைபெற்று ஒவ்வொரு தினமும் வெவ்வேறு அலங்காரங்களில் குறிஞ்சிக் குமரன் திருவுலாக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இறுதி நாளான 30 - 01 - 91 அன்று தைப்பூசத் திருவிழாவும் காலை சங்காபிஷேகம், தொடர்ந்து பகல் அன்னதானம், மாலை திருவூஞ்சல் என்ற வண்ணம் பேராதனைப் பல்கலைக்கழக இந்துப்பட்டதாரிகள் ஒன்றியத்தினால் வெகு சிறப்பாக நடந்தேறியது.

12 - 02 - 91 மகா சிவராத்திரி

நான்கு ஜாமங்களும் விதிக்கப்பட்ட படி விஷேட பூஜைகள் நடை பெற்றன. இடைநடுவே மாணவ மாணவியரின் பஜனைகள் இடம் பெற்றன.

14 - 04 - 91 பிரசோற்பத்தி வருடப்பிறப்பு

வருடப்பிறப்பானது அபிஷேகம், விஷேட பூஜைகளுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

28 - 04 - 91 சித்திரா பூரணை

வழமை போல பூஜைகள் நடைபெற்றன. இறுதியில் சித்திரைக் கஞ்சி வழங்கல் இடம் பெற்றது.

18 - 05 - 91 சிரமதானம்

அனைத்து பீட மாணவர்களையும் ஒன்றிணைத்து காலை தொடக் கம் மாலை வரை ஆலய உள்வீதி, வெளிவீதி, சுற்றாடல், மண்டபங்கள் என்பன துப்பரவு செய்யப்பட்டன. குறிப்பாக எல்லா பீட புதிய மாணவர்களும் இதில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**19 - 06 - 91** **மணவாளக் கோல தினம்**

கும்பாபிஷேகம் நடைபெற்ற தினமான அன்று காலை நவோத்திர சகஷ்ர நாம சங்காபிஷேகம் மதியம் அன்னதானம் மாலை திருவூஞ்சல் என்பன பொறியியற் பீட மாணவர்களால் வெகு விமரிசையாக நடாத் தப்பட்டன. மாலை குமரன், வள்ளி தேவயானை சகிதம் வலம் வந்த காட்சி என்றும் மனங்கொளத்தக்கதாகும்.

**12 - 07 - 91** அன்றைய வழமையான வெள்ளிக்கிழமை பூஜையும் தொடர்ந்து பஜனை யும் இடம் பெற்றன. பஜனையைத் தொடர்ந்து ஐந்து நிமிட நேர தியா னம் அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து ஒவ்வொரு வெள்ளியும் இது கடைப்பிடிக்கப்படுகின்றது.

**13 - 07 - 91**
**14 - 07 - 91**
**20 - 07 - 91**
**21 - 07 - 91**

ஆகிய சனி ஞாயிறு தினங்களில் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர் கள், போதனாசிரியர்கள், பழைய மாணவர்கள் சிலரால் ஆலய உட்சுவர் வெளிச்சுவர் உட்பட ஆலயத்தில் வர்ணப்பூச்சு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன

**09 - 08 - 91** **ஆடி அமாவாசை**

அன்றைய தினம் அபிஷேக பூஜை என்பவற்றுடன் மதியம் அன்ன தானமும் இனிதே நிகழ்ந்தேறின.

**12 - 08 - 91** **ஆடிப்பூரம்**

அன்று வழமையான அபிஷேகம், விஷேட பூஜை, திருவுலா என்பன விமரிசையாக நடைபெற்றன. அத்துடன் நாடெங்கும் நடைபெறும் சர்வ மத பிரார்த்தனையில் இந்து மதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகை யில் குறிஞ்சிக் குமரன் ஆலயத்தில் பூஜைகள் வானொலியில் நேரடி ஒலிபரப்புசெய்யப்பட்டன.

**20 - 09 - 91** இந்தியப் பேராசிரியர் எஸ். ஜி. மூலே (S. G. Mulay) அவர்களால் ''அக்னி ஹோத்ரயாகம்'' என்ற விடயம் பற்றி பேருரை நிகழ்த்தப் பட்டது.

**07 - 10 - 91** **சிரமதானம்**

எதிர்வருகின்ற நவராத்திரி பூஜைகளையொட்டி விடுகைக் காலத் திலிருக்கின்ற விஞ்ஞான பீட மாணவர்களால் ஆலயமும் சுற்றாடலும் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டன.

**08 - 10 - 91** **நவராத்திரி, விஜயதசமி**

**16 - 10 - 91** பிரதமை முதல் நவமிவரை தினமும் பூஜைகள் வசந்த மண்டபப் பூஜைகள், இடம் பெற்று தேவி தோத்திரங்கள் ஓதப்பட்டு இறுதி நாளான விஜய தசமியன்று அம்பாள் திருவுலாக்கொண்டு ஆலயமுன்றலில் மானம்பூ உற்சவம் இடம் பெற்றது.

08 - 11 - 91 தீபாவளி

வழமைபோல் விஷேட பூஜை நடாத்தப்பட்டு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

02 - 11 - 91 கந்த சஷ்டி

12 - 11 - 91 தினமும் விஷேட பூஜை இடம்பெற்று கந்தசஷ்டி கவசம், பஞ்ச புராணங்கள் பாராயணம் செய்யப்பட்டு இறுதி நாளன்று குமரன் திருவுலாக் கொள்ள எழுந்தருளினார்.

13 - 11 - 91 திருக்கல்யாணம்

மாலை விஷேட பூஜையை அடுத்து முருகன் திருவேட்டைக்குச் சென்றமை, வள்ளியை மணந்தமை, எட்டுக்குடி ஏசல், யாகசாலைப் பிரவேசம் என்பவற்றுடன் விநாயகரின் திருச்சமூகத்தில் திருமாங்கல்ய தாரணம் இனிதே நிகழ்ந்தேறியது.

இது தவிர விசேடாதி விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளவாறு கார்த்திகை உற்சவங்கள், நடேசர் தரிசனங்கள், மாசிமகம், பங்குனி உத்தரம் போன்றவையும் சிறப்பாக நடைபெற்றன

**நவில்கின்றோம் நன்றி!**

எமக்கு தகுந்த முறையில் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் ஆலோசனை நல்கின்ற எமது பெருந்தலைவர் கலாநிதி து. விநாயகலிங்கம், பெரும்பொருளாளர் வைத்திய கலாநிதி வி. விஜயகுமாரன், பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் பேராசிரியர் சி. தில்லைநாதன், செயலாளர் திரு. வ. நந்தகுமார், பொருளாளர் திரு. க. பாலதாசன் ஆகியோருக்கும்,

இக்கட்டான வேளைகளில் எமது நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு பேருதவி புரிந்த கடந்தகால செயற்குழு உறுப்பினர்களுக்கும் பொறியியற்பீட போதனாசிரியர்களுக்கும் மாணவர்க்கும் குறிப்பாக த. ஜெயக்குமாரன், வ. சிவராஜா, வி. சிவனேஸ்வரன், எஸ். இந்திரலிங்கம், கே. இளமுருகன், பொ. இராஜ்குமார், கே. குகதாசன், இ. சுந்தரகுமார், கு. இரமணன், க. நடேஸ்வரன், அ. ஜெயக்குமார், க. வல்லபாநந்தன், ஆகியோருடன் பல்வைத்திய பீட இறுதியாண்டு மூன்றாம் ஆண்டு மாணவியர்க்கும் மற்றும் எம்முடன் செயலாளரின் பணியில் உதவி செய்த செயற்குழு நூலகர் த. ரிஷீந்திரனுக்கும், ஒத்துழைத்த செயற்குழு உறுப்பினர்க்கும்.

உபயங்கள் நல்குகின்ற கண்டிவாழ் இந்துப்பிரமுகர்கள் வர்த்தகர்கள், அடியார்கள் அன்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு குறிஞ்சிக்குமரன் அருள் என்றென்றும் இவர்களுக்கு கிட்டட்டும் எனவும் வேண்டுகிறோம்.

நன்றி

இந்து மாணவர் சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை.

செல்வன் வ. பவகரன்
செல்வி செ. கிருபாலினி
இணைச் செயலாளர்கள்.

# எண்ணுக...... ஏற்றபடி......

எண்ணங்கள் - ஏகாந்தசிந்தனைகள்!
எண்ணிலடங்காத ஏணி நிகர் கற்பனைகள்
எல்லார் மனதிலும்
எளிதாக உதித்திடலாம்
எனினும் இவை யெல்லாம்
எய்தும் விடயங்கள்
ஏற்ற இலக்குகளா? இல்லை
ஏமாந்த சரக்குகளா - ஏளன முறைப்புகளா...
என்பதனை உரைப்பதற்கு
எவராலும் முடியாது
எந்த விடயமும்
எம்மாலும் முடியும் என்று
எஃகு போல் எண்ண வேண்டும்!
எளிமையாய் அமைய வேண்டும்!
என்றிருந்தால்
ஏமாற்றம் அற்று விடும்
எல்லாம் நிறைந்துவிடும்.
எனவே எண்ணமது தூய்மையாக,
எளிமையது உடைமையாக,
எய்திவிடின்
எட்டிடுவோம்! எம் இலக்கை! எனவே
எட்டுக! ஏறு நடை போட்டு!

ஆக்கம்: கே. எஸ். பிரபாகரன்
3ம் வருடம் பொறியியற்பீடம்

**அபிஷேகத் திரவியங்கள்**

**சந்தனக் குழம்பு**

(மைசூர், அவுஸ்திரேலியா, சந்தனக் கட்டைகளால் தயாரிக்கப் பெற்றவை)

★ பழனி வாசனை விபூதி ★ அபிஷேக குங்குமம்

★ பஞ்சாமிர்த சாமான்கள் ★ நைவேத்திய சாமன்கள்

வாசனை மிகுந்த தெய்வீக மணம் கமழும்

இந்திய பத்திகள் தசாங்கம் விளைவு சூடம் சாம்பிராணி

கோவில் தேவைகளுக்கான சகலவிதமான சாமான்களும் நியாயமான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

மற்றும் மருந்துகள், மருந்துச்சரக்குகள் ஆயுள்வேத கூட்டுத்தாபனத்தாரின் தயாரிப்புகள் மலிவாக கிடைக்கும்

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**

(மருந்து, மருந்துச்சரக்குகள் கோவில் அபிஷேகத்திரவிய வியாபாரம்)

55, கே. கே. எஸ். ரோட்
யாழ்ப்பாணம்.

160, செட்டியார் தெரு,
போன்: 4 3 5 8 2 5



திங்கள் ஒளிபரப்ப திகழ்ந்துவரும் இவ்விதழில்

தங்கள் விளம்பரத்தை தன்மையுடன் தந்திட்ட

எங்கள் வர்த்தகரை! எம்மிறைவன் அன்பர்களே

உங்கள் தேவைகட்கு உன்னதமாய் நாடிடுங்கள்!




தமிழ் வளர்ச்சியில்
தமிழ் மக்கள் வளர்ச்சியில்
50 ஆண்டு காலமாகத் தொண்டாற்றி வரும்
சிறந்த நிறுவனம்

★

# KALAIVANI
## BOOK CENTRE

**No. 130, D. S. Senanayake Vidiya,**

**KANDY.**

**T. P. 08 - 23196**

With Best Compliments From

★

# K. S. K. BROTHERS
**Prop: KANDANAINAR**
**JEWELLERS & MERCHANTS**

86, Colombo Street,

KANDY.

T. Phone: 22548

With Best Compliments From

**KRISHNA STORE**

163, COLOMBO STREET,

KANDY.

TEL- 22130

With Best Compliments From

**Sri Ganeshananda Brahmin's Hotel**

*42, Peradeniya Road,*

*KANDY*

Sri Lanka.

Phone- 23489

With Best Compliments From

***Sri Muthumari Stores***

150, COLOMBO STREET,

KANDY.

T'Phone- 23247

மனமார்ந்த வாழ்த்துக்கள்

**MR. A. ARIYARATNAM**

215, COLOMBO STREET

KANDY.

# உனை நிதம் கும்பிடுதற்காய்

## குறிஞ்சிவேலா

தேடிவந்துன்றன் திருவடி போற்றி செழுந்தமிழில்
பாடியன்போடு பரவுவார் யாரும் பயனடைய
ஆடிவரும் கோல மயில் மீதமர்ந்து
கோடியாய் நன்மை குவித்திடுவாய் குமரேசா.

ஒன்பது வாசல் உடலிற் பொருத்தி உலகிலுள
இன்பமனைத்தும் எளிதில் நுகர எனக் கருளி
அன்பது சேரநீ ஆள்கின்றாய் ஆனால் அழகுடைய
நின்பதம் நல்கும் நினைப்பிலையோ நிர்மலனே!

செந்தாமரைப் பதம் சிந்தனை செய்குவார் சீர்பெறவே
வந்தாதரித்திடும் வாஞ்சையை நெஞ்சில் வளர்ப்பவனே!
இந்தா எனச் சொல்லி இன்பங்களெல்லாம் எனக்கருள
முந்தாததென்ன? முனிந்தனையோ முருகவேளே!

என்னை துயரத்தில் எப்போதும் ஆழ்த்தி இழிவுதரும்
முன்னை வினைகள் முழுவதும் ஒய்ந்து முடிந்து விட
உன்னைக் கதியென ஒவ்வோர் கணமும் உளம் நினைந்தேன்!
மன்னே விழிபார்த் தருள்புரிவாய் மாமணியே!

வஞ்சகம் என்னும் வதியினிற் சிக்கியென் வாழ்க்கையிலே
சஞ்சலமாகிய சர்ப்பங்கள் சூழச் சதி புரியும்
நெஞ்சக் குகையிலே நிற்கும் இருளெலாம் நீக்கிவிடத்
தஞ்சமென்றுன்னைச் சரணடைந்தேன் சண்முகனே!

தண்ணார் தமிழில் இசைபாடி உன்பாத தாமரையை
எண்ணாமல் தீவினை எண்ணியே வாழ்வில் இனிய செயல்
பண்ணாமல் எப்போதும் வீணில் உழல்கின்ற பாவி எனைக்
கண்ணாற் கடைக்கணித் தாதரிப்பாய் கந்தவேளே!

படைத்தாய், வளர்த்தாய், படிப்பித்தாய், வாழ்வினில் பண்பு நலம்
கொடுத்தாய், அடுத்தாய், குளிர் வித்தாய், ஆழ்ந்த குறைக ளெலாம்
தடுத்தாய், எடுத்தாய், தழைப்பித்தாய் இந்தத்தரணியிலே
விடுத்தனையோ? உனைநிதம் கும்பிடுதற்காய் குறிஞ்சிவேலா!

**செல்வன் க. பரமேஸ்வரன்**
இறுதியாண்டு பொறியியற் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

# இனிய நன்றிகளை...

★ இடையூறுகள் இடைவராமல் இவ்விதழின் வேலைகளை
இனிதாய் நிறை வேற இறையருள் புரிந்திட்ட
முத்தமிழ்க் குமரனுக்கு முதற்கண் உரைப்பதோடு

★ ஆசியுரை வழங்கிய அருள்மிகும் சுவாமி ஆத்மகனானந்தஜிக்கும்

★ வாழ்த்துரைகள் தந்தெமக்கு வலிமை ஊட்டிட்ட
வளாகத்துணை வேந்தர், வாய்த்த பெரும் தலைவர்
வளமான பெரும் பொருளாளர், வரம்பில்லா இந்துமத
கலாச்சார அலுவல்கள் பணிப்பாளர் ஆகியோர்க்கும்

★ கருத்துப் பல செறிந்த கட்டுரைகள் பல தந்த
பொருத்தமிகு விரிவுரையாளர்க்கும் போதனாசிரியர்க்கும்

★ ஊக்கமுடன் எமக்கு ஆக்கங்கள் பல தந்த
நோக்குநிறை மாணவ மாணவியர்க்கும்

★ விளம்பரங்கள் தந்துதவி விழிப்பாய் இவ்விதழை
களம் பெறச் செய்தமைக்காய் கண்டி கொழும்பு நிறை
உளம் கனிந்த வர்த்தகப் பெருமகட்கும்

★ விளம்பரங்கள் சேகரித்தும் வேறு பல வழிகளிலும்
உளம் நிறைந்த உதவிகளை உன்னிப்பாய் எமக்களித்த
வளம் மிக்க நண்பர்களாம் வல்லபானந்தனுடன் மோகனதாஸ்
இளங்குமரன் சிவகுருநாதன் இன்னும் பலருக்கும்

★ ஆக்கப் பிரதிகளை அருமையாய் சரிபார்த்து
ஊக்கமுடன் எமக்களித்து பேருதவி புரிந்திட்ட
ஆக்கநிறை கலாநிதிகள் அருணாசலம், மனோகரன்
ஆகியோர்க்கும்

★ மனித்த நேயத்துடன் மலரை அச்சிட்டுதவிய
செனித் எனும் பெயருடைய செழுமை மிகு அச்சகத்தார்க்கும்

....இதயத்தால் இயம்புகின்றோம்!

ஏற்றிடுக! எம் நன்றி!

இவ்வண்ணம்
இந்து மாணவ சங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை

*With the best compliments from*

# EAGLE ELECTRICALS

*Dealers in Electrical goods and contractors*

5, KUMARA VEEDIYA

KANDY

T. P. } 22913
22329

அச்சுப்பதிவு
செனித் அச்சகம்,
192, கொட்டுக்கொடல்ல வீதி,
கண்டி.